# கூடில்லாத நத்தைகளும் ஓடில்லாத ஆமைகளும்

## செங்கை ஆழியான்




மணிமேகலைப் பிரசுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடில்லாத நத்தைகளும்
# ஓடில்லாத ஆமைகளும்

செங்கை ஆழியான்

மல்லிகைப்பந்தல்

201-1/1, ஸ்ரீகதிரேசன் வீதி,
கொழும்பு - 13.
தொலைபேசி: 320721
E-Mail: panthal@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஒரு மல்லிகைப் பந்தல் வெளியீடு

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | ஏப்பிரல் - 2003 |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| பக்கங்கள் | : | 144 + x |
| விலை | : | 175/= |
| அட்டைப்பட ஓவியம் | : | ரமணி |
| அட்டை வடிவமைப்பு | : | எஸ். திவாகரன் |
| கணினி அச்சமைப்பு | : | எஸ். சித்திராங்கனி |
| ISBN | : | 955-8250-19-8 |
| அச்சிட்டோர் | : | யு. கே. பிரின்டர்ஸ்,<br>98 A, விவேகானந்த மேடு,<br>கொழும்பு - 13.<br>தொலைபேசி: 344046, 074-614153 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழுக்குக் கூட
# ஒரு விலையுண்டு

## டொமினிக் ஜீவா

செங்கை ஆழியான் அவர்களுடைய சிறுகதைத் தொகுதியான 'இரவு நேரப் பயணிகள்' படைப்புக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே - 1995 - ல் ஆழ அகலமான முன்னுரை ஒன்றை எழுதியிருக்கிறேன்.

மிகவும் அற்புதமாக அமைந்த முன்னுரைகளில் இதுவுமொன்று என அவரே கூறியிருக்கின்றார்.

இந்தத் தொகுதி 'மல்லிகைப் பந்தல்' வெளியீடாக வெளிவரும் நூல். இதற்குப் பதிப்புரை எழுதுகின்றேன்.

இவரது 'நானும் எனது நாவல்களும்' கட்டுரைத் தொடர் மல்லிகையில் தொடராக வெளிவந்தது. பின்னர் இத் தொடர் மல்லிகைப் பந்தல் வெளியீடாகப் புத்தகமாக வெளியிடப் பட்டது. அந்த நூலுக்கு வெளியீட்டாளனாக நானொரு பதிப்புரையையும் எழுதி வெளியிட்டிருந்தேன்.

மல்லிகையில் தொடர்ந்து எழுதி வந்ததன் பின்னர் தான் பலரினது கவனத்தைப் பெற்றுக் கொண்டார். எழுத்துலகில் பிரகாசிக்கத் தொடங்கினார் என எனது காதுபடவே பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிப் பேசப் படுவதை நேர்ப்பேச்சில் அவரது கவனத்திற்குக் கொண்டு வந்துமிருக்கிறேன். அதை ஒரு பெருமையாக நான் கருதவில்லை. திறமைசாலி; ஆற்றல் மிக்க படைப்பாளி. எதில்எழுதி வெளியிட்டாலும் அவரது படைப்பில் ஒரு தனிப் பிரகாசம் மிளிரவே செய்யும் எனப் பூரணமாக நம்புபவன் நான்.

ஒருவேளை இப்படிச் சொல்லாம். 'நாங்கள் நெருங்கிய கூட்டாளிகளாக மனம் விட்டுப் பேசி; விவாதித்து எமது ஆற்றலை மேம்படுத்தியதன் காரணத்தால் அவர் மாத்திரமல்ல; மல்லிகையும் இலக்கியச் செழுமை கொண்டு பிரகாசிக்கின்றது' என்று கூடச் சொல்லலாம்.

அதற்கு உதாரணமாக 'மல்லிகைச் சிறுகதைகள்' முதல் பாகத்தில் வெளிவந்துள்ள 'ஷெல்லும் ஏழு இஞ்சிச் சன்னங்களும்' என்ற சிறுகதையைச் சொல்லலாம்.

மல்லிகையில் வெளிவந்த அந்தக் காலத்திலேயே நேர்ப் பேச்சில் அந்தக் கதைக்காகப் பாராட்டியிருக்கிறேன்.

உலக மொழிகளில் மொழியாக்கம் செய்யப் படக்கூடிய ஈழத்துச் சிறுகதைகளில் இதுவுமொன்று.

படைப்பாளி என்பதையும் மீறி இவரது சலியாத உழைப்பின் மீது எனக்கு எப்பொழுதுமே தனிப்பட்ட மரியாதை இவரிடமுண்டு. அபார உழைப்பாளி.

மறுமலர்ச்சிச் சிறுகதைகள்; ஈழகேசரிச் சிறுகதைகள்; சுதந்திரன் சிறுகதைகள்; சிரித்திரன் சுந்தர்; முனியப்ப தாசன் சிறு கதைகள் கடைசியாக மல்லிகைச் சிறுகதைகள் (முதல் பாகம்; இரண்டாம் பாகம்) போன்ற தொகுப்பு இலக்கியங்களை இவர் வெளிக்கொணர உழைக்கும் உழைப்பு இருக்கின்றதே இந்த உழைப்பு அற்புதமானது - அபாரமானது. அடுத்த தலைமுறை நன்றியுடன் வரவேற்கக் கூடியது.

இவரிடம் இயல்பாகவே உள்ள சிறப்புக் குணம் என்னவென்றால் இலக்கியப் புது முயற்சிகளுக்காக அப்படித் தன்னை ஒப்புக் கொடுத்து உழைத்து; அதை வெற்றிகரமாக நிறைவேற்றி முடிப்பது.

இந்த அர்ப்பணித்து உழைக்கும் பண்பு பல எழுத்தாளர்களிடம் காண்பதே அரிது.

உண்மையாகச் சொல்லப் போனால் தனிமனிதனாக இவர் சமீப காலமாகச் செய்து வரும் ஆய்வு வேலைகளைப் பல்கலைக் கழக நிறுவனங்கள் தான் கடந்த காலத்தில் செய்து முடித்திருக்க வேண்டும்.

உண்மையைச் சொல்லுகின்றேன். இந்த மண்ணின் அறிவுலகத் தகைமையை நினைத்து நினைத்து அச்சப் படுகின்றேன். இந்தக் கருத்தை நான் பகைமை உணர்வுடன் இங்கு கூறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான செயல் வடிவங்களை இந்த அறிவுலக நிறுவனங்களில் கடமை புரிந்து வரும் தக்கவர்களால் செய்ய முடியவில்லையே என மனசாரத் துக்கப் படுகின்றேன்.

சிறுகதை ஆசிரியராக; நாவலாசிரியராக; பாடநூல்களின் ஆசிரியராக; முடிவாகச் சொல்லப் போனால் ஒரு தகைமை வாய்ந்த ஆய்வாளராகத் தன்னை நிலை நிறுத்தி இடைவிடாது உழைத்து வரும் நண்பர். செங்கை ஆழியானின் பல்வேறு ஆற்றல்களின் வெளிப்பாடுகள் பற்றி ஒரு படைப்பாளி என்கின்ற முறையில் மெய்யாகவே பெருமிதமடைகின்றேன்.

செங்கை ஆழியானுக்கென்றே இந்த நாட்டில் வாசகர் வட்டம் ஒன்றுண்டு. அந்த வட்டம் பரந்து பட்டது. விரிவானது. வெகுசனச் செல்வாக்குக் கொண்டது.

'என் எழுத்தும் என் கற்பனைகளும் என் சிந்தனைகளும் பல்வேறு மட்டத்தினர் மத்தியில் பற்றிப் படர்ந்து செல்ல வேண்டும்' என அவர் அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறேன்.

இந்தக் கருத்தில் எனக்கு உடன்பாடில்லை. ஆனால்; இதைச் சொல்வதுடன் அதைத் தனது படைப்புகள்; ஆய்வுகள் மூலம் நிறுவி; வெற்றி கண்டு வரும் அவரது கருத்துக்களை மதிக்கிறேன். வரவேற்கின்றேன்.

இச்சிறுகதைத் தொகுதியிலுள்ள பெரும்பாலான சிறுகதைகள்; சமகால வாழ்வின் அவல அம்சங்களைக் குறியீடாகக் கூற முயல்கின்றன. மானிடர்களோடு அவர்கள் வாழும் சூழலில் காணும் உயிரினங்களும் சிறுகதைகளை நகர்த்திச் செல்கின்றன. உண்மையில் அந்த உயிரினங்களும்; மானிட வடிவங்களே' எனச் சிறுகதைகளின் நிறைவில் உணரும் போது; அச்சிறுகதைகளை மீளவும் ஒரு தடவை ஆரம்பத்திலிருந்து வாசிப்பதன் மூலம் தான்; செங்கை ஆழியானின் படைப்பனுபவத்தைத் தரிசிக்க முடிகிறது.

இந்தத் தொகுதிக்கு அழகான அட்டை ஓவியத்தை வரைந்து தந்துதவிய 'ரமணி' அவர்களுக்கும் படிகளை ஒப்பு நோக்கி எழுத்துப்பிழை திருத்தித் தந்துதவிய மா. பாலசிங்கம் அவர்களுக்கும் மல்லிகைப் பந்தல் வெளியீடுகளின் அட்டைப் படங்களை வடிவமைத்துத் தரும் எஸ். திவாகரன் அவர்களுக்கும் அச்சகத் தோழர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

*27 – 06 – 2002*

***76– வது பிறந்த தினம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

எனது நான்காவது சிறுகதைத் தொகுதியான "கூடில்லாத நத்தைகளும் ஓடில்லாத ஆமைகளும்" என்ற இத்தொகுதியை மல்லிகைப் பந்தலூடாக நண்பர் டொமினிக் ஜீவா வெளியிடுகிறார். மல்லிகைப் பந்தல் மூலம் ஒரு நூல் வெளிவருவது என்பது அப்படைப்புக்கும், அப்படைப்பாளிக்கும் பெருமை சேர்க்கும் சங்கதி என்பதை ஈழத்து இலக்கிய உலகம் அறியும். ஜீவா அவர்களுக்கு என் கடப்பாடுடைய நன்றிகள். ஈழத்துச் சிறுகதை வரலாறு 127 வருடப் பெருமை உடையது. 1875-ம் ஆண்டில் இலங்கையின் முதலாவது பத்திரிகையான உதயதாரகையின் ஆசிரியராக விளங்கிய ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை சிறுகதையெனக் கொள்ளத்தக்க படைப்புகள் சிலவற்றினை எழுதியுள்ளார். சமூகப் புரட்சியாளனாக விளங்கிய ஆறுமுகநாவலரும் அதே கால வேளையில் அவ்வாறான ஒரு சில சிறுகதைகளைப் படைத்துள்ளார். இந்த முன்னோர்களின் வழியொட்டி - சமுதாய சீர்திருத்தக் காலத்தில் (1930 - 1949) இலங்கையர்கோன், சம்பந்தன், சி.வைத்தியலிங்கம், ஆனந்தன், கனகசெந்திநாதன் முதலான இருபத்தைந்து படைப்பாளிகள் ஈழத்துச சிறுகதை மனைக்கு அத்திவாரமிட்டனர். அதனையடுத்து முற்போக்குக் காலத்தில் (1950-1963) அடக்கி ஒடுக்கப் பட்ட மக்களுக்காகவும் இன ஒடுக்கலுக்கு எதிராகவும் சிறு கதைகள் படைக்கப் பட்டன. சாதிய அடிப்படையிலும் வர்க்க அடிப்படையிலும் அடக்கி ஒடுக்கப் பட்ட மக்களின் உரிமைக்காக என்.கே.ரகுநாதன், செ.கணேசலிங்கன், கே.டானியல், டொமினிக் ஜீவா, நீர்வை பொன்னையன் முதலானோர் தம் சிறுகதைகளில் குரல் தந்தனர். அதே வேளையில் மனித குல மேன்மைக்காகவும் தமிழ்த் தேசிய நலனுக்காகவும் வரதர், சு.இராசநாயகன், வ.அ.இராசரத்தினம், எஸ்.பொன்னுத்துரை முதலானோர் சிறுகதைகளைப் படைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் சிறுகதைகள் ஆழமாயும் அகலமாயும் பரவிய காலம் 1964 - 1982 வரையிலான புத்தெழுச்சிக் காலத்திலேயாகும். சமூகப் பொருளாதார அரசியல் மாற்றங்கள் ஈழத்துச் சிறுகதைகளில் பிரதிபலிக்கத் தொடங்கிய காலம். விமர்சகர்களின் வழிகாட்டலும், கட்டுப்பாடுமின்றிச் சிறுகதை பூரண சுதந்திரத்துடன் படர்ந்த காலம். சிறுகதையின் உள்ளடக்கத்தில் சாதீயம், வர்க்கீயம் ஆகிய பண்புகள் குறைந்து இனத்துவம் முதன்மை பெறத் தொடங்கிய காலம். கருத்து வளம் மட்டும் நல்லதொரு சிறுகதையை உருவாக்காது, அத்துடன் கலை வளமும் அவசியமென உணரப்பட்ட காலம். மார்க்சிய முற்போக்கு எழுத்தாளர்கள் தமது பார்வையை அகலமாக விரித்துக் கொண்ட காலமுமிதுவே.

தாய்மொழி மூலமான கல்வி - பட்டதாரித் தரம் வரை 1957-களில் அறிமுகப் படுத்தப் பட்டது. அதனால் தாய்மொழி மூலமான சிந்தனைத் தரமான சிறுகதை ஆசிரியர்களை பல்கலைக் கழகத்தினுள்ளும் வெளியேயும் உருவாக்கி விட்டது. மேலும் பேரினவாதத்தின் முன் தமிழ் இடது சாரிகளின் இனவொற்றுமையும் தேசியவாதமும் தளர்ந்து போயின. இனவாதமும் பிரிவினைவாதமும் சமூகத்திலும் இலக்கியத்தில் முதன்மை பெறத் தொடங்கின. அக்காலச் சிறுகதைகள் அடக்கி ஒடுக்கப் பட்ட மக்களின் குரலாக (சாதீயத்தாலும் இனத்தாலும்) ஒலிக்கத் தொடங்கின. சர்வதேச அரங்கில் கம்யூனிஸ்ட் கட்சியானது மாஸ்கோ பிரிவு, சீனப் பிரிவு என இரண்டு பிரிவுகளாக பிளவுபட்டமையும் இக்காலத்திலேயாம். இப்பிளவு தேசிய மட்டத்திலும் நிகழ்ந்தது. அதனால் இலக்கியத்திலும் சித்தாந்தங்களும் சிந்தனைத் தடங்களும் மாறுபட்டன. இக் கால கட்டத்தில் இலங்கை முழுவதிலும் தமிழ் சிறுகதைப் படைப்பாளிகள் உருவானார்கள். மலையகம், தென்னிலங்கை, கிழக்கிலங்கை, மேற்கிலங்கை எங்கணும் இருந்து சிறுகதையாளர்கள் சிறுகதைத் துறைக்கு ஒரு வீச்சுடன் நிறைந்தார்கள். யாழ்ப்பாணத்திற்குள் சிறைப்பட்டிருந்த சிறுகதை நங்கை தமிழர் வாழும் பிரதேசம் எங்கும் நடனமாடத் தொடங்கினாள். ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் இது ஒரு பெரும் புத்தெழுச்சியாகும். முற்போக்குக் கால கட்டத்திலிருந்து வந்த சிறுகதை ஆசிரியர்களின் படைப்பு முதிர்ச்சியும், 1964 தொட்டு 1982 கால கட்டத்துப் புத்திலக்கியப் படைப்புக்களும் சிறுகதைத் துறையில் புத்தெழுச்சியைத் தோற்றுவித்தன. இத்தகைய ஒரு காலகட்டச் சூழலில் தான் சிறுகதைத் துறைக்குள் நான் நுழைந்தேன்.

ஈழத்துச் சமூகப் பொருளாதார அரசியலில் 1977-களில் முகிழ்ந்து 1980-களில் பெருவிருட்சமாக அடர்ந்து விட்ட இளைஞர்களின் ஆயுதப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டம் ஈழத்து இலக்கியத்திலும் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியது. பேரின வாதத்தின் இராணுவ அடக்கு முறைகளும் இனக் கலவரங்களும் ஆரம்பத்தில் சிறுபான்மைத் தமிழரைப் பாதிக்கத் தொடங்கி இன்று இலங்கையெங்கும் வாழ்கின்ற மக்களின் மரணங்கள் மலிந்த பூமியாக இலங்கையை மாற்றிவிட்டது. இனத்தின் அடையாளப் பேணலிற்கான ஆள்புலப் போராட்டமாக மாறிவிட்ட நிலையில், சவால்களை எதிர் கொண்ட மார்க்சிய முற்போக்கு எழுத்தாளர்கள் தம் கருத்து நிலைகளை மாற்றி, இன்றைய சமூகப் பிரச்சினையின் குவி மையத்தினை அடையாளங்கண்டு அதற்கு வடிவம் கொடுக்க வேண்டியவர்களாகி விட்டார்கள். ஆரம்பத்திலேயே "இனவாதச்" சிறுகதையெழுதியவர்கள் புதிய செல்நெறிக்குத் தமது படைப்புகளை மாற்றிக் கொள்வதில் சிரமமிருக்கவில்லை.

யுத்த காலச் சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டு அந்த வாழ்வியலின் நெருக்கடிகளை இலக்கியமாகப் பதிவு செய்கின்ற கடப்பாடு சிறுகதையாசிரியர்களுக்கு ஏற்பட்ட போது, மூத்த எழுத்தாளர்களின் பேனாக்கள் இறுக மூடிக்கொண்டன. இளைஞர் போராட்டத்திற்கு ஆதரவாகவோ எதிராகவோ கருத்துத் தெரிவிக்க நேரின், அவற்றின் விளைவாக எதிர்கொள்ள வேண்டிய அபாயம் எச்சரிக்கை செய்தது. இக் காலகட்டத்தில் ஈழத்தமிழர் சமூகத்தில் மிக முக்கியமான நிகழ்ச்சிகள் விரும்பியோ விரும்பாமலோ நடந்தேறிவிட்டன. பேரினவாதத்தின் விளைவான இனக்கலவரங்கள், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் விளைவான அவலங்கள், இந்திய, சிங்கள இராணுவத்தினரின் உயிர், சொத்து அழிப்பு நடவடிக்கைகள், அகதி வாழ்க்கையின் தாங்கொணாத் துயரங்கள், பிறந்த மண்ணைவிட்டு வெளிநாடுகளுக்கான புலப்பெயர்வு, வடமாகாணத்திலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றிய சங்கதி, கிழக்கு மாகாணத்தில் தமிழருக்கும் முஸ்லிம்களுக்குமிடையிலான கலவரங்கள், இவ்வளவு பிரச்சினைகளுக்கிடையேயும் சமூகத்தினைத் தொடர்ந்து பாதிக்கும் சாதீயத்தின் அடக்கு முறைகள், பெண்ணடிமைத்தனம், கல்விப் பாதிப்புகள், வறுமை, உளப்பாதிப்புகள், போக்குவரத்துத் தொலைத்தொடர்பாடலின் முற்றான தடை முதலான அனைத்தும் இக் காலகட்டத்துப் படைப்பாளிகளின் இலக்கியக் கருக்களாக மாறியுள்ளன. தமிழ்ப் போராட்டக் குழுக்களுக்கிடையேயான பிளவுகளும் பழிவாங்கலும் இவற்றில் அடங்கும்.

இவற்றினை ஒதுக்கிவிட்டு ஈழத்துச் சிறுகதை இலக்கியத்தால் காதல், குடும்ப உறவுகள் பற்றிப் பேசிக் கொண்டிருக்க இயலவில்லை. உண்மையில் இக்காலகட்டத்தில் ஈழத்துச் சிறுகதைகளில் இவ்வாறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சங்களை உள்ளடக்கிய சிறுகதைகள் கைவிரல் மடித்து எண்ணக் கூடிய அளவிற்றான் வெளிவந்துள்ளன. தமிழ்த் தேசியவுணர்வுகள் பிரதிபலிக்கின்ற சிறுகதைகளும் வாழ்க்கை அவலங்களையும் உணர்வுகளையும் பிரதிபலிக்கின்ற சிறுகதைகளும் இக்கால கட்டத்தில் நிறைய வெளிவந்துள்ளன. தமிழீழப் போராட்டத்தின் விளைவாயமைந்த மக்களின் வாழ்க்கையனுபவங்களையும், அவலங்களையும், இலக்கியப் பதிவுகளாக்கவும், இப்படி வாழும் சமூகம் எப்படி வாழவேண்டுமென்ற உணர்வுக் கருத்தைச் சமூகச் செய்திகளாக்கவும் எனது, இத்தொகுதியிலுள்ள சிறுகதைகள் முயல்கின்றன.

என்னால் பல்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்ட சிறுகதைகள் இத்தொகுதியில் சேர்க்கப் பட்டுள்ளன. அவை எழுதப்பட்ட காலகட்டத்துச் சமூக நிலைப்பாட்டையும், என் கருத்தியல் நிலைப்பாட்டையும் பிரதிபலிப்பனவாகவுள்ளன. அமைதியும் சமாதானமும் பாதுகாப்பும் நிலவும் - நிலையில் சகலரும் சகலவற்றையும் பெற்று வாழும் நிம்மதியான சமூக வாழ்க்கை இந்த மண்ணிற்குக் கிட்ட வேண்டும். அரசியல், பொருளாதார சமூக சுபீட்சங்கள் கிடைக்கப் பெற்று, வர்க்க பேதமற்ற உன்னத சமூகமாக நாம் வாழ்ந்து முடிக்க வேண்டும். இவைதாம் என் எழுத்தின் அவாக்கள்.

நிறைவாக, இத்தொகுதியை வெளியிடும் தோழர் டொமினிக் ஜீவாவுக்கும், 'அவதானமாக 'புரூப்' பார்த்துதவிய தோழர் மா. பாலசிங்கத்திற்கும், அட்டை ஓவியத்தை அற்புதமாகப் படைத்துத் தந்த ஓவியர் ரமணிக்கும் நன்றிகள்.

**செங்கை ஆழியான்**
75/10A, **பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.**
**10.05.2002**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1 கூடில்லாத நத்தைகளும் ஓடில்லாத ஆமைகளும் ............1

2 நாணயத்தின் இரு பக்கங்கள் ............14

3 நக்ரோமா ............24

4 ஓநாய்கள் ............29

5 என்ன உறவு ............34

6 அரவங்கள் ............42

7 அசோக வனம் ............53

8 கரப்பான் பூச்சி ............60

9 குளவிக்கூடு ............71

10 வெளவால்கள் ............77

11 எங்கள் பூமி ............83

12 கறுப்பியைக் காணவில்லை ............91

13 மார்க்கண்டேயர் ............100

14 கனலும் புனலும் ............116


15 மறைகாய் ............125

16 பொய்ப் பிஞ்சு ............133

17 சீனவெடி ............139




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூடில்லாத நத்தைகளும் ஓடில்லாத ஆமைகளும்

கடல் நீரேரியின் இக்கரையிலிருந்து நோக்கும் போது அவர் வாழ்ந்த நிலப்பரப்பின் பசுமைக் கீறு கருமையாக விரிந்து கிடப்பது தெரிகின்றது. தென்னங்கீற்றுக்கள் மெல்லிய சோகத்தோடு அசைவுற. ஆங்காங்கே பனை மரங்களின் காவோலை களையாத வட்டுக்கள் தலையுயர்த்தி நிற்கின்றன. யுத்த டாங்கிகளின் கனத்த சங்கிலிப் பிணைப்புச் சில்லுகள் நகரும் சத்தம் வலிகாமத்து மண்ணை அழுத்தி மிதிப்பதை உணர்த்துகிறது. தெற்குப் பக்கமாகப் பாய்கின்ற துப்பாக்கிச் சன்னங்களின் 'டப்டுப்' சத்தங்கள் காதுகளுக்குப் பழக்கமாகிவிட்டன.

அவர் வாழ்ந்த பூமி. அவர் குந்தியிருந்த குடிநிலம், அங்குதான் இருக்கின்றது.

நினைக்கும் போது அவர் நெஞ்சம் கனக்கின்றது.

ஒருவர் இருவருக்கு நிகழ்ந்த துயரமா. ஒருவருக்கொருவர் கூறி ஆறுதலடைய?

ஓரினத்திற்கு ஏற்பட்ட துயரம். ஓரிரவில் ஐந்து இலட்சம் மக்களை ஏதிலிகளாகிவிட்ட பெருந்துயரம். ஐந்து இலட்சம் மக்களின் இதயங்களில் மாறாத காயங்களை ஏற்படுத்திய பெரும் அவலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் எந்தவொரு மக்களுக்கும் இப்படியொரு துயரம் ஏற்படக் கூடாதென அவர் எண்ணிக் கொள்கிறார்.

மேலை வானில் சரிந்து கொண்டிருக்கின்ற செந்நிறக் கதிர்களின் பரவலால் வானம் சிவந்தும் மஞ்சள் பூசியும் எரிகின்றது. இரண்டாயிரமாண்டு வரலாற்றையும் அங்கு வாழ்ந்த மக்களது தனித்துவமான கலாசாரத்தையும் பறிகொடுத்துவிட்டு வலிகாமம் மண்ணில் சமர்க்களம்.

விழிகள் கலங்கித் தவிக்கின்றன. அவர் திரும்பி இடது பக்கமாக உற்று நோக்கியபோது, யாழ்ப்பாணத்தையும் தென்மராட்சியையும் உப்பாற்றுக் கடலேரிக்கு மேலாக இணைக்கும் நாவற்குழிப் பாலமும் ஒடுங்கிய வீதியும் ஆளரவமின்றி வெறிச்சோடிக் கிடக்கின்றன. பாலத்திற்கு இப்பால் புலிகள் பதுங்கியிருப்பார்கள். பாலத்திற்கு அப்பால் இன்னும் அப்பால் இராணுவம் மறைந்திருக்கும். இருவரும் தத்தமது எதிரிகளின் தலைக்கறுப்புத் தெரிகிறதா? என அவதானித்துக் கொண்டிருப்பார்கள். அசைவு தெரிந்தால் போதும். துப்பாக்கிச் சன்னங்கள் சிறிது நேரம் மௌனத்தைக் கலைத்துக் கீறியபடி அசைவிலக்கு நோக்கியவாறு துளையிடும். உறங்கிக் கிடந்த பூதங்கள் விழித்துக் கொள்ளும். ஏவுகணைகள் ஆக்ரமிப்புப் பகுதிகளின் இராணுவ முகாங்களிலிருந்து மக்கள் குடியிருப்புகள் நோக்கி விரைந்துவரும். நிகழ்வது தெரிவதற்கு முன்னரே அவை விழுந்து சிதறி அப்பாவி மக்களின் இரத்தத்தாலும் தசைத் துண்டங்களினாலும் பலவிடங்களைக் குளிப்பாட்டி நிறைத்துவிடும். சாதாரண வெடிச்சத்தத்திற்கே கலவரமடைந்து வானில் கரைந்தவாறு கிளம்புகின்ற முன்னைய காகங்கள் கூட. இன்று இசைவாக்கம் பெற்றுவிட்டன. மரங்களில் இருந்தவாறு சிதறப் போகின்ற தசைத் துண்டங்களுக்காகக் காத்திருக்கத் தொடங்கி விட்டன.

நாவற்குழிப் பாலம் மோனத் தவத்தில் ஆழ்ந்து கிடக்கின்றது. கலங்கிய விழிநீர்த் திரையூடாக நாவற் குழிப் பாலத்தில் முட்டி மோதியபடி சனத்திரள் பதற்றத்துடன் அசைகின்றதா? அவர் தன விழிகளைக் கசக்கிக் கொண்டு பார்த்த போதும் அந்தக் கானல் காட்சி மாறவில்லை. உற்றுப் பார்த்தார்.

என்ன சனத்திரள்? ஐந்து இலட்சம் மக்கள் தாம் வாழ்ந்த தாயக மண்ணைத் தாரை வார்த்துக் கொடுத்து விட்டு ஒடுங்கிய அந்த ஒரு வழிப்பாதையினூடாக இடம் பெயர்வதென்பது சாதாரணமான காரியமா?

'முக்கிய அறிவித்தல். தமிழீழ மக்களே, இராணுவம் யாழ்ப்பாணத்தை நோக்கி முன்னேறி வந்து கொண்டிருக்கின்றது. ஆகவே அனைவரும் உடனடியாக வலிகாமத்தை விட்டு வெளியேறி, தென்மராட்சிக்கோ, வடமராட்சிக்கோ செல்லுமாறு கேட்டுக் கொள்கின்றோம்' புலிகளின் அறிவிப்பு வலிகாமம் எங்கும் வீதி வீதியாகக் கரைந்து பரவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்டோபர் முப்பதாம் திகதி அவலமாக முடிந்தது. மாரி மழை சோனாவாரியாகக் கொட்டுகின்ற மாலை நேரத்தில் பேரிடியாகக் கிளம்பிய இந்த அறிவித்தல் மக்களின் தலைகளில் இறங்கியது.

அவரும் அந்த அறிவித்தலைக் கேட்டார். அந்த அறிவித்தலோடு பரவிச் செறிந்த வதந்திகளையும் கேட்டார்.

'பொடியள் விற்றோ பண்ணி விட்டான்களாம். அவங்கள் ஐந்தாறு நாள்களுக்கு முன்னரே தமது 'காம்பு'களை அங்கால கொண்டு போயிட்டினம்.'

'இராணுவம் கண்டவர்களைக் கண்டதுண்டமாக வெட்டியபடி வந்து கொண்டிருக்கிறதாம்'.

'கோப்பாயைக் கடந்து விட்டதாம்.......'

'இன்று இரவு பன்னிரண்டு மணிக்கு நாவற் குழிப் பாலம் வெடி வைத்துத் தகர்க்கப் படுமாம். அதற்குப் பிறகு அங்கால தப்பி ஓடவும் முடியாது. இராணுவத்திடம் அகப்பட வேண்டியது தான்'.

'அவங்கள் விஷவாயுக் குண்டுகளை வீசப் போறாங்களாம். ஓடுங்கோ.... ஓடுங்கோ ஓடித் தப்புங்கோ.......'

விஷக் காய்ச்சலாக வலிகாமம் முழுவதும் பரவிய செய்திகளும் அவரில் செறிந்தன.

அவர் செய்தியைச் சொன்னபோது மனைவியும் பிள்ளைகளும் பயத்தால் சிறிது நேரம் உறைந்து போனார்கள். பின்னர் பயத்தால் வீரிட்டு அலறினார்கள்.

'ஐயோ நான் என்ன செய்யப் போறன். ஆமி வந்திட்டால் என்ர பிள்ளையளைச் சுட்டிடுவான்களே? வாருங்கோ வாருங்கோ.... அங்கால ஓடிப் போயிடுவம்.'

அவர் மனைவி பதறினாள். அவள் உடல் படபடவென நடுங்கியதை அவர் கண்டார். பிறந்து வளர்ந்து. வாழ்ந்த இந்த மண்ணைவிட்டு ஓடுவதா? உண்ணாமல் உறங்காமல் மிச்சம் பிடித்துக் கட்டிய இந்த வீட்டை விட்டு ஓடுவதா? எவ்வளவு ஆசையோடு தேடித் தேடிச் சேர்த்த சொத்துக்கள்? அந்த வீட்டிலிருந்த ஒவ்வொரு பொருளுக்கும் பின்னால் அவர்களின் முயற்சியின் கதை இருந்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக அவர் பேணிப் பாதுகாத்து வருகின்ற நூல்கள்..... ஒன்றா இரண்டா? ஒரு தனி நூலகமல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. இங்கிருந்து ஓடிவிட முடியாது. இது அவர் வாழ்ந்த மண். அவர்களின் கூடு, இந்த வீடு. நான் வரமாட்டேன். இந்த வீட்டை நூல்களை விட்டு நான் ஒருக்காலும் வரமாட்டன். எதனையும் எதிர்கொள்ளத் தயார்.

'என்ன மரமாக நிக்கிறியள்.....' என மனைவி அவரை உலுக்கினாள். வீதியில் சனங்கள் முட்டி மோதிக் கொண்டு கதறியபடி விரைகின்ற சத்தம் எழுந்தது. வீதியின் குண்டுகுழிகளில் நிரம்பிக் கிடந்த் மழை வெள்ள நீருள் அலமலக்க விழுந்தெழுந்து எல்லாரையும் திட்டியபடி மக்கள் பயத்துடன் விரைகின்ற ஒலி எங்கும் பரவி, நிறைத்துக் கொண்டது. கையில் அகப்பட்ட வற்றைத் தூக்கிக் கொண்டு அவர்கள் அலறி அடித்து ஓடிக் கொண்டிருந்தார்கள். சயிக்கில்கள் தூக்கமுடியாத சுமைகளுடன்..... வண்டில்களின் கடகட சத்தம்.....

'வாருங்கோ.......'

தூக்கக் கூடியவற்றைத் தூக்கிக் கொண்டு அவர்கள் வீதியில் இறங்கினார்கள்.

அவர் வீட்டு வாசலில் தரித்து நின்றார். தான் வாழ்ந்த அந்தக் கூட்டைக் கண்கலங்கப் பார்த்தார். இனி எப்பொழுது காண்போம்? 'என்னை இப்படி அநாதையாக விட்டு விட்டுச் செல்கிறீர்களே?. அந்த வீடு அழுதது. அவர் அமர்ந்து எழுதுகின்ற மேசை........ சாய்ந்து ஓய்வாகப் படுத்துக் கிடக்கின்ற அந்த ஈசிச் செயர்....... சுவர் அலுமாரிகளில் அடுக்கி வைக்கப் பட்டிருக்கும் ஆயிரக்கணக்கான நூல்கள்... அவை அலங்கார நூல்களா? இல்லை. ஒவ்வொரு பக்கமும் அவரால் படித்துக் கிரகிக்கப் பட்டவை.

எவருக்கும் இப்படியொரு நிலை ஏற்படக் கூடாது. அனைத்தையும் ஒரு கணத்தில் இழந்து அவர்கள் வீதியில் நகர்ந்து கொண்டிருந்த சன வெள்ளத்தில் கரைந்தார்கள்.

இரவு ஏழு மணியிருக்கும். கருமேக மழை இருள் கவிந்து கிடந்தது. தூறல் விழுந்து கொண்டிருந்தது. வீதியெங்கும் வெள்ளம் பரவிக் கிடந்தது. குண்டுங் குழிகளும் சிறு சிறு நீர்த் தேக்கங்களாக மாறித் தம்மை மறைத்துக் கிடந்தன. தடுமாறி விழுந்து எழுந்தார்.

'அப்பா......'

'என்ன பிள்ளை?'

'எனக்குப் பயமா இருக்குது..... செத்துப் போவோமா?'

அவர் தன் சின்ன மகளைத் தன்னுடன் இழுத்து அணைத்துக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மானிடனே நீ எங்கே போகிறாய்? இந்தப் பூமிப் பந்தில் நாங்கள் பிறந்தது வாழ்ந்து முடிப்பதற்காக? ஆயுதமேந்திய அரசியல் அயோக்கியர்களின் கனவுகளை நிறைவாக்கவல்ல. பூமி எங்கும் அமைதியில்லை. ஆயுதங்களின் ஆக்கிரமிப்பே. பூமி யுத்த களமாகிவிட்டது.'

மனிதர்களை நிம்மதியாக வாழ்ந்து முடிக்க விடுங்கள்.

ஆயுதக் கலாசாரத்தினால் அனாதையானவர்கள் எண்ணிக்கை அளவிடக் கூடியதா? ஊனமானவர்களின் தொகை..... எங்கும் வறுமை. இழப்பு. சோகம்..... துயர்.......

அவர்களின் வீட்டிற்கும் நல்லூருக்குமிடைப் பட்ட அரைக்கிலோ மீற்றர் தூரத்தைக் கடப்பதற்கு அவர்களுக்கு நள்ளிரவு எடுத்தது. வைத்த பாதங்களை எடுத்து வைக்க முடியவில்லை. ஒவ்வொரு ஒவ்வொரு. அங்குலமாகவே நகர முடிந்தது. வலிகாமத்தின் நாலா திக்குகளிலுமிருந்து மக்களால் வீதிகள் முட்டி வழிந்தன.

அதிகாலைப் பொழுதில் அவர்கள் செம்மணிச் சுடலை வீதியில் ஏறிய போது கனத்த மழை பொழியத் தொடங்கிவிட்டது.

யாழ்ப்பாணத்து மக்கள் அனைவரும் வீதியில் நின்றிருந்தார்கள். கொட்டிய மழையில் தெப்பமாக நனைந்து ஊறினார்கள். குழந்தைகள் வீரிட்டலறின. கைக் குழந்தைகளைத் தங்களது முகதலைச் சேலையால் மூடிப்பாதுகாக்கத் தாய்மார் முயன்றனர். குடையை விரித்தோர்..... 'சொப்பிங்பாக்'களைத் தலைகளில் செருகிக் கொண்டோர்..... எல்லோரும் சொட்டச் சொட்ட நனைந்தார்கள்.உடல்கள் படபடவென மழைக் குளிரில் நடுங்கின. அவர் கவலையோடு தன் பிள்ளைகளையும் மனைவியையும் பார்த்தார். மனைவி அழுகிறாளா? அல்லது கன்னங்களில் வழிவது மழைத்தாரையா?

சின்னவள் அருகில் குடைபிடித்தபடி நின்றிருந்த ஒருவருடன் ஒதுங்கி நின்றிருந்தாள். மழைக்கு நனையாமல் இடந்தேடுகிறாளோ? இல்லை.... அவருக்குப் பகீரென்றது. அடிவயிற்றிலிருந்து ஏதோ குமிழாகத் திரண்டு உச்சிக்கு ஏறியது.

'கடவுளே....' என்றலறினார். குடையிலிருந்து வழிந்த நீரை வாயிலேந்திக் குடித்துக் கொண்டிருந்த சின்னவள். தந்தையின் அலறல் கேட்டுத் திடுக்கிட்டுப் பார்த்தாள்.

"சரியாக விடாய்க்குது அப்பா....."

என் பிள்ளைக்கு இப்படியொரு நிலையை ஏற்படுத்திய எல்லாரையும்.....? பாவிகள்..... பாவிகள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் விழிகள் நீரைசொரிய முயன்றன. பலர் சேலையைப் பிழிந்து நீரை வாயிலிடுவதைக் கண்டார். இரவு முழுவதும் நித்திரையில்லாமல் நடந்த களைப்பு. நிற்க முடியாத வயோதிபர் ஒருவர் கானுக்குள் சரிந்து விழுந்தார். வயதுபோன தாயைக் கரங்களில் சுமந்து வந்த மகன் கிழவியை றோட்டில் கிடத்திவிட்டு விழுந்து கிடந்த தகப்பனைத் தூக்க ஓடினான்.

சுமக்க முடியாத தலைச் சுமைகள் பலரை அழுத்தின. நாய்கள் ஊளையிட்டன. மாடுகளும் ஆடுகளும் கதறின.

கிழக்கில் சூரியன் கதிர்களைப் பரப்பிய ஒளியில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை மனிதத் தலைகள் வெள்ளமாகக் கிடந்தன. அவர்களில் சிலர் கட்டி இழுத்து வந்த மாடுகள், நாய்கள்...... அவை தறிகெட்டு அங்குமிங்கும் வெருண்டு ஓடித்திரிந்தன.

அவர் காலுக்கடியில் பொமேரியன் ஒன்று நடுங்கியபடி நின்றிருந்தது.

எல்லோருடைய வாயிலும் திட்டுகள், தூஷணைகள். மனித வெள்ளம் அப்படியே தேங்கி நின்றது. ஒடுங்கிய பாதையில் முன்னேற முடியவில்லை. வீதியை விட்டுப் பலர் களப்பு வெளியில் இறங்கி நடந்தனர். பாலத்தடியில் நிறைந்து கிடந்த கடல் நீர் அவர்களைத் தொடர்ந்து நடக்க விடவில்லை. மேலே ஏறவும் முடியாமல் சேற்றில் இறங்கவும் முடியாமல் தவித்தனர்.

"அப்பா திரும்பிப் போய்விடுவம். இப்படி அவதிப் பட்டுச் சாகிறதிலும் அங்க போய் சுடுபட்டுச் சாவம். வாங்கோ அப்பா." சின்னவள் அழுதாள். அவர் அவளை அணைத்துக் கொண்டார்.

"திடமாக இரம்மா. எல்லாம் மனிதருக்குத் தான். எங்கட தலைவிதி இப்படியாகிவிட்டது. எல்லாவற்றையும் அப்படியே கணப்பொழுதில் கைவிட்டு..... எல்லாருக்கும் காலம் பதில் சொல்லும்".

அவரால் தொடர்ந்து பேச முடியவில்லை.

மழை ஓய்வதாகவில்லை. மனிதவெள்ளம் மெதுவாக மீண்டும் நகரத் தொடங்கியது.

வயோதிபத் தாயைக் கரங்களில் ஏந்தித் தூக்கிய இளைஞன் நடப்பதற்குச் சங்கடப் பட்டான். கால்கள் மெதுவாகத் தடுமாறின. அவனைப் பரிதாபமாகப் பலரும் பார்த்தனர். அவர்களால் வேறு என்ன செய்ய முடியும்?

முழுமனித சமூகமும் தாங்கொணாதத் துயரத்துடன் தம் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக முண்டியடித்தபடி ஓடும்பொழுது - மற்றவன் மீது இரக்கப்படவோ உதவவோ முடியும் காரியமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளாடிய அந்த இளைஞனை, நகர்ந்த சனத்திரள், அவருக்கு அருகில் ஒதுக்கிவிட்டது. வயோதிபத் தாய்-

"தம்பி....." என்று அழைப்பது கேட்டது.

"என்னணை?" என்று காவிவரும் இளைஞன் கேட்டான், பாசத்தோடு.

நேற்று மாலையிலிருந்து ஒரு வாய் தண்ணீர் கூட அவன் தாய் அருந்தக் கிடைக்கவில்லை.

"என்னை விட்டிட்டு, நீ போடா தம்பி......"

".....அம்மா?........"

"கானுக்க போட்டிட்டுப் போடா தம்பி....."

கிழவியின் வார்த்தைகள் அவனுக்குத் தெளிவாகக் கேட்டன. காவிய கரங்கள் அவள் கூறியவற்றை மனதில் வாங்காது சுமக்க, கால்கள் வலியுடன் நடந்தான்.

நெஞ்சம் கனத்தது.

நாவற் குழிப் பாலத்தில் அவர்கள் ஏறியபோது தென்பக்கமிருந்து வானில் இரண்டு பொம்பர்கள் சீறியபடி எழுந்து பாலத்தை நோக்கித் தாழ்ந்தன. மக்கள் சிதறித் திக்குத்திசைமாறி விழுந்து எழும்பி அவலக்குரல் எழுப்பி...... களப்புகளுள் விழுந்தார்கள்..... பாலத்தைத் தாண்டி நீரில் பாய்ந்தார்கள்....

"அப்பா...." என்று சின்னவள் அலறினாள்.

அவர் மனைவியையும் பிள்ளைகளையும் இழுத்து நிலத்தில் விழுத்த முயன்றார்.

"படுங்கோ..... படுங்கோ......"

நிற்பதற்கே இடமில்லாத போது படுப்பதற்கு எங்கே இடமிருக்கும்?

விமானத்திலிருந்து ஏவிய நான்கு றொக்கட் குண்டுகள் சீறிப் பாய்ந்து பாலத்திற்கு இருநூறு மீற்றர்களுக்கு அப்பால் களப்பு நீரில் விழுந்து வெடித்தன. அவற்றிலிருந்து சிதறிய தீச் சன்னங்கள் பாலத்தின் கரையோரமாக நின்றிருந்த பலரின் உடல்களைத் தைத்தன.

"ஐயோ.... என்ர பிள்ளை" எனத் தன் கரத்தில் ஏந்திய குழந்தையுடன் ஒருத்தி அலறினாள்.

குழந்தையின் உடல் சிவப்பாகியது. இப்பொழுது நினைத்தாலும் அவரின் உடல் பதறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் பாலத்தைக் கடந்து கைதடிச் சந்தியில் ஏறிய போது மதியம் கழிந்திருந்தது. அவர் திரும்பிப் பார்த்த போது தாயைக் காவி வந்த இளைஞன் தள்ளாடியபடி துயரத்துடன் வந்தான்.

"அம்மா எங்க தம்பி?"

அவன் விழிகள் கலங்கின. ஏதோ செய்யக் கூடாத பாவத்தைச் செய்தவன் போலத் தலையைக் குனிந்து கொண்டான்.

கானுக்குள் போட்டுவிட்டானோ, அவலங்கள் கூடும் போது..... தன்னுயிரின் பாதுகாப்பு முக்கியமாகும் போது...... எங்களது விழுமியங்கள் எங்கே? இடம் பெயர்ந்து அவலமாக ஓடும் போது, வீடுகளில் நோயாளிகளையும் வயோதிபர்களையும் அனாதைகளாக விட்டு விட்டு ஓடிக் கொண்டிருப்பவர்கள் இந்தச் சனவெள்ளத்தில் பல நூறு பேர்.

"அம்மாவைக் கைதடி மடத்தில் விட்டிட்டன். அப்பாவையும் அங்கேயே சேர்த்திட்டன்" என்றான் அவன்.

"நீர் எங்கை போறீர்?"

இது என்ன கேள்வி? அவருக்கே தான் எங்கே போகிறேன் என்பது தெரியாமல் இருக்கும் போது அவனை விசாரிப்பது அபத்தமாகப் பட்டது.

அவன் தூரத்தில் தெரியும் ஒரு தற்காலிகக் கொட்டிலைச் சுட்டிக் காட்டினான். "அங்கே போறன்".

அவன் சுட்டிக் காட்டிய இடத்தில் "போராளிகள் சேருமிடம்" என்ற பதாகை தொங்கியது.

அவர் தன்னைச் சிலிர்த்துக் கொண்டார்.

இப்பொழுது நிற்கின்ற கடல் நீரேரிக் கரையிலிருந்து பார்க்கும் போது நாவற் குழிப் பாலம் வெறிச்செனத் தெரிகின்றது. சற்று முன் வெள்ளமாகச் சனத்திரள் நகர்ந்த காட்சி, மனப்பிரமை என அவருக்குப் புலப்பட்டபோது, திரும்பிப் பார்த்தார். தூரத்தில் உவர் புற்களை மேய்ந்தபடி உள்ளூர் மாடுகள் காணப்படுகின்றன. அவற்றை மேய்த்து வரும் சிறுவன் ஒருவன் பனை மரத்தடியில் சாய்ந்து அமர்ந்திருக்கிறான். அந்தப் பையனை அவருக்குத் தெரியும். அடிக்கடி இங்கு வந்து நின்றபடி வெறித்துப் பார்த்தபடி பெருமூச்செறிவதை அந்தப் பையன் கண்டிருக்கிறான்.

"அப்பு, எங்கையிருக்கிறியள்?" என்று ஒரு நாள் அவரைக் கேட்டான். அவனுடைய விளிப்பு அவரை ஒருகணம் திக்குமுக்காட வைத்தது. யாழ்ப்பாணத்தில் அவரைக் காண்பவர்கள் புதியவர்களாயின் "அண்ணை......" என்பார்கள். ஐந்து மாதங்களுக்குள் அவர் கிழவனாகி, அப்புவாகி விட்டாரா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்ததிலிருந்து நாளுக்கு நாள் அவர் உடலளவில் வயோதிபனாகி விட்டார். ஐம்பது வயதில் எழுபது வயதுத் தோற்றம். மாடு மேய்க்கும் பையனின் கேள்விக்கு அவர் பதில் கூறினார். பள்ளிக் கூடத்தில் இருக்கிறம்....."

தமது பாரம்பரியப் பிரதேசத்தைக் கைவிட்டு மனதில் தாங்கொணாத துயரத்தைப் பெரும் காயச் சுமையாக ஏற்றி. அந்த மனக்காயத்தின் ரணவேதனையைக் கணத்துக்குக் கணம் அனுபவித்துக் குமுறியபடி ஐந்து. லட்சம் மக்கள் நாவற்குழியின் பாலத்தினூடாக தென்மராட்சிக்கு நகர்ந்தனர்.

பாடசாலைகள், கோயில்கள், பாழடைந்த கட்டிடங்கள், வீதி ஓரங்கள், மர நிழல்கள் எங்கும் குடும்பம் குடும்பமாக ஒதுங்கினர். நிலம் சேறாயும், வெள்ளமாயும் சதி செய்தது. வானம் இடையறாது கண்ணீர் சிந்தியது.

பசி...... பட்டினி...... தாகம்......

"அப்பா..... நாங்கள் அங்கிருந்து செத்துப் போயிருக்கலாம்.....,

"கடவுளே உனக்கும் கண்ணில்லையா?"

எங்கும் அவலக்குரல்கள். திட்டுக்கள். சாபங்கள். தென்மராட்சி நிலமும் நீரும் மக்களின் சுமை தாங்காது தவித்தன.

அவர்கள் பாடசாலையொன்றில் தஞ்சம் புகுந்தனர். சிறிய பாடசாலையில் ஆயிரக்கணக்கானோர் நிரம்பி வழிந்தனர்.

பாடசாலை நாறத் தொடங்கியது.

அவர்கள் இருந்த இருப்பென்ன? வாழ்ந்த வாழ்வென்ன?

"அப்பா, என்னால தாங்க முடியவில்லை. நெஞ்செல்லாம் நோகுது....." என்றாள் சின்னவள்.

பாடசாலை அறையின் சீமேந்து நிலம் ஊறிக் கிடந்தது. ஓடுகள் விலகி நீர்ப் பொட்டுக்கள் தலையில் விழுந்தன.

அவர்கள் அப்படி வாழ்ந்து பழக்கப் பட்டவர்களல்லர். தனி வீடு. தனிக் கக்கூசு. தனிக்கிணறு. வரையறுக்கப் பட்ட கிடுகு வேலிவளவு..... அனைத்தும் மீளக் கிடைக்குமா?

அவர் களப்புக் கரையில் நின்றவாறு மேற்கே விரிந்து கிடக்கும் நிலக்கீறை வெறித்துப் பார்க்கிறார். மாடு மேய்க்கும் சிறுவன் அவரை நிமிர்ந்து பார்க்கிறான். மாடுகள் சிதறி நின்று மேய்கின்றன. அவற்றை இனி ஒன்று சேர்த்துப் பட்டிகளுக்கு நடத்திச் செல்ல வேண்டும். ஒரு உலுக்கலுடன் அவை தலைச்சனின் பின்னால் நடக்கப் பழகி விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவன் மீண்டும் கேட்கிறான்.

"ம்...... யாழ்ப்பாணத்தில் எங்க?"

"உனக்கு யாழ்ப்பாணம் தெரியுமா?"

"தெரியும் நல்லூர்த் திருவிழாவிற்கு வந்திருக்கிறன்....."

"அதுக்குக் கிட்டத்தான்....."

"ஒவ்வொரு நாளும் இங்க வந்து என்ன பார்க்கிறியள்...."

அவர் வியப்புடன் அவனைப் பார்த்தார். இங்கிருந்தபடி தான் பிறந்து வளர்ந்த மண்ணைப் பார்ப்பது இவனுக்கு எங்கே தெரியப் போகிறது?

எனது வீடு, முற்றம்..... ஆசையோடு தேடி வைத்த செவ்விளநீர்க் கன்றுகள்....... எல்லாம் இங்கிருந்து பார்க்குப் போது தெரிகின்ற இரகசியம் இவனுக்கு எங்கே தெரியப் போகிறது?

அவர் ஆசையோடு வளர்த்த அந்தப் பூனை.... சாப்பாட்டு நேரத்தில் அவர் முன் வந்து அழுது அழைக்கும் அதன் குரல். இங்கிருக்கும் போது அவருக்குச் சன்னமாகக் கேட்பது இந்தப் பையனுக்கு எங்கே தெரியப் போகிறது?

இங்கிருந்தபடியே அவர் மனத்தேரில் பிள்ளையார் கோயில்...... அரசடி..... அம்மன் கோயில்......... தட்டாதெரு வாசிகசாலை......ஓ. இப்பொழுது அவை இருக்குமா?

"என்ன கேட்டாய் தம்பி?"

"இங்க வந்து என்ன பார்க்கிறியள் எண்டன்........."

"எல்லாம் தான்......"

அடிக்கடி அவர் இவ்விடத்திற்கு வருவார். ஆயிற்று.... ஐந்து மாதங்களாயிற்று. அதற்குள் தான் எவ்வளவு நம்பிக்கைகள்?

"இன்னமும் ரெண்டு கிழமையால் நாங்க அங்க போகலாம்......"

ஒருவர் சொல்லி முடிப்பதற்குள் வானத்தைக் கிழித்த படி பலாலிச் ஷெல் பாய்ந்து சென்று எங்கோ பலியெடுக்கும்.

"வரியப்பிறப்போடு போகலாமென சாத்திரியார் கூறுகிறாராம்."

"எந்த வரியப் பிறப்போடு........?"

வானில் இரைந்தபடி பொம்பர் ஒன்று வடமராட்சியில் குண்டுகளைப் பொழியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்னமும் பத்துநாளில போகலாம்......."

"ஆர் சொன்னது?"

"ஆக்கள் கதைக்கினம்........"

மன்னார்க் கடலில் நேவிக்கலங்கள் சிதறடிக்கப் படும். அதன் எதிர்விளைவாக பூநகரிக் கரையில் ஹெலிக் கொப்டர்களின் றாக்கட் தாக்குதலுக்கு அப்பாவிப் பொதுமக்கள் இருபது பேர் இரையாவார்கள்.

யாழ்ப்பாணம் திரும்பலாமென்ற நம்பிக்கை படிப்படியாக அழியத் தொடங்கிவிட்டது. அவர் கவலையோடு திரும்ப முயன்ற போது சருகு ஆமையொன்று அவர் அசைவைக் கண்டு பயந்து கால்களையும் தலையையும் தனக்குள் ஒடுக்கிக் கொள்கிறது.

அவர் சற்று நேரம் தரித்து நின்று பார்க்கிறார். அவர் அருகில் நிழலாடியது.

"என்ன அப்பு அப்படிப் பார்க்கிறியள்?"

மாடு மேய்க்கும் பையன்

"ஆமை...... அந்தா?"

"அதுக்கென்ன?"

"அதுக்கு ஓடு இல்லாவிட்டால் எப்படியிருக்கும்?"

"ஆமையே இல்லை......" என்றான் பையன் சிரிப்புடன்.

"ம்...... அதைத்தான் நானும் நினைச்சன்......"

தூரத்தில் துப்பாக்கிச் சன்னங்கள் கேட்கின்றன.

"இப்படி வந்து மிலாந்திக் கொண்டு நிக்காதை அப்பு. சினைப்பரால் தட்டியெல்லோ போடுவாங்கள்........"

"தட்டினால் கரைச்சலில்லை......."

பையனை வியப்பு ஆட்கொள்ளவில்லை. இப்படி பலர் கூறுவதை அவன் கேட்டிருக்கிறான். வாழ்க்கையில் பிடிப்பற்ற நிலை. விரக்தி ஆக்கிரமித்து விட்ட இதயங்கள்.

"கெதியில நீங்க எல்லாரும் யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிப் போவியள் அப்பு. கவலைப் படாதையுங்கோ......."

"ஆர் சொன்னது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மன் கலை வந்து சொன்னதாம்....."

"எப்படி? எப்படியடா தம்பி?"

"எல்லாரும் சிரிச்சபடி யாழ்ப்பாணத்திற்குப் போவியள் எண்டு......"

"கெதியில எல்லாருக்கும் விசர் பிடிக்கும். அப்ப சிரிச்சபடி போவினம்......" என்றார் அவர் கோபத்துடன்.

எல்லாமே போய்விட்டன. வீடு இப்பொழுது யாழ்ப்பாணத்தில் இருக்குமா? கூரைகளைக் கூட விடாமல் கழற்றினார்களாமே. அம்மியிலிருந்து தோசை பிரட்டும் கரண்டி வரை ஏற்றினார்களாமே?

இருந்தாற்போல தூரத்தில் ஷெல் குத்தும் சத்தம் எழுகிறது.

"அப்பு.... ஷெல்லணை....... படு...... படு......" என்றபடி பையன் நிலத்தில் குப்புற விழுகிறான்.

அவருக்கு எதுவும் தெரியவில்லை. செய்வதெது வென விளங்காமல் பிரமை பிடித்து நின்றிருந்தார்.

"ஷ்......ஷ்" என்று விசிலடித்தபடி காற்றினைக் கிழித்துக் கொண்டு ஷெல் ஒன்று பலிகொள்ள விரைகிறது.

"வாங்கோ........." பையனின் அழைப்பு அவருக்குக் கேட்கவில்லை.

நகரத் தொடங்கியிருந்த சருகு ஆமை ஒன்றை உற்றுப் பார்த்தபடி நிற்கிறார். பையன் அவரைப் பற்றி இழுத்தான்.

"இஞ்சபாரடா தம்பி. அந்த ஆமைக்கு ஓடில்லை...." பையன் விழிகளைக் கசக்கியபடி ஆமையைப் பார்த்தான்.

"ஓடு இல்லாமல் ஆமை நகராது. செத்துப் போகும்....."

"ஓடு இல்லையடா......"

"அப்பு....." என்றான் பையன் பரிதாபமாக.

பையனின் அழைப்பை அலட்சியப்படுத்திய அவர் நாவற் குழிப் பாலத்தை ஆழமாகப் பார்க்கிறார். அவர் விழிகளில் வியப்பு எழுகிறது.

அப்பப்பா.... எவ்வளவு சனம்? எல்லாரும் சிரித்தபடி யாழ்ப்பாணம் நோக்கி நடக்கிறார்கள். யாழ்ப்பாணத்திற்கு மீள்கிறார்களா? அவர்களின் முகங்களில் தான் எவ்வளவு மகிழ்ச்சி. அதோ, அந்த இளைஞன் தன் தாயைக் காவியபடி செல்கிறான்.

"அங்க பார் எல்லாரும் யாழ்ப்பாணம் போகினம்......"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்க........"

"அந்தப் பாலத்தைப் பார்..... நானும் போகப் போறன்......"

நாவற் குழிப் பாலம் வெறிச் சோடிக் கிடக்கின்றது. காகங்களும் மீன் கொத்திகளும் பாலத்தின் மேல் வானில் தாழ்வாக மிதக்கின்றன.

அவர் களப்பில் இறங்கி நடக்கத் தொடங்குகிறார். பையனுக்குப் பயம் பற்றிக் கொண்டது.

"அப்பு..... போகாதையணை..... போகாதை........"

அவர் பையனை ஏளனமாகத் திரும்பிப் பார்த்து விட்டு நடக்கத் தொடங்குகிறார்.

"அப்பு..... கடவுளாணை, போகாதை....... சுட்டுப் போடுவாங்கள்...."

அவர் கால்களைச் சேற்று நிலத்தில் பதித்து வேகமாக நடக்க முயல்கிறார்.

"அந்தப் பாலத்துக்குப் போறனடா....." என்றார் முகம் மலர்ந்து சிரித்தபடி.

"என்னாணைப் போகாதை அப்பு.... உன்ர பிள்ளையாணை போகாதை அப்பு" என அவன் வீரிட்டுக் கத்தினான். அவர் கால்கள் அப்படியே நின்றன. ஏதோ பொறி தாக்கியது போல.... தன்னைச் சிலிர்த்துக் கொண்டபடி பாலத்தைப் பார்க்கிறார். பாலம் ஆள் அரவமின்றி வெறிச்சோடிக் கிடக்கிறது.

பயம் பற்றிக் கொள்ள திரும்பி ஓடி! விழுகிறார்.


பையன் ஓடிவந்து அவரைப் பற்றித் தூக்குகிறான். அவர் அவனைக் கட்டிக் கொண்டு விம்மத் தொடங்கினான்.

- வீரகேசரி

05 - 05 - 1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாணயத்தின் இரு பக்கங்கள்

அதிகாலை ஆரம்பமான தூறல் இன்னமும் ஓயவில்லை. ஜன்னலினூடாகப் பார்க்கும் போது, நீரில் தலை மூழ்கிக் கூந்தலைத் தளைய விட்டிருக்கும் பெண்கள் போல, நீர்த் துளிகளைச் சிந்தியபடி காட்சி தரும் சடைத்த கிளைபரப்பி வளர்ந்திருக்கும் மரங்களுக்கு அப்பால் பல்கலைக் கழகப் பிரதான வாயில் தெரிகின்றது. தூறல் ஓயாத அன்றைய காலைப் பொழுதில் பல்கலைக் கழகப் பிரதான வாயிலினூடாக மூன்று வாகனங்கள் அட்டகாசமாகப் பிரவேசித்தமை மழைக்காளானாக நினைவில் எழுகின்றது.

இராணுவ ஜீப் ஒன்றினைத் தொடர்ந்து ஒரு பஸ் வண்டியும் அதனைத் தொடர்ந்து இன்னொரு இராணுவ றக்கும் அணி வகுத்து உள்ளே நுழைந்து வந்தன.

நான் எழுந்து ஜன்னலூடாகப் பார்வையைச் செலுத்திய போது பணி மனை வாயிலில் வாகனங்கள் தரிப்பது தெரிந்தது. முன்னால் வந்த ஜீப்பிலிருந்து கேர்ணல் சேனநாயக்க இறங்க, டிறக்கிலிருந்து குதித்த இராணுவ வீரர்கள் விலக்கித் திக்கிற்கொருவராக நிலையெடுத்துக் கொண்டனர். தோளில் மாட்டிய வீடியோக் கமராக்களுடனும், கழுத்தில் தொங்கிய கமராக்களுடனும் பல்வேறு கோலங்களில் இருபது பேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையில் பஸ்சிலிருந்து இறங்கினர். இறங்கிய வேகத்தில் கமராக் கண்கள் திறந்து கொண்டன.

வெளிநாட்டு நிருபர்களாக இருக்க வேண்டும். யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றிக் கொண்ட காலத்திலிருந்து ஒவ்வொரு நாளும் பலர் வருகிறார்கள். நிறைவேறாத வாக்குறுதிகளைத் தந்து செல்கிறார்கள். குடைந்து குடைந்து வினாக்களைத் தொடுத்துச் சிக்கல்களில் மாட்டிவிடுகின்றவர்களாகவும் இருக்கிறார்கள்.

பஸ்சிலிருந்து கடைசியாக இறங்கிய ஒரு பெண் என் கவனத்தைக் கவர்ந்து கொண்டாள். இருபத்தைந்து வயதிருக்கும். நடுத்தர உயரம். சிவந்த உடல். சுடிதார் அணிந்திருந்தாள். இந்தியப் பெண்ணாக இருக்க வேண்டும். அந்தக் கும்பலுடன் பொருந்தாதவளாக அவள் காணப்பட்டாள்.

இப்போது நினைத்தாலும் எனக்கு வியப்பாகவிருக்கிறது: "நான் பிரம்படிக்குப் போகவேண்டும்".

துணை வேந்தரைப் பேட்டி கண்டு தகவல்களைத் திரட்ட வந்திருந்த வெவ்வேறு நாட்டுப் பத்திரிகைகளின் நிருபர்களில் ஒருத்தி பேட்டியின் நிறைவில் இப்படியொரு வேண்டுகோளை விடுத்தாள். அவள் வேண்டுகோளின் பின்னால் மறைந்து கிடக்கும் சம்பவங்களின் துயரப்பதிவை அங்கிருந்தவர்களில் ஓரிருவரே பூரணமாகத் தெரிந்திருந்தனர். துணைவேந்தர் என்னைக் கவலையுடன் ஏறிட்டுப் பார்த்தார். என்னருகில் அமர்ந்திருந்த கேர்னல் சேனநாயக்க அவளைச் சந்தேகத்துடனும் வெறுப்புடனும் பார்த்து விட்டு எங்களைக் கவலையுடன் நோக்கினார்.

"நான் பிரம்படிக்குப் போக வேண்டும். பிளீஸ், என்னை அங்கு அழைத்துச் செல்லுங்கள். இந்த இடம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு அருகில் இருக்கிறதாம். அதற்காகத் தான் நான் இந்தியாவிலிருந்து இங்கு வந்தேன்." தெளிவான ஆங்கிலத்தில் அவள் மீண்டும் அதே வேண்டுகோளை விடுத்தாள். அவளை நான் ஏறிட்டுப் பார்த்தேன். அவளது நீலவிழிகளில் தேங்கிக் கிடந்த உணர்வுகளை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவள் விழிகள் சிவந்து கலங்கிவிடுவனபோலத் தெரிந்தன. அவள் பார்வையில் தேங்கிக் கிடந்த உணர்வின் கலவை அவள் தன் விருப்பில் பிடிவாதமாக இருப்பதைச் சுட்டியது.

"அங்கு செல்ல முடியாது" என்று கேர்னல் அவசரமாகக் குறுக்கிட்டார். 'உங்களை நான் ஏற்கெனவே வகுக்கப் பட்ட புறோகிறாம் படி அழைத்து வந்துள்ளேன். அதன் படி தான் போகலாம்'.

அவள் இரக்கத்துடன் துணை வேந்தரைப் பார்த்தாள்: "பிளீஸ். உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுங்கள். ஒரு தடவை அந்த இடத்தை நான் பார்க்க வேண்டும். தரிசிக்க வேண்டும்." அவள் தன்னிரு கரங்களையும் குவித்து வினவியபோது துணை வேந்தரால் அவள் வேண்டுகோளை நிராகரிக்க முடியவில்லை. அவர் என்னைப் பார்த்தார். நான் ஒப்புதலாகத் தலையை அசைத்தேன்.

"அனுமதிக்க முடியாது. எனக்கு வழங்கப்பட்ட புறோகிறாம் படி இவர்களை நான் அழைத்துச் செல்ல வேண்டும். அது அன்கிளியட் ஏறியா. பாதுகாப்பற்ற பகுதி. வேண்டுமானால் இந்தப் பெண்ணை அவர்கள் தங்கியுள்ள விடுதியில் விட்ட பின்னர் தானாக வந்து பார்க்கட்டும். அப்பகுதிக்கு அழைத்துச் சென்று ஏதாவது நடந்தால் அதற்கு நான் பொறுப்பல்ல." கேர்னலின் வார்த்தைகளில் கண்டிப்பும் கட்டளையும் நிறைந்திருந்தன.

துணைவேந்தர் பேட்டியை முடித்துக் கொண்டு கதிரையிலிருந்து எழ அனைவரும் எழுந்தனர். நான் என் அலுவலகத்திற்கு விரைந்த போது அந்தப் பெண் என் பின்னால் ஓடிவந்தாள். அதனைப் புரிந்து கொண்ட நான் தரித்து நின்று அவளைப் பார்த்தேன்.

"பிளீஸ். என்னை அங்கு அழைத்துச் செல்லுங்கள்." அவள் விழிகளில் நீர்த் திரை - அந்தக் கண்களில் தேங்கிக் கிடந்த இனங்காண முடியாத உணர்வு அவள் வேண்டு கோளைத் தட்டிக் கழிக்க அனுமதிக்கவில்லை.

"நீங்க யார்?"

"நிருபா - என் பெயர். இந்தியா. பஞ்சாப் - பத்திரிகை நிருபர்."

"பிரம்படிக்கு ஏன் செல்ல விரும்புகிறீர்கள்?"

அவள் ஆழமாக என்னை ஏறிட்டுப் பார்த்தாள். பின்னர் ஜன்னலூடாக காற்றில் அசைந்த வாகை மரக் கிளையில் எதையோ தேடினாள். விழிகளைத் திறந்து என்னை ஊடுருவியபடி. "காட்டு மிராண்டிகள் போல எங்கள் இந்தியக் காமான்டோக்கள் முப்பது பேரைச் சுட்டு வீழ்த்தி கழுத்துக்களை வெட்டி.... தலைமயிர்களில் பற்றி இழுத்து.... கொன்றீர்களே.... அந்த இடத்திற்கு.... அந்த வீரர்களின் உயிர்கள் அவலமாகப் பிரிந்த இடத்திற்கு" என்றாள். அவள் முகத்தில் வன்மம் குடியேறிக் கொண்டது. விழிகளில் கனல் படர்ந்தது. நான் அவளைக் கவலையோடு பார்த்தேன்.

"யுத்தத்தில் இவை சகஜம் நிருபா. இந்தியக் காமாண்டோக்கள் யுத்த சன்னத்தராக ஹெலியிலிருந்து இறங்கிய சமயம் சுடப்பட்டது உண்மை. கொல்லப் பட்டது உண்மை. ஆனால், நீங்கள் சொல்கிற மாதிரியல்ல..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எல்லாம் முடிந்து விட்டன. நீட்டிய கரங்களை வெட்டிவிட்டீர்கள்."

"நீட்டிய கரங்களில் அரவணைப்பிருக்கவில்லை. அவை எங்கள் கழுத்துக்களை நோக்கி நீண்டன மகளே." தொடர்ந்தேன்: "உங்களை நிச்சயமாக நான், அந்த இடத்திற்கு அழைத்துச் செல்வேன். ஆனால், ஒரு நிபந்தனை......"

அவள் முகத்தில் மாற்றம் தெரிந்தது. இந்தப் பெண்ணின் முகமாற்றங்கள் பிரதிபலிக்கின்ற உணர்ச்சிகளின் அர்த்தத்தை என்னால் இனங்காண முடியவில்லை.

எனக்கு விடை தெரியாத ஏதோ ஒரு மர்மத்தை இவள் தன் ஆழ் மனதில் புதைத்து வைத்திருக்கிறாள்.

"சொல்லுங்கள்..."

"இந்தியக் கமாண்டோக்கள் கொல்லப் பட்ட இடத்திற்கு உங்களை அழைத்துச் செல்கிறேன். அதன் பின்னர் நீங்கள் பிரம்படிக் கிராமத்திற்கு வரவேண்டும். அங்கு இன்று நடைப்பிணங்களாக உலாவுகின்ற ஓரிருவரையாவது சந்திக்க வேண்டும்."

அவள் முகத்தில் மாற்றம் தெரிந்தது. வியப்புடன் பார்த்தாள்.

"சம்மதிக்கிறேன்".

"ஒரு நாணயத்துக்கு எப்பொழுதும், இரண்டு பக்கங்கள் இருக்கின்றன மகளே."

அவள் என் கரங்களைத் திடீரெனப் பற்றிக் கொண்டாள்.

"நீங்கள் என்னை மகளே என்றழைப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. என் தந்தையை நினைவு படுத்துகின்றது".

கேர்ணல் சேனாநாயக்க நாங்கள் நின்றிருந்த இடத்திற்கு வேகமாக வந்தார்.

"கம்..... கம்..... றெடி போத நெக்ஸ் புறோகிறாம்."

"இன்று நான்கு மணிக்குச் சரியாக வருவேன்" என்றபடி அவள் அவரைப் பின்தொடர்ந்தாள்.

அவள் சென்றுவிட்டதன் பின்னர் என் மனதில் தோன்றிய பல்வேறு குழப்பங்கள் - இன்னமும் விடைகாணாத வினாக்களாக விருக்கின்றன. இராணுவப் பாதுகாப்பு அரணிற்கு அப்பால் பிரம்படி இருக்கின்றது. அந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசம் இன்னமும் இராணுவக் கட்டுப் பாட்டிற்குள் வரவில்லை. இவளை அங்கு அழைத்துச் செல்வது எவ்வளவு உசிதம்? இந்தப் பெண் யார்? இவள் ஏன் ஐ.பி.கே. எஃப் காமாண்டோக்கள் கொல்லப்பட்ட இடத்திற்குச் செல்ல விரும்புகிறாள்?

வெளியே மெதுவாகத் தூறல் விழுந்து கொண்டிருக்கின்றது. பத்தாண்டுகளின் முன்னர் நிகழ்ந்தேறிய நாடகத்தின் குலைந்து போன மேடையை அவள் ஏன் தரிசிக்க விரும்புகிறாள்? தலை மெதுவாகக் கனத்தது. கரங்களால் தாங்கிக் கொண்டேன்.

இரைந்தபடி மிகப்பதிவாக ஹெலிகோப்டர் ஒன்று பல்கலைக் கழகக் கட்டிடங்களைக் கடந்து செல்கின்றது. அதன் சத்தம் என்னைத் திடீரென உலுக்கிவிட்டது.

எமது வானத்தில் இந்திய அமைதி காக்கும் படையின் விமானங்களும் ஹெலிகளும் பறந்த காலம். அவற்றினை அமைதிப் புறாக்களென எல்லாரும் பயமின்றி முதலில் பார்த்தனர். விடிவு வந்து விட்டதென ஆரவாரித்தனர். அவை காலக்கழிவில் கழுகுகளாக மாறிய போது ஓடி ஒழிந்து கொண்டனர். தம்மை நொந்து கொண்டனர்.

அவர்களுக்கும் புலிகளுக்கும் பிணக்கு ஏற்பட்ட அன்று-

இருள் விலகா அதிகாலையில் ஹெலிகள் பல்கலைக் கழக மைதானத்தின் வானில் தோன்றின. அவற்றிலிருந்து பாம்புகளாகத் தொங்கிய கயிறுகளிலிருந்து கமாண்டோக்கள் வேகமாக தரையில் இறங்கிக் கொண்டிருந்தனர். ஏற்கெனவே நிலையெடுத்திருந்த புலிகளின் துப்பாக்கிகள் பேசியபோது அந்த மைதானத்தில் முப்பது கமாண்டோக்களின் சடலங்கள் விழுந்து கிடந்தன.

அங்கு போக வேண்டும் என்கிறாள் இந்த இந்தியப் பெண்.

தற்செயலாக என் பார்வை பல்கலைக் கழகப் பிரதான வாயிலை நோக்கியபோது, அதே சுடிதாருடன் அவள் நடந்து வருவது தெரிகின்றது. அவள் நடையில் பிடிவாதமும் வைராக்கியமும் தெரிந்தன. வேகமாக அவள் வந்து கொண்டிருந்தாள்.

அவள் பணிமனை அறைக்குள் நுழையும் வரை காத்திருந்தேன்.

அவள் உள்ளே வந்தாள். சிரமம் தருவதற்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள்.

என் ஸ்கூட்டரின் பின்னால் அவள் ஏறிக் கொண்டாள். கமாண்டோக்கள் கயிறு வழி இறங்கி மரணத்தைத் தழுவிக் கொண்ட மைதானத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளை அழைத்துச் சென்றேன். அண்மைக்கால யுத்தத்தின் பயனாக அந்த மைதானம் சிதிலப்பட்டுக் கிடந்தது. மதில்கள் சாய்ந்திருந்தன. புல்டோசர்களினால் தள்ளிக் குவித்து இடப்பட்டிருந்த மண் அணையொன்று மைதானத்தை ஊடறுத்துச் சென்றது. தென்னெல்லையில், கொக்குவில் மயானமும் அடர்த்தியாக வளர்ந்திருந்த ஆலமரமும் தெரிந்தன. ஆள் அரவமற்ற அந்த வெளியில் ஓரிடத்தில் அவளை இறக்கிவிட்டேன். ஸ்கூட்டரை ஸ்டாண்டில் ஏற்றினேன்.

"கவனம் நிருபா. எனக்குப் பின்னால் வரவேண்டும். தெரிகின்ற ஒற்றையடிப் பாதையை விட்டு விலகக் கூடாது. மாறி எங்கும் மிதித்து விட்டால் உங்கள் பாதம் காணாமல் போய்விடும். எல்லா இடமும் கண்ணிகள்..... மைன்ஸ்"

"ஓ..... மை கோட்..." என்றாள்.

"அப்ப அங்கு செல்லாது திரும்பி விடுவோமா?"

அவள் அவசரமாகக் குறுக்கிட்டாள்.

"அங்கு அவர்கள் உயிரையே விட்டிருக்கிறார்கள். நான் என் பாதத்தை இழக்கலாம்."

அந்த மைதானத்தில் எவருமில்லை. தூறலில் நனைந்து கிடந்தது. தூரத்தில் தெரிந்த சுடலையில் சில நாய்கள் நடமாடிக் கொண்டிருந்தன. அமைதியில் அந்த மைதானம் உறங்கிக் கிடந்தது.

என் காதுகளில் ஹெலிக்கொப்டர்களின் இரைச்சல் கேட்கிறது. வானத்தில் நிலையாக நின்றிருந்த ஹெலிக்கொப்டர்களிலிருந்து எல்.ரி.ரி.ஈ. தலைவரை இலகுவாகக் கைது செய்துவிடலாமென்ற நம்பிக்கையில் திடகாத்திரமான கமாண்டோக்கள் கயிறுகள் மூலம் நழுவி வருகின்ற காட்சியும்...... சடசடவெனத் துப்பாக்கிகள் சன்னங்களைப் பொழிகின்ற ஓசையும்.....

"இந்த இடமா?"

"ஆம் நிருபா"

அவள் அப்படியே சற்று நேரம் சிலையானாள். தான் நின்றிருந்த இடத்திலிருந்தபடி அப்படியே சுழன்று பார்த்தாள். அவள் முகம் என் பக்கம் வந்தபோது அவள் விழிகளிலிருந்து தங்கு தடையின்றி நீர் வடிவதைக் கண்டேன். விம்மிய படி அப்படியே நிலத்தில் 'பொத்' தென அமர்ந்து கொண்டாள். வலக் கரத்தால் அந்த மண் நிலத்தை அறைந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் வருடி விட்டாள். அப்படியே அந்த ஈரத்தரையில் தன் முகத்தைப் புதைத்தபடி குலுங்கிக் குலுங்கி அழுதாள். நீண்ட நேரம் அழுதாள். ஒரு பெண்ணின் வேதனைக் குரலை இவ்வளவு துயரத்துடன் எங்கும் நான் கேட்டதில்லை. சோகமே கரைவதுபோலப் பட்டது. அவளை நான் தடுக்கவில்லை.

இருந்தாற் போல அவள் நிமிர்ந்தாள். வானத்தை நோக்கித் தன்னிரு கரங்களை உயர்த்தி, 'ஓ...... டாடி..... டாடி..... அப்பா' என்று பெருங்குரலில் அலறினாள். சுடலை நிலத்தில் நின்றிருந்த நாய்கள் வெருட்சியுற்றன. அந்த மைதானத்தின் மோன அமைதி அவள் பெருங்குரலால் அழிந்தது. அவள் தாங்கொணாத சோகத்தின் அர்த்தம் புரிந்தது.

"நிருபா" என்று கவலையுடன் அழைத்தேன்.

"எனக்கு அப்போது பதினான்கு வயது என் டாடி என்னிடம் விடைபெற்ற அந்த இறுதி நாள் இன்னமும் நினைவில் பசுமையாக இருக்கிறது. ஓ. டாடி...... டாடி..... இப்படி அநியாயமாக உங்களைக் கொன்றுவிட்டார்களே...."

அவள் விழிகள் நீரைச் சொரிந்தன. மண்ணில் விழுந்து மறைந்து போன அவள் தந்தைக்கு அஞ்சலியாகின.

பெண்ணே, உன்னைப் போல இந்த மண்ணில் தந்தையரை இழந்து அனாதைகளாகிவிட்ட பிள்ளைகள் ஆயிரக்கணக்கிலுள்ளனர். என்று கூற நான் விரும்பினேன். வார்த்தைகள் உதட்டளவில் நின்று விட்டன.

"ஏன் இப்படிச் செய்தார்கள்?"

"அது யுத்தம், மகளே. இது யுத்த களம்.... ஆயுதம் ஏந்தியவர்கள் மரணத்தையும் தம்முடன் கூடவே அழைத்து வருகிறார்கள்."

"உங்களுக்காகத்தானே வந்தோம்..."

"அப்படித்தான் நாங்களும் நம்பினோம்."

அவள் என்னைக் கவலையுடன் ஏறிட்டாள். தரையிலிருந்து எழுந்து நின்றாள். முகம் சிவந்து கிடந்தது.

"போவோம். நீங்க சொன்ன இடத்திற்குப் போவோம்."

அவள் ஸ்கூட்டரில் ஏறிக் கொண்டாள்.

"நான் நிருபராகச் சேர்ந்ததும் இலங்கைக்கு வந்தது இந்தக் காரணத்திற்காகத் தான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்படி ஒழுங்கையில் என் ஸ்கூட்டர் திரும்பியது.

"ஹெலியிருந்து இறங்கிய இராணுவ வீரர்கள் சுடப்பட்டதும், எஞ்சிய இராணுவ வீரர்கள் இந்த ஒழுங்கையால் தான் ஓடிவந்தார்கள். இந்த ஒழுங்கையில் அவர்கள் வெறியாட்டம் புரிந்தனர். எதிர்ப்பட்டவர்கள் அனைவரும் அவர்களுக்குப் புலிகளாகத் தெரிந்தனர். கண்டபாட்டிற்குச் சுட்டுத் தள்ளினர். தப்பி ஓடிவந்த இராணுவக் கமாண்டோக்களை மீட்க வந்த இந்திய இராணுவ ராங்கிப் படை..."

அவள் வேகமாகக் கத்திக் குறுக்கிட்டாள்: "நானாக விசாரித்து அறிகிறேன்."

"இல்லை. நான் சொல்லத் தான் வேண்டும் நிருபா. இந்த இடத்தில் தான் என் அண்ணி இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப் பட்டு ராங்கியால் நெரித்து சதைக் குவியலாக்கப் பட்டார். இந்தவிடத்தில் தான் என் அண்ணர் சுட்டுக் கொல்லப் பட்டார்" - தொடர்ந்தேன்.

"ராங்கியால் நெரித்துச் சதைக் குவியலாகக் கிடந்த அண்ணியின் இடது கரம் மட்டும் தான் முழுமையாக இந்த ஒழுங்கையில் கிடந்தது. அக்கரத்தில் கட்டியிருந்த கௌரிக் காப்புக் கயிற்றிலிருந்து தான் அவரை அடையாளம் கண்டேன். றங்குப் பெட்டியில் இவர் சிதைந்து போன சடலத்துண்டுகளை என்கரத்தால் அள்ளிப் போட்டேன். மரணம் கூட கௌரவமாக நிகழ வில்லை."

நிருபா ஸ்கூட்டரிலிருந்து குதித்தாள். முன்னால் வந்து என்னை ஊடுருவிப் பார்த்தாள்.

"உண்மையாகவா?"

"யேஸ்..... யேஸ்...." என் முகத்தினை அழுத்தித் துடைத்துக் கொண்டேன்.

நாங்கள் நின்றிருந்தவிடத்தின் எதிர் வீட்டுக் கேற்றினைத் திறந்து கொண்டு ஒரு பெண் வெளியில் வந்தாள். எங்களை வியப்புடன் பார்த்தாள். அவளுக்கு என்னைத் தெரியும்.

"என்ன சேர். இங்கால?"

"இவ இந்தியாவிலிருந்து வந்திருக்கிறா. உங்களிடம் ஐபிகே எ.்.ப் காலத்தில் நிகழ்ந்தவற்றைக் கேட்க வந்திருக்கிறா..."

அவள் முகம் மாறியது. கவலையால் கருகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐபிகேஎ.்.ப் வந்த சமயம் நீங்க இங்கே இருந்தீங்களா?" நிருபா கேட்டவற்றை நான் மொழி பெயர்த்துச் சொன்னேன்.

"இருந்தம்.... ஒரு நாள் காலை இந்திய இராணுவ வீரர்கள் வெறிபிடித்தவர்களாக இந்த ஒழுங்கையால் ஓடிவந்தனர். கண்களிற் பட்டவர்களைச் சுட்டுத் தள்ளினர். என் வீட்டிற்குள் நுழைந்து என் சிறுபிள்ளைகள் மூவரைச் சுட்டுத் தள்ளினர். காரணமில்லாமல்..... பாவிகள்......." அவள் தன் தலையில் அடித்துக் கொண்டு அழுதாள்.

"சிறு பிள்ளைகளைச் சுட்டார்களா?"

"ஓமோம்...." அந்தப் பெண் திடீரென நிருபாவின் வலக்கரத்தைப் பற்றி வீட்டிற்குள் இழுத்துச் சென்றாள்: "இந்தா பாருங்க சுவரில என்ர மூண்டு பிள்ளைகளும் படங்களாகத் தொங்குகினம்."

மூன்று பெரிய படங்கள் சுவரில் மாட்டப் பட்டிருந்தன. பன்னிரண்டு வயதிலிருந்து எட்டு வயது வரையில் இருக்கும். மாலைகள் மாட்டப் பட்டிருந்தன. நெற்றிகளில் சந்தனம் குங்குமம் இடப்பட்டிருந்தன.

நிருபா சற்று நேரம் அந்தப் படங்களை அப்படியே உற்றுப் பார்த்தபடி நின்றிருந்தாள்.

"ஏன் இவரின் அண்ணரும் அண்ணியும் புளக்செயினால் நெரித்துக் கொல்லப் பட்டனர். இந்த ஒழுங்கையில் அன்று மட்டும் செத்தவர்கள் எழுபத்தெட்டுப் பேர். காயமடைந்தவர்கள் நூற்றுக் கணக்கில்.... வெறிபிடித்து வந்தார்கள்..... ஏன் எங்களைச் சுட்டான்கள்? சாதாரண மக்கள் இவர்களுக்கு என்ன செய்தோம்?"

நிருபா என்னைக் கவலையுடன் பார்த்தாள்.

"இழப்பு என்பது தாங்க முடியாத சோகந்தான்."

"நிருபா, இன்னமும் சிலரை விசாரிப்போமா?"

"வேண்டாம். என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. இந்தத் தாயிடம் எனக்காகக் கேளுங்கள். இந்தியர்களை இவர் வெறுக்கிறாரா? என".

நான் அதைக் கேட்டேன்.

"இந்தியர்களை வெறுக்கவில்லை. என்ர பிள்ளைகளை அநியாயமாகச் சுட்டவர்களைத்தான் வெறுக்கிறேன். அவர்கள் பாவிகள்".

"என்னைப் போலத்தான்" என்று நிருபா முணுமுணுத்துக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிருபா வீட்டை விட்டு மீண்டும் ஒழுங்கைக்கு வந்தாள்.

"யுத்தத்தால் எல்லாரும் இழப்பிற்குள்ளாகியிருக்கிறம். அழிவைத் தவிர வேறெதுவும் கிடைத்துவிட வில்லை. வாழவேண்டிய மனிதர்கள் சாவதற்காகவா பிறந்தோம்? இந்த ஆயுதக் கலாசாரம் மானிடத்தின் அமைதி, சமாதானம், வாழ்க்கை எல்லாவற்றையும் இல்லாமற் செய்து வருகின்றது". என்றபடி நிருபா என்னைப் பார்த்தாள்.

"போவோமா, நிருபா?" அவள் ஸ்கூட்டரில் ஏறிக் கொண்டாள்.

"மீண்டும் ஒரு தடவை அந்த மைதானத்திற்குப் போகவேண்டும்." நான் ஸ்கூட்டரை நிறுத்தினேன்.

அவள் திகைப்புடன் "என்ன என்ன"? என்றாள்.

"மீண்டும் அவ்விடத்திலிருந்து அழப்போகிறீரா?"

"இல்லை..... இனி அழமாட்டேன்....."

முகத்தில் படிந்திருந்த துயரச் சுவடுகளைத் துடைத்துவிடுமாப் போல கைக்குட்டையால் முகத்தினை அழுத்தித் துடைத்துக் கொண்டாள்.


அவளை அந்த இடத்திற்கு மீண்டும் அழைத்து வந்தேன். அவள் அந்த இடத்தில் அமைதியாக நின்றிருந்தாள். முன்னைய படபடப்பு, ஆவேசம், துயரப்பெருக்கு எதுவுமில்லாமல் அமைதியாக நின்றிருந்தாள். மெதுவாகச் சொன்னாள், "டாடி போய் வருகிறேன். குட் பை".

வானம் தெளிவாகித் தூறல் நின்றிருந்தது.

- மறுமலர்ச்சி
மே - 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நக்ரோமா

நிலக்கீற்று மேற்குக் கிழக்காக நீண்டு சோகம் அப்பிக் கிடக்கின்றது. வேலிக் கதிகால்கள் போலப் பனைமரங்களின் வரிசை. அவை கூடத் தலை விரித்தாடும் கலகலப்பின்றி ஆழ்ந்த மோனத்தில் விடிவுக்காகத் தவமியற்றுவதாகப் படுகின்றது. சிதைந்து போன கட்டடங்கள் பார்வைப் பிடிக்குள் சிக்குகின்றன.

எப்படியிருந்த பிரதேசம்?

சமுத்திர நீரைக் கீறிக் கொண்டு பருத்தித்துறையிலிருந்து காங்கேசன்துறையை நோக்கிச் செல்கின்ற நக்ரோமா பயணக் கப்பலிலிருந்து பார்க்கும்போது விரிகின்ற நிலக்கீற்றின் சோகம் மனதைக் கனக்க வைக்கிறது.

அந்தத் தரையில் எவ்வளவு ஆனந்தமாகத் திரிந்தோம்?

'அப்பா.......'

மகளின் அழைப்பு அவனுக்குக் கேட்கவில்லை. அவன் பித்துப் பிடித்தவன் போல அந்தக் கரையையே பார்த்துக் கொண்டிருந்தான். பலாலி..... மயிலிட்டி...... காங்கேசன்துறை.... கரையில் இறங்கிப் பெருந்தெருவைக் கடந்து சற்றுத் தூரம் போனால் அவன் வாழ்ந்த வீடு.... அது இன்று இருக்குமா?

அந்த வீட்டினை அமைக்க அவர்கள் எவ்வளவு கடினமாக உழைக்க நேர்ந்தது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அப்பா....' என்று அழைத்தபடி அவன் முழங்காலில் கரத்தைப் பதித்து வனிதா உலுக்கிய போதுதான் அவனுக்கு நினைவு அங்கிருந்து கப்பலுக்கு வந்தது.

வீட்டு வளவு முற்றத்தில் காய்களுடன் கிளை தாங்காது நின்றிருக்கும் பலா மரத்தை அவன் அண்ணார்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். உச்சாரக் கொப்பரில் கனிந்துவிட்ட பழம் ஒன்றினைக் காகங்கள் கொத்திச் சுவைப்பது தெரிந்தது. பழச்சதையை விழுங்கிவிட்டு உதறிவிட்ட பலாக் கொட்டை அவன் மீது விழுந்தது. இறக்குக் கயிற்றோடு மரத்தில் ஏற அவன் தயாரான போது மகள் உலுக்கிவிட்டாள்.

அவன் திடுக்கிட்டு அவளைப் பார்த்தான். கனவு கலைந்த நிலை.

'என்னம்மா?'

'நரோமா என்றால் என்னப்பா?'

'நரோமா இல்லை. நக்ரோமா தான் இந்தக் கப்பலின் பெயர்.'

'சரி..... நக்ரோமா என்றால் என்ன?'

கப்பலின் மேல்தள இருக்கைகளில் பயணிகள் அமர்ந்திருக்கிறார்கள்.

அவர்கள் எல்லாரது கண்களும் தென்பக்கத்தில் நீண்டு கிடக்கும் நிலக் கீற்றில் பதிந்திருந்தன. கப்பல் பயணத்திற்குப் பொறுப்பான ஐ.சி.ர்.ஆ.சி வெள்ளைக்காரன் 'வாக்கிரோக்கி'யுடன் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருக்கின்றான். மணியம் ஆசிரியரும் இதே கப்பலில் வருகிறார். மயிலிட்டியில் அவருடைய வீடிருந்தது. அவன் தன் மனைவி மகளோடு தப்பி ஓடி மல்லாகத்தில் அகதியாக அடைக்கலம் புகுந்தபோது மணியம் ஆசிரியர் அனைத்தையும் இழந்து தனியாக ஓடிவர நேர்ந்துவிட்டது. அவர் இப்பொழுது என்ன நினைப்பார்? விழிகளில் வடிகின்ற கண்ணீரைத் துடைக்கின்ற உணர்வுமின்றிக் கரையை அப்படியே பார்த்துக் கொண்டிருக்கிறார். சூடுபட்டு முற்றத்தில் சரிந்து கிடந்த மூத்தவன்.... ஓடும்போது ஷெல்பட்டுச் சிதறிப் போய்த் துண்டங்களாகப் பனைவடலிக்குள் சிக்குண்ட அவர் மனைவி, மகன்....

கொடுமை.... பெருங்கொடுமை.

'அப்பா.... நக்ரோமா என்றால் என்ன?'

'பெருங்கொடுமை அம்மா....' என்றான் அவன் தன்னை அறியாமல்.

அவன் மௌனமானான். இந்தச் சிங்கப்பூர் பயணிகள் கப்பலுக்குப் பெயர் நக்ரோமா. அங்கு ஓடுவதற்கு வேகம் போதாது என்று இங்கு அனுப்பப்பட்ட கப்பல் இது. நக்ரோமா என்றால் என்ன? வனிதா கேட்டதற்குத் தான் சொன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலை எண்ணி இராசையா தன்னையறியாமல் வெட்கப்பட்டுக் கொண்டான். அவன் விழிகள் கரையில் பதிந்து, பயணப்பட்டு விட்டு முற்றத்தில் தரித்து நிற்கின்றன. மீண்டும் ஒரு பலாக் கொட்டையைக் காகம் உதறிவிட்டது. பலாப்பழத்தின் இனிய மணம் முற்றமெங்கும் பரவியது. வீட்டிற்குள் இருந்து அவன் மனைவி சரசு மகள் வனிதாவைத் தூக்கிக் கொண்டு வெளியில் வருகிறார்கள்.

முற்றத்தில் இறங்கியதும் நிறைந்திருந்த மணத்தை நுகர்ந்த வனிதா, 'அப்பா...பலாப்பழம்.... பலாப்பழம்...' என்று ஆரவாரப்பட்டாள். மூன்று வயது. ஒரே பெண். அவள் சத்தத்தைக் கேட்டு அவன் தந்தையும் தாயும் தமது வீட்டிலிருந்து எட்டிப் பார்க்கின்றனர்.

'என்னவாம்..... குஞ்சுக்குச் சரியான கெலி...' என்று அப்பு சிரிக்கிறார்.

இப்பொழுதும் அவனுக்கு அவரின் அந்தச் சிரிப்பு நினைவு வருகின்றது. அதுதான் அவன் அவரிடம் கண்ட இறுதிச் சிரிப்பு.

அவன் சாறத்தைக் கொடுக்குக் கட்டாக இறுக்கிக் கொண்டான். இறக்கு கயிற்றையும் மேசைக் கத்தியையும் எடுத்துக் கொண்டான். இடுப்பில் கத்தியைப் பக்குவமாகச் செருகி, தோளில் கயிற்றை வளையமாக இட்டுக் கொண்டு மரத்தில் ஏறத் தயாரானான்.

'கவனமடா தம்பி....' என்றாள் அம்மா. அவன் தாயைத் திரும்பிப் பார்த்துவிட்டு அந்தப் பலாமரத்தில் வேகமாக ஏறிக் கொந்திய பழத்தை நெருங்கியபோது காகங்கள் கூக்குரலிட்டன. சாப்பிட விடன்ரா.... விடன்ரா.... பலாப்பழத்தில் வண்டிக்கட்டாகப் பிணைத்த கயிற்றைப் பக்கத்துக் கிளையில் மாட்டிக் கீழேவிட்டு, 'கவனமாகப் பிடித்துக் கொள் சரசு.... இழுத்துப் பிடி. வெட்டுறன்....' என்றான். சரசு இழுத்துப் பிடிக்க அவன் பழத்தின் காம்பைக் கத்தியால் அறுக்கத் தொடங்கியபோது, ஷெல் ஒன்று கூவியபடி பலாமரத்தின் உச்சியால் சென்றது. தூரத்தில் துப்பாக்கிச் சன்னங்கள் வெடிக்கும் சத்தமும் எழுந்தது. அவ்விடத்தில் அமைதி குலைந்தது.

'கெதியா இறங்குங்கோ.... கவனம்... இறங்குங்கோ....'

'பிடி..... வெட்டிப்போட்டு இறங்குகிறன்....'

'ஒண்டும் வேண்டாமப்பா.... இறங்குங்கோ....'

அவன் அவசரம் அவசரமாகக் காம்பை அரிந்து விட்டான். இறக்குக் கயிற்றை இழுத்துப் பிடிக்காது விட்டுவிட்டு மகளைத் தூக்கியபடி சரசு பதறிப்போய் நின்றாள். பிடிப்பற்றுப் போன பலாப்பழம் 'பொத்'தெனக் கீழிறங்கி முற்றத்து மண்ணில் சளிந்து பிளந்து போனது.

அவன் மரத்திலிருந்து வேகமாக இறங்கினான். நெஞ்சில் சிராய்ப்புக் காயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலாலியில் இருந்து. இராணுவம் அந்தப் பக்கமாக வருகுதாம்.

இழப்பு..... எல்லாவற்றையும் இழந்து அவர்கள் ஓட நேர்ந்தது.

'அப்பா....' என்று வனிதா மீண்டும் உலுப்பினாள்: 'நக்ரோமா என்றால் என்ன?'

'இழப்பு.... பெரும் இழப்பு...' என்றான் அவன் சோகத்துடன்.

'அப்பாவுக்கு விசர்...'

கடல் நீரைக் கீறியபடி நக்ரோமா விரைகிறது. இன்னும் சற்று நேரத்தில் காங்கேசன்துறையை அடைந்துவிடும். அங்கு அவனது மண்ணில் அவர்கள் சோதனையிடப்படுவார்கள்.

அந்த மண்ணில் அவன் இந்த வகையில் கால் பதிக்கப் போகின்றான். மூன்றாண்டுகள்.... நீண்ட காலம்.... அகதியாகக் கையேந்தி வாழ்கின்ற அவல வாழ்க்கை....

தூரத்தில் கரை தெரிகின்றது. அவன் தந்தையும் தாயும் குலாவி மகிழ்ந்த நிலம். அவர்கள் முன்னையர் ஆயிரமாண்டுகள் வாழ்ந்து களித்த பூமி.

நெஞ்சு கனக்கிறது. எரிகிறது.

'நீங்க எல்லாரும் ஓடிப்போங்கோ. நாங்க இங்க வீட்டை பார்த்துக் கொண்டு இருக்கிறம். கிழடுகள்.... ஒண்டும் செய்ய மாட்டார்கள். எங்களால ஓடி வரவும் முடியாது. வீட்டிற்குள் இருக்கிறம்.... போங்கோ...' என்கிறார் அப்பு.

'ஐயா சொல்றதைக் கேள் தம்பி.... பெஞ்சாதி பிள்ளையோட மல்லாகப் பக்கம் போ..... பிரச்சினை முடிஞ்சோன திரும்பி வாங்கோ... கெதியாப் போங்கோ.... கெதியாப் போங்கோ...' என்று பதறுகிறாள் அம்மா.

அவன் தன் மனைவியை அழைத்துக் கொண்டு, வனிதாவைத் தூக்கிக் கொண்டு உடுத்த உடுப்புடன் தென்புறமாக ஓடியவர்களுடன் ஓடிப்போனான்.

மூன்று நாட்களின் பின்னர் தகவல் வந்தது.

கிழடுகளும் கௌரவமாக இறக்கவில்லை.

இராசையாவின் விழிகள் கலங்குகின்றன. அவனைப் போல எத்தனை ஆயிரம் பேர்? இந்த மனிதர்களுக்கு என்ன பிடித்துவிட்டது?

நக்ரோமா துறைமுகத்தினுள் நுழைகிறது. நுழைவாயிலில் பெரியதொரு கப்பல் கடலிற்குள் சரிந்து கிடப்பது தெரிகிறது. பதிலடி.

கப்பலைத் தளத்திற்கு அருகில் அணைத்துப் பிணைக்கிறார்கள். அவர்கள் துப்பாக்கியுடன் கரையில் நிற்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எல்லாரும் வரிசையாகக் கீழை இறங்குங்கோ.....'

'வேண்டாம்... பொண்ணு...'

அவன் மகளுடன் கீழே இறங்கும்போது அவன் பின்னால் ஐ.சி.ஆர்.சி.வெள்ளைக்காரனும் வந்தான். கப்பலைவிட்டு தரையில் கால் பதித்ததும் அவன் சற்று நேரம் அப்படியே தரித்து நின்றான்.

இனந்தெரியாத சுகம். அப்படியே குனிந்து வலக் கரத்தில் தரைப்புழுதி மண்ணை வாஞ்சையுடன் அள்ளிக் கொண்டு நிமிர்ந்தபோது அந்த வெள்ளைக்காரன் அவனை வியப்புடன் பார்ப்பது தெரிகிறது.

அவன் தோளில் பரிவுடன் கரத்தைப் பதித்து அழுத்தி அவன் உணர்வைப் புரிந்து கொண்டதைப் புலப்படுத்தியபடி அந்த வெள்ளைக்காரன் நகர்ந்தபோது, வனிதா அதே கேள்வியைக் கேட்டாள்.

'அப்பா... அந்தா எழுதியிருக்கு... நக்ரோமா, என்றால் என்னப்பா?'

அவன் எதுவும் பேசாதிருக்க....

'யுவர் டோட்டர் ஆஸ்க் சம்திங் எபவுட் நக்ரோமா? வட் இஸ் இற்...?'.... உமது மகள் நக்ரோமா பற்றி ஏதோ கேட்டாள் என்ன?' என்று அந்த வெள்ளைக்காரன் தரித்து நின்று கேட்டான்.

அவன், அவனை ஏறிட்டுப் பார்த்தான்.

'சீ, வோன்ஸ் த மீனிங் ஒப் நக்ரோமா....'

'ஓ.... நக்ரோமா.... மீன்ஸ் லிபர்ட்டி... லிபர்ட்டி....'

'நக்ரோமா என்றால் என்னப்பா?'


'அது எங்களுக்குக் கிடைக்க வேண்டிய ஒன்றம்மா..... லிபர்ட்டி.... சுதந்திரம்.'

அவன் கரத்திலிருந்த மண் பலாப்பழச் சுளையாக மணக்கிறது.

ஈழமுரசு
27 - யூலை - 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓநாய்கள்

மேலை வானின் விளிம்பில் குடும்பியான் ஒன்று தாழப் பறந்தது. நீண்டு கிடந்த காட்டுப் பாதையில் தன் சயிக்கிளை மெதுவாகச் செலுத்தியபடி வந்து கொண்டிருந்த பசுபதி அதனைக் கவனிக்கும் நிலையில் இல்லை. கிளை தாவிச் சலசலப்பினை ஏற்படுத்திய ஆற்று மந்திகளும் அவன் கவனத்தைக் கவரவில்லை. அவன் கவனம் முழுவதும் சயிக்கிள் கரியரில் கட்டியிருக்கும் பாரத்தில் இருந்தது. ஒரு மாதமாக நேரியகுளத்தில் அறுவடைத் தொழில் பார்த்ததால் கிடைத்த கூலிக்கு சந்தையில் பொருட்களை வாங்கிக் கொண்டு ஊருக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறான்.

அவனுக்காக வீட்டில் மனைவியும் ஐந்து பிள்ளைகளும் காத்திருக்கிறார்கள். இவ்வளவு நாளும் எப்படிச் சமாளித்தார்களோ? அவன் வேலைக்குப் புறப்பட்ட போது குடிசையில் ஒரு சிரங்கை அரிசி கூட இருக்கவில்லை.

இம்முறை வெளவாலைக் கிராமத்தில் கடும் வறட்சி நிலவிவிட்டது. புலவுகள் எல்லாம் துளிர் விட்ட உளுந்துடன் கருகிவிட்டன. அவர்களின் கிராமத்தைச் சுற்றிக் கடல் போல விரிந்து பரந்து கிடக்கும் காடுகளில் இயற்கைச் சமநிலையை மிஞ்சி விலங்குகள் அதிகரித்து விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுத்துவக்குகளுக்கும் தடை. இப்பொழுது பல வருடங்களாக அவர்களிடம் துப்பாக்கிகள் இல்லை. வேட்டை இலக்குகளும் மாறிவிட்டன.

மக்கள் பயத்துடனும் பசியுடனும் வாழ நேர்ந்துவிட்டது.

சயிக்கிளை வேகமாகச் செலுத்த முடியவில்லை. மேலை வானில் சூரியன் வேகமாக இறங்கிக் கொண்டிருந்தான். பாதையும் அடர் காட்டு மரக் கவிப்பால் இருளத் தொடங்கிருந்தது. இன்னமும் இரண்டு மைல்கள் இருக்கின்றன. சந்தியை அடைந்துவிட்டால் வெளவாலைக் கிராமம் இடது பக்கமாகக் கால் மைல் தொலைவில் வந்துவிடும்.

சயிக்கிளை நிறுத்திவிட்டுப் பாதையோரத்தில் கிடந்த மரக்குற்றியில் அமர்ந்து கொண்டான். பிளாஸ்ரிக் போத்தலில் இருந்து தண்ணீரைக் குடித்துவிட்டு எழுந்தபோது தூரத்தில் ட்றக்ரர் ஒன்று புழுதியைக் கிளப்பியபடி விரைந்து வருவது தெரிந்தது.

தந்திரிமலை ஜயரத்ன முதலாளியின் ட்றக்ரர். அவன் அருகில் வந்ததும் ட்றக்ரர் நின்றது.

"என்ன பசுபதி இந்த நேரத்தில்.... சரி சரி ஏறிக் கொள்".

ட்றைவர் சயிக்கிளையும் பொருட்களையும் ஏற்றுவதற்கு உதவி செய்தான்.

பசுபதி தாவி ஏறிக் கொண்டான்.

பொருட்களை ஏற்றும் போது, "உங்கட கமவில் ஏதோ கரைச்சல்...." என்றான் மெதுவாக. தாவி ஏறிய அவசரத்தில் பசுபதிக்கு அவன் கூறியவை சரியாகக் கிரகிக்கப் படவில்லை.

காட்டுப் பாதையில் ட்றக்ரர் விரைந்தது.

"என்ன பசுபதி நீ எங்கவோ தங்கு வேலைக்குப் போகிறதாமே? எங்க கமவிற்கு வந்திருக்கலாம் தானே?" என்று கேட்ட ஜயரத்ன முதலாளிக்குப் பதில் கூறுமுன்பே சந்தி வந்துவிட்டது. இறங்கிக் கொண்டான்.

"இனி கவனமாகப் போகலாம் தானே?"

"போகலாம் முதலாளி கிட்டடியில் தான். மம யனவா. கிட்டுவ மங்கெதற...."

இப்பொழுது உடம்பில் களைப்பில்லை. வீடு நெருங்க நெருங்கச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோஷமாக இருந்தது. வள்ளியம்மை அவனைக் கண்டதும் சந்தோஷத்தில் பூரித்துப் போவாள். அவசரம் அவசரமாகக் குளத்திற்குக் குளிக்க ஓடுவாள். பிள்ளைகள் அவனை ஆவலோடும் பாசத்தோடும் பார்ப்பார்கள்.

தூரத்தில் அவன் கிராமம் தெரிகிறது. கிராமத்தின் முகப்பில் இருக்கும் பிள்ளையார் கோயில் சிறிய கட்டிடம் அதோ!

"பசுபதி அண்ணை அங்க போகாதை...."

மெதுவாக அவனுக்கு மட்டும் கேட்கக் கூடியதாகப் பாதையோரக் காட்டு மர மறைப்பிலிருந்து ஒரு குரல் எழுந்து தடுக்கிறது. அவன் திடுக்கிட்டுச் சயிக்கிளிலிருந்து குதித்தான்.

"சட்டென்று இங்கால சயிக்கிளைத் திருப்பு அண்ணை...."

மர மறைப்பிலிருந்து வெளிப்பட்ட ஒரு கரம் அவனது சயிக்கிளைப் பற்றிக் காட்டிற்குள் இழுத்தது.

"விடடா... விடடா.... அது புள்ளையளுக்குக் கொண்டு போகிற சாமான்கள்."

"அண்ணை அது நான்... முத்தையா......"

"என்ன நடந்தது?" என்று பரபரப்புடன் பசுபதி கேட்டான்.

"ஓநாய்கள் வந்துவிட்டன. அண்ணை. அதுகள் இப்ப அங்க இருக்குதுகள். ஆரையோ தேடி வந்ததுகளாம். தேடியதுகள் ஓடிவிட்டுது. கண்டபாட்டிற்குச் சுட்டதால் ஐஞ்சாறு பேர் சரி.... கனபேருக்குக் காயம்......"

"உது எப்ப நடந்தது?"

"நேற்றுதான்.... இப்ப எல்லோரும் காட்டுக்க ஓடி ஒளிச்சிருக்கிறம். மானாவெளிக்குண்டில மறைஞ்சிருக்கிறம். உனக்காகத்தான் நான் இங்கவந்தனான். கெதியில போவம். ஓநாய்கள் கண்டால் அதோ கதிதான். கெதியா வா....." என்று முத்தையா அவனை இழுத்துக் கொண்டு காட்டிற்குள் நடந்தான்.

"நாங்கள் என்ன பாவம் செய்தமோ? இவங்களிடம் என்ன கேட்டம்" முத்தையா புலம்பிக் கொண்டு நடந்தான்.

"உண்மையா முத்தையா, எனக்கு இந்த நாட்டில என்ன நடக்குதெண்டு ஒரு மண்ணும் விளங்கேல்லை."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் மானாவெளிக்குண்டை அடைந்த போது நடுச் சாமமாகியிருந்தது. வள்ளியம்மை கவலையோடு அவனைப் பார்த்தாள். மூத்தவனை அங்கு காணவில்லை. மற்றைய பிள்ளைகள் அழுக்குடன் வாடி நின்றிருந்தன. எல்லாரும் அவனைச் சூழ்ந்து கொண்டனர்.

வெளவாலைக் கிராமத்தில் அமைதியாக வாழ்ந்த குடும்பங்கள். எல்லோரும் ஏதோ ஒரு வகையில் ஒருவருக்கொருவர் உறவினர்கள். எல்லாரது முகங்களிலும் பசிக் களை தெரிந்தது. ஓநாய்களின் அட்டகாசங்களையும் கேட்கக் கேட்கப் பசுபதியின் உள்ளம் நடுங்கியது. எல்லாரும் அவனைச் சூழ்ந்து நின்று கண்ணீர் வடிக்கிறார்கள். அவன் தலை மீது கையை வைத்துக் கொண்டு அப்படியே நிலத்தில் குந்திக் கொண்டான்.

"வள்ளியம்மை சாக்கில் சாமான் இருக்குது.... எல்லாருக்கும் சமை."

இரவு அழுதபடி விடிந்தது. மானாவெளிக் குண்டில் இருந்து தண்ணீரை அருந்திக் கொண்டனர். கிராமப் பக்கம் சென்ற முத்தையா கவலையுடன் திரும்பி வந்தான்.

"ஓநாய்கள் இன்னமும் நிக்குது... போக வில்லை...."

அடுத்த நாளும் அதே பதிலுடன் விடிந்தது. இழப்புகளுடன் பசி பட்டினி. பசுபதிக்கு நிலைமை புரிந்தது. காயம் பட்டவர்களில் ஒருவன் மரணமடைந்தான். இன்னொருத்தி சாவினை எதிர்பார்த்துக் கிடந்தாள். இழப்புக்கள்.... இழப்புக்கள்.....

தூரத்தில் யானையொன்றின் பிளிறல் எழுந்தது. மரங்களில் இருந்து இவர்களை அவதானித்துக் கொண்டிருந்த குரங்குகள் நீர்க் குண்டில் இறங்காது தாவி மறைந்தன.

பசுபதி வானத்தைப் பார்த்தபடி படுத்திருந்தான். வானத்தில் முகில் மறைப்பற்ற சந்திரன். முழு நிலவின் சோக ஒளிர்வில் கிடந்தது.

நான்காம் சாமம். காட்டில் பரபரப்பெழுந்தது. பலர் ஓடி வருவதும் சத்தமிட்ட படியும் அழுதபடியும் நெருங்கி வருவது கேட்டது. எல்லாரும் பயத்துடன் எழுந்து அமர்ந்தனர். கிழக்குப் பக்கமிருந்த காட்டு எல்லையில் மக்கள் கூட்டமொன்று வெளிப்பட்டது. முன்னால் வந்த ஒரு பெண், "அனே அம்மே... மெத்தனின் இன்னவா" என அலறினாள்.

"அது நாங்கள்... பசுபதி... வெளவாலை கமமினிசு..." என்றான் பசுபதி எழுந்தபடி. ஜயரத்ன முதலாளி வந்தவர்களுடன் முன்னால் வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுபதியையும் அவர் ஆட்களையும் இனம் கண்டு கொண்டார்.

"என்ன நடந்தது முதலாளி?"

அவர் துயரத்துடன் தலையைக் குனிந்து கொண்டார். எதுவும் பேசவில்லை.

"எங்கட கிராமத்திற்கு ஓநாய்கள் வந்து விட்டன முதலாளி. பெரும் பெரும் நக்குகளுடன் வந்தன. துப்பாக்கிகளை ஏந்தி வந்தன. உங்களுக்கென்ன நடந்தது?"

"எங்கட கிராமத்துக்குள்ளும் ஓநாய்கள் நுழைந்து விட்டன, பசுபதி".

"நாங்க எங்க போறம்?"

அடுத்த நாள் காலை அழுதபடி விடிந்தது. வானவெளி சோர்ந்து கிடந்தது. இருந்தாற் போல் ஆற்று மந்திகள் கிளை தாவின. காட்டின் அமைதி அழிந்தது. பறவைகள் சில பதறிக் குரல் தந்தன. ஆட்காட்டிகளின் 'அவக் அவக்' கென்ற ஒலி.

யாரோ அவர்களை நோக்கி வருகிறார்கள். ஓநாய்கள் வருகின்றன.

வருபவர்கள் யார்? எதற்காக வருகிறார்கள்?

ஜயரத்ன முதலாளி எழுந்து நின்றார்: "வெடி தியண்ட யக்கோ... வெடிதியண்ட.... அபி மினிசு இன்னவா. வெடி தியண்ட பற யக்கோ....."

பசுபதி பெருங்குரலில் சத்தமிட்டான்: "சுடுங்கடா.... எங்க எல்லாரையும் சுடுங்கடா. மனிசன்கள் தான் இங்க இருக்கிறம். சுடுங்கடா..."

அந்த வெளியில் ஏதிலிகளாக ஒதுங்கியிருந்த அத்தனை பேரும் கூச்சலிட்டனர்.

"அபி மினிசு இன்னவா... வெடிதியண்ட....."

"நாங்க மனிசர் இருக்கிறம்.... சுடுங்கடா...."


இருந்தாற்போலக் காட்டில் அமைதி நிலவியது. சலசலப்பு அடங்கி என்றுமில்லாத மோன அமைதி அவ்விடத்தில் பரவியது.

**- அமுது**

**ஜனவரி - 1999**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்ன உறவு

நள்ளிரவு தாண்டிய வேளையில் வடக்கேயிருந்து ஷெல்கள் யாழ்ப்பாண நகரத்தை நோக்கி ஏவப்படத் தொடங்கி விட்டன. அவை குத்தப்படுகிற சத்தத்திலிருந்து கோப்பாய்ப் பக்கமிருந்து தான் வெறிபிடித்துப் பாய்கின்றன என மாணிக்கத்தார் அனுமானித்துக் கொண்டார். அவர் வீட்டினைத் தாண்டிய வான்பரப்பில் அவை கூவிக் கொண்டு பாய்ந்து சென்றன. விழுந்து வெடித்துச் சிதறின. மனித சந்தடியற்ற யாழ்ப்பாணத்தில் வீசப்படுகின்ற ஷெல்களின் இலக்குகள் கட்டிடங்களும் வீடுகளும் - கட்டாக் காலி மாடுகளும் - தெரு நாய்களுக்குமாகத் தான் இருக்க முடியும். காலங்காலமாக வாழலாமென உண்ணாமல், உறங்காமல் மிச்சம் பிடித்துச் சேமித்துக் கட்டிய எத்தனை வீடுகள் சிதறிக் கற்குவியல்களாயினவோ?

அவர் வெகுநேரம் கட்டிலில் எழுந்து அமர்ந்து சிலையாக இருந்தார். ஊரே இராணுவத்திற்குப் பயந்து சொத்துக்களை விட்டு விட்டு காவக் கூடிய சுமையுடன் சாவகச்சேரிக்கும் வடமராட்சிக்கும் ஓடிவிட்ட பின்னர். மனித நடமாட்டமற்ற யாழ்நகரில் அவர் மட்டும் தங்கி விட்டது பிழையோ என எண்ணத் தலைப்பட்டார். தனிமை அவரைப் பயமுறுத்தவில்லை. கோயிலுக்குப் போய் அம்மனுக்கு விளக்கேற்றி விட்டு வெளிமண்டபத்தில் அமர்ந்தால் அம்மனோடு பேசிக் கொண்டு இருந்துவிடலாம்.

எப்படியிருந்த இடம்? ஆளரவமின்றி வெறிச்சோடிக் கிடந்தது.

நேற்று மாலை கூடக் கோயிலடி மண்டபத்தில் இருந்தபோது சயிக்கிளில் ஜெகனும், மாயனும் வந்து இறங்கினார்கள். இருவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரங்களில் துப்பாக்கி ஏந்தி உடல் முழுவதும் பல்வேறு யுத்தக் கருவிகளைக் காவியிருந்தார்கள். கோயில் மண்டபத்தில் அவரைக் கண்டதும் சயிக்கிளைத் தூணில் சார்த்திவிட்டு இறங்கி வந்தார்கள்.

"வாங்கோ பிள்ளைகள்......" என்றார் மாணிக்கத்தார். எல்லாரும் ஊரைவிட்டு இடம் பெயர்ந்துவிடத் தான் மட்டும் தனித்திருப்பதற்கு ஏசப் போகிறார்களோ என அவர் பயந்தார். இருவரும் சிரித்தபடி மண்டபத்தில் அமர்ந்தார்கள்.

"அப்பு. நீங்கள் அங்கால போகாததில எங்களுக்கு ஒண்டுமில்லை. பெரியதொரு யுத்தம் நடக்கப் போகுது. ஆமி கண்மண் தெரியாமல் குண்டுகளைப் பிரயோகிக்கும். எப்படியாவது யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி விடவேண்டுமென்ற முடிவோடு வந்து கொண்டிருக்குது. விசர்த்தனமாக நின்று எதிர்த்து மக்களை ஆயிரக்கணக்கில் பலிகொடுக்க நாங்கள் விரும்பவில்லை. துரத்திவிட்டம் என்று பேசிக்கொண்டு சென்றினம். அவர்கள் ஏசத் தான் செய்வினம். ஆனால் நடக்கப் போகின்ற சண்டையின் தன்மை எங்களுக்குத் தெரியும். எங்கட தலைவர் எடுக்கிற முடிவு முதலில் விருப்பப்படாததாகத் தான் இருக்கும். ஒரு தொலைப்பார்வையில் எவ்வளவு சரியானதென்பது காலம் கடந்து தெரியும். ஒரு குண்டு வீச்சில் நவாலிக் கோயிலில் தஞ்சம் புகுந்திருந்த நூற்றுக்கணக்கான அகதிகளைப் பலிகொண்ட சம்பவம் மறந்திருக்க மாட்டியள்" என்ற ஜெகனை அவர் ஏறிட்டுப் பார்த்தார்.

"என்னால இந்த இடத்தைவிட்டுச் செல்ல முடியவில்லை. பிள்ளையள். எங்க போறது? சொத்துப்பத்துக்கு ஆசைப்பட்டுத் தங்கிவிட்டன். எண்டு நினையாதையுங்கோ..... நான் அப்படியெண்டால் என்ர பிள்ளையோடு வெளி நாட்டிற்கு ஓடியிருப்பன்.... இந்த மண்ணில் என்ர மூதாதையின்ர சாம்பல் தூவப்பட்டிருக்குது... அவர்களுடைய மூச்சுக் காற்று இங்கு வீசும் காற்றில் பரவிக் கிடக்குது. என்ர அப்பு. ஆச்சி. சகோதரங்கள் எல்லாரும் இந்த ஊரிலதான் செத்தினம். கோம்பயன் மணல் சுடலையில் தான் எரிச்சது. அவர்கள் எல்லாரும் இங்கதான் இருக்கினம்...." அவர் உணர்ச்சி வசப்பட்டு கொட்டினார்.

இருவரும் அவரை இரக்கத்தோடும் கவலையோடும் பார்த்தார்கள்.

"உங்கட உணர்ச்சி, விருப்பு எங்களுக்குப்புரியுது அப்பு. நீங்கள் அப்படியொரு முடிவெடுத்திட்டால் அதை நாங்க எப்படி மறுக்கிறது. நாங்கள் துவக்கெடுத்தது எங்கள் மக்களுக்காக... எங்களது வருங்காலச் சந்ததியினருக்காக.... துவக்கேந்த வேண்டிய சூழ்நிலைக்கு எங்களைக் கொண்டு வந்தது அரசு தான். இன்றைக்கு ஆயிரக்கணக்கான இளம் பெடியளும். பெண்களும் இந்த மண்ணில் விதைக்கப் படுவதற்கு காரணம் சிங்கள அரசு தான்..." என்றான் மாயன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சந்திரிகா அரசு பேச்சுவார்த்தைக்கு வந்த போது அதை ஏன் இடைநடுவில் குழப்பியடித்தீர்கள்?"

"அதைத்தான் பலர் கேக்கினம். சந்திரிகா அரசு பேச்சுவார்த்தைக்கு வரும்போது என்ன தீர்வைக் கையில் வைத்திருந்தது? எதுவுமேயில்லாத நிலையில் பேச்சுவார்த்தையென்ற போர்வையில் தன்னைப் பலப்படுத்திக் கொள்ளப் பார்த்தது அப்பு."

அவர் எதுவும் பேசவில்லை. அவர்களை வியப்புடன் ஏறிட்டு நோக்கினார். அவர்கள் பலவற்றையும் பேசிக் கொண்டார்கள்.

"அப்பு, எப்படிச் சாப்பிடுறியள்?...."

"கோயில் களஞ்சியத்தில் கொஞ்சம் அரிசி இருக்குது. அம்மனுக்கு காலையில் பொங்கி வைச்சிட்டு அதைச் சாப்பிடுகிறன். இரவில் வீட்டிலை இருக்கிறதைக் கொண்டு சமாளிக்கிறன். இருக்கு மட்டும் சாப்பிடுவன். பிறகு அம்மன் விட்டவழி. தம்பிமார் இருந்தியளெண்டால் வெறுந் தேத்தண்ணி சீனியில்லாமல் தாறன்".

"கொண்டு வாங்கோ அப்பு" என்றார்கள் இருவரும்.

இப்பொழுது நினைத்தாலும் மாணிக்கத்தாருக்கு ஒருவிதமான பரிதாபம் ஏற்படுகின்றது. அவரின் பேரப்பிள்ளைகள் கனடாவில் சுகபோக வாழ்க்கைக்குப் பழக்கப் பட்டு விட்டன. அவர்கள் காரில் சென்று படிக்கிறார்கள். இவர்கள் கரங்களில் துப்பாக்கி ஏந்திச் சயிக்கிளில் மண்ணைமீட்க அலைகிறார்கள்.

போகும் போது ஜெகன் கூறியவை நினைவில் சதிராடுகின்றன.

"அப்பு எனக்கும் உங்களுக்கும் ஒரு விசயத்தில வலு ஒற்றுமை."

"என்ன தம்பி?"

"உங்களை இந்த மண்ணை விட்டு விட்டுக் கனடாவிற்கு வந்திடும் படி உங்கட பிள்ளையள் கூப்பிடுகினம். என்னை அதே கனடாவிற்கு என் பெற்றார், தம்பி, தங்கச்சிமார் இந்த மண்ணை விட்டு அங்க வந்துவிடும் படி ஓயாது கூப்பிடினம்."

அவர் விக்கித்து நின்றார். அவனை ஆதரவுடன் பாசத்தோடு பார்த்தார். அவன் அவர் மனதில் ஒருபடி உயர்ந்து அமர்ந்தான்.

"உன்னை இங்கு விட்டிட்டுப் போக அவர்களுக்கு எப்படி மனசு வந்தது?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கு இந்த மண்ணின் சுதந்திரம் பெரிதாகப் பட்டது. அவர்களுக்குத் தங்கள் உயிர்கள் பெரிதாகப் பட்டது. அவ்வளவுதான்."

ஜெகன் நரிக் குண்டுப் பக்கமாக வெறித்துப் பார்த்தான். அவன் மனக்கண்ணில் எக்காட்சி விரிந்ததோ? அவன் கனடாவிற்கு வர மறுத்த போது பெரும் சோகநாடகம் வீட்டில் அரங்கேறியிருக்கும்.

அவர்கள் விடைபெறும் பொழுது மாணிக்கத்தார் எழுந்து நின்றார். எதையோ சொல்ல விரும்புகிறவர் போலப்பட்டது.

"என்ன அப்பு?"

"இங்க ஊருலகத்தில சனமில்லை. நாய்கள், காகங்கள் தான் திரிகின்றன. ஆடுகள் நாய்களினால் வேட்டையாடப் பட்டு விட்டன. எனக்கு ஏதாவது நடந்திட்டால், நீங்க இங்கினேக்க இருந்தால், நாய், காகம் குதறாமல் புதைச்சு விட்டிடுங்கோ. கனகசபை தன் தாயை வளவில புதைச்ச மாதிரி" அவர் விழிகள் கலங்கின.

அவர்கள் அவரைக் கனிவோடு பார்த்தனர்.

"நாங்க இருந்தால் செய்வம்."

"தம்பிமார் கவனம்.... கவனமடா பொடியள்....."

அவர்கள் சென்றதன் பின்னர் மாணிக்கத்தார் இரவு படரும் வரை கோயில் மண்டபத்தில் அமர்ந்திருந்தார். பெருஞ்சுமையாகத் தனிமையின் அழுத்தம்! இடையிடையே துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன. நிலவு எழும்வரை இருந்தவர் வீட்டிற்குப் புறப்பட்டார். மயான அமைதி தழுவிக்கிடக்கிறது. சிவசாமியின் வீடு வெறிச்சு கிடந்தது. இரத்தினத்தின் வீடு கூரையில்லாமல் நிலவில் குளிக்கிறது. அவர்கள் சாவகச்சேரிக்குப் போயிருப்பார்கள். எப்படியிருக்கிறார்களோ? இவ்வளவு சனத்தையும் தென்மராட்சி எப்படிக் கொள்ளும்?

வலிகாமத்துத் தோட்டக்காரர் தங்கள் தோட்டங்களில் வெட்டிக் கொத்தித் தாழ்பதற்குரிய பசும் குழைகள் தென்மராட்சியிலிருந்து தான் வண்டில்களில் கட்டுக்கட்டாக வரும். பூவரசு, பாவட்டை, வேம்பு எனப் பலவகை இலைகுழைகள் வடக்கன்மாடுகள் இழுக்கின்ற பாரவண்டில்களில் கட்டிவரும். தென்மராட்சி அக்காலத்தில் குழைக்காடாகவிருந்தது. இரசாயன உரங்கள் வந்ததும் பசும் குழைகள் தாழ்க்கின்ற பழக்கம் மெல்ல மெல்லக் குறைந்து விட்டது. சுண்ணாம்புத் தரை மண்ணில் பச்சைக் குழை சேர்த்து செம்மண் சிவப்பேறிக் கிடந்தது. இன்று குழையின்றி அச்செம்மை குறைந்து வருகிறதென்பது மாணிக்கத்தாரின் அபிப்பிராயம்.

குண்டு வெடிப்புக்கள் இடையிடையே கேட்கின்றன. அவர் சுருட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றைப் புகைத்தபடி கட்டிலை விட்டு எழும்பி வெளியில் வந்தார். முற்றத்தில் நிற்கும் போது வானமும் நிலவும் தனக்கு மட்டும் என்ற எண்ணம் வந்தது. அயல் அட்டையில் எவருமில்லை. தூரத்தில் குலைக்கின்ற நாய்களைத் தவிர வேறு சந்தடியில்லை. வேப்பமரத்தில் குடியிருக்கும் கூகை குரல் தரவில்லை.

அதிகாலைப் பொழுதில் ஷெல் சத்தங்களும், துப்பாக்கிச் சத்தங்களும், கவச வாகனங்கள் உருளும் சத்தங்களும் அமளி துமளியாக எழுந்தன. எதிர்ப்பார்த்த இராணுவம் யாழ்ப்பாணம் நோக்கி நகருகின்றது.

இருந்தாற் போல் கூவிக் கொண்டு அவர் வீட்டிற்கு மேலாக விரைந்த ஷெல் மிக அருகில் விழுந்து பெருஞ் சத்தத்துடன் வெடித்தது. அவர் பதறிப் போனார். அம்மன் கோயில் மீது விழுந்து விட்டதோ? இராணுவம் வரும்போது வீட்டில் இருப்பதிலும் பார்க்கக் கோயிலில் இருப்பது மேல் எனப் பட்டதால் சால்வைத் துண்டையெடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு கோயில் நோக்கி நடந்தார்.

கோயில் அமைதியில் ஆழ்ந்திருந்தது. ஆனால், சிவசாமி மாஸ்ரரின் வீட்டின் கூரையின் ஒருபகுதி சரிந்து கிடந்தது. அழகான தோற்றத்தோடு நிமிர்ந்து நின்ற அந்த வீடு கணப்பொழுதில் மூளியாகிப் போனது.

அவர் கோயிலுக்குள் நுழைந்து உள் மண்டபத்தில் தூணோடு சாய்ந்து கொண்டார். மனம் சற்று நிம்மதிப் பட்டது. தான் தனிமையாக இல்லையென்ற உணர்வு.

மூன்று நாட்கள் அவர் கோயிலை விட்டு வெளியில் வரவில்லை. இரவு வேளைகளையும் அங்கேயே கழித்தார். வெளியே யுத்தம் மூண்டிருந்தது. தெளிவாகப் புரிந்தது. கோயிலுக்கு மேலால் கூவிக் கொண்டு ஷெல்கள் சென்றன. பலாலி வீதியில் இராணுவம் முன்னேறி வருவதாகப் பட்டது.

நான்காம் நாள் அதிகாலை புல்டோசர்களின் சத்தம் கிட்டடியில் எழுந்தது. கட்டிடங்கள் சரிந்து நொருங்கி விழுகின்ற சத்தமும் அவற்றினூடே கேட்டது. கலட்டிச் சந்தியிலிருந்து தட்டா தெருச் சந்தியை நோக்கி ஒரு நேர்கோட்டில் புல்டோசர்களால் அனைத்தும் தரைமட்டமாக்கப் பட்டன. கிணறுகள் தூர்க்கப் பட்டன.

கோயில் வாசலில் ஆளரவம் கேட்கிறது. இராணுவம் கோயிலைச் சுற்றி வளைத்துவிட்டதோ? அவர் உடல் மெதுவாக நடுங்கியது. இனந்தெரியாத பயம் உடலெங்கும் பரவி வியாபித்துக் கொண்டது. என்ன செய்வதெனத் தெரியாத நிலையில் தத்தளித்த போது பழக்கமான குரல் கேட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெரியவர் அப்பு..." என்று ஜெகன் அழைத்தபடி வேகமாகக் கோயிலுக்குள் நுழைந்தான்: "இப்ப இங்க சண்டை நடக்கப் போகுது. இராணுவம் வீடுகளைத் தகர்த்து இராணுவ வேலி போட்டுக் கொண்டு வருகுது. கெதியாக வீட்டுக்குப் போங்கோ. நல்லாத் தள்ளி தலையாளிப் பக்கமாகப் போங்கோ. இங்க நிற்க வேண்டாம்."

அவர் அவனை நன்றியுடன் பாாத்துவிட்டு வேகமாகக் கோயில் வெளிமண்டபத்திற்கு வந்தார். கலட்டிச் சந்திப் பக்கம் குண்டுகளும் துப்பாக்கிகளும் சீறி அதிர்ந்தன. புல்டோசர்களின் இரைச்சல் கேட்கிறது. கனரக வாகனங்களின் உருளும் சத்தம் எழுகிறது. வெளிமணடபத்தில் நின்றபடி திரும்பி அம்மனைக் கும்பிட்டார். வெளியில் இறங்கித் தலையாளிப் பக்கமாக விரைந்தார். கோயில் மதில்களோடு ஆயுதங்களுடன் நரிக்குண்டுப் பக்கமாகப் பார்த்த படி நின்றிருந்தனர் முதிரா இளம் பிள்ளைகள். அவர்கள் நெஞ்சில் வேதனையின் தீ நாக்குள் பற்றி எந்தன.

இன்னும் சில வேளைகளில் இப்பிரதேசம் கலங்கப்போகின்றது. குண்டுகளால் அதிரப் போகின்றது. சூடுபட்டு விழுகின்ற உடல்களால் இரத்தக் குளிப்பாட்டலிற்குள்ளாகப் போகின்றது. மரணக் குரல் நிரம்பப் போகின்றது.

"அம்மா..." என்ற மரணக் குரல் இப்பக்கத்தில் எழ, "அம்மே..." என்ற மரணக் குரல் அப்பக்கத்தில் எழப் போகின்றது. இந்த மனிதர்களுக்கு என்ன பிடித்து விட்டது. நிம்மதியாக வாழ்ந்து முடிக்கக் கூடிய சமாதான பூமி மலரவே மலராதா? இந்தச் சந்ததியினர் ஒருவரையொருவர் அழித்துக் கொண்டு தீராத பகையுடன் காணாமற் போகப் போகின்றார்களா?

உதட்டளவில் சமாதானத்தைப் பேசிக்கொண்டு, தமது கவனத்தை வாக்கு வேட்டையில் பதித்து, யுத்தத்தைத் தேர்ந்தெடுத்து இருபகுதி மக்களையும் ஏமாற்றிக் கொண்டே இந்த அரசியல் வாதிகள் காலங்கடத்தப் போகிறார்களா?

"தாயே, இந்த மண்ணிற்கு எப்ப விடிவு வரும்?"

அவர் வேகமாக நடக்கிறார்.

"இந்த மண்ணிற்கு நிரந்தர சமாதானத்தின் ஒளியை எடுத்து வரப்போகின்ற யுக புருசன் யார்?"

கோயில் பக்கமாகச் ஷெல்கள் வீசப் படுகின்றன. கோயில் பக்கமிருந்து எதிர்த் தாக்குதலாகக் குண்டுகள் பாய்கின்றன. இருபகுதியினரும் சந்தித்துக் கொண்டார்கள் போலும். அவர் வேகமாகத் தன் வீட்டுப் பக்கம் ஓடத் தொடங்கினார்.

தெருநாய்கள் பெரும் முழக்கத்துடன் அருகில் எழுந்த குண்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தத்திற்குப் பயந்து விழுந்தடித்துப் பொட்டுக்குள் நுழைந்து ஓடி மறைந்தன. வீதியில் அவரைத் தவிர எவருமில்லை. தன்னை நோக்கித்தான் குண்டுகள் வீசப்படுகின்றனவென்ற உணர்வு அவருக்கு ஏற்பட்டது. இப்படியான ஒரு சூழ்நிலையை அவர் எதிர்பார்க்கவில்லை. தூரத்தில் வெடித்த குண்டுகள், துப்பாக்கிச் சன்னங்கள் அனைத்தும் இவ்வளவு அருகில் சிதறிய போதுதான் யுத்தக் களத்தின் பயங்கரம் புரிந்தது. "இஷ்... இஷ்...." என்று இரைந்தபடி சன்னங்கள் பாய்ந்து "பட்... பட்..." என வெடித்தன. கலட்டிப் பிரதேசமே பெரும் அல்லோலகல்லோலப்பட்டது. மனிதரற்ற வீட்டுக் கட்டிடங்கள் தகர்ந்து சரிந்தன. மரங்கள் கிளைகளைத் துண்டித்து உதறின.

தென்னை மரங்கள் பல வட்டுக்களோடு இடை நடுவில் முறிந்து சரிந்தன.

அவர் ஓடிப்போய் தன் வீட்டிற்குள் புகுந்து கொண்டார். மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கியது. ஒரு பாதுகாப்பு உணர்வு ஏற்பட்டது. கட்டிலில் அப்படியே சரிந்தார். அவர் எடுத்த முடிவு சரியானதாகப் படவில்லை. ஒன்றில் அவர் தன் பிள்ளைகளோடு கனடாவிற்குச் சென்றிருக்க வேண்டும். அல்லது சிவசாமி மாஸ்ரரோடு சாவகச்சேரிக்காவது சென்றிருக்க வேண்டும். யாருமற்ற இந்த மயானபூமியில் எவருக்குந் தெரியாமல் மரணமடைந்தால்.....? நினைவே உடலை நடுங்க வைத்தது. சாவகச்சேரிக்கு ஓடிப்போக முடியுமோ?

காலம் கடந்த நினைவு. முடிவு.

அன்றிரவின் தொடக்கத்தில் குண்டுகள் வெடிக்கும் சத்தம் ஓய்ந்தது. ஆனால் இடையிடையே துப்பாக்கிச் சன்னங்கள் 'பட் பட்'டெனச் சிதறி வெடிக்கும் ஒலி கேட்டுக் கொண்டேயிருந்தது. என்ன நடந்தது ஏது நடந்ததென அறிய முடியவில்லை.

அப்படியே அயர்ந்து எப்பொழுது உறங்கிப் போனார் என்பது அவருக்கு நினைவிலில்லை.

அதிகாலை என்றும் போல விடிந்தது. எழுந்து வெளியில் வந்து வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு போர்ட்டிக் கோவில் கால் பதித்த போது அப்படியே திடுக்கிட்டு நின்று விட்டார். போர்ட்டிக்கோவின் தரையில் அமர்ந்து சுவரோடு தன்னைச் சாய்த்து ஜெகன் அமர்ந்திருந்தான். அவன் வயிற்றில் சன்னம் பாய்ந்திருப்பது தெரிந்தது. அதிலிருந்து வடிந்த இரத்தம் நிலத்தில் குளமிட்டிருந்தது. வயிற்றைச் சுற்றிச் சாரத்தால் கட்டியிருந்த போதிலும் அதனை மீறி இரத்தம் வடிந்திருந்தது. காயத்தின் மீது பதிந்திருந்த இடக்கரத்தின் விரல்களுக்கிடையில் இரத்தம் வடிந்து தோய்ந்திருந்தது. வலக்கரத்தில் பற்றிய துப்பாக்கி மடியில் சரிந்து கிடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி ஜெகன்....." என்றபடி அவர் அவனை நோக்கி விரைந்தார். துப்பாக்கிச் சூட்டை வாங்கிக் கொண்டு அவன் இரவே அங்கு வந்திருக்க வேண்டும். அவருக்கு அது தெரிந்திருக்கவில்லை. அவன் உதவி கேட்டு அவரை அழைத்திருப்பானோ?

ஏன் அவரைத் தேடி வந்தான்?

அவர் அவனைத் தூக்க முயன்றார். உடல் குளிர்ந்திருந்தது. அவர் கரம்பட்டதும் ஜெகனின் தலை ஒரு புறமாகச் சரிந்தது.

"ஐயோ தம்பி ஜெகன்....." என அவர் வாய்விட்டுக் கத்தியபோது அவரோடு சேர்ந்து அந்தத் துயரத்தில் கலந்துகொள்ள அவ்விடத்தில் எவருமில்லை. முற்றத்தில் நுழைந்த நாய் ஒன்று நேரம் தெரியாமல் பசியால் ஊளையிட்டது.

அன்று பின்னேரம் அவ்விடத்திற்குச் சில போராளிகள் வந்தனர். கோயிலடியில் செத்துக் கிடந்த தமது நண்பர்களைத் தூக்கிக் கொண்டு அவர் வீட்டிற்கு வந்தனர். அவர்களது முகங்களில் துயரத்தை மீறிய வன்மம் படர்ந்திருந்தது. அவர்கள் வந்தபோது அவர் வாங்கில் ஜெகனின் உடலை வளர்த்தி முகத்தை ஈரத்துணியால் துடைத்து தலை மாட்டில் குத்து விளக்கொன்றினை ஏற்றிவைத்திருந்தார்.

"அப்பு, ஜெகன் அண்ணை உங்களுக்கு என்ன முறை?" என்று ஒருத்தன் கேட்டான்.

மாணிக்கத்தார் விழிகளில் நீர் சொரிய நிமிர்ந்து பார்த்தார். ஜெகன் இவருக்கு என்ன முறை? இந்த இளம்பிள்ளைகளெல்லாம் அவருக்கு என்ன உறவு? காவோலைகள் வட்டுக்கழராமல் காற்றில் ஊசலாடக் குருத்தோலைகள் வண்டரித்துச் சரிந்து கொண்டிருக்கின்றன. இவர்கள் எனக்கு என்ன உறவு?

அவன் மீண்டும் கேட்டான்.

"என்ர பேரன்..." என்றபடி அவர் விம்மத் தொடங்கினார்.

- தினக்குரல்

ஜூலை - 20 - 1997

(ஆசிரியரின் 'மரணங்கள் மலிந்த பூமி' நாவலின் ஒரு அத்தியாயம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரவங்கள்

"இதுவா எங்கட கிராமம்?"

அவன் இப்படி வீறிட்டு அலறுவானென நான் நினைக்க வில்லை. எல்லாரதும் கவனம் எங்கள் பக்கந் திரும்பியது. எங்களை அழைத்து வந்த கிராமசேவகரும இராணுவ அதிகாரியும் எங்களை நோக்கி வரத் தலைப்பட்டனர்.

"ஒண்டுமில்லை....." என்று நான் குரல் தந்தேன்.

உடைந்து கற்குவியலாகக் கிடந்த பாடசாலைக் கட்டிடத்தின் முன் ஊனப்பட்டுக் காய்ந்து கருகிக் கொண்டிருக்கும் வேப்பமரத்தின் கீழ் நின்றிருந்தோம். எங்கள் சிதைந்து போன கனவுகளாக அவை உருக்குலைந்த கற்குவியலிடையேயும் பற்றைகள் கவிந்திருந்த வீதியினூடேயும் பாம்புகள் நெளிந்தன. அவற்றைப் பயத்துடன் எல்லாரும் பார்த்தனர்.

"நாங்கள் இங்கிருந்து ஓடியதும் பாம்புகள் குடி கொண்டு விட்டன" என்றார் நடராஜா மெதுவாக. பாம்புகளுக்குக் கேட்டுவிடலாமென்ற அச்சத்துடன் மெதுவாக அவர் கூறியதாகப் பட்டது.

"சனசந்தடி வந்ததும் அவை விலகிவிடும்" என்றேன் நான். எனது கடந்த கால வாழ்க்கையில் இப்படி எத்தனையோ பாம்புகளைக் கண்டிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விசப்பாம்புகள் போல....."

"இருக்கும். அதுகளுக்கு எங்களைக் கண்டால் பயம். எங்களுக்கு அதுகளைக் கண்டால் பயம். தனகினால் கொத்தத்தான் செய்யும். சாரையளும் இருக்கும்."

"சிலது தனகாமலே கொத்திவிடும்."

எட்டு நீண்ட ஆண்டுகளின் பின்னர் எங்கள் ஊரில் மீண்டும் குடியேற இராணுவம் அனுமதித்திருக்கின்றது. இந்த மண்ணிலிருந்து ஒரு நாள் அதிகாலை உயிர்களைக் காவிக்கொண்டும் குழந்தைகளை இழுத்துக் கொண்டும் ஓடினோம். அதன் பின்னர் இன்றுதான் இந்த மண்ணில் கால்களைப் பதித்து நிற்கின்றோம்.

இது ஒரு இனிமையான அனுபவம். இது நான் வாழ்ந்த மண்தரை. கால்களில் அணிந்திருந்த சிலிப்பர்களைக் கழற்றி விட்டு, மண்தரையில் பாசத்துடன் கால்களை அழுத்தமாகப் பதித்துக் கொண்டேன். பாதங்களூடாக என்னுள் என் தாய் மண்ணின் குளிர்மை உச்சி வரை ஊடுருவிப் பரவிய உணர்ச்சி. விபரிக்க முடியாத புத்துணர்ச்சி.

கிராமசேவையாளர் இராணுவ அதிகாரியின் கூற்றினைத் தமிழில் சொன்னார்: "நீங்க எல்லாரும் உங்கட பிறந்து வளர்ந்த ஊரில இனிச் சந்தோசமாக இருக்கலாம். வீடுகளை உங்க உங்க வளவுகளில் கட்டிக் கொள்ளலாம். தொழில்களைச் செய்யலாம். இங்கு புதைக்கப் பட்டிருந்த மிதிவெடிகள் கண்ணிகள் கூடியவரை அகற்றப் பட்டுவிட்டன. இனி......" அவர் தொடர்ந்து பேசிக் கொண்டு வந்தார். அவரின் பேச்சினையும் கவனிக்கும் நிலையில் எவருமில்லை. அவர்களின் விழிகள் நாலா பக்கங்களும் துளாவித் தவித்தன. தாங்கள் எங்கிருக்கின்றோமென்பது பலருக்குப் புரியவில்லை. கண்ணுக்கெட்டிய தூரம்வரை மஞ்சவண்ணாப் பற்றைகளும் செடிகொடிகளும் வளர்ந்து படர்ந்து கிராமத்தை மூடியிருந்தன. பாரிய மரங்கள் குண்டடிக்குக் கிளைகளை முறித்துக் கொண்டு பட்டுக் கிடந்தன. கிராமத்தைச் சுற்றிக் காணப்பட்ட பனங்கூடலைக் காணவில்லை. சோளகக் காற்றில் தலையசைத்து முகில்களை எட்டிப் பிடிக்கத் துடித்த பனைமரங்கள் காணாமற் போயிருந்தன. வீதிகள், கிணறுகள், வீடுகள்.... எதையும் இனங்காண முடியவில்லை.

அங்காங்கு பாம்புகள் மட்டும் தெளிவாகக் காணப்பட்டன. சில மூர்க்கத்தோடு இவர்களைப் பார்த்து வெறித்தன.

கிராமத்தின் மேற்குக் கோடியில் பாதுகாப்பு அரணாக மண் அணையொன்று. அதில் பாம்புப் புற்றுகள் காணப்பட்டன. புற்றுகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலாகப் பாம்புகளின் தலைகள் மங்கலாகத் தெரிந்தன. முட்கம்பி வேலிகளில் பாம்புச் செட்டைகள் கழற்றப் பட்டிருந்தன.

அவர்கள் கிராமத்தின் மத்தியில் அமைந்திருந்த பாடசாலைக் கற்குவியலையும் குட்டிச் சுவர்களையும் கொண்டே தங்களது கிராமம் என அடையாளம் கண்டு கொண்டனர். பாடசாலை வளவினைச் சுற்றி நின்றிருந்த பனை மரங்கள் பல தறிக்கப் பட்டிருந்தன. பல தலை சீவப்பட்டிருந்தன.

பாடசாலை முன்றலில் முன்னர் நிறைய மரங்கள் வளர்ந்திருந்தன. அவற்றின் நிழலில் வகுப்புக்கள் நடந்திருக்கின்றன. அந்த மரங்களைக் காணவில்லை. உக்கிப் போன அடிமரங்கள். இருந்தனவென்பதற்குச் சாட்சியாக ஊனப்பட்ட வேப்பமரம் ஒன்று. எஞ்சிய கிளைகளைக் குண்டுகள் சீவியிருந்தன. சன்னங்கள் மரத்தின் பட்டைகளைப் பிய்த்துச் சொறி பிடிக்க வைத்திருந்தன.

"எங்கட கிராமம் பாழடைந்து விட்டது. இங்கு இப்ப எஞ்சியிருப்பது சரித்திர ஆராய்ச்சிக்கு உதவும் சிதைந்த கட்டிடங்கள் தாம்" என்றார் கந்தசாமி மாஸ்ரர்.

"பாழடைந்தாலும் எங்கட ஆத்மா இங்கதான் இருக்குது...."

என்னருகில் நின்றிருந்த அவன் என் கரத்தைத் துயரத்துடன் பற்றிக் கொண்டான். அமைதியாக இருக்கும்படி நான் அவன் தோளில் கரத்தைப் பதித்தேன். முகங் காய்ந்து வெளுத்த நிலையில் எல்லாரும் நின்றிருந்தனர். எல்லார் மனத்திலும் இங்கு வருவதற்கு முன்னர் அற்ப நப்பாசை இருந்துள்ளது. இராணுவத்திற்குப் பயந்து ஓடிப்போனபோது விட்டு விட்டு வந்த நிலையில் வீடு வாசல் சொத்துப் பத்து இருக்குமென்று எண்ணம் இங்கு கால் பதித்ததும் கணத்தில் சிதைந்துபோனது. குன்றிக் குமைந்து நின்றிருந்தனர்.

தாம் வாழ்ந்த இடத்தினை அடையாளம் காண முடியாமல் ஊரே சிதைந்து போய்விட்டது. எவ்வளவு பக்குவமாக தத்தம் வளவுகளுக்குக் கதியால்கள் நாட்டி எல்லையிட்டு எச்சரிக்கையாகக் கிடுகுவேலிகளை இட்டுப் பேணியிருந்தார்கள். கிடுகுவேலிகளுக்குள் எங்களது கலாசாரம் பேணிப்பாதுகாக்கப் பட்டது. எங்களது பெருமைக்கமைய அசிங்கங்களையும் அக்கிடுகு வேலிகள் வெளித் தெரியாது காத்துள்ளன.

சின்னத்தம்பி அம்மானுக்கும் ஆடுகால் அம்பலத்தாருக்கும் பத்து வருடங்களாக நடந்து கொண்டிருந்த நீதிமன்ற வழக்கு வேலிப் பிரச்சினை சம்பந்தமானது தான். அம்பலத்தார் கிணற்றடிப் பக்கமாக அரையடி உட்புறமாகத் தள்ளிக் கதியால்களை நடப்போய், சின்னத்தம்பி அம்மான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுவாக்கத்தியுடன் பாய்ந்து கட்டிப் புரண்டு.... காயப்பட்டு.... கோடேறி..... இரண்டு பேரும் அந்தக் காணிகளை முதலில் ஈடு வைத்துப் பின்னர் விற்றுப் புரக்கிராசிமாருக்குக் கொடுத்தழிந்ததும், வழக்கு முடிவு காணாத நிலையில் ஊரை விட்டே கோவணத்துடனும் கோபத்துடனும் ஓடிப் போனார்கள். இன்று வேலிகளுமில்லை. வேலிச் சச்சரவுப் பட மனிதர்களுமில்லை. கலகாரிப் புஸ்மன்களைப் போல் பற்றைகளையும் புதர்களையும் பின்னிப் பிணைத்து விட்டு, அவற்றுள் வாழ்ந்து முடித்துவிடலாம். ஊரெல்லாம் காடாகிப் பாம்புகள் பெருகிவிட்டன. புஸ்மன்களுக்குச் சாப்பாட்டிற்கு கஷ்டமில்லை.

விதானையாரின் குரல் ஒலிக்கிறது.

"என்ன யோசித்துக் கொண்டு நிற்கிறியள்? இது தான் முந்தைய பிரதான வீதி. மறந்து போனியளே? இப்படியே வடக்கு பக்கமாகச் சுந்தரம் அழைத்துப் போவார். அங்காலப் பக்கம் வீடிருந்தவை அவரோடு போய்ப் பாருங்கோ. தெற்காலப் பக்கமாக மாணிக்கம் கூட்டிப் போவார். போய்ப் பார்த்திட்டு சுணங்காமல் வாருங்கோ. கண்ட பாட்டிற்கு திரியாமல் மிதிவெடிகள் இருக்கும். தெளிவான பாதையால நடவுங்கோ...."

"பாம்புகளோடை கண்ணி வெடிகளும் இருக்குது...." என்று நடராஜா பெருமூச்செறிந்தார்.

கூட்டம் இரண்டாகப் பிரிந்தது. நான் வடக்குப் பக்கமாக அவனையும் அழைத்துக் கொண்டு சுந்தரத்தைத் தொடர்ந்தேன். பற்றைகளை விலக்கிக் கொண்டு நடந்தோம்.

"அதிலை தான் என்ர வீடிருந்திருக்க வேணும்.... ஒண்டையும் காணோம்." என்றபடி தில்லைநாதன் ஓரிடத்தில் குறுக்கே புகுந்தான்.

"கவனம்.... கவனம்"

அவனுடைய வீடு கூரையின்றிக் கிடந்தது. கதவுகள், யன்னல்கள் என்பன சுவர் உடைத்து நீக்கப்பட்டிருந்தன. காற்றிற்கும் வெயிலுக்கும் மழைக்கும் தாக்குப் பிடிக்க முடியாமல் சுவர்கள் பாளம் பாளமாக வெடித்திருந்தன. அவற்றில் ஆலமரங்கள் வளரத் தொடங்கியிருந்தன. கொடிகள் சுவர்களில் பற்றிப் படர்ந்திருந்தன.

"ஐயோ...." என்று தில்லை நாதன் அலறினான்: "என்ர வீடு..... எப்படி எப்படியெல்லாம் கஷ்டப்பட்டுக் கட்டினன். இரண்டு வரியம் கூட ஆமாகக் குடியிருக்கவில்லை. எல்லாத்தையும் புடுங்கிக் கொண்டு போட்டான்கள்."

தில்லைநாதன் வாழ்க்கையின் ஆணிவேர் ஆட்டங்கண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணச் சமூகத்தின் வாழ்விலக்கு வீடு, வளவு, கிணறு, அச்சறிக்கையான வேலி. தண்ணீரைக் குடித்துக் கொண்டாவது நிம்மதியாக வாழ்ந்துவிட வேண்டும். யுத்தம் எல்லாவற்றையும் குலைத்து விட்டது. நம்பிக்கைகள் தளர்ந்து விட்டன.

"பாவிகள்... பாவிகள்....."

"நான் என்ர வீட்டைப் பார்க்க வரவில்லை, மாமா....." என்றான் அவன்.

"இப்படியிருக்குமென்று எதிர் பார்த்துத்தான் வந்தம். எட்டு வரியத்துக்குப் பின்னும் குடியிருக்காத வீடு வாசல் அப்படியே இருக்குமெண்டு நம்புகிறாயா, வசந்தன்?"

எவ்வளவு அழகான கிராமம் எங்களுடையது? ஊரில் சண்டை சச்சரவுகள் இருந்தாலும் அந்தக் கிராமத்தை ஒவ்வொருவரும் உயிருக்கு மேலாக நேசித்திருக்கிறார்கள். இந்த மண்ணில் தான் அவர்கள் பிறந்தார்கள். வளர்ந்தார்கள். ஓடியாடி விளையாடினார்கள்.

"எனக்குத் தாய்நாடு இதுதான், மாமா.... நான் பிறந்தபோது எந்த வாடைக்காற்று என்மீது பட்டதோ, எந்த நீர் என்னைக் கழுவிற்றோ..... விருத்தெரிந்தபோது எந்தச் சுற்றாடல் என் கண்ணில் பட்டு மனதில் பதிந்ததோ..... அது அந்தக் கிராமத்தில் தான் இருந்தன. எங்க வீடு.... உங்க வீடு..... இங்க இப்ப ஏக்கத்தோடு தம் வீடு வளவுகளைப் பார்க்க வந்திருக்கும் எல்லோரதும் வீடுகள்.... பிள்ளையார் கோயில், ஆலடிச்சந்தி.... நரியன் குண்டு.... பரியாரி மதகு .... சங்கரையர் தோட்டம் துரவு..... கிராமத்தைச் சுற்றி வளைத்திருந்த பனந்தோப்புகள்.... வடலிகள்.... இவைதாம் பசுமையாக நினைவில் நிற்கின்றன.... அவை எங்கே? இவ்வளவு இனிமைகளையும் பறிகொடுத்துத் தான் நாங்கள் உரிமைகளைப் பெறவேண்டுமா? அரசியல் வாதிகளின் சுயநலத்திற்கு அதிகார வேட்கைக்கு நாங்கள் பலியாகிவிட்டம்....." வசந்தன் பொருமினான்.

"இந்தப் போராட்டத்தில் நாங்கள் இழந்தது மிக மிக அதிகம்....."

பிள்ளையார் கோயில் கலசத்தை இழந்திருந்தது. முன் மண்டபங்கள் சிதைந்து கிடந்தன. கோபுரத்தில் ஆலும் அரசும் ஆழ வேரூன்றி வளர்ந்திருந்தன. ஓணான் ஒன்று பிள்ளையார் சிலை மீது படுத்திருந்தது. ஆள் அரவம் கேட்டதும் எங்கோ புகுந்து மறைந்தது.

நாங்கள் பிள்ளையார் கோயில் முன் சற்றுத் தரித்து நின்றோம். இரவிரவாக இங்கு திருவிழாக்கள் நடக்கும். நான்கு வீதிகளும் சனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்திருக்கும். கடலைக்காரிகள் வரிசையாக அமர்ந்திருப்பர். தும்பு முட்டாஸ்..... ஐஸ்கிறீம்..... எவர் சில்வர் பாத்திரக் கடைகள்.... மணிக்கடைகள்..... ஊரே திரண்டிருக்கும். இது எங்களது கோயில். எனக்குச் சோறு தீத்தியது இந்தக் கோயில் மண்டபத்தில் தான். எட்டு வருடங்களாக நான் யாழ்ப்பாணக் குடாநாடு எங்கும் இடம் மாறி இடம்மாறிக் குடியிருக்க அலைந்து திரிந்திருக்கிறேன். எத்தனையோ கோயில்களைத் தரிசித்திருக்கின்றேன். இப்போது இந்த எங்கள் பிள்ளையார் கோயில் முன் நிற்கின்ற சுகானுபவம் கிட்டியதில்லை. என் விழிகள் கலங்கின.

கிராமம் சுடுகாடாகிவிட்டது. வீடுகள் கற்குவியல்களாகிவிட்டன. அல்லது செடி கொடிகளால் மூடப்பட்டு பாழடைந்து விட்டன. பிள்ளையார் ஏகாங்கியாகிவிட்டார். அவருக்கு விளக்கேற்ற எவருமில்லை. ஆலயம் தேடுவாரின்றிப் பழுதுபட்டு அருள் விளக்கத்தை இழந்து வருகின்றது. கிராமத்தை விட்டு தெய்வங்கள் வெளியேறிவிட பேய்களும் பிசாசுகளும் குடியேறி விட்டன. பாம்புகள் எம்மைச் சினத்தோடும் நேயமின்றியும் பார்க்கின்றன.

கோயிலின் சுற்றாடலில் விழிகள் பதித்து அலைந்தன. கிழக்கு வீதியில் பற்றைகளுக்கிடையில் விழிகள் எதையோ தேடின. கோயிலின் கிணறு அங்குதான் இருந்தது. கிராமம் முழுவதும் இருக்கும் கிணறுகளில் நன்னீர் கிடைத்தாலும் பிள்ளையார் கோயில் வெளிவீதிக் கிணற்றின் நீரில் எங்குமில்லாத சுவையிருக்கும். கிராமத்தவர்கள் கோயில் கிணற்றில் விரும்பி நீர் அள்ளிச் செல்வார்கள். கிணற்றடியில் எத்தனை சண்டைகள் நிகழ்ந்திருக்கின்றன. சாதிச் சண்டைகளின் இருப்பிடமாக இந்தக் கிணற்றடி ஒரு காலத்தில் விளங்கியது. என்னுடைய சிறுவயதில் எல்லாரும் கிணற்றில் தண்ணீர் அள்ளிவிட முடியாது. துலாக்கயிற்றினைப் பற்றி நீர் அள்ளுகின்ற உரிமை ஒரு சிலருக்குத்தான் இருந்திருக்கின்றது.

மெல்ல மெல்ல அந்தக் கட்டுப் பாடு தளர்ந்து போனது. அந்தக் கிணறு இருந்தவிடத்தில் இன்று ஒரு இறக்கம் மட்டுந்தான் காணப்படுகின்றது. கிணற்றின் சுற்றுக்கட்டுகள் இடித்துத் தள்ளப் பட்டு கிணற்றின் முக்கால் பகுதி மூடப்பட்டிருந்தது. எத்தனை கிணறுகள் இப்படித் தூர்ந்து போயினவோ?

"கடவுளே" என்றார் ஆறுமுகம். "அருமையான நல்ல தண்ணிக் கிணறு.... மூடிப் போட்டான்கள்....."

"இனித் தோண்டேக்க இதுக்குள்ள எத்தனை எலும்புக் கூடுகள் அகப்படுமோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்தன் என்னைக் கவலையோடு பார்த்தான்.

வசந்தனின் வீடு வாசிகசாலைக்கு அருகில் இருந்தது. சுந்தரத்தின் பின்னால் நடந்தோம். வழியெங்கும் பற்றைகள். பற்றைகளை விலக்கிப் பார்த்துவிட்டுப் பலர் நிலைகுலைந்து போயினர். தங்கள் வீடுகள் இருந்த இடம் தெரியாது போன நிலை அவர்களைப் பதற வைத்தது.

"தம்பி என்ர வீடிருக்குமா?" என்று நடராஜா என்னிடம் கவலையோடு கேட்டார். அவர் இந்தக் கிராமத்தில் அரசடிச் சந்தியில் கடை நடத்தியவர்.

நான் அவரை இரக்கத்துடன் பார்த்தேன்.

"இப்பதான் பாக்கிறியளே? இந்தக் கிராமத்தில் ஒரு வீடும் முழுமையாக இல்லை. எல்லாம் வாழமுடியாதளவிற்குச் சிதைந்து விட்டன. சண்டை எங்கட கிராமத்தில் உக்கிரமமாக நடந்திருக்குது.... உங்கட வீடு மதவடியிலை தானே?"

"ஓமோம். தம்பி. வீடு போனாப் பறவாயில்லை. வீடிருந்தவிடம் தெரியவேண்டும்."

"உங்கட வீட்டைச் சுலபமாகக் கண்டுபிடிக்கலாம். அண்ணை. மதவுக்கு முன்னால...."

"தம்பி......" என்றார்: ஒருத்தருக்கும் சொல்லாதை.... ஆமி வருகிது எண்டதும் ஓடுறதுக்கு முன்னால என்ரை நகை நட்டெல்லாத்தையும்...... நூறு பவுனுக்கு மேல.... ஒரு பேணியில போட்டு கோடியில தாட்டுப் போட்டு ஓடினனான்..... இவ்வளவு காலமும் நான் உறங்கினதேயில்லை.... இப்ப வாறது அதுக்காகத் தான்.... என்ர பிள்ளையளின்ரை கல்யாணம் கார்த்திகை எல்லாம் அதில தான் தங்கியிருக்கு...." அவர் என்னை ஏக்கத்தோடு பார்த்தார்.

பற்றைகள் சரசரத்தன. கட்டாக்காலி மாடுகள் இரண்டு மூசிக்கொண்டு ஓடின. எவரும் கட்டி வளர்க்காததால் அவை குழுப் பிடித்திருந்தன. பாதையில் பெரும் புற்றுக்கள் காணப்பட்டன.

மதவடி வந்தபோது நடராஜா பரபரப்படைந்தார். மதவுக்கு முன் காணப்பட்ட பற்றைகளை விலக்கியபடி உள்ளே புகுந்தார்.

"அண்ணை கவனம்.... மிதிவெடி இருக்கும்...." எவரது எச்சரிக்கையையும் கேளாமல் அவர் ஆவேசமாக நுழைந்தார்.

"ஐயோ... என்ர அம்மாளாச்சி...." என்று அவர் பெருங்குரலில் அலறுவது கேட்டது. நான் பதற்றத்துடன் அவர் நுழைந்த வழியால் புகுந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் வீட்டைக் காணவில்லை. அவர் வீட்டின் வளவின் ஊடாக அரைப்பனை உயரத்திற்கு மண் குவிக்கப் பட்டுப் பாதுகாப்பு அரண் அமைக்கப் பட்டிருந்தது. அந்தப் பெரும் பாதுகாப்பு அணைக்குள் அவர் வீடு இருந்த இடம் தெரியாமல் குவியலாகிவிட்டது. நடராஜா நிலத்தில் அப்படியே சரிந்து விழுந்தார்.

அவரை ஆசுவாசப் படுத்தி வெளியே அழைத்து வந்தேன். அப்படியே தரையில் அமர்ந்து விட்டார்.

"நீங்கள் பார்த்திட்டு வாங்கோ.... நான் இப்படியிருந்திட்டுப் பள்ளிக் கூடத்திற்குப் போறன்...."

தங்கள் தங்கள் வளவுகளையும் சிதிலமாகிய வீடுகளையும் பார்த்து மனம் இடிந்து போனவர்கள் ஆங்காங்கே தங்கிவிட்டார்கள். வாசிகசாலை வரை செல்ல வேண்டும். அங்குதான் என்னுடையதும் வசந்தனதும் வீடுகள் இருந்தன.

"திரும்பி விடலாம் போல இருக்குது. மாமா...."

"வந்தனாங்கள், ஒருக்காப் பார்த்திட்டுப் போவம்..."

அவன் என்னை ஆழமாகப் பார்த்தான்.

"மாமா.... என் வீடும் முற்றமும் வளவும் மரங்களும் இன்னமும் என் கண்களில் பசுமையாக நிற்கின்றன. அந்த வீட்டை நானும் கூலியாளாக நின்று கட்டினன். ஒவ்வொரு அரிகல்லும் சாந்தும் என் கரம் பட்டவை.... நானும் என் குடும்பமும் அந்த வீட்டில் எவ்வளவு குதூகலமாக வாழ்ந்தம் தெரியுமா? முற்றத்தில் பெரியதொரு பலாமரம்.... கொந்தல் இறக்கவும், பலாப்பழம் இறக்கவும், இந்த மரத்தில் எத்தனை தடவைகள் ஏறியிறங்கியிருப்பன் தெரியுமா? அந்த மரத்தின் ஒவ்வொரு கிளையும் என்னை.... வீட்டின் பின்னால் மாமரங்கள்.... கொக்கத் தடியில் பட்டை கட்டி முற்றிய மாங்கனிகளைப் பறித்திருக்கின்றன்......"

நான் அவனை ஆதரவாகப் பார்த்தபடி நடந்தேன். அவன் தொடர்ந்தான்.

"வளவு முழுவதும் நான் வைத்த செவ்விளநீர் மரங்கள்.... இவ்விடத்தை விட்டு ஓடும்போது காய்க்கத் தொடங்கியிருந்தன. இப்ப காய்த்துச் சிலிர்த்திருப்பினம்......"

வானத்தில் பருந்தொன்று கேவியது. உச்சிவெயில் சூழலை வறுத்தெடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாமா...... என்னை விடுங்கோ....... நான் வரவில்லை. என் மனதில் இருக்கின்ற பசுமையை அழித்துக் கொள்ள என்னால முடியாது. என்ர வீடு உடையேல்ல. அந்தப் பலாமரம்.... அடிவளவு மரங்கள்.... நான் ஆசையோடு வைத்த செவ்விளநீர்க் கன்றுகள் எல்லாம் அப்படியே இருக்கின்றன. நான் திரும்பிப் போய் பிள்ளையளையும் கூட்டிக் கொண்டு அங்கு வரப்போறன்"

வசந்தன் திடீரெனத் திரும்பி நடக்கத் தொடங்கினான். அவனைத் தடுக்க நான் விரும்பவில்லை. அவன் கூற்றில் நியாயமிருக்கிறது.

"தம்பி. உங்கட உத்தேசமென்ன?" என்று மாணிக்கவேலர் என்னிடம் கேட்டார்.

"இதில யோசிக்கிறதுக்கு என்ன இருக்கிறது? இது எங்கட கிராமம் நாங்க பிறந்து வளர்ந்த மண்..... எங்கட மூதாதையர் வாழ்ந்து முடிந்த பூமி.... நாங்க இதை இப்படியே பாழடைய விட்டுவிட முடியாது. திரும்பி வரத்தான் வேணும். என்ன விலை கொடுத்தும் முந்தியது மாதிரி கட்டியெழுப்பத்தான் வேணும்".

"அதுக்கு முதலில் மக்கள் கிராமத்தை விட்டு ஓடியதும் பாம்புகளும் பிசாசுகளும் இங்கை குடியேறி விட்டன. அதுகளுக்குக் கழிப்புக் கழிக்க வேணும் முதலில்....."

நான் அவரை நிமிர்ந்து பார்த்தேன்.

"பிசாசுகள் இருக்கத்தான் செய்யும். அதுக்காக நாங்க கிராமத்தை விட்டு ஓடிவிட முடியாது. அண்ணை."

அப்பொழுது தான் அந்தச் சத்தம் கேட்டது. வீட்டை மூடிச்சென்ற பாதுகாப்பு அணையைக் கிளற முயன்ற நடராஜாவின் பாதம் ஒன்று காணாமல் போயிருக்கும். கிராமத்தை மீளக்கட்டியமைக்கும் போது இப்படி எத்தனை கண்ணிகள் வெடிக்கக் காத்திருக்கின்றனவோ?

நாங்கள் பாடசாலைக்குத் திரும்பி வந்தபோது நடராஜாவை வாகனமொன்றில் ஆஸ்பத்திரிக்கு அனுப்பியிருந்தார்கள். முழங்காலுக்குக் கீழ் காணாமற் போய்விட்டதாம். சிதைந்து கிடக்கும் தங்கள் வீடுகளையும், காணாமற் போன நடராஜாவின் பாதத்தையும், ஆங்காங்கு நெளிந்த பாம்புகளையும், புற்றுகளையும், பார்த்த பலர் கலங்கிப் போய்விட்டார்கள். திரும்பி வந்து கிராமத்தில் குடியேறுவோம் என்ற நம்பிக்கை பலருக்குத் தகர்ந்திருந்தது போலப்பட்டது.

எப்படிச் செழிப்போடு விளங்கிய கிராமம் இன்று காடடர்ந்து குட்டிச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவர்களோடு கற்குவியலாகவும் மண்மேடுகளாகவும் மாறி விட்டது. வளமான தோட்டங்களின் - வளமான மண் - புல்டோசர்களினால் வாரி அணைகளிடப் பட்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கில் உயர்ந்து நின்றிருந்த பனைகளும் தென்னைகளும் இருந்தவிடம் தெரியாமல் போய்விட்டன. சென்றிகளில் உக்கிக் கிடக்கின்ற வீட்டுக் கதவுகள், தீராந்திகள், கூரை மரங்கள் இக்கிராமத்து மக்களின் மனங்களைப் போல.

"உங்கள் உங்கள் வளவுகளில் முதலில் தற்காலிக கொட்டில்களை அமைத்துக் கொண்டு குடிவாருங்கள். பின்னர் படிப்படியாக வசதிகளை உருவாக்கிக் கொள்ளலாம். என்ன சொல்கிறீர்கள்?" என விதானையார் கேட்டார்.

"இதில் சொல்வதற்கு என்ன இருக்கிறது?" என நான் அவசரமாகக் குறுக்கிட்டேன்: "இது எங்கட கிராமம்.... நாங்க பிறந்து வளர்ந்து ஓடியாடித் திரிந்த மண். எங்கட மூதாதையர் வாழ்ந்து முடிந்த பூமி. அதை அப்படியே பாழடைய விட்டு விட முடியாது. மீண்டும் கட்டியெழுப்பக் குடியேற வேண்டும்."

"இங்க இப்ப என்ன இருக்கிறது..... எல்லாம் அழிந்து விட்டது. ஆமான பிரயோசனம் எதுவுமில்லை. கிணறுகள் தூர்ந்துவிட்டன. கட்டிடங்கள் சிதைந்து விட்டன. பள்ளிக் கூடமில்லை. கோயில் பாழ்பட்டு விட்டது. மொத்தத்தில் கிராமமே இல்லை....." என்றார் ஆறுமுகம்.

"கிராமம் என்பது மண்ணும் மக்களும் தான், அண்ணை. அவை இரண்டும் இன்னமும் அப்படியே இருக்கின்றன."

"நாங்கள் இங்க குடிவாறதுக்கு பாம்புகள் தடையாகவுள்ளன."

"நாங்கள் இக்கிராமத்தை விட்டு ஓடிவிட்டதும் அவை இங்கு குடியேறிவிட்டன."

நான் அவரை நிமிர்ந்து பார்த்தேன்.

"பாம்புகள் இருக்கத்தான் செய்யும். அதுக்காக நாங்க எங்கட கிராமத்தை இப்படியே விட்டுவிடுவதா?"

"இவர்கள் என்ன சொல்கிறார்கள்?" என்று இராணுவ அதிகாரி கிராமசேவையாளரிடம் கேட்டார். இவர்களின் பேச்சின் போக்கு அவருக்குத் திருப்தியைத் தரவில்லை.

"கோஸ்ட்.... கோஸ்ட்.... பேய்பிசாசுகள் இருக்காம்....."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை விதானையார் பாம்புகள்....."

"இது மூடநம்பிக்கை.... அதுகள் இருந்தாலும் ஒண்ணும் செய்யாது.... பயப்பட வேணாம்...."

"உடையாத சில வீடுகளில் அவை இருப்பதைப் பார்த்தம்......."

"பிசு....... விசர்......." என்றார் இராணுவ அதிகாரி.

"இல்லை..... விதானையார், பாம்புகள் இருந்தால் அவற்றைத் தேடிப் பாம்புப் பிடாரன்கள் வருவினம். பின்னர் மக்கள் அங்க நிம்மதியாக வாழ முடியாது."

"ஜி.எஸ். அவங்க என்ன பேசுறாங்க.... விருப்பமெண்டா கெதியில குடியேறச் சொல்லும்". என்றார் இராணுவ அதிகாரி: "சரி...... மிச்சம் நேரமாச்சிது. புறப்படுவம்."

அவர்கள் வாகனங்களில் ஏறிக்கொண்டனர். கிராமத்தின் எல்லையிலிருந்த சென்றியில் ஒப்படைத்திருந்த அடையாள அட்டைகளை மீளப் பெற்றுக் கொண்ட போது பாம்புகளும் பிடாரன்களும் மனதில் பட்டனர்.


"என்ன ஒரு ஐ.சி. மிஞ்சுது..." என்று இராணுவ வீரன் சீறினான்.

"அவர் காலில்லாமல் ஆஸ்பத்திரிக்குப் போட்டார்" என்றேன் நான்.

மல்லிகை ஆண்டுமலர்
ஜனவரி 1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அசோக வனம்

அயோத்திக்குள் இராவணர்கள் புகுந்தபோது, தெருக்களில் நீர்த் தாகங்கொண்டு அலையும் மாடுகளும் கோழிகளையும் ஆடுகளையும் வேட்டையாடித் தின்று கொழுத்த தெரு நாய்களுந் தாம் காணப்பட்டன. திறந்த கதவுகளுடன் வீடுகள் எல்லாம், மனித உயிரின் எவ்வித அசுகையுமின்றி, ஆழ்ந்த மோனத்தில் வெறிச்சிட்டுக் கிடந்தன. மயான அமைதிக்குரிய அர்த்தம் அங்கிருந்தது. ஆறுமாதங்களின் பின்னர் நிகழ்ந்துவிட்ட அரச நடவடிக்கைகளால் அயோத்தி மக்களில் ஒரு பகுதியினர் திரும்பித் தம்மிடங்களுக்கு வந்த பின்னர் தான் அவர்களுக்கு... அயோத்தியே அசோக வனமாகிவிட்டதென்ற கசப்பான உண்மை புலனாகியது.

வீட்டு முற்றத்தில் கிடந்த வாங்கில் அமர்ந்து 'மண்டான்' சுருட்டினைப் புகைத்துக் கொண்டிருக்கும் நல்ல தம்பியருக்கும் இப்படித்தான் படுகின்றது. முற்றத்துக் கிளுவையில் அமர்ந்திருந்து கரையும் காகத்தின் பசிக்குரலை மீறி, அவர் மனம் இடப் பெயர்வின் துயரங்களை இரைமீட்பதில் நிலைத்திருக்கின்றது. இரவோடிரவாக அயோத்தியின் நான்கு இலட்சம் மக்கள் ஒற்றை வழிப் பாதையில் கண்ணீரும் கம்பலையுமாக ஓடினார்கள். இராவணர்கள் அயோத்திக்குள் புகுந்துவிடு முன்னர் தப்பிவிடவேண்டுமென்ற அவசரம். ஆயிரமாயிரமாண்டுகளாக வாழ்ந்த தம் வீடுகளையும் மண்ணையும் விட்டு உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ள ஓடினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் தான் அப்படி நடக்குமென நினைத்தார்கள்? அயோத்திக்குள் இராவணர்கள் நுழைவதென்பது கனவிலும் நிகழ முடியாத சங்கதியாகவிருந்தது. ஆறு மாதங்களுள், தாம் மீண்டும் அயோத்திக்குள் வரநேருமென்ற நம்பிக்கையும் எவரிடமுமிருந்ததில்லை. ஆனால், இரண்டுமே நிகழ்ந்துவிட்டது.

இன்று அயோத்தி அசோக வனமாகிவிட்டது. அயோத்தியில் சீதைகளும் மிதிலையில் இராமர்களும் இடம் மாறிவிட்டனர்.

சுருட்டை ஆழமாக ஒரு தடவை உள்ளிழுத்துக் கொண்டார். அவர் குடும்பத்திலிருந்த ஏழுபேரில் ஐவர் மிதிலையில் இருக்கிறார்கள். அவரும் பேர்த்தி ரஞ்சனியும் இங்கு இருக்கிறார்கள். அவர்களைப் போல ஒவ்வொரு குடும்பத்திலும் பிரிவுகள் நிதர்சனமாகவுள்ளன. அவர்களும் மிதிலைக்குச் சென்றிருக்கலாம். சந்தர்ப்பம் இடம் கொடுக்கவில்லை.

அவர் வாங்கினை விட்டெழுந்தபோது ரஞ்சனி, தேநீருடன் வீட்டிற்குள்ளிருந்து முற்றத்திற்கு வருகிறாள். மெலிந்த தோற்றம். கவலையால் கறுத்துக் களையிழந்திருந்தது.

அவர் பேர்த்தியை ஏறிட்ட படி மீண்டும் வாங்கில் அமர்ந்து கொண்டார்.

"அம்மப்பா இண்டைக்கு நிவாரணச் சாமான்கள் எடுக்க வேணும். இண்டைக்குத் தான் கடைசியாம்".

"சரி எடுப்பம் பிள்ளை......"

தெருவில் நாய்கள் குரைக்கின்ற சத்தம், எழுந்தது. தெருவில் இராவணர்கள் மின்னல் வேக மோட்டார் சயிக்கிளில் விரைகின்றார்கள். எங்கு சுற்றிவளைப்போ எவர் காணாமற் போகிறார்களோ?

"நீ உள்ளுக்குப் போ பிள்ளை..." என்றார் அவசரமாக.

அவர் தன்னையே நொந்து கொண்டார். தன் உழைப்பில் வாழ்ந்திருந்த அவரை யுத்தம் அவலநிலைக்கு தள்ளிவிட்டது. தொழில் இழந்து சுயமிழந்து விட்டார். நிவாரண அரிசிக்காகவும் சாமான்களுக்காகவும் கையேந்தி நிற்கின்ற நிலை தோன்றிவிட்டது. அயோத்தி மக்கள் எப்படி வாழ்ந்தார்கள்? சுதந்திரமும் பாதுகாப்பும் அவர்களுக்கு இருந்தன. இன்று ஒவ்வொரு கணமும் - அழுத்தமும் - பயவுணர்வும் அயோத்தி எங்கும் விசக்காய்ச்சலாகப் பரவி விட்டிருக்கிறது.

ரஞ்சனி உள்ளே போய் நிவாரணப் பொருட்கள் வாங்குவதற்குரிய பைகளுடன் வந்தாள். அத்துடன் மறக்காமல் அவர் அடையாள அட்டைகளையும் பக்குவமாகக் காவி வந்தாள்.

"கொஞ்சம் பொறு பிள்ளை. இராவணர்கள் திரியினம். பார்த்துப் போறன்...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது அம்மப்பா. ஆராவது விபிஷணர்கள் பெட்டிசம் எழுதியிருப்பினம். தேடி வந்திருப்பான்கள்......"

அவர் பேர்த்தியை வியப்புடன் பார்த்தார்.

"இங்க விபீஷணர்கள் இராவணன் பக்கந்தான்....."

"அவர் கடிதம் போட்டிருந்தார். அம்மப்பா." என்றாள் அவள் வெட்கத்துடன்.

"எப்ப வந்தது?"

"தெரிந்தாக்கள் கொண்டு வந்து தந்தினம்."

அவர் மகிழ்வுடன் ரஞ்சனியைப் பார்த்தார். சீதையின் சுயம்வரத்திற்கு நாள் குறித்ததோடு சரி. திருமணபந்தத்தில் சேர்வதற்கு முன்னரே பிரிவு ஏற்பட்டு விட்டது.

"என்னவாம். பிள்ளை......"

"அவர் அங்க சுகமாக இருக்கிறாராம். அங்க சரியான கஷ்டமாம். அம்மா, தம்பிமார் எல்லாம்..... மலேரியாவும் பட்டினியும்....." அவள் விழிகள் கலங்கின. தொடர்ந்தாள்: "இங்க வரத்தான் இருக்கினம்."

"சத்தியன் வரலாமே?"

அவள் மௌனமானாள். முகத்தில் ஏக்கத்தின் அழுத்தம். அவள் விழிகள் கலங்கின. அவரை ஏக்கத்துடன் ஏறிட்டாள். சத்தியன் இங்கு வருவது எவ்விதத்திலும் உகந்ததல்ல. இங்கு நிறைய விபீஷணர்கள் இருக்கிறாகள். அவர்கள் இராவணன் பக்கம். பேனையும் கொப்பித்தாளும் தாராளமாக இங்கு கிடைக்கும்.

ஒரு சிறு கிறுக்கல். மறுநாள் கண் மூடித்திறப்பதற்குள் இராவணர்கள் சூழ்ந்து விடுவார்கள். அந்த வியூகத்திலிருந்து விடுபடுவதற்கு அபிமன்யூக்களால் முடியாது.

"அவனை வரவேண்டாமென்று எழுதுபிள்ளை.... நிலமை இப்படியா இருக்கப் போகுது. எல்லாம் ஒரு சுழற்சி...."

படலையடியில் சலசலப்பு எழுகின்றது. எவரோ சயிக்கிலைக் கிடுகுவேலியுடன் சார்த்துவது கேட்கின்றது. படலையைத் திறந்து கொண்டு ஒருவன் வருவதையும் வெளியே இன்னொருவன் நிற்பதையும் அவர் கண்டார்.

"அவங்கள்......" என்றாள் ரஞ்சனி.

"நீ உள்ளே போ பிள்ளை....." என்றார் அவர் அவசரஅவசரமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அவர்களை நோக்கி விரைந்து வந்தான். சுற்றுமுற்றும் பார்வையை சுழற்றி மேய விட்டான்.

"என்ன ஐயா.... என்ன தங்கச்சி..... எப்படிச் சொகம்?"

அவள் அவ்விடத்தை விட்டு அசையவில்லை. அவனைக் கண்டுவிட்டு உள்ளே ஓடினால் ஏதாவது சந்தேகப் படுவான்.

"இருக்கிறம் தம்பி......." என்றார் அவர். மனதில் பயமும் எரிச்சலும் எழுகின்றன. அசோகவனச் சீதைகள் பலர் காணாமற் போயிருக்கிறார்கள். சில சங்கதிகள் வெளியில் தெரிய வந்திருக்கின்றன. காணாமற் போன சில சீதைகள் எலும்புக் கூடுகளாக மீட்கப் பட்டிருக்கிறார்கள்.

"தங்கச்சி கொஞ்சம் தண்ணி தாறது......"

அவள் வேகமாக வீட்டிற்குள் சென்றாள். அவர் அவனை முகத்தில் எதுவித வெறுப்புமின்றிப் பார்த்தார்.

"இது தான் உங்க இடமா?"

"ஓமோம் தம்பி......"

"நீங்க ரெண்டு பேர் தான் இங்க இருக்குதா?"

அவருக்குத் திக்கென்றது. பொய் சொல்ல முடியாது. பதிவுப் பத்திரத்தைக் கொண்டு வந்து காட்டெனவும் கேட்கப்படலாம். வீட்டுப் பிரதான வாயில் பக்கத்தில் அப்பத்திரத்தின் பிரதி ஒட்டிவைக்கப் பட்டிருக்கின்றது. அதில் அவரும் ரஞ்சனியும் தான் அங்கிருப்பதாக விபரம்.

"ரெண்டு பேருந்தான்......"

செம்புடன் அவள் வந்தாள். அவர் அதனை வாங்கி அவனிடம் நீட்டினார். அவன் வாங்கிக் கொள்ளும் போது "அவங்க இங்க வாறதா?" என்று கேட்டான்.

"இல்லை...."

"மெத்த நல்லது.... வாறது...."

அவன் படலையைத் திறந்துகொண்டு வெளியேறும் வரை அவர் மௌனமாக வாங்கில் இருந்தார். கரிக்குருவியொன்று 'அவக் அவக்'கென்ற குரலெழுப்பியவாறு வானத்தில் அவர் வீட்டு முற்றத்திற்கு மேலால் விரைந்து மறைந்தது. வாங்கில் எழு சூரியனின் கதிர்கள் படத்தொடங்கி விட்டன. அவர் பெருமூச்சொன்றினை உள்வாங்கி வெளிவிட்டார். ஒவ்வொரு வீட்டிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி நடக்கிறது. இராவணர்கள் கேள்வி நியாயமின்றி உள் நுழைவதும் விசாரிப்பதும் வழக்கமாகி விட்டது.

மனம் சஞ்சலப் பட்டது.

"நீங்க போயிட்டு வாருங்கோ அம்மப்பா......"

அவர் பைகளைத் தூக்கிக் கொண்டு படலையைத் திறந்து தெருவில் கால்களைப் பதித்த போது, சற்று தூரத்தில் இருந்து கடை வாசலில் அவர்கள் சிகரெட் பற்றிப் புகைத்தபடி நிற்பது தெரிகின்றது. அவர்களின் விழிகள் தம் வீட்டுப் பக்கமாக நிலைத்திருப்பதைக் கண்டார். பேர்த்தி வீட்டில் தனியாகவுள்ளாளென்ற எண்ணம் எழுந்தது. அவர் மீண்டும் படலையைத் திறந்து கொண்டு உள்ளே வந்து வாங்கில் அமர்ந்து கொண்டார். வீட்டிற்குள் அலுவலாகவிருந்த ரஞ்சனி அவர் வந்ததைக் காணவில்லை.

முற்றத்தில் கோழியொன்று செம்பருத்தி மரத்தடியைக் கிளறியது.

தலை சற்றுக் கனத்தது. இடிப்பது போலிருக்கிறது. வாங்கினை அரக்கி வேப்பமர நிழலில் போட்டுப் படுத்துக் கொண்டார். மனம் அடங்காது இனியகாலத்தின் நினைவுகளைக் கிளறியது. செம்பருத்தி மரத்தின் ஈரமண்ணைக் கிளறிக் கொண்டிருந்த கோழி கொக்கரித்தது.

அயோத்தி எவ்வளவு இனிமையான பிரதேசம்? வாடையின் குளிர்ச்சியிலும் சோளகத்தின் வறட்சியிலும் அந்த மண்ணும், மக்களும் எப்படியெப்படியெல்லாம் மகிழ்ந்திருந்தார்கள். அவர்களின் நிம்மதி குலைந்து இரண்டு தசாப்தங்களாகின்றன. அயோத்தியின் எல்லைப் புறங்கள் காடடர்ந்து போய்விட்டன. செழிப்பான தோட்ட நிலங்கள் காடுபற்றிவிட்டன. அவர்கள் குடியிருந்த அரண்மனைகள் எல்லாம் சிதிலமாகிவிட்டன. அரவங்களும் பிசாசுகளும் குடியேறிவிட்டன. சோளகத்தின் அரக்க அசைவிற்குத் தாக்குக் கொடுத்தபடி வான் நோக்கி உயர்ந்திருந்த பனைகளில் பத்து இலட்சம் வரை தறிக்கப் பட்டுவிட்டன.

மகிழ்வும் நிம்மதியும் குடிகொண்டிருந்த அயோத்தியில் குண்டு வெடிப்புக்களும் விமானங்களின் இரைச்சல்களும் துப்பாக்கிச் சன்னங்களின் சீறல்களும் கேட்கத் தொடங்கிவிட்டன. அத்துடன் இந்த மண்ணின் அமைதி அழிந்து போனது.

இதற்கான காரணங்கள் தேடுவதில் பயனில்லை. இந்த மண் யுத்த பூமியாகிவிட்டதென்பது தான் இன்றைய உண்மை.

அசோகவனம் எரியத் தொடங்கிவிட்டதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன நல்லதம்பி. பட்டப் பகலில் தூக்கம் போடுகிறாய்?"

எவரோ அவர் அருகில் நின்று கூப்பிட்டார்கள். அவர் கண்களைத் திறந்து பார்த்தார். சின்னையா நின்றிருந்தார். அவரைக் கண்டதும் நல்லதம்பி பட்டென எழுந்து அவர் வாங்கில் அமர இடம் கொடுத்தார்.

"புளுக்கம் இந்தமுறை நேரத்திற்குத் தொடங்கிவிட்டது." என்றபடி சின்னையா வாங்கில் அமர்ந்து கொண்டார்.

"என்ன இண்டைக்கு எங்கால செக்கிங்..."

"தெரியவில்லை. வடக்கால போலவிருக்குது. அனுமான்கள் வந்துபோகிறதாகத் தெரியுது. இரண்டு மூன்றிடத்திலை சண்டையாம்."

"கேள்விப்பட்டன்." என்றார். மனம் சத்தியனை எண்ணிக் கொண்டது.

"மிதிலையிலை சரியான கஷ்டமாம். நிவாரணத்தை வெட்டிப் போட்டான்கள். மருந்து வகைகள் இல்லை. நோய்நொடி. சண்டை வருமோ?"

"மிதிலையிலை நடக்குது. நீ எதைக் கேக்கிறாய்?"

"அயோத்திக்கு வருமோ? வரும் என்று பேசிக்கொள்கிறார்கள்...."

அவர் எதுவும் பேசாமல் இருந்தார். இதற்கு எப்படிப் பதில் சொல்வது? நினைக்காதவை நடக்கின்றன. நினைத்தவை கனவாகிவிடுகின்றன. மிதிலைக்குச் சென்றுவிடத்தான் அவர் விரும்பினார். ஆனால் அவர் வழியை அயோத்திக்குத் திருப்பிவிட்டது. அவர் மண்பற்று. அவரைப் பொறுத்தவரையில் இந்த வளவு தான் அவர் தாயகம்.

அவர் இந்த மண்ணில் தாயின் உதரத்திலிருந்து விழுந்த போது சுவாசித்த காற்று இங்கு தான் இருக்கின்றது. வீசிய வாடையும் ஸ்பரிசித்த சோளகமும் இங்குதான் தவறாது வருகின்றன. இந்த முற்றம்..... அந்தத் தென்னம்பிள்ளைகள்... இந்த வேம்பு....... அந்தத் துலாக் கிணறு..... பனைகள்..... முருங்கை எல்லாம் அவருடையவை.

"அயோத்தியை மீட்க இராமர்கள் வருவார்களாம்....."

"வரலாம். இங்கு சீதைகள் சிறையிலிருப்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது. லங்கா தகனம் நிகழ இது இலங்காபுரியல்ல. அயோத்தி.... எங்கள் மண்.... எங்கள் பிரதேசம்."

"இராவணர்கள் இருக்கிறார்களே?"

அவர் சின்னையாவை ஆழமாகப் பார்த்தார். அவர் உள்ளத்தினுள் அவர் பார்வையின் காங்கை இறங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இராவணர்களோடு சேர்ந்து அயோத்தி அழியக்கூடாது. சுதந்திரம் எல்லாவற்றிற்கும் மேலானது தான். ஆனால் உயிர் அதனிலும் மேலானது சின்னையா. பெறும் சுதந்திரத்தை அனுபவிக்க மானிடர் உயிருடன் இருக்க வேண்டும்."

அவர்கள் அதன் பின்னர் பலதையும் பேசிக் கொண்டார்கள். சின்னையா விடைபெற்றுச் சென்றார். வாங்கில் மீண்டும் சரியும் முன், அவர் பார்வை வீட்டின் பக்கம் சென்றது. யன்னல் திரையினூடாக ஒரு உருவம் அசைவது தெரிந்தது. அது ரஞ்சனி அல்ல. மனம் திக்கென்றது. யார் அது?

விரைவாக எழுந்து சென்று கதவைப் படபடவெனத் தட்டினார். ரஞ்சனி கதவைத் திறந்தாள். கதிரையொன்றில் அனுமன் அமர்ந்திருந்தான்.

"நீ யார்?"

"சத்தியனின் நண்பன். பார்த்துவரச் சொன்னான்."

அவர் பயத்துடன் பேர்த்தியைப் பார்த்தார். அவர் பார்வையில் ஆயிரம் வினாக்கள் தொக்கி நின்றன.

"எப்படி வந்தாய்?"

அவன் எதுவும் பேசவில்லை. ஆழ்ந்த சிந்தனை வயப்பட்டவனாக இருந்தான்.


"இரண்டு நாளாக அவர் இங்கதான் மறைஞ்சிருக்கிறார் அம்மப்பா".

பேரிடியாக அவள் வார்த்தைகள் அவரில் இறங்கின. அவர் நிலைகுலைந்து அப்படியே கதிரையில் அமர, வெளியே மின்னல் வேகத்தில் பாயும் மோட்டார் சயிக்கில்கள் குரலெழுப்புகின்றன. அவர் வீட்டினை இராவணர்கள் சூழ்ந்து கொள்கின்றனர்.

நம்நாடு - கனடா
21-10-1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கரப்பான் பூச்சி

மழை பெய்து ஓய்ந்திருந்த ஒரு மாலைப் பொழுதில் அவன் அறை வாசலில் நின்றிருந்தான். நீண்ட நேரம் அவன் நின்றிருக்க வேண்டும். அறையைத் திறந்து மின் சுவிச்சினைத் தட்டியதும் பிரகாசமான என் அறையின் தரையில் அந்த அருவருப்பான பூச்சி கண்களிற் பட்டது. நான் அதை நெருங்குவதற்கு முன் அது என் மேசை மீது படபடவென ஏறி மறைந்து போனது. அந்தப் பூச்சியின் தட்டையான உடலும் மழமழப்பும் மேசையின் இடுக்கொன்றில் புகுந்து மறைய உதவியுள்ளது.

எனக்கு கரப்பான் பூச்சிகளைப் பிடிப்பதேயில்லை.

இன்று இதனை விடவே கூடாது. மேசை லாச்சிகளை இழுத்து அந்தப் பூச்சியைத் தேடிக் கொண்டிருக்கும் போது தான் அவன் வந்திருக்க வேண்டும். இடுக்கொன்றில் மறைந்தமையைக் கண்டு பிடிக்க முடியாமல் தலை நிமிர்ந்த போது அவனைக் கண்டேன்.

"வாரும் தம்பி."

அவன் தயக்கத்துடன் உள்ளே வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மன்னிக்க வேண்டும். உங்களுடைய முக்கியமான வேலைகளைக் குழப்பி விட்டேன் போலிருக்குது."

வார்த்தைகள் சங்கடத்துடன் வெளிவந்தன. இருபத்தாறு வயது மதிக்கத்தக்க ஆஜானுபாகுவான ஓர் இளைஞன் இப்படி இங்கிதத்தோடு பேசுவது எனக்குப் பிடித்திருந்தது

"இல்லை... இல்லை. அப்படியொன்றுமில்லை. கரப்பான் பூச்சியொன்றைத் தேடினன். மேசை லாச்சிக்குள் புகுந்து விட்டது."

"வீடு சுத்தமாகவிருந்தால் கரப்பான் குடிவராது...."

என் முகத்தில் ஏற்பட்ட மாற்றத்தை அவன் உணர்ந்திருக்க வேண்டும்.

'சாந்தி அகத்தையா' அவன் துப்பரவில்லாத வீடு என்கிறான்?

"நான் பொதுப்படையாகச் சொன்னேன்." என்றான் அவன் பரிதாபத்துடன்.

"அப்படியொன்றுமில்லைத் தம்பி. இந்தச் சாந்தியகம் பாதிக்கப் பட்ட மக்களைப் பேணுவதற்காகக் கட்டப் பட்ட புதிய கட்டிடம். மூன்றாண்டுகள் கூடக் கழிய வில்லை. நீரே பாரும் துப்பரவாக இந்தக் கட்டிடத்தைப் பேணி வருகின்றோம். அப்படியிருந்தும் எப்படி இந்தக் கரப்பான் பூச்சிகள் குடியேறின என்பது தான் புரிய வில்லை...."

"அவை நீங்கள் வாங்கிய பொருள்களுடன் வந்திருக்கும். பல்கிப் பெருகிவிடும். ஏனெனில் அவை இருப்பதைக் கண்டுபிடிக்க முடியாது. சந்து பொந்துகளில் நுழைந்து விடும்."

"மருந்துகள் தெளித்துப் பார்த்தன். ஒன்றிற்கும் அசையவில்லை. பொல்லாத பீடைகள்."

"பைரித்திரம் பாவித்தியளா?"

"குளோர்டன். சோடியம் குளோரைட். தயோசயனேட் எல்லாம் பாவித்துப் பார்த்து விட்டேன். எச்.ஐ.வி வைரஸ் மாதிரி ஒழியிற மாதிரியில்லை...."

அவன் என்னை வியப்புடன் பார்ப்பதாகப் பட்டது. சற்று நேரக் கழிவில் அவன் வாய்விட்டுச் சிரித்தான். இப்பொழுது நான் அவனை வியப்புடன் பார்த்தேன்.

"உங்கள் உதாரணம் எனக்கு மிகவும் பிடித்து விட்டது....."

"கரப்பானை ஒழிப்பதற்கு வீட்டைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்கிறீர்...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் வாய் விட்டுச் சிரித்தோம். அந்தக் குறுகிய சந்திப்பில் அவன் என்னை நெருங்கி வந்துவிட்டான்.

"என் பெயர் தவநாதன். முல்லைத்தீவு என் சொந்தவிடம். சாந்தியகத்தில் பணியாற்ற விரும்பி வந்திருக்கிறன்." நான் என் கதிரையில் நிமிர்ந்து அமர்ந்து கொண்டேன்.

"இந்த மனையில் முப்பத்திரண்டு பாதிப்புற்றோர் இருக்கின்றனர். அண்மைக் கால யுத்தத்தினால் பாதிக்கப் பட்டவர்கள், மிதிவெடியில் கால்களைப் பறிகொடுத்தவர்கள் நால்வர். பெற்றோரைப் பலிகொடுத்து அனாதைகளாகத் தவிக்கும் பிள்ளைகள் பன்னிருவர், எய்ட்ஸுடன் வெளிநாட்டிலிருந்து வந்திறங்கிய இருவர், எவரும் பராமரிக்க இல்லாத வயோதிபர் எழுவர். யுத்த அனர்த்தத்தால் மனம் பேதலித்துப் போன நால்வர்...."

நான் பேசுவதை நிறுத்தி விட்டு அவனைப் பார்த்தேன். அவன் மௌனமாக என்னை ஏறிட்டான். நான் தொடர்ந்தேன்.

"மற்ற மூவர் நான், காவற் காரச் சுப்பையா, சமையற் காரக் கிளி, இவர்களை விட வந்து பணியாற்றிவிட்டுச் செல்கின்ற தொண்டர்கள் பலர் உள்ளனர்......"

"அந்த மூவரோடு என்னைச் சேர்த்துக் கொள்ளுங்கள்......"

"இங்கு பணியாற்றுவதற்குச் சம்பளம் கிடையாது."

"தெரியும் ஐயா. நான் வசதியானவன். சொத்துப் பத்துள்ளவன். அவற்றோடு என்னையும் இப்பணியில் ஈடுபடுத்த வந்திருக்கிறன். எனக்குச் சாந்தி தேவை. நிம்மதி தேவை. எனக்கு அவற்றைத் தாருங்கள்......" என்ற படி அவன் என்னிரு கரங்களையும் பற்றிக் கொண்டான். விழிகள் துளிர்க்கத் தயார் நிலையில் இருந்தன.

அறையில் அமர்ந்த நிலையில் ஜன்னலூடாகப் பார்க்கிறபோது, விரிந்து கிடந்த முற்றத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பிறிதொரு உலகம் பரிணமிப்பதாகத் தெரிந்தது. இந்த மண்ணின் அவலத்தைச் சுட்டிக் காட்டிக் கொண்டு பலர் அங்கு நடமாடினர். மிதிவெடியில் கால்களை இழந்தவர்கள், பொம்பர் குண்டு வீச்சுக்களால் உறவுகளை இழந்து அனாதையானவர்கள், பராமரிக்க எவருமற்ற வயோதிபர்கள்... எல்லாரும் தங்களது துயரங்களை மறந்து மகிழ்ச்சியாக இருப்பதாக எனக்குப் படுகிறது. அவ்விடத்தில் நிலவுகின்ற ஆரவாரம், சிரிப்பலைகள் மெல்லக் காற்றில் மிதந்து வந்து என் அறையில் சேர்கின்றது. ஆனால் அந்த வேப்ப மரத்தின் சீமெந்துத் திண்ணைக் குந்தில் உலகத்தின் துயரமெல்லாம் தன்மீது படிந்திறங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டதாக மாதவன் அமர்ந்திருக்கிறான். அவனைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருக்கிறது.

அவன் தன்னைத் தனிமைப் படுத்திக் கொண்டதாக எனக்குப் படுகின்றது. அவனைப் போலவே வசந்தகுமாரும் இங்குள்ளான். அவன் அறையை விட்டு வெளியில் வருவதே குறைவு. அவன் வெளியுலகத்திலிருந்து தன்னை மறைத்துக் கொண்டிருப்பதாக எனக்குப் பட்டது.

'இருவரும் இளமையில் வாழ்க்கையைப் பறிகொடுத்தவர்கள்' எனக் கூறிய மனம் அவசரமவசரமாக அதனைத் திருத்திக் கொண்டது.

தவநாதனுக்கு அவர்கள் இருவரையும் அறிமுகப் படுத்தியபோது இப்படியொரு தடவை கூறிவிட்டேன்.

"என்ன ஐயா, நீங்களே இப்படிக் கூறுகிறீர்கள்? அவர்கள் வாழ்க்கையைத் தொலைத்தவர்களல்ல...."

"அவர்கள் எய்ட்ஸ் நோயாளிகள்."

தவநாதன் மிக ஆழமாக என்னை ஊடுருவிப் பார்த்தான். அப்படி நான் கூறியதை அவன் விரும்பவில்லைப் போலப் பட்டது. அவன் வித்தியாசமான மனிதன். இந்தச் சாந்தியகத்திற்கு வந்து ஆறு மாதங்களாகின்றன. உண்மையில் அவன் வருகைக்குப் பின்னர் எனது வேலைப் பளு எவ்வளவோ குறைந்து விட்டது. சாந்தியகத்தில் சற்று வித்தியாசமான ஒரு மலர்ச்சி ஏற்பட்டிருப்பதை நான் அவதானித்தேன். அங்கு அடைக்கலம் புகுந்துதிருந்த, ஒவ்வொருவரையும் அவன் அக்கறையோடும் அரவணைப்போடும் கவனிப்பது தெரிந்தது. அவனைச் சுற்றி எப்போதும் ஓரிருவர் நின்று கொண்டிருந்தனர். அல்லது ஒருவரின் குறைநிறைகளைக் கேட்டு நிவர்த்தி செய்பவனாக நின்றிருப்பான்.

அவன் தனது நேரத்தில் கணிசமான பகுதியை வசந்தகுமாரின் அறையிலும் மாதவனுடன் பேசுவதிலும் கழித்தான்.

"எய்ட்ஸ் நோயாளிகள் வாழ்க்கையைத் தொலைத்தவர்களல்லர். வாழ்க்கையென்பது செக்ஸ், பாலியல் மட்டுந்தான் என நீங்கள் நினைக்கிறீர்கள் போலும்"

"அதனால் தானே அவர்கள் இந்த நிலைக்கு ஆளானார்கள்? கட்டுப்பாடாக ஒருவனுக்கு ஒருத்தியெண்டு இருந்திருந்தால் இப்படி வந்திருக்குமா?"

"நீங்கள் சொல்வதும் சரி தான். எண்டாலும் இந்த உலகின் வாழ்வியலை நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களின் நோயை மறக்கச் செய்ய வாழ்வியலின் மற்றக் களங்களில் அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழச் செய்ய வேண்டும். இருட்டிலிருந்து அவர்களை வெளிக் கொணர வேண்டும்.''

நான் அவனைக் கவலையுடன் பார்த்தேன்.

''மாதவனுக்கு ஒரு குடும்பம் இருக்கிறது. அவனுக்கு மனைவியும் பிள்ளைகளும் அவனை ஒதுக்கிவிட்டனர். சாந்தியகம் அவனை இரக்கத்தோடு ஏற்றிருக்கின்றது. வசந்தகுமாரின் குடும்பமும் அவனை ஏற்றுக் கொள்ளவில்லை. இருவரும் சாந்தியகத்திற்கு வந்து இருட்டுடன் தங்களை ஐக்கியப் படுத்திக் கொண்டனர். அவர்களால் மரண பயத்தை வெல்ல முடியவில்லை. மரணம் அவர்களுக்கென எழுதப்பட்டுக் காத்திருக்கின்றது. தாமாகவே தேடிக் கொண்ட மரணக் கயிறு இது...''

''மரணம் என்பது யாருக்குத்தான் வராது ஐயா? எத்தனை வடிவங்களில் அது வரும்? எய்ட்ஸ் ஒரு வடிவம் அவ்வளவு தான். அவர்களைப் பார்த்துப் பரிதாபப் படுவதிலும் அவர்களை அரவணைத்துக் கொள்ள வேண்டும்.''

வேப்பமரத்தின் கீழிடப்பட்டிருக்கும் சீமேந்துக் குந்தில் அமர்ந்திருக்கும் மாதவனைப் பார்க்கும் போது அவன் இப்பொழுது தெளிவாக இருப்பதாகப் பட்டது. அவன் அருகில் அமர்ந்திருக்கும் தவநாதன் சிரிக்கச் சிரிக்க என்ன தான் பேசுவான்?

''மாதவா, இந்த உலகம் எங்கள் யாவருக்குந் தான். நீயும் உன்னைப் பிடித்திருக்கும் நோயும் இந்த உலகத்திற்குத் தான். சதா அதைப் பற்றி யோசியாது எப்பொழுதும் உன்னை உற்சாகப் படுத்தும் பணிகளில் ஈடுபடுத்திக் கொள்.''

அவர்கள் இருக்குமிடத்தை நோக்கி வசந்தகுமார் வருவது தெரிகின்றது. இருட்டறையில் முடங்கிக் கிடந்தவன் வெளியில் வருகின்றான். அவனை முற்றத்தில் நின்றவர்கள் ஏதோ விசாரிப்பதும் அவனின் தோளில் தட்டிச் சிரிப்பதும் எனக்கு வியப்பினைத் தருகின்றது. மாதவனையும் வசந்தகுமாரையும் இந்த மனையில் இருந்தவர்கள் அருவருப்புடன் பார்த்திருக்கிறார்கள். அஞ்ஞான பயம் நீங்கிவிட்டது. அதற்குக் காரணம் தவநாதனாகத் தான் இருக்கும்.

அவர்கள் மூவரும் சிரித்துப் பேசியபடி வெளியே புறப்படுவது எனக்கு அதிர்ச்சியாயில்லை. மகிழ்ச்சியைத் தருகின்றது. வெளியில் போய்வருவதாக அவர்கள் எனக்கு சைகை மூலம் தெரிவிக்கின்றார்கள்.

அவர்கள் வாழ்க்கையின் ஏனைய களங்களில் வாழப் பழகிவிட்டார்கள்.

மாதவன் இங்கு வந்து எவ்வளவு காலம் இருக்கும்? அவனுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் வழிக்கோவையைப் பார்க்க விரும்பி எழுந்து அலுமாரியைத் திறந்து கோவைகளைக் கிளறியபோது அதற்கடியிலிருந்து மூன்று, நான்கு கரப்பான் பூச்சிகள் தம்மை மறைத்துக் கொள்ள வேகமாக ஓடிமறைந்தன. அருவருப்புடன் சற்று விலகிக் கொண்டேன். ஒரு கரப்பான் விர்ரெனப் பறந்து என் சேர்ட்டில் தரித்தது. பட்டெனத் தட்டிவிட்டேன். அருவருப்பான நாற்றம் நாசியில் ஏறியது.

வீட்டில் புகுந்துவிட்ட கரப்பான்களை அகற்ற முடியவில்லை. எவ்வளவு துப்பரவாக வைத்திருக்க முயன்றும் பயனில்லை. அவை வந்து குடியேறுவதற்கு முன் நாம் அவதானமாகவும் கண்டிப்பான கவனத்துடனும் இருந்திருக்க வேண்டும். கண்ட குப்பைகளுக்கு இடம் கொடுத்து விட்டோம்.

கரப்பான் பூச்சிகளுக்குச் சாக்கடைகள் என்றால் பிரியம்.

நான் கோவைகளை எடுக்காமல் கதிரையில் வந்து துயரத்துடன் அமர்ந்தபோது, "உள்ளே வரலாமா சேர்?" என்று இனிமையான குரல் கேட்டது.

அவள் நின்றிருந்தாள். இருபத்தைந்து வயது மதிக்கத் தக்க உருவம். ஒரு தடவை பார்த்தால் மறுதடவை பார்க்கத் தூண்டும் கவர்ச்சி. சேலை அணிந்து அடக்கமாகத் தென்பட்டாள். முகத்தில் சோகம் அப்பிக் கிடந்தது.

"வாம்மா....."

"நான் சாந்தி......"

"எந்தச் சாந்தி........?"

நான் அதிக நேரம் மண்டையைக் குழப்பவில்லை. நினைவு வந்துவிட்டது. தவநாதனுக்கு வாராவாரம் மறக்காது கடிதம் எழுதிக் கொண்டிருக்கும் ஒரே பெண். என்ன தவறினாலும் - ஒவ்வொரு திங்கட் கிழமையும் அவள் கடிதம் வருவது தவறாது. கடித உறையில் பெரிதாக முகவரியும் எழுதியிருப்பாள். அனுப்புபவர் 'த.சாந்தி' எனக் குறித்தும் இருப்பாள்.

"தெரிகிறது. தவநாதன் இங்கில்லை. இப்பத்தான் வெளியில் சென்றார்."

"அவர் வருவதற்கு முன் உங்களுடன் கொஞ்சம் பேச வேண்டும் சேர்" அவள் விழிகள் என்னிடம் இரந்தன.

"என்னிடம்?"

இவள் மௌனமாகச் சற்று நேரம் அமர்ந்திருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தட்டிவிட்ட கரப்பான்பூச்சி சுவரில் ஏறுவது தெரிகின்றது. என் கவனம் அதில் திரும்பியது. அவளும் இதனைக் கவனித்து விட்டாள். நான் அவளைத் திரும்பிப் பார்க்கும் வரை காத்திருந்தாள்.

"சொல்லம்மா. நான் உனக்கு எப்படி உதவலாம்?"

"நீங்கள் அவரிடம் எடுத்துச் சொல்லக் கூடாதா?"

நான் அவளை வியப்புடன் பார்த்தேன். தவநாதனுக்கும் இந்தப் பெண்ணுக்குமான தொடர்பு என்ன என்பது எனக்குத் தெரியாது. இந்தப் பெண் வாரத்திற்கு ஒரு கடிதம் எழுதுவதும் அக்கடிதத்திற்காக அவன் காத்திருப்பதும் எனக்குத் தெரியும். அவன் தன் அந்தரங்கங்களை எப்போதும் கூறியதில்லை. பிறரின் அந்தரங்கங்களையும் அறியும் ஆவலும் எனக்கில்லை.

"அவர் என் மாமி பிள்ளை சேர். நாங்க இருவரும் ஒருவரை ஒருவர் நேசித்தோம். எனக்கு மருத்துவத்துறைக்கு யூனிவசிற்றி அனுமதி கிடைத்தும் நான் அவருக்காக அதனை ஏற்றுக் கொள்ள வில்லை. அவருக்குக் கிடையாதது எனக்கேன்? அவர் வெளிநாட்டிற்குப் போனார். தன் சகோதரிகளுக்குக் கலியாணம் கட்டிவைத்தார். நான் அவற்றினைத் தடுக்க வில்லை. முல்லைத்தீவில் நிகழ்ந்த குண்டுவீச்சில் அவருடைய தாயும், தம்பிமாரும் பலியாகிவிட்டினம். அதைக் கேள்விப்பட்டு அவர் ஓடிவந்தார். அந்த இழப்பால். அவர் மனமுடைந்து போனார். என்னுடன் மனந்திறந்து பேசுவதில்லை. ஒரு நாள் காணாமற் போனார். விசாரித்துப் பார்த்தோம். அவர் இங்கு இருப்பது தெரிந்தது. ஒன்றிற்கும் பதிலில்லை. கடிதங்கள் எனக்குத் திரும்பி வராமையால் அவை அவர் கையில் கிட்டுகின்றன என்பதைத் தெரிந்து கொண்டன்."

அவள் நிமிர்ந்து என்னைப் பார்த்தாள். கண்களில் சோகத்தின் திரள் கவிந்திருந்தது.

"அவரை என்னிடம் தாருங்கள் சேர்....."

நான் துடித்துப் போனேன். அவள் விம்மியபடி தலையைக் குனிந்து கொண்டாள்.

தவநாதனும் ஏனைய இருவரும் வருவது தெரிந்தது.

"அதோ தவநாதன் வருகிறார். அவனிடமே பேசிக் கொள் அம்மா."

அவள் ஆவலுடன் ஜன்னலுக்கு வெளியே பார்த்தாள். கதிரையை விட்டெழுந்து வெளியில் ஓடிச் சென்றாள். அந்தப் பெண்ணின் காதல் எனக்குப் புரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பக்கச் சுவரிலிருந்த அந்தக் கரப்பான் மறுபக்கத்திற்குப் பறந்து சுவரைப் பற்றிக் கொண்டது. தன் உணர் கொம்புகளை வாயிலுள்ள தாடைகள் வழியாக உருவித் துடைத்துக் கொண்டது. அது என்னைக் கேலி செய்வது போலப் பட்டது. தொலைந்து போ எனச் சபிப்பதைத் தவிர எனக்கு வேறு மார்க்கம் செ^ய்யவில்லை.

இருந்தபடியே முற்றத்தைப் பார்த்தேன். சாந்தியும் தவநாதனும் வேப்ப மரக்குந்தில் அமர்ந்திருப்பதும் அவன் தலையைக் குனிந்த படி அமர்ந்திருக்க அவள் விம்மலுடன் ஏதோ பேசிக் கொள்வதும் தெரிகிறது. அந்தப் பெண்ணிற்காக நான் இரக்கப் பட்டேன். என்றாலும் தவநாதன் கல் நெஞ்சனாக இருக்கக் கூடாது. யுத்தம் என்பது எத்தனை குடும்பங்களைக் காவு எடுத்திருக்கின்றது? எத்தனை குடும்பங்களின் அமைதியைச் சுடுகாட்டிற்கு அனுப்பி வைத்திருக்கின்றது?

இழப்புகளை எண்ணியபடி வாழவேண்டியவர்கள்.

அந்தப் பெண் அழுதபடி எழுந்திருந்தாள். பின்னர் அவசரமாக வெளியேறுவது தெரிந்தது. தவநாதன் வெகு நேரம் அப்படியே அமர்ந்திருந்தான். அவனுக்கு ஆறுதல் சொல்ல வேண்டும்.

எழுந்து அவனிடம் வரப் புறப்பட்டபோது முகத்தில் வீசியடித்தபடி கரப்பான் மறுபக்கச் சுவரிற்குத் தாவியது. மூதேசி... சனியன்.

அவன் அருகில் சென்று அமர்ந்தேன். அவன் என்னைக் கவலையுடன் பார்த்தான்.

"தம்பி. இது உனக்கே நல்லாப் படுகிறதா? அந்தப் பெண் பாவம். உனக்காகக் காத்திருக்க..... இப்படி நடந்து கொள்ளலாமா? அந்தப் பெண்ணிற்கு உன் ஆதரவு தேவை."

"தெரியும் ஐயா."

"அப்ப அவளைக் கலியாணம் செய்து கொள்...."

அவன் என்னைக் கவலையுடன் ஏறிட்டான்.

"எயிட்ஸ் வைரஸ் ஒருவரின் உடலில் புகும்போது வாழ்நாள் முழுவதும் அது தங்கிவிடுகிறது. சாந்தியகக் கரப்பான் போல........"

"இந்த உதாரணம் சரியாகப் படவில்லை".

என் மூளைக்குள் பொறி தட்டியது. தவநாதன் என்ன சொல்ல வருகிறான்? அவனுடைய பேச்சுக்களின் அர்த்தங்கள் புரிபடத் தொடங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனும் மாதவனைப் போல...... வசந்தகுமார் போல..... அதனால் தான் அவன் அடைக்கலம் தேடி இங்கு வந்தானா? தன் பணத்தை வாரிச் செலவிடுவதும் அதற்காகவா, நான் அவனை ஏறிட்டுப் பார்த்தேன். மங்கிய மாலை வெளிச்சத்தில் அவன் உடல் முழுவதும் கரப்பான்பூச்சிகள் மொய்த்திருப்பதாக ஒரு கணம் எனக்குத் தெரிந்தது. கண்ணாடியைக் கழற்றித் துடைத்துவிட்டுக் கரத்தில் பற்றியபடி பார்த்தேன். கரப்பான் பூச்சிகள் மொய்த்திருந்தன.

சீச்சீ. என்ன பிரமை.

அவன் வானத்தை அண்ணார்ந்து பார்த்தான். வேப்பமரக் கிளைகளூடாக எதையோ தேடினான். வேப்பங்காற்றினை நன்றாக உள்வாங்கி நீண்ட பெருமூச்சொன்றினை விட்டான். இந்த வானம், இந்தக் காற்று, இந்த இயற்கை தனக்குக் கிடைக்காது போய்விடப் போகின்றதே என்ற பயம் அவன் முகத்தில் படர்ந்திருப்பதாக எனக்குப் பட்டது.

தனக்குள்ள நோயை மறைத்தபடி இவ்வளவு காலமும் எவ்வளவு அற்புதமாக நடந்துள்ளான்? அவனை அப்படியே விட்டுவிட்டு நான் என் அறைக்குத் திரும்பி வந்தேன்.

சுவரில் இருந்த கரப்பான் பூச்சியைக் காணவில்லை. எங்கு போயிருக்கும்? தவநாதன் முற்றத்தில் உலாத்துவது தெரிகின்றது. பச்சாதாபத்திற்குப் பதிலாக அவன் மீது கோபந்தான் ஏற்பட்டது.

அவனைத் தேடிச் சாந்தி பின்னர் பல தடவைகள் இங்கு வந்திருப்பாள். அவளைப் பார்க்க எனக்குப் பரிதாபமாகவிருக்கும். அவனை நம்பி அவள் ஏமாந்து போனாள். ஊரில் அவனுக்காக அவள் காத்திருக்க அவன் வெளிநாட்டில் ஆடக்கூடாத ஆட்டமெல்லாமாடி நோயை உழைத்துக் கொண்டு வந்திருக்கிறான். அவனுக்காக அவள் எவ்வளவு தியாகம் செய்திருப்பாள்? அவன் வருகைக்காக அவள் எவ்வளவு தாகத்துடன், ஏக்கத்துடன் இங்கு காத்திருப்பாள்?

எல்லாவற்றையும் அவன் நாசமாக்கிவிட்டான். கண நேர சுகத்திற்காகத் தன்னைப் பலியாக்கிக் கொண்டான்.

'அவனை மறந்துவிடு அம்மா' என்று சாந்தியிடம் சொல்லிவிட வேண்டும்.

அவள் கெஞ்சி அழுவதும், அவன் தலையைக் குனிந்தபடி அமர்ந்திருப்பதும் வழக்கமாகிவிட்டன. இந்த நாடகம் தொடரக் கூடாது. ஒரு நாள் நான் முடிவு செய்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தி அவனிடம் பேசிவிட்டு ஆறுதல் கிடைக்காமல் கண்ணீருடன் வெளியேறிய பின்னர் அவனிடம் நான் சென்றேன். வேப்பமரத்தடிக் குந்தில் அவன் அருகில் அமர்ந்து அவனை ஆழமாகக் குத்திக் கிளறிவிடுவது போலப் பார்த்தேன். அவன் என்னைக் கவலையோடு பார்த்து விட்டுத் தலையைக் குனிந்து கொண்டான்.

"தம்பி, நீர் இப்படி நடப்பது எனக்குப் பிடிக்கவில்லை".

"நான் சாந்தியை இனி இங்கு வரவேண்டாமென்று சொல்லிவிட்டேன் ஐயா......"

"அதுதான் சரி. எல்லாவற்றையும் ஒளிக்காது கூறிவிட்டீரா?"

அவன் தலையை உயர்த்தி என்னை உற்றுப் பார்த்தான்.

"எல்லாவற்றையுமா?"

"பாவம் நல்ல பெண். அவளுடன் வாழ்வதற்கு உமக்குக் கொடுத்து வைக்கவில்லை. கொஞ்சம் மனவைராக்கியத்துடன் வெளி நாட்டில் இருந்திருந்தால் - உமக்காக ஒருத்தி ஊரில் காத்திருக்கிறாள் என்ற எண்ணம் இருந்திருந்தால் - இப்படி நோயை உழைத்துக் கொண்டு வந்திருக்கமாட்டீர்."

அவன் குந்தை விட்டு வேகமாக எழுந்திருந்தான். நீண்ட பெருமூச்சு அவனை மீறிக் கொண்டு வெளிப்பட்டது. முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டான். உலாத்தினான். என்னிடம் ஏதோ சொல்ல விரும்புபவன் போலப்பட்டது.

வேப்பங் கிளைகள் சரசரத்தாடின. காற்றில் வெம்மை படர்ந்தது.

"நான் நீங்கள் நினைப்பது மாதிரி..... அப்படியில்லை ஐயா........"

"அப்ப?......"

"நான் வெளிநாடு சென்றதும் சாந்தி சிங்கப்பூருக்கு வேலை பெற்றுச் சென்றாள்."

"ஏன்?"

"எனக்காகத் தான். பெண் சகோதரங்களுக்குச் சீதனம் தேடுவதற்காக நான் வெளிநாடு சென்றேன். அவள் எனக்கு உதவுவதற்காகத் தானும் வேலை செய்து உழைப்பதற்காகச் சிங்கப்பூர் சென்றாள்."

அவன் இடையில் நிறுத்திவிட்டுச் செயலற்று நின்றான். விழிகள் நீரைச் சொரிவதைக் கண்டேன். குந்தில் அமர்ந்து முகத்தில் அறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி, "ஐயோ..... கொடுமை" என்று வாய்விட்டழுதான்.

"தம்பி தவநாதன்......."

"அங்கு அவளுக்கு வேலை வழங்கிய அயோக்கியனால் கற்பழிக்கப் பட்டாள்."

வேப்பமரம் என்மீது பாறிவிழுந்தது போல உணர்வு.

"தம்பி......."

"ஐயோ! இந்த நாட்டில் இருநூற்றியறுபத்தாறு எய்ட்ஸ் நோயாளிகள் இருக்கின்றனர். அவர்களுள் அவளும் ஒருத்தி....."

முகத்தைத் தன்னிரு கரங்களில் புதைத்துக் கொண்டு அவன் குமுறிக் குமுறி அழுதான். தன் துயரமெல்லாவற்றையும் கரைத்து விடுவான் போல அழுது தீர்த்தான். அவனை அழவிட்டு விட்டு ஆதரவோடு அவனைப் பார்த்திருந்தேன்.

அமைதியாக அவன் தோளில் கரம் பதித்தேன்.

அவன் தலையை நிமிர்த்தி என்னைப் பார்த்தான்.


"தம்பி, இப்போதுதான் உன்னுடைய பரிவு அவளுக்குத் தேவை."

**சஞ்சீவி**

**30-01-1999**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குளவிக்கூடு

கிராமத்தின் கிழக்கு வாயிலில், வீதியின் வலது பக்கத்தில் உயர்ந்து வளர்ந்திருந்த பிணைச்சல் பனை மரத்தின் சரிந்த காவோலையில், அடிமரத்துப் பலாக்காய் அளவில் பெரியதொரு குளவிக்கூடு கட்டப் பட்டிருப்பதை ஓர் அதிகாலை வேளையில் முதன் முதல் கண்டவர் பொன்னப்பர் தான். காவோலையின் பழுப்பு நிறத்தில் அந்தக்கூடு தொங்கியதால் இலகுவில் அடையாளம் காணப்படாதிருந்திருக்கிறது. இப்போது கருங்குளவிகள் ஒவ்வொன்றும் முற்றித் திரண்ட நெல்லிக்காய் அளவில், அக்கூட்டைப் பற்றியிருந்ததால் பார்க்கும் போது தெளிவாகத் தெரிந்தன.

அப்படியொன்றும் வானளாவிய பெரிய பனையன்று. அப்பனையில் ஆலமரமொன்று பற்றி வளர்ந்திருந்ததால் அதன் வளர்ச்சி தடைப் பட்டிருந்தது. பிணைச்சல் பனையென்ற காரணப் பெயரையும் பெற்றுவிட்டது. அவர் அறியத்தக்கதாக அப்பனை மரம் அந்த உயரத்தில் எப்பொழுதும் இருப்பதாகப் பட்டது.

பொன்னப்பர் வெகு அவதானமாகப் பனையையும் காவோலையையும் அதில் தொங்கிய குளவிக்கூட்டையும் பார்த்தார். ஊசி நுழையக் கூட இடமில்லாமல் குளவிகள் அக்கூட்டில் மொய்த்திருந்தன. மெல்லிய காற்றிற்கு அக்காவோலை ஆடியபோது அவர் துணுக்குற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கருங்குளவிகள் ஒவ்வொன்றும் நாகபாம்பொன்றின் விசத்திற்குச் சமமானவை என்பது அவருக்குத் தெரியாததல்ல. கருங்குளவிகளால் தாக்கப் பட்டு இறந்தவர்கள் ஓரிருவர் அக்கிராமத்தில் இருந்தனர்.

மனதில் சங்கட உணர்வு தலை தூக்கியது.

அவ்வழியால் வருவோர் போவோருக்கு இனி இவற்றால் தொல்லை தான்.

மீண்டும் பயத்துடன் பார்த்தார். நீண்ட தூரம் பறந்து, களைப்பிற்கு தங்கி ஓய்வு பெற விரும்பி வந்த பறவையொன்று, காவோலையில் தொங்கிய குளவிக்கூட்டைக் கண்டுவிட்டு விலகிப் பறப்பதை அவர் கண்டார்.

அவர் கிராமத்திற்கு வந்தபோது கிராம அபிவிருத்திச் சங்கக் கூட்டம் நடந்துகொண்டிருந்தது. கிராமத்தவர்களில் பெரும்பாலோர் அங்கு குழுமியிருந்தார்கள்.

"அம்மான், நீங்களும் வந்து விசயத்தைக் கேட்டிட்டுப் போங்கோ...." என்று அவரை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவனாக இம்முறை தெரிவு செய்யப் பட்ட பாலன் அழைத்தான். நீண்ட காலமாக பொன்னப்பர் தான் சங்கத் தலைவராக இருந்தவர். இம்முறை அவராகவே கிராம நிர்வாகத்தை இளைஞர்களிடம் ஒப்படைத்து விட்டு விலகிவிட்டார். "இது இளம் பிள்ளைகள் காலம் கண்டியோ. அவர்களிடம் எல்லாத்தையும் ஒப்படைச்சிட்டு விலகி நின்று வழி நடத்த வேணும்." என்பது அவர் வாதம்.

"அம்மான், பொடியள் அனுபவம் பத்தாது.... உணர்ச்சி பூர்வமாகத்தான் சிந்திப்பாங்கள்....." என்று பலர் கூறியும் அவர் கேட்கவில்லை.

மீண்டும் பாலன் அவரைக் கூப்பிட்டான்.

"வாங்கோ அம்மான்..... விசயத்தைக் கேளுங்கோ......"

"ஓமடா பொடி நானும் ஒரு விசயம் சொல்லத்தான் வாறன்...... பிணைச்சல் பனையில கருங்குளவிகளின்ர பென்னம் பெரிய கூடு இருக்குது.... அவை இங்கையும் வந்து கூடு கட்டிவிட்டினம்......"

செய்தி கேட்ட கிராமத்தவர்கள் ஒருகணம் மலைத்துப் போயினர். முகங்களில் பயத்தின் கோடுகள் படர்வதைப் பாலன் கண்டான்.

"உதுக்கேன் பயப்படுகிறியள். நாங்கள் இருக்கிறம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குளவிகளுக்கு இவ்வளவு பயமா? அவையை இருந்தவிடம் தெரியாமல் பண்ணிவிடுகிறம்......" என்றான். பொன்னப்பரின் பேரன் மதியாபரணம்.

"எதையும் செய்யுங்கோ......" என்றார் பொன்னப்பர்: "ஆனால், குளவிக் கூட்டைக் கலைச்சுப் போடாதையுங்கோ. அவ்வளவு தான் சொல்லுவன்...."

# 2

பிணைச்சல் பனையின் உச்சியில் காவோலையில் தொங்கிக் கொண்டிருந்த குளவிக்கூட்டை மதியாபரணம் சற்றுத் தூர நின்று அவதானித்தான். இத்துபோய்ப் பிடி கழன்று விழப் போகின்ற ஒரு காவோலையில் அவை பாதுகாப்பென நினைத்து ஒரு கூட்டைக் கட்டியிருந்தன. எங்காவது தூரத் தெற்கே போய் இக்கூட்டைக் கட்டியிருக்கலாம்.

கிராமத்திற்குப் போய் வருகிற வாசலிலா கட்டவேண்டும்?

மதியாபரணம் நீண்ட நேரம் யோசித்தான்.

"இவையளை இங்க இருக்க விடப்படாது."

சுற்று முற்றும் பார்த்துவிட்டுக் கல் ஒன்றினை வலது கரத்தில் எடுத்து. குளவிக் கூட்டைக் குறி பார்த்து வேகமாக வீசினான். அவன் குறி தப்பவில்லை. குளவிக் கூட்டின் ஒரு விளிம்பைத் தாக்கியதுடன், கல்பட்டு இரண்டு மூன்று கருங்குளவிகள் சிதைந்து கீழே விழ, கணப்பொழுதில் கருங்குளவிகள் கருமுகில் திரளாக வானில் எழுந்து, கல்வந்த திசையில் விர்ரென விரைந்தன. நல்லவேளை, மதியாபரணம் கல்லை வீசிவிட்டு ஓடத்தலைப்பட்டதால் - வெகு தூரம் சென்று விட்டதால் - குளவிகளின் கொட்டுதலிற்குள்ளாகாமால் தப்பிவிட முடிந்தது.

அகப்பட்டது சின்னப்புத் தான். சந்தைக்குப் போய்விட்டு, சயிக்கிலில் கிராமத்திற்குத் திரும்பி வந்து கொண்டிருந்த சின்னப்பு. பிணைச்சல் மரத்தைக் கடந்தபோது. தன்மீது கரும் முகில் பொத்தெனப் படிவதையும். அவை அவனை ஒரு சிறு இடமும் பாக்கியின்றிக் கொட்டி.......

கதறக்கூட முடியாமல் சின்னப்பு அந்தவிடத்திலேயே செத்துப் போனான். சற்றுத் தாமதமாக அவ்விழியால் வந்த பலர் குளவிகளினால் கொட்டப்பட்டு. காயமுற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

பொன்னப்பர் கொதிப்புடன் கத்தினார்: "நான் எவ்வளவு சொன்னன், கேட்டியளா? குளவிக்கூட்டைக் கலைச்சியள். அநியாயமாகச் சின்னப்பு பலியானான். அவன்ர குடும்பத்திற்குத் துணை யார்? பிள்ளையளும் மனிசியும் நடு றோட்டில......"

"இவன் மதியாபரணம் செய்த வேலை, அம்மான். ஆத்திரத்தில குளவிக் கூட்டைக் கலைச்சிட்டான். கல்லால எறிஞ்சிட்டான். இப்படி நடக்கும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை."

"அதுகள் கருங்குளவிகள் கண்டியோ. கல் எறிஞ்சவனையா கொட்டும்? வழியில் அகப்பட்டவர்களையெல்லாம் கொட்டும்.... கொட்டுவதில் மூர்க்கம் கண்டால் அதுகள் கிராமத்திற்குள்ளயும் வந்திடும்.........."

பொன்னப்பர் சொன்னது சரியானது. பிணைச்சல் பனையை விட்டு, சில கருங்குளவிகள் கிராமத்திற்குள் வரத் தொடங்கின. ஒரு நாள் மாலை, பட்டியில் மாடுகளை அடைத்துக் கொண்டிருந்த சரஸ்வதி, தன்னைச் சுற்றி ஐந்தாறு கருங்குளவிகள் பறப்பதைக் கண்டாள். அவள் தப்பி வந்தது பரமபிரயத்தனம். கங்குமட்டை பொறுக்க பனங்கூடலிற்குச் சென்ற பாக்கியத்தைக் கருங்குளவிகள் கொட்டிவிட்டன. அவ்விடத்திலேயே அவள் மயங்கிச் சரிந்துவிட்டாள்.

மயங்கிய நிலையில் அவளைக் கிராமத்திற்குத் தூக்கி வந்தார்கள். அவள் மயக்கம் தெளியாமலே இறந்து போனாள்.

வயலிற்குச் சென்ற செல்லப்பர், எழுபது வயதுக் கிழவர். அவரைக் கூடக் கருங்குளவிகள் விட்டுவிடவில்லை அவரும் அவற்றால் கொட்டப்பட்டார். மாடு மேய்த்துத் திரும்பிய இரு சிறுவர்கள் கொடூரமாகக் குளவிகளால் தாக்கப் பட்டனர்.

வீதியில்..... வளவுகளில்...... வீடுகளுள்...... கருங்குளவிகள் தென்படத் தொடங்கின.

"நான் சொன்னன்..... குளவிக் கூட்டைக் கலையாதையுங்கோ என்று......." எனப் பொன்னப்பர் ஒவ்வொரு முறையும் சத்தமிட்டார்.

"சும்மா...... சும்மா.... கத்தாதையுங்கோ அம்மான். நடந்தது நடந்து போச்சுது..... இனி நடக்க வேண்டியதைப் பார்ப்போம்....." என்றான் பாலன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன செய்யச் சொல்லுறாய்.........?"

"குளவிகளைக் கண்டதும் இனி ஒருத்தரும் பயந்து ஓடக்கூடாது...... கையில அகப்பட்டதை எடுத்து அவற்றை அடிச்சுச் சாக்காட்ட வேண்டும். பயந்து பயந்து ஓட அவையும் துரத்தித் துரத்திக் கொட்டுகினம்...."

"விசர் பொடி.... நீ அந்தக் குளவிக் கூட்டைப் பார்த்தால் தெரியும். ஆயிரக் கணக்கில இருக்குதுகள். ஒன்று இரண்டே அடிக்க....."

"அதுக்காக..... ஊருக்க வாறதுகளை அடிக்காமல் கொட்டுப் படப் போறியளோ?......."

# 4

கிராமத்திற்குள் நுழைந்த குளவிகள் பல அடித்துக் கொல்லப்பட்டன. சரஸ்வதி வீட்டிற்குள் நுழைந்த கருங்குளவிகள் மூன்றை, அவளின் தம்பி அடித்துச் சரித்தான். அதற்குப் பிறகுதான் கிராமத்தவர்களுக்குப் புரிந்தது. அடித்தால் சரிக்கலாம் என்று.

மதியாபரணம் வீட்டிற்குள் நுழைய முயன்ற கருங்குளவிகள் நான்கினை அவன் அடித்துச் சரித்துவிட, கூட வந்த கருங்குளவிகள் இருந்தவிடம் தெரியாமல் கிராமத்தை விட்டு ஓடிவிட்டன.

சிறிது காலம் கருங்குளவிகள் வருவதும்..... சிலர் கொட்டப்படுவதும்.... சில கருங்குளவிகள் அடிக்கப் படுவதும் தொடர்ந்து நடந்தது.

கருங்குளவிகளும் ஓயவில்லை. கிராமத்தவர்களும் ஓயவில்லை.

இருபக்கங்களிலும் சேதாரம்.

"இப்படி எவ்வளவு காலம் தான் தாக்குப் பிடிக்கிறது...... வயலுக்குப் போக முடியவில்லை. வேலைக்குப் போக முடியவில்லை. வேறிடங்களுக்குப் போக முடியவில்லை..... பிணைச்சல் பனையில் இருக்கிற கூட்டை முற்றாக ஒழிக்க ஒரு வழி பார்க்க வேணும்......" என்ற கிராமத்தவர்கள் ஒருமித்துக் கூறினர்.

"நான் அப்பவே சொன்னன்...... கேட்டியளா? குளவிக்கூட்டைக் கலைக்காதையுங்கோ எண்டு. ஒருத்தரும் கேக்கவில்லை.... அதால தான் இவ்வளவும் வந்தது........." என்றார் பொன்னப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சும்மா இருங்கள் அம்மான்..... இன்றைக்கு இராவைக்கு குளவிக் கூட்டை நாங்கள் ஏறிக் கொளுத்தி அழிக்கப் போறம்.... எல்லாரும் தீப்பந்தங்களோட வாருங்கோ......"

"ஆர் பனையில ஏறுகிறது?,......."

"நான் ஏறுகிறன்..... தண்ணிச் சாக்கைப் போட்டுக் கொண்டு நான் ஏறிக் கொளுத்துறன்... நீங்கள் விழுகிறதுகளையும் ஓடுகிறதுகளையும் பந்தங்களால சுடுங்கோ......" என்றான் பாலன்.

"வேண்டாம் அண்ணை..... நான் தான் குளவிக் கூட்டைக் கலைச்சனான். நானே பனையில் ஏறுகிறன்...." என்று மதியாபரணம் முன் வந்தான்.

"இருவரும் ஏறிக் கொளுத்துவம்......" என்றான் பாலன்.

## 5


அன்றிரவு, வானத்தில் நிலவில்லை.

கிராமத்தவர்கள் தீப்பந்தங்களோடு பிணைச்சல் பனையை நோக்கி வந்தபோது, கருங்குளவிகள் அணி வகுத்து நின்று சுடத் தொடங்கின.

**மல்லிகை**
**ஆகஸ்ட் - 1986**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வௌவால்கள்

யாழ்ப்பாணத்து இரவுகள் அவர்களுக்குச் சொந்தமில்லாது போய் மூன்றாண்டுகளாகின்றன.

பாலாய்ப் பொழியும் பௌர்ணமி இரவில் காலாற நடந்து வந்தால் எப்படியிருக்குமென எண்ணிக் கனவுலகில் சஞ்சரிக்கும் நிலைக்கு வைரமுத்தர் வந்துவிட்டார். மாலைக் கருக்கலுடன் வீட்டிற்குள் முடங்கிக் கொள்ளும் வாழ்க்கையின் அவலம், அவருக்கு வெறுப்பினைத் தரத் தொடங்கிவிட்டது. எப்படி எப்படியெல்லாம் அவர் வாழ்ந்திருக்கிறார்? அவரது வெளியுலக உலாவைக் காலம் எப்பொழுதும் தடுத்தது கிடையாது.

இரவிரவாகத் திருவிழாக்கள் ஒரு காலத்தில் நிகழ்ந்தன. கடலைக் கொட்டையை மென்றபடி திருவிழாவின் நிகழ்ச்சிகளை அவர் சுவைத்திருக்கிறார். சின்னராசாவின் மேளச் சமாவிற்காகச் சைக்கிளில் தூரம் பாராமல் திரிந்து வந்தமை. வைரமுத்துவின் மயானகாண்டத்திற்காக ஊர் ஊராக அலைந்தமை..... எவ்வளவு இனிய இரவுகள் அவை. இன்று அவையெல்லாம் இல்லாது போய்விட்டன. அவர்கள் வாழ்ந்து முடிக்க வேண்டிய காலம் பன்னிரண்டு மணித்தியாலங்களாகக் குறுகிவிட்டது.

பேர்த்தி அவரைக் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்கத் தொடங்கிவிட்டாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இருளுக்க ஆராவது வெளியில் போவார்களோ? கண் தெரியுமா?"

அவர் அவளைக் கவலையுடன் ஏறிட்டுப் பார்ப்பார். பெண்ணே, இரவுகள் எவ்வளவு இனிமையானவை தெரியுமா? கொட்டும் பனியில் துவாயைத் தலையைச் சுற்றிக் காதுகளை மறைத்துக் கட்டிக் கொண்டு அம்மன் கோயில் முடக்கு வரை சென்று நரியன்குண்டில் நிறைந்திருக்கும் வெள்ளத்தில் மண்டுகங்கள் ஓயாது குரல் எழுப்புவதைக் கேட்டபடி திரும்பி வருவது எவ்வளவு இனிமையானது? அகலத் திரையில் தியேட்டரில் இரண்டாவது ஆட்டம் பார்த்துவிட்டுக் கச இருட்டில் காலிடற ஒழுங்கையால் வீடு திரும்புவதில் எவ்வளவு இனிமை தெரியுமா? அவளுக்கு இவற்றினைச் சொன்னால் நம்பமாட்டாள்.

"திரியலாம்..."

"அப்ப ஏன் ஒருத்தரும் போறதில்லை?"

"ஊரடங்குச் சட்டம்...... கேவியு......"

"ஏன்?"

இதனைப் புரியவைக்க நூற்றாண்டு வரலாற்றினை அவளுக்குச் சொல்ல வேண்டும். எம் மூதாதையர்கள் விட்ட தவறுகளின் விளைவு இவையென அவளுக்குப் புரிய வைக்க வேண்டும். முடிவுகளை எடுப்பதற்கு உலகில் இன்று ஆயுதங்கள் பேசுகின்றன என்பதைத் தெளிவாக்க வேண்டும்.

"ஏன், அப்பு?" அவள் மீளவும் வற்புறுத்துகிறாள்.

"வௌவால்கள் தான் இரவில் திரியலாம். மற்றைய பறவைகளுக்கு இரவுகள் இங்கு சொந்தமில்லை, பிள்ளை."

அவள் என்னை வியப்புடன் பார்த்தபடி, "ஆந்தைகள் இரவில் சஞ்சரிக்குமாம்." என்று சிரித்தாள்.

வௌவால்களையும் ஆந்தைகளையும் அவள் அறிவாள். மாலைப் பொழுதுகளில் மேற்கில் சூரியன் சரியத் தொடங்கும் பொழுது கச்சேரிப் பழைய பூங்காவின் பாரிய டச்சுமரங்களிலிருந்து திரள் திரளாக வௌவால்கள் புறப்பட்டு வானில் நாற்றிசைகளையும் நோக்கிப் புறப்பட்டு வருவதை அவள் கண்டிருக்கிறாள். வீட்டின் முற்றத்தில், அவை தோல் இறகுகளை அசைத்துப் பறப்பதை வேடிக்கை பார்ப்பாள். முற்றத்து வேப்ப மரத்தில் இரு கூகைகள் வாசஞ் செய்கின்றன. அவை இரவின் அமைதியைக் குலைத்தபடி சிலவேலைகளில் அருவருப்பாகக் குரல் எழுப்புவதைக் கேட்டிருக்கிறாள். அவை என்னவென்பதைப் படங்களிலிருந்து அவளுக்கு அவர் புரிய வைத்திருக்கிறார்.

அவருடைய பேர்த்திக்கு இன்றைய தலைமுறைக்கேயுரிய நுணுகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராயும் இயல்பு அதிகமென்பது அவரின் கருத்து. இலங்கையின் ஏனைய பகுதிகளில் சர்வசாதாரணமாகிவிட்ட பல சங்கதிகள் யாழ்ப்பாணத்தின் புதிய தலைமுறைக்கு அந்நியமாகிவிட்டன.

"றெயின் என்றால் என்ன அப்பு?" என்று ஒரு நாள் கேட்டாள்.

அவர் புத்தகமொன்றினைத் தேடிப் பிடித்து அதிலிருந்த படத்தினைக் காட்டி, "இதுதான்" என்றார். அவளுக்கு அவரின் வார்த்தையில் திருப்தி ஏற்படவில்லை.

"இது எப்படி ஓடும்? றோட்டிலா?"

முன்னர் ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தின் முதுகெலும்பாகக் காங்கேசன் துறையிலிருந்து கொழும்பு வரை இரவும் பகலும், ஓடிய அத்தொடர் வண்டியை அவளுக்கு எப்படிப் புரியவைப்பதென்று தெரியவில்லை. முன்னர் எங்கள் மண்ணில் இரவிரவாக ஓடித்திரிந்ததென்றால் அவள் விழிகளில் வியப்பும் நம்பிக்கையீனமும் தெரிகின்றன. இந்தப் பிள்ளைகளுக்குப் பல புது விசயங்கள் தெரிந்திருக்கின்றன. புராதன விசயங்கள் பல தெரிந்திருக்கவில்லை.

ஓர் அறைக்குள்ளேயே பூமிப்பந்தைக் கொண்டு வந்து விட்டார்கள் என்றால் அவள் நிச்சயமாக 'எங்கே?' என்பாள்.

ஒரு நாள் அவளுடன் பட்டப் பகலில் வீதியில் நடந்து வந்து கொண்டிருந்தார். எதிரில் கவசவாகனத் தொடர் ஒன்று விரைந்து வந்தது.

"ஒதுங்கி நிற்பம் அப்பு. டாங்கிகள் வருகின்றன."

ஒதுங்கி நின்றோம். அவள் அவற்றினை வெறுப்புடன் பார்த்தாள்.

"பிப்ரி கலிபர்கள் பொருத்தியிருக்கினம்". சந்தியில் இராணுவ சென்றி குறுக்கிட்டது. அவற்றினைக் கடந்து கடந்து அவர்கள் பழக்கப் பட்டவர்கள். அவர்ளுடைய தெருக்களைக் கம்பிவேலித் தடைகள் தடைசெய்கின்றன. குறுக்குப் பாதைகள் அடைக்கப் பட்டுவிட்டதனால் நீண்ட தூரச் சுற்றுப் பயணம் நடைமுறையாகிவிட்டது.

அடையாள அட்டைகளைக் காட்டிப் பரிசோதனைக்குட்பட்டு அங்கால ஏறியபோது பேர்த்தி அவரிடம் சொன்னாள்: "அவர்கள் ஏகே 47 வைச்சிருக்கினம், அப்பு".

அவர் எதுவும் பேசவில்லை. பேர்த்தியின் கரத்தைப் பற்றி நடத்திச் சென்றார். மனதில் இனந்தெரியாத சுமை அழுத்தியது. மௌனமான அழுத்தங்களுக்கிடையில் அவர்கள் வாழப்பழகிவிட்டார்கள். வாழ்ந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரவேண்டும்.

அவர்களைக் கடந்து பஸ் ஒன்று வடக்கு நோக்கிச் சென்றது.

அப் பஸ்சின் முன் பக்கத்தில் எழுதப்பட்டிருந்த இடத்தின் பெயரை அவள் வாசித்துப் பார்த்தாள்.

"சுன்னாகம்..... இது அங்கயா போகிறது? அப்பு, அதற்கு அப்பால் போகாதா?"

அவர் விழிகள் கலங்கி, நெஞ்சு கனக்கத் தொடங்கியது. 'பெண்ணே, அதற்கு அப்பால் எங்கள் நிலம் இருந்தது. சுன்னாகத்தைக் கடந்து அப்பால் சென்றால் மாவிட்டபுரம் வரும். எழிலார்ந்த கோபுரத்துடன் கூடிய மாவிட்டபுரம் கந்தன் ஆலயம் வரும். அங்கிருந்து சென்றால் கீரிமலைத் தீர்த்தக் கேணி, விரிந்த கடற்கரை, இவையெல்லாம் இருக்கின்றன. கீரிமலைக் கடற்கரையில் உலாவியிருக்கிறியா, அவர் கூறவில்லை.

அவர் ஏக்கத்துடன் அவளைப் பார்த்தார்.

"கடற்கரை எப்படியிருக்கும் அப்பு." என்று அவள் நிச்சயமாக கேட்பாள்.

"என்ன அப்பு.... பேசாமல் வாறியள்? அப்பா சொல்வார் மாவிட்டபுரத்தில் அவருக்குப் பெரிய வெற்றிலைத் தோட்டமிருந்த தெண்டு..... அது இப்ப இருக்குமா?"

காங்கேசந்துறைச் சீமேந்து ஆலையின் தூசியினால் தலை நரைத்துக் கிடந்த பனை மரங்கள் கூட இன்றில்லை. வெற்றிலைத் தோட்டங்களா இருக்கப் போகின்றன?

"ஒரு காலத்தில் அங்க நிம்மதியாக வாழ்ந்திருந்தம், பிள்ளை. இப்ப அங்க எதுவுமில்லை. உடைந்து சிதைந்து போன வீடுகள். பற்றை படர்ந்து காடாகிப் போன நிலங்கள்..... எல்லைகளை அறிய முடியாது காடடர்ந்து விட்ட மண் வளவுகள்.... அவ்வளவு தான். பறவைகள் எல்லாம் அவ்விடங்களிலிருந்து திக்கிற் கொன்றாகப் பறந்துவிட்டன. அழிந்தும் விட்டன. இப்ப அங்க வௌவால்கள் தான் இருக்கின்றன."

"ஏன்?"

"போராட்டத்திற்கு நாங்க கொடுத்த விலை."

அவர்கள் அதன் பின்னர் மௌனமாக தெருவில் ஒதுங்கி நடந்து வந்தார்கள். மனம் கனத்துக் கிடந்தது. அவர் விழிகளில் துயரம் அப்பிப் படர்ந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாற் போல எங்கோ குண்டொன்று வெடித்து அவ்விடத்தின் நிம்மதியைக் குலைத்தது. அவர் பதற்றமடைந்தார். எங்கே, என்ன நடந்ததோ? குண்டு வெடிச் சத்தம் எழுந்ததும் படபடவெனத் துப்பாக்கிச் சன்னங்கள் சீறும் ஒலி. அவர் பேர்த்தியின் கரத்தைப் பற்றிக் கொண்டு அருகிலிருந்த கடையொன்றினுள் ஓடி ஒதுங்கிக் கொண்டார்.

"அது கிறனைற் அப்பு..... வெடிச்சிருக்கு. பயந்து சாகிறியள்."

சற்று நேரத்தில் அவ்விடத்தில் நிலைமை வழமையாகியது

"வா பிள்ளை. கெதியாப் போவம். அம்மா பயந்திடுவாள்."

"இப்ப என்ன நேரம், அப்பு?"

"நாலு மணி......"

"அப்ப இன்னமும் நேரமிருக்குது. கொஞ்ச நேரம் அப்படியே கோயிலுக்குப் போய்விட்டுப் போவம். இரவு முழுவதும் வீட்டிற்குள் இருக்கப் போகிறம்."

அவர் அவளைக் கவலையுடன் பார்த்தார். எந்த நேரத்தில் என்ன நடக்குமெனத் தெரியாது. இந்த மண்ணின் வரலாற்றில் அறுபது வருட வாழ்வும், கசப்பான பல அனுபவங்களும் அவருக்குள்ளன. எத்தனை மரணங்களைச் சந்தித்தவர்? ஒரு காலத்தில் அதிகாலையிலிருந்து மாலை வரை வீடுகளில் அடுப்புக்கள் எரியவில்லை. மயானங்களில் பிரேதங்களே எரிந்தன. குண்டு வீச்சிற்கும் ஷெல் அடிக்கும் பலியாகிப் போன மக்கள் எத்தனை ஆயிரம்? வீதியில் சந்தியில், வீட்டில், ஒழுங்கை முகப்பில், ஆஸ்பத்திரியில், கோயிலில், எல்லாவிடங்களிலும் யம கிங்கரர்கள் வெவ்வேறு வடிவங்களில் குண்டுகளாயும் ஷெல்களாயும் சன்னங்களாயும் வியாபித்திருந்தனர். அன்று விண்ணிலிருந்து யமகிங்கரர்கள் பாசக் கயிற்றியை ஏவினர். இன்று மண்ணிற்கே காலூன்றி வந்து விட்டனர்.

"என்ன அப்பு, கோயிலுக்குப் போவோமா?"

அவருடைய விருப்பத்தினைத் தட்ட அவரால் முடியவில்லை.

கோயிலுக்குப் போய்விட்டு வீடு திரும்பும் போது மேற்கில் சூரியன் சரிந்து கொண்டிருந்தான். படலையடியில் அவரின் மகள் ஏக்கத்துடன் நின்றிருந்தாள்.

"எங்க போயிட்டு வாறியள்? கெதியா வரக்கூடாதா? நான் இங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயந்தபடி காத்திருக்கிறன். குண்டுச் சத்தமும் கேட்டுது. உள்ளுக்கு வாருங்கோ" எனப் படபடத்தாள். இந்த மண்ணின் சாதாரண தாயவள். பயந்து பயந்து வாழப் பழகிவிட்டாள்.

அவர் வீட்டிற்குள் புகுந்தார். பேர்த்தி முற்றத்தில் நின்றபடி வானத்தை அண்ணார்ந்து பாக்கிறாள். வீட்டிற்குள் நுழைய முயன்றவர் திரும்பிப் பேர்த்தியைப் பார்த்தார்.

"உள்ளுக்க வா பிள்ளை"

"அப்பு ஒண்டையும் காணவில்லை....."

"எதை?......"

"வெளவால்களைத் தான். இரவில, அவை தானே வெளிக்கிடுவினம்."

"அவையும் இனி வெளிக்கிட மாட்டினம் போல."


"அப்ப ஒருத்தருக்கும் இராத்திரியில்லை."

வேப்பமரத்துக் கூகை தானிருப்பதாகக் குரல் தந்தது.

**தினகரன் -**
**04-04-1999**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்கள் பூமி

நீண்ட பத்தாண்டுகளுக்குப் பின்னர் மாணிக்கப் பெத்தாச்சியின் கால்கள் மாவிட்டபுரம் கந்தசாமியின் கோயில் வாசலை மிதித்தன. அடியிலிருந்து உச்சந்தலை வரை ஒரு விதமான பரவசம் குபீரெனத் தாவியது. அப்படியே வெகு நேரம் நின்றிருந்தாள். தான் பிறந்து வாழ்ந்து கைவிட்டு ஓடிய மண்ணின் குளிர்ச்சியும் சூடும் அவளுக்குப் பரவசத்தை ஏற்படுத்தின.

அந்த மண் தரையில் அப்படியே அமர்ந்து விட வேண்டுமென்ற உணர்வு உள்ளத்தில் கிளர்ந்தது. விழிகள் நீரைக் கசிய விடத் தொடங்கின. அவருடன் வந்த மற்றைய ஒன்பது பேரும் கோயிலுக்குள் சென்று விட்டார்கள்.

என்ன இழப்பு? எத்தகைய பெரும் இழப்பு? பலாலியிலிருந்து இராணுவம் மேற்குப் புறமாக அப்பிரதேசத்தைக் கைப்பற்றியபடி முன்னேறியபோது, பிள்ளைகளின் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வடக்கிலிருந்து தெற்கு நோக்கி அவர்கள் ஓடினார்கள். அப்படி ஓடி யாழ்ப்பாணத்திற்கு வந்த அவளின் பிள்ளைகள் எட்டும் ஓட்டத்தை நிறுத்தாது உலகின் மூலை முடுக்குகளில் ஒவ்வொருவராக ஓடிச் சிதறினார்கள்.

அவள் இந்த மண்ணை விட்டு போக மாட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுதான் அவள் தாயகம். அவள் இந்த மண்ணில் தான் வேக வேண்டும். அஸ்தி கீரிமலைக் கடலில் தான் கரைக்கப் பட வேண்டும்.

கோயிலின் வாசலிலிருந்து சண்முகநாதக் குருக்கள் அவளைப் பார்ப்பது தெரிகின்றது. ஒரு வாரத்தில் ஒரு நாள் அவர் பத்துப் பன்னிரண்டு பேருடன் மாவிட்ட புரம் வருவார். கோயிலைத் திறந்து பூசை நடக்கும். மூன்று மணி நேரத்திற்குள் பழைய படி தெற்கே திரும்பிவிட வேண்டும்.

அவர்களின் சொந்த மண்ணில் காலாற நடக்க இன்று அவர்களுக்கு உரிமையில்லை.

"மாவிட்டபுரமே இல்லையென்றாகிவிட்ட போது அம்மா, நீ யாழ்ப்பாணத்தில் இருந்தாலென்ன, கனடாவில் இருந்தாலென்ன?" என்று மூத்தவன் ஓயாது எழுதிக் கொண்டிருக்கிறான்.

அவன் சொல்வது சரியெனப் பட்டாலும் அவள் மூதாதையர்கள் - அவளைக் கரம் பிடித்தவன் - எல்லாரதும் ஆத்மாக்கள் இங்குதான் சுற்றிக் கொண்டிருக்கின்றன. அவர்கள் இந்தப் பூமியில் தான் நிலத்தைக் கிளறினார்கள். பயிர்களை வளர்த்தார்கள். வீடு கட்டி எல்லையில்லாத மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார்கள். அவர்கள் குலாவி மகிழ்ந்த பூமி இதுதான். இந்த மண்ணில் தான் அவர்களின் சடலங்கள் வெந்து தணிந்தன.

தூரத்தில் அலையெறிந்து ஆர்ப்பரிக்கின்ற இந்து மகா சமுத்திரத்தில் தான் அவர்களின் சாம்பல் கரைக்கப் பட்டது.

சமுத்திரங்களுக்குப் பிரிவில்லையாம். பூமிப் பந்தில் அவைதான் ஒன்றாகக் கலந்து இணைந்திருக்கின்றனவாம். அப்படியாயின் அவள் சாம்பலும் இந்து சமுத்திரத்தில் கரைந்தால் பூமிப் பந்தின் திக்குகளில் முடங்கிச் சீவிக்கின்ற அவள் பிள்ளைகள் வாழும் நீர்க்கரைகளை அடையும் எனப் பெத்தாச்சி நம்பினாள்.

சண்முகநாதக் குருக்கள் சற்று நேரம் தயங்கி வாசலில் நின்றிருந்தார். மாணிக்கப் பெத்தாச்சியின் மனநிலையை அவர் தெரிந்து கொண்டார். கோயிலுக்கு நேர் எதிரே முன்னர் சென்ற வீதியில் கூப்பிடு தூரத்தில் மாணிக்கப் பெத்தாச்சியின் வீடும் வெற்றிலைத் தோட்டமும் இருந்தன.

கோயிலின் ஆலய மணியின் ஓசை அங்கு எப்பொழுதும் கணீரென ஒலித்துக் கொண்டிருக்கும். அவற்றினை நினைவில் கிளறிக் கொண்டாளோ? சனநடமாட்டத்தால் நிரம்பிப் பச்சைப் பசேலென்ற சூழலுடன் விளங்கிய கிராமம் இன்று காடடர்ந்து விட்டது. எல்லைகளே தெரியாத அளவிற்கு அனைத்தும் அழிந்து போய் விட்டன. வீடுகள் சிதைவுற்று குட்டிச் சுவர்கள் மட்டும் எஞ்சி நிற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி வாழ்ந்தோம்? இன்றோ அகதிகளாக இருக்க இடமின்றிப் பிறர் வளவுகளில் பயந்தும் உரிமையற்ற நிலையிலும் வாழ நேர்ந்து விட்டதே? அவர் நெடுமூச்சொன்றினை வெளியிட்டார். மீண்டும் மாணிக்கப் பெத்தாச்சியை ஏறிட்டு விட்டுக் கோயிலுக்குள் நுழைந்து கொண்டார்.

பெத்தாச்சி அப்படியே நிலைத்து நிற்பது தெரிந்தது. அவள் பாதங்களிலிருந்து வேர்கள் அந்த மண்ணிற்குள் புகுந்து விட்ட உணர்வு. அப்படியே திரும்பிக் கிழக்குப் பக்கம் பார்க்கிறாள். அந்த ஒழுங்கையைக் காணவில்லை. பற்றைகள் மண்டிக்கிடக்கின்றன. திக்குத் திசை தெரியவில்லை.

மனிதனின் வெறியுணர்வுகள் மேலோங்கி விட்டன. அவற்றிற்கு அவர்கள் கொடுத்த விலை அதிகம்.

அலைகள் ஆர்ப்பரித்துக் கரையில் மோதுகின்ற ஒலி பெத்தாச்சியின் செவிகளில் தெளிவாகக் கேட்கின்றது. அப்புவின் சுட்டுவிரலைப் பற்றியபடி கீரிமலைக் கடற்கரையில் நடக்கின்றாள். பன்னிரெண்டு வயது.

"போதும் பிள்ளை...... திரும்புவம்......"

"என்ன அப்பு இன்னும் கொஞ்ச தூரம் வாங்கோ...... அதோ அது மட்டும்".

அவள் கிழக்குப் பக்கமாகச் சுட்டிக் காட்டுகிறாள். கடற்கரை விரிந்து கிடக்கின்றது. கடற்கரை மணலில் கிடக்கும் சிப்பிகளையும், சோகிகளையும் விதம் விதமாக பொறுக்கிக் கொள்கிறாள். ஈரமணலில் கால்கள் பதிய நடப்பதில் இனந் தெரியாத சுகம் தெரிகின்றது.

தூரத்தில் சீமெந்து ஆலையின் புகை வானில் கிளம்புவது பனிமூட்டமாகத் தெரியும். கடற்கரையில் கடல் பக்கமாக முகத்தை நீட்டிப் படுத்திருக்கும் ஓங்கல்களின் அடி மட்டத்திலிருந்து நன்னீர் ஊற்று கசிந்து கொண்டிருந்தது.

அவள் ஆவலோடு அங்கு சென்று கடற்கரை மணலைத் தோண்டி ஒரு சிறுபள்ளம் உருவாக்குகிறாள். அதில் நன்னீர் தேங்கி முட்டி வழிகின்றது. விரலை அதில் தோய்த்து நாக்கில் வைத்து நல்ல தண்ணி என்று குதூகலிக்கிறாள்.

அப்பு அவள் செய்கைகளைப் பாசத்துடன் பார்த்தபடி நிற்பார்.

கடலரிப்பால் தோன்றியிருக்கும் முருகைக் கல் குகையுள் விரைந்து சென்று அமர்ந்து விடுவாள். கடலைப் பார்த்தபடி அரசியொருத்தி வீற்றிருப்பது போல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் அலைகளின் ஏற்ற இறக்கத்திற்குத் தாக்குக் கொடுத்தபடி நூற்றுக் கணக்கான கட்டு மரங்கள் மீன் பிடித்துக் கொண்டிருக்கும். ஒரு கணம் கட்புலனாவதும் பின்னர் அலையினுள் அமிழ்ந்து மறைவதுமாக அவை மிதக்கும்.

அப்பு பொறுமையாகக் காத்திருப்பார்.

"போவம்" என்று அவள் எழுந்ததும் அவர்கள் மீண்டும் கீரிமலைக் கேணிப் பக்கமாக நடக்கத் தொடங்குவார்கள். மேலை வானின் சோதி இறங்கிக் கொண்டிருக்கும். உற்றுப் பார்ப்பாள். விழிகள் கலங்கும்.

அந்தக் கடற்கரை இன்று அவர்களுக்கு இல்லாததாகிவிட்டது. கடற்கரைமணலில் விதைத்துக் கிடக்கும் சிப்பிகளும் சோகிகளும் பொறுக்குவாரின்றி மீண்டும் அலையினால் அள்ளுப்பட்டு அலைக்கழிக்கப் படுகின்றன.

மாணிக்கப் பெத்தாச்சியின் உள்ளம் குளிர்ந்து நடுங்குகின்றது. கோயிலைச் சுற்றிப் பற்றிப் படர்ந்திருக்கும் புதர்களிடையே அமிழ்ந்து போய் இருந்தவிடந்தெரியாமல் கிடக்கும். குடிமனைகளைப் பார்க்கும் போது அவளது ஆத்மா உறைந்து போனது போல உணர்வு.

மக்கள் உலாவிய வீதிகள், ஆனந்தமும் நிம்மதியும் சண்டை சச்சரவுகளும் நிலவிய நிலம். அந்தச் சண்டை சச்சரவுகள் கூட இப்பொழுது நினைக்கும் போது இனிமை பயக்கும் விடயங்களாகத் தெரிகின்றன. ..... சண்டைகள் பிடித்து அடிதடி பட்டு ஆஸ்பத்திரிக்கும் கோர்ட்டுக்கும் அலைந்தவர்கள் பின்னர் கைகோர்த்துத் திரிந்த மண்.

அவர்கள் எல்லோரும் இன்று எங்கோ சிதறிப் போய் சீரழிந்து விட்டனர்.

மாணிக்கப் பெத்தாச்சி மெதுவாக இடம் பெயர்ந்து கோயில் மண்டபத்தில் தூணோடு சாய்ந்து அமர்ந்து கொண்டாள். இதயத்தில் எழுந்த வலி அடங்கவில்லை. எத்தனை திருவிழாக்களை அவள் இந்தக் கோயிலில் கண்டிருக்கிறாள்.

அவள் தன் கணவன் சின்னத் துரையையும் இக்கோயிலின் திருவிழா நாளொன்றில் தான் சந்தித்திருந்தாள். இப்பொழுதும் நினைவு பசுமையாகவிருக்கின்றது. சின்னத் துரை வெற்றுடம்புடன் தேரின் நுனி வடத்தைத் தோளில் மாட்டியிழுத்தபோது அவனது திரண்ட முறுகிய உடல்வாகு அவனை மீண்டும் மீண்டும் பார்ப்பதற்கு அவளைத் தூண்டிவிட்டது. அவள் அப்படி எந்த ஓர் ஆடவனையும் ஏறிட்டுப் பார்த்தவளல்லள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் அவளுக்கே புரியவில்லை. திருமணமான பின்னர் அவன் அந்தச் சந்தர்ப்பத்தை ஞாபகப் படுத்துவான்.

"வெட்கமில்லாமல் அப்படி யாரும் பாப்பினமோ?" என அவளைக் கோபமூட்டப் பார்ப்பான்.

"பார்த்தன் அதற்கு இப்ப என்னவாம்?" என்பாள் அவள்.

அவர்களின் வாழ்க்கை இங்கு தான் ஆரம்பித்தது. சின்னத்துரையின் பெற்றோர் திருமணத்திற்காக அவளைப் பெண் கேட்டு வந்த போது தான் அவனுக்கும் தன்னில் விருப்பம் வந்திருக்கின்ற சங்கதி அவளுக்குத் தெரிய வந்தது.

மாணிக்கப் பெத்தாச்சியின் உள்ளம் ஒரு கணம் உவகையால் துள்ளியது. தனக்குள் சிரித்துக் கொண்டாள். அவனும் இன்றில்லை. அவன் பாதங்கள் பட்ட மண்ணும் அவன் வியர்வை சிந்திய தோட்டங்களும் இன்றில்லை. கண்ணுக் கெட்டிய தூரம் வரை பற்றைப் படர்வு தெரிகின்றது. கிழக்குப் பக்கமாக முள் முருக்குகள் சில கிளை நீட்டி நின்றிருப்பதும் தெரிகின்றது. அவர்களின் வெற்றிலைக் கொடிகளைத் தாங்கிய முள் முருக்குகள்.

எவ்வளவு அருமையாகவும் தூய்மையாகவும் அவர்கள் தங்களின் வெற்றிலைக் கொடிகளையும் அவை வளர்ந்திருக்கும் பகுதியையும் பேணி வந்தனர். அவளுக்கு ஒரு சம்பவம் நன்றாக நினைவில் சதிராடுகின்றது. மூத்தவள் சித்திராங்கி பன்னிரண்டு வயதுச் சிறுமியாக நினைவிற்கு வருகிறாள். சின்னத்துரை தன் வெற்றிலைத் தோட்டத்தின் பரப்பினை விஸ்தரித்துக் கொண்டிருந்த காலம். புதிய தரையில் வெற்றிலைக் கொடிகளை வளர்க்க ஆயத்தங்கள் செய்து கொண்டிருந்தான். பழைய கொடிகளிலிருந்து பக்குவமாய்க் கத்தரித் தெடுத்த கொழுந்துகளை வரிசையாக நேர் பிடித்து நட்ட முருக்குகளின் அருகே நட்டுக் கொண்டிருந்தான். அவன் அருகில் உதவியாக அவள் நின்றிருந்தாள். "இஞ்ச பாரும் உமக்கு வாற தேதியல்லோ? இஞ்ச நிக்கிறீர்?" என்ற கணவனை அவள் வெட்கத்துடன் ஏறிட்டாள். உடன் எதுவும் பேசவில்லை. தலையைக் குனிந்து கொண்டாள். அவளின் தலைக் குனிவு அவனுக்குப் புரிந்தது. விருட்டென எழுந்தான்.

"என்னப்பா? அப்படியா?"

"ஓமோம்...... ஒரு மாதமாகிறது. வந்து எட்டாவது......" என்றாள் பெருமூச்சுடன். மனைவியின் பெருமூச்சு அவனுக்குப் புரிந்தது. அவள் மீது பச்சாதாபம் ஏற்பட்டது. விடிய எழுந்தால் தோட்டம், நீரிறைப்பு, உழவு சந்தையெனக் கழிந்துவிடும். மாலையாயின் மனைவியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுவதைத் தவிர அவனுக்கு வேறு பொழுதுபோக்கிருக்கவில்லை.

"எங்காவது போயிட்டு வாருங்களேன்....." என அவள் சிலவேளைகளில் கேட்பாள்.

"எங்க கொட்டிலுக்கா?"

"சரி சரி ஓரிடமும் போகவேண்டாம்...."

எட்டாவது குழந்தையை வயிற்றில் தாங்கிக் கொண்டு அவள் நின்றிருந்தாள்.

"இனிமேல் வேண்டாம்" என்றான் அவன்.

"எல்லாம் எங்கட கையில இருக்குமாப் போல. எல்லாம் மாவிட்டபுரக் கந்தன் தாறது."

அப்பொழுது வீட்டின் எல்லையிலிருந்து சித்திராங்கி பெருங்குரலில் தாயை அழைத்தாள்.

"அம்மா ஒருக்கா இங்க வா.... கெதியாக வாணை......."

"என்ன அலுவலெண்டாலும் இங்க வா பிள்ளை....."

"ஐயோ நான் அங்க வரப்படாது......." என்றபடி ஓவெனச் சித்திராங்கி அழுதபோதுதான் அவளுக்குப் புரிந்தது. கணவனை அர்த்தத்துடன் ஏறிட்டாள்.

"இனி வேண்டாமுங்க...... மூத்தவள். பெரியவளாகிவிட்டாள்."

சின்ன துரைக்குச் சந்தோஷமாகவிருந்தது. கவலையும் சூழ்ந்தது.

வெற்றிலைக் கொடிகள் தீட்டுத் துடக்கு பொறுக்கமாட்டாதவை என்பது அவர்களுக்குத் தெரிந்த பரம்பரை நம்பிக்கை. சில சம்பவங்கள் அவற்றினை நிரூபித்திருப்பதாகக் கதைகள். தன் வீட்டில் இழவு நடந்தமைக்காகத் துடக்குப் பாராமல் தோட்டத்திற்குள் போய் வெற்றிலை ஆய்ந்த அம்பலவாணரின் கொடிகள் மூன்றாம் மாதமே கருகிவிட்டன. யார் துடக்குடன் வந்தார்களோ? யாருடைய தீட்டுப் பட்டதோ, வெற்றிலைத் தோட்டங்களுடன் அவற்றினைப் பராமரித்தவர்களும் காணாமற் போய்விட்டனரே?

இப்பொழுது நினைத்தாலும் மாணிக்கப் பெத்தாச்சிக்கு சுரீரென இதயத்தில் முள்ளாகக் குத்துகின்றது. அவர்கள் எப்படி அல்லோல கல்லோலப்பட்டு ஓடினார்கள்?

அவள் கணவனுக்கு அப்படி ஓடும் அபாக்கிய நிலை வரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிப்போக நேர்ந்தமைக்கு ஒருமாத முன்னரே அவன் இயற்கையாக இந்த மண்ணில் சங்கமமாகினான். அவன் எண்ணப்படி கீரிமலையில் இறுதிக் கிரியைகள் நடந்தது அவன் அஸ்தி இந்து சமுத்திரத்தில் தான் கரைக்கப் பட்டது.

"எனக்கு அப்படியொரு பாக்கியம் கிட்டுமா?"

அவர் எவ்வளவு பெரிய மனிதர். வெற்றிலைத் தோட்டத்தில் எட்டாவது பிள்ளைக்கு மேல் இனி வேண்டாமுங்க என்று அவள் கேட்டதற்கு இணங்க கடைசிரை விரதம் அனுஷ்டித்த பெருமகன். அன்றிலிருந்து படுக்கைகள் தனித்தனியாகின. ஆனால் அவர்களின் இதயங்கள் எப்பொழுதும் ஒன்றாகத் தான் பிணைந்திருந்தன.

"எங்க. ஐயா அம்மாவைப் போல ஒற்றுமையான புருஷன் பொஞ்சாதியை நாங்க எங்கையும் காணமுடியாது" என்பார்கள் பிள்ளைகள். உண்மை. அவர் அவளை ஒருநாள் கூடக் கோபித்தது கிடையாது. எதையும் அவள் விருப்பறிந்து தான் செய்தார்.

அவள் அவருடன் முழுவாழ்வு நிறை வாழ்வு வாழ்ந்து முடித்தவள்.

அவர்கள் வாழ்ந்த மண் தரிசு பற்றிக் கிடக்கின்றது. பாம்புகளும் நரிகளும் குடி கொண்டு விட்டன.

"இந்தப் பூமிக்கு மீண்டும் வரமாட்டேனா? என் வளவில் குடிசையாவது அமைத்து வாழமாட்டேனா? இந்த ஆலயத்தில் மீண்டும் பழைய திருவிழாக்களும் சச்சரவுகளும் ஏற்படமாட்டாதா? என் வெற்றிலைத் தோட்டம், துலாக் கிணறு, வடக்கனுக்கும் ஊர்க்குட்டையனுக்கும் பிறந்த சிவப்பு காளை இழுக்கின்ற வில்வண்டியில் பயணம் செய்ய மாட்டேனா? எல்லாவற்றிற்கும் மேலாக இந்த மண்ணில் மயானத்தில் என் சடலம் வேகாதா? கீரிமலை மடத்தில் அந்திரட்டி செய்த பின்னர் என் சடலத்தின் சாம்பலைக் கடலில் கொட்டி இறுதிக் கிரியைகளை நிறைவேற்ற என் பிள்ளைகள் வரமாட்டார்களா?"

மாணிக்கப் பெத்தாச்சி இருந்தாற் போல விம்மி விம்மி அழத் தொடங்கினாள்...... இதயத்தின் பாரமெல்லாம் நீராக வடியும் வரை அழுதாள். கோயிலிலிருந்து பூசை முடிந்து வந்தவர்கள் அவளைச் சூழ்ந்து கொண்டனர். எல்லோருக்கும் காரணம் புரியும். இழப்புக்கள் அவர்கள் அனைவருக்கும் தான். அவர்கள் இந்த மண்ணின் மைந்தர்கள்.

"ஆச்சி அழாதையணை......"

சண்முகநாதக் குருக்கள் அவள் அருகில் வந்தார். பரிவோடு பார்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அழாதையம்மா..... நாங்க எல்லோரும் திரும்பி வருவோம். நிச்சயம் வருவோம்."

மாணிக்கப் பெத்தாச்சியின் விழிகளில் நம்பிக்கை ஒளிர்ந்தது. குருக்களை நம்பிக்கையோடு ஏறிட்டுப் பார்த்தாள்.

"குருக்கள் ஐயா இன்னொருக்காச் சொல்லுங்கோ".

"நாங்க இங்க திரும்பி வந்து வாழுவம். அதற்கு முன் செத்துப் போகமாட்டோம்."

மாணிக்கப் பெத்தாச்சி எழுந்திருந்தாள். முகம் பொலிவுற்றது.

"என்ர அஸ்தி கீரிமலையில அந்திரட்டி செய்த பின்னர் சமுத்திரத்தில் தான் கரையும். என்ர சடலம் இந்த மாவிட்டபுர மண்ணில் தான் வேகும். அதுவரை நான் சாகமாட்டன்."

அவள் விழிகள் சுற்றித் துளாவின. அவள் கண்களின் முன் மாவிட்டபுரத்தின் பழைய பசுமையும் எழிலும் அமைதியும் தெரிந்தன.

வீரகேசரி
- 21-03-99



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கறுப்பியைக் காணவில்லை

விடிந்ததும் விடியாததுமான வேளை. மாணிக்கப் பெத்தாச்சி சுருட்டைப் புகைத்தபடி கறுப்பியைக் கூப்பிட்டுப் பார்த்தாள். பெத்தாச்சியின் ஒரு குரலிற்கே ஓடிவந்துவிடும் கறுப்பியைக் காணவில்லை.

'எங்கோ போயிட்டுது' என்று முதலில் தனக்குச் சமாதானம் கூறிக் கொண்ட பெத்தாச்சியால், நேரம் செல்லச் செல்லப் பொறுக்க முடியவில்லை. மீண்டும் மீண்டும் கூப்பிட்டுப் பார்த்தாள்.

கறுப்பியைக் காணவில்லை.

சுருக்கம் விழுந்த பெத்தாச்சியின் முகத்தில் கவலை குடிகொண்டது. வளவு முழுவதும் கறுப்பியைத் தேடிப் பார்த்தாள். கிணற்றுக்குள்ளும் எட்டிப் பார்த்தாள். வேலிகளின் பொட்டுகள் ஊடாகப் பக்கத்து வீடுகளையும் நோட்டம் விட்டாள்.

'கறுப்பியைக் காணேல்லை..... எங்கை போச்சுதோ.....! காலுக்கை கையுக்கையே சுற்றிச் சுற்றி நிக்கும்....'

நேரம் போய்க் கொண்டே இருந்தது. சிறகடித்துப் பறந்தது.

மாணிக்கப் பெத்தாச்சிக்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைத் தேநீர் குடியாத களைப்பு ஒரு பக்கம். கறுப்பியைத் தேடிய இளைப்பு ஒரு பக்கம். திண்ணைக் குந்தில் தலையில் கையை வைத்தபடி அமர்ந்துவிட்டாள்.

"என்ரை மோளுக்கு நான் என்ன பதில் சொல்லப் போறன்..... நான் ஆசைப்பட்டிட்டன் எண்டதுக்காக என்னட்டை வளர்க்கத் தந்தவள். எனக்குத் துணையும் அது தானே. எப்படி வளர்த்தன். இனி இராசத்துக்கு என்ன பதில் சொல்லப் போறன்.....!" என்று பெத்தாச்சி கலங்கினாள்.

"என்ன மாணிக்கம், உன்ரை பாட்டுக்குப் புறுபுறுக்கிறாய்....?"

வேலியோரம் நின்று பக்கத்து வீட்டுச் செல்லம்மாள் கேட்டாள்.

"என்ரை வயிற்றெரிச்சலை ஏண்டி கேட்கிறாய், செல்லம்மா! என்ரை கறுப்பியைக் காணவில்லை.... எல்லா இடமும் தேடிப் பார்த்திட்டன்..... நீ கண்டனியே?"

"கறுப்பியைக் காணேல்லையே....... எங்கை போறது இங்கினேக்க தான் நிக்கும்....... வடிவாப் பார்!" என்று கூறி விட்டுச் செல்லம்மா நடந்தாள்.

"உவளுக்குக் கறுப்பியைக் காணேல்லை என்று வலு சந்தோஷம்.... பொஙிஞ்சு போவாள்........"

மீண்டும் மீண்டும் கூப்பிட்டுத் தேடிப் பார்த்தாள் பெத்தாச்சி. கறுப்பியைக் காணவில்லை.

'ஆராவது இருந்தாலும் எங்கையாவது விட்டுத் தேடிப் பார்க்கலாம்..... மூன்று பிள்ளையள் இருந்தும் என்ன பயன்? அனாதைப் போலக் கிடக்கிறன்....'

"எணோய்..... அக்கா......! எணோய்!" படலையடியில் நின்று யாரோ கூப்பிடுகின்றார்கள். குரலிலிருந்தே கூப்பிட்டவர் யார் என்பது பெத்தாச்சிக்கு விளங்கிவிட்டது.

"யார்..... சுப்பரப்பாவே...? வா.... வா உன்னைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்......"

படலையைத் திறந்தபடி சுப்பரப்பா வந்தார். அறுபது வயது மதிக்கலாம். இடுப்பில் பழுப்பேறிய செம்மண் வேட்டியும் சால்வையும் முன் பக்கத் தலையில் முகம் பார்க்கலாம்.

"என்ன அக்கை, விஷயம்! அப்படி அவசரமாகத் தேடினனீ?.... கூப்பன் எடுக்க வேணுமே.......?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லையடா....." என்று பெத்தாச்சி அக்கை பெருமூச்சுவிட்டாள். "என்ரை கறுப்பியைக் காணேல்லை.... தேடிப்பார்த்திட்டன்..... இன்னும் மோங்கழுவி ஒரு சொட்டுத் தண்ணி குடிக்கவில்லை......"

"என்ன..... கறுப்பியை..... காணவில்லையோ......?"

"ஓமோம்.... கையுக்கை நிண்டது........"

"ஆரோ..... 'இண்டைக்குச் சனிக்கிழமையல்லே...... சட்டிக்கை வைச்சிட்டினம்....."

"ஆங்......" என்று பெத்தாச்சி வீரிட்டாள்: "இருக்கும் அப்படியும் இருக்கும். கள்ளக் கோழி பிடிச்சுத் தின்னியள் அயலுக்கை இருக்குதுகள்......! உவளவை நல்லா இருப்பாளவையே......! என்ரை கோழியைப் பிடிச்சவளவை குடிகெட்டுப் போவாளவை! கண்கெட்டுப் போவாளவை..... முழுக்குக்குப் பதமா, பல்லுக்கு ருசியாக் கள்ளக் கோழி தின்கிறவைன்ரை கழுத்துக்குக் கேடுவரும்...... முனியப்பரே, நீ தான் நீ தான் கேள்! என்ரை வயிறு பத்தி எரியுது...... நீ தான் கேள்! தோறையள்.... பொறுக்கியள்....! இண்டைக்கு உதுக்கு நான் ஒரு முடிவு கட்டாமல் விடப் போறதில்லை! இதைக் கட்டிக் கறுப்பியைத் திண்டவையின்ரை கழுத்தை நெரிவிக்காமல் விடப் போறதில்லை" என்று பெத்தாச்சி முற்றத்து மண்ணையள்ளிக் காற்றிலே தூவித் திட்டினாள். பெத்தாச்சி அக்கையின் நர்த்தனத்தைக் கண்ட சுப்பரப்பா அசந்து போனார்.

"அக்கை கத்தாதை.....! இஞ்சை வந்து திண்ணையிலை குந்து...... நான் சொல்லுறதை வடிவாக் கேள்".

"எட தம்பி, கறுப்பியைத் திண்ட வளவையை ஒருக்காக் கண்டுபிடிக்க வேணும்.... நீ வா, தளையாளிச் செல்லப்பாரிட்டை போய் மை போட்டுப் பார்க்க வேணும்...... அந்தாள் மையிலை பார்த்துச் சரியாச் சொல்லிவிடும்."

"உன்ரை ஆசையையும் ஏன் கெடுப்பான், பின்னை வா....." என்று சுப்பரப்பா புறப்பட்டார்.

தலையாளிச் செல்லப்பர் மை பார்ப்பதில் பிரசித்தி பெற்றவர். வெற்றிலையில் ஏதோ மையைத் தடவி விளக்கில் பிடித்து வெகு நேரம் பார்த்தார். அவருடைய முகத்தையே பெத்தாச்சி கவலையோடு பார்த்தாள்.

"ஏதாவது மையிலை தெரியுதே?"

ஆ..... இதோ ஒருமரம்....... என்ன மரம்.....?" என்று நிறுத்தினார். செல்லப்பா.

"முருங்கை மரம், அதிலை தான் கறுப்பி இரவிலை படுக்கிறது.....!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாள் பெத்தாச்சி.

"இதோ கோழி கீழே குதிக்கிறது. தென்புறமாகப் போகிறது..... ஒரு நாய் துரத்துகிறது......"

"கோதாரி விழுவான்ரை நாய்! உது கனகன்ரை நாய்தான்... அது தான் கோழியளைத் துரத்துறது....." என்று பெத்தாச்சி கூவினாள்.

"நாய் துரத்த....." என்று செல்லப்பர் தொடர்ந்தார்: "கோழி வேலிப் பொட்டுகளால் வேகமாக ஓடுது. ஒரு வேலி.... இரண்டு வேலி...... இதோ மூன்று நாலு..... ஐந்து ஆறு ஆ இதோ ஒருவீடு....... நலை வாசலிலை ஒரு கிழவி இருக்கிறா....."

"வடிவாப்பாருங்கோ வடிவாப் பாருங்கோ ஆரெண்டு தெரியுதே.....?" என்ற ஆவலோடு பெத்தாச்சி கேட்டாள்.

"சீ தெரியவில்லை...... அடுப்படிக்குள் கோழி பயந்து நுழையுது...... 'லபக்'....... அடுப்படிக்குள் இருந்த ஆரோ கோழியைப் பிடிக்கினம். அவ்வளவு தான்" என்றார், செல்லப்பர்.

"ஆரெண்டு தெரியேல்லையே?" சுப்பரப்பா.

"தெரியேல்லை. அங்காலை மை இருண்டு போச்சுது! தெற்குப் பக்கமா யாரோ பிடிச்சிருக்கினம்."

"இவ்வளவும் போதும் நான் ஆரெண்டு கண்டு பிடிக்கிறன்...... நீ கிளம்பு அக்கை....!" என்றார் சுப்பரப்பா.

செல்லப்பருக்கு மை பார்த்த உழைப்பு இரண்டு ரூபா.

வீடு திரும்பும் வழியில் சுப்ரப்பா கேட்டார்.

"அக்கை உனக்கு ஆரிலையாவது சந்தேகம் இருக்கே..... உன்ரை வீட்டிற்குத் தெற்காலை ஒழுங்கை. ஒழுங்கையிலை முதல் வீடு கனகற்ரை என்ன?"

"கனகற்ரை நாய் தான் துரத்தினதாம்!"

"நாய் துரத்த அது வேலிப் பொட்டுக்குள்ளாலை ஓடினது. அடுத்த வீடு நம்மடை மாஸ்ரர் வீடு."

"அதுகள் நல்ல சனம். அண்டைக்கும் அவையின்ரை வைக்கல் பட்டறையிலை கறுப்பி முட்டையிட கொண்டு வந்து தந்தவை! எனக்கு உவள் செல்லம்மாவிலும் சீனியற்ரை தங்காத்தையிலும் தான் சந்தேகம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவள் தையல் முத்துவும் கள்ளக் கோழி பிடிக்கிறவள்.....! நீ ஒருக்கா இந்த வீடுகளில் ஒரு நோட்டம் பார்....! தம்பி சுப்பரப்பா, நீ மட்டும் ஆர் கறுப்பியைப் பிடிச்சது எண்ட கண்டு பிடிச்சியெண்டால்.....!"

"எனக்கு விளங்கும், அக்கை! ஒரு போத்திலுக்கு நீ வழி பண்ணுவாய்...... நீ கவலைப்படாதை, எப்படியாவது இண்டைக்கு நான் கண்டு பிடிச்சிடுவன். உது பெரிய வேலையே......? சிம்பிள்...." என்றார் சுப்பரப்பா.

சுப்பரப்பா புறப்பட்டு விட்டார். இவரைப் 'பெட்டைச் சுப்பரப்பா' என்று ஊரார் கூறுவார்கள். ஒரு முறை ஒருவன் சுப்பரப்பாவை அடித்து நொறுக்குவதற்காகப் பொல்லைப் பிடித்தபடி துரத்தி வந்தான். பயந்துபோன சுப்பரப்பா ஓட்டமாய் ஓடி தன் வீட்டிற்குள் ஒழிந்து கொண்டாராம். அதில் இருந்து இந்தப் பெயர். அவருக்கு எல்லா விஷயத்திலும் தலையிடுவார். எல்லாருக்கும் 'அவர் போத்திலு'க்காக உதவுவார்.

கறுப்பியை எப்படியாவது கண்டு பிடிப்பது என்று சுப்பரப்பா புறப்பட்டு விட்டார். கோழியைப் பிடித்தவர்கள் இப்போது பதம் பார்த்திருப்பார்கள் என்பதும் அவருக்குத் தெரியும். யார் பிடித்தார்கள் என்று தெரிந்தால் போதும்.

கனகரின் வீட்டு வேலிக்கு மேலாக எட்டிப் பார்த்தார், சுப்பரப்பர். 'உங்கைதான் கறுப்பியை நாய் துரத்தினது'.

"கோதாரியிலை போவான்...... ஆரடா அது? வேலிக்கு மேலாலை எட்டிப் பார்க்கிறது? வீடு வாசலிலை பெண் புரசுகள் இருக்க முடியாமல் இருக்குது" என்று கனகரின் தாய்க் கிழவி கூச்சல் போட்டாள்: "நான் உவனுக்குப் படிச்சுப் படிச்சுச் சொன்னனான். கேட்டானே? வேலியளை நல்லா உயர்த்தியும் கீழை நல்லாப் பதிச்சும் அடை எண்டு......! கேட்டானே? உதார் உவன்..... திரும்பவம் எட்டிப் பார்க்கிறது......?"

"அது நான், அக்கை.....!"

"நான் எண்டால் ஆர்?"

"சுப்பரப்பா! நாய் படுத்திருக்கோ எண்டு எட்டிப் பார்த்தனான்.!"

"நீயே! வா.... இஞ்சை நாயில்லை. வலு காவலா நிண்டது..... அது நிக்குமட்டும் ஒருத்தர் வளவுக்கை வரமாட்டினம்....." என்றாள் கனகரின் தாய்க்கிழவி.

"ஓமோம்..... நாய் வீட்டிற்குத் தேவைதான்.....! கள்ளர் காடையர் இப்ப அதிகம். கண்டியோ? உங்கடை நாய் ஒரு கோழியைக் கூட வரவிடாது என்ன?" என்று கேட்டார். சுப்பரப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓமோம்..! எனக்குக் கோழியளைப் பிடிக்காது! திண்ணை முத்தத்தை அசிங்கப்படுத்திப் போடுங்கள்...."

"இப்ப உங்கடை நாய் எங்கை?"

"அதை தான் மூன்று நாளைக்கு முதல், போன புதன் கிழமை குறுக்காலை போவான் ஒருத்தன் காராலை அடிச்சுப் போட்டான்......."

"குறுக்காலை போயிருக்கும்......! போன புதன்கிழமையே? அப்போ கறுப்பியைத் துரத்தினது ஆற்றை நாய்....?"

"ஆரைத் துரத்தினது.....?" என்று கேட்டாள் கனகரின் தாய்.

"ஆச்சி, இஞ்சை ஒருக்கா வாணை....." என்று பேர்த்தி ஒருத்தி கிழவியைக் கூப்பிட்டாள்.

"அப்ப நான் வாறன்" அக்கை என்றார் சுப்பரப்பா.

'கறுப்பியைத் துரத்தினது ஆற்றை நாய் - வேற நாயா இருக்கும்..... எதுக்கும் சீனியற்றை தங்காத்தை வீட்டை ஒருக்காப் பாப்பம்.....!'

தங்கம்மா தான் தங்காத்தையாக மாறிவிட்டது!

"என்னடா, சுப்பரப்பா, கனகாலமா இந்தப் பக்கம் காணேல்லை......? இண்டைக்கு மழைதான் வரப்போகுது...... மத்தியான நேரத்திலை வந்திருக்கிறாய்.......?" என்று திண்ணையில் இருந்த படி தங்காத்தை சுப்பரப்பாவை வர வேற்றாள். திண்ணையின் கீழ், முருக்க மரத்தடியில் படுத்திருந்த பெட்டை நாயொன்று தலையை நிமிர்த்தி இவரைப் பார்த்து உறுமியது.

'சீ' என்றார் சுப்பரப்பா: "அக்கை....... எங்கை நேரம்? இண்டைக்குச் சனிக்கிழமை அது தான் இப்படி வந்தன்.......! போயா பிறிப்போயாவிலை நாளும் தெரியாது, கிழமையும் தெரியாது!" என்றபடி திண்ணையில் இருந்தார். இருந்தவருடைய கண்களில் திண்ணையின் மூளையில் ஒரு கடகம் மெதுவாக அசைவது தெரிந்தது.

"உதென்னணை அக்கா! கடகம் அசையுது.......? கோழியை அடைச்சு வைச்சிருக்கிறியளே?...."

"ஓமோம்.......! முட்டையிடக் கேரித்திரிஞ்சுது.... பிடிச்சு அடைச்சு வைச்சிருக்கிறன்......!"

"உது கறுப்புக் கோழியோ, வெள்ளைக் கோழியோ?" என்று சுப்பரப்பா கேட்டார். பெத்தாச்சியின் கறுப்பி இங்கை தான் இருக்க வேண்டும் என்று மனம் கூறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் கேட்கிறாய்? விடுப்பு விண்ணாணமா.......?" என்றான் தங்காத்தை.

"உப்ப இந்த லெக்கோன் கோழி முட்டைகளைத் தானே கடைகளிலை விக்கினம். வெள்ளைக் கோழி முட்டை சத்தில்லை! கறுப்புக் கோழி முட்டை நல்ல சத்தாம்........" என்றார் சுப்பரப்பர்.

தங்காத்தை எதுவும் பேசவில்லை. சுப்பரப்பாவிற்கு மகிழ்ச்சி தாங்க வில்லை. கிழவி முழிக்கிற முழியிலை தெரியுது விஷயம்! கடகத்துக்கை கறுப்பிதான்...... திறக்கு மட்டும் இருந்து பார்க்கத்தான் வேணும்......!

பல விஷயங்களையும் பேசித்தீர்த்தார்கள். சோமற்றை பெட்டை ஓடின கதை...... மணியம் கத்தியாலை தம்பிநாதனைக் குத்தின கதை........ பார்வதியக்கை பொலிடோல் குடிச்ச கதை ..... உம்..... கோழி முட்டையிட்டு விட்டுக் கொக்கரிப்பதாகத் தெரியவில்லை! இறுதியில் -

"அடைக்கோழியே? இன்னமும் முட்டையிடாமல் கிடக்குது........?" என்று கேட்டார் சுப்பரப்பா.

"சீச்சி....." என்றாள், தங்காத்தை.

வெகு நேரத்துக்குப் பிறகு கோழி கொக்கரித்தது.

'அறுவான் போகாமல் இருக்கிறான். உவன்ரை கண்பட்டால் முட்டையும் இடாது' என்று தங்காத்தை தனக்குள் எண்ணிக் கொண்டாள்.

"திறந்து விடனை......." என்றார் சுப்பரப்பா.

வேண்டா வெறுப்பாக எழுந்து போய்க் கடகத்தைத் திறந்தாள். கோழி கொக்கரித்தபடி முற்றத்தில் தாவியது. சுப்பரப்பா கோழியைப் பார்த்தார். பேயறைந்தவர் போலானார்.

அது ஒரு சிவப்புக் கோழி!

'தையல் முத்து அக்கை வீட்டை ஒருக்காப் போய்ப் பார்க்க வேண்டியது தான்' என்று முடிவு செய்தபடி, தையல் முத்து வீட்டிற்குள் சுப்பரப்பா நுழைந்தார்.

தலைவாசலில் தையல் முத்துவின் மகன் நடராசா, உடம்பெல்லாம் முழுக்கிற்காக எண்ணெய் வழிய வழிய வைத்துக் கொண்டு இருந்தான். வாங்கிற்குக் கீழே இரண்டு போத்தல் பனங்கள் மணம் வீசியபடி இருப்பதைச் சுப்பரப்பா பார்த்தார்.

"எங்கை, அம்மான்! உந்த வெயிலுக்கை வந்தியள்" என்றான் நடராசா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது கேள்வி இந்த நேரத்தில் அவர் அங்கு வந்ததை விரும்ப வில்லை என்பதை தெளிவு படுத்தியது.

"சும்மாதான்!.... இண்டைக்கு என்ன முழுக்கே? இறைச்சி பங்கு எடுத்தனியே?........ செல்லன் ஆடொன்று அடிச்சவன்...." என்று கூறியபடி வாங்கில் சுப்பரப்பா அமர்ந்தார். அடுக்களையில் தையல்முத்து பெருஞ்சீரக வாசனையோடு இறைச்சி சமைப்பது மூக்கிலேறி, நாக்கில் சுரந்தது.

"இல்லை அம்மான கோழி ஒன்று காய்ச்சினனான்' என்றான் நடராசா.

"உதார், சுப்பரப்பாவே? கோழி ஒண்டு ஒரு மாதிரி தூங்கிச்சுது. பின்னை மண்ணுக்கை ஏன் வைப்பான் எண்டு சமைச்சனாங்கள்." என்றபடி தையல் முத்து வெளியே வந்தாள். 'கெதியில உவரை அனுப்பவேணும்'. என்று உள்மனம் கூறுகிறது.

'நாயாலை துரத்தின கோழி சோர்ந்து தூங்கித்தான் நிக்கும்.......! உவையள் கறுப்பியைத் தான் முடிச்சிருக்கினம். தையல் அக்கை கள்ளக் கோழி பிடிச்சு மோனுக்கு முழுக்குக் காய்ச்சுறா........! உதை எப்படி அறிகிறது?.....' என்று எண்ணினார்.

"உதென்ன லெக்கோன் கோழியே?,......"

"இல்லை.....! லெக்கோன் கோழியிலை எங்கை இறைச்சி இருக்கும்?" என்றான் நடராசா.

கிணற்றடியில் காகங்கள் கரைகின்ற சத்தம் கேட்டது. பல காகங்கள் கூட்டமாகக் கரைந்தன.

"நீ கோழியை உரிச்சுப் போட்டு வடிவாத் தாக்கவில்லைப் போல இருக்குது..... கோதாரி நாயள் கிளறி இருக்கும்! அது தான் செட்டையளைப் பாத்திட்டு காகங்கள் சத்தம் போடுதுகள்..... முந்தநாள் பூனை விழுந்து இறைச்ச கிணறு! குடலைக் கிடலைக் காகங்கள் கிணற்றிலை போட்டிடும்!" என்றாள் தையல் முத்து.

நடராசா எழுந்தான்.

"நீ இரு தம்பி! எண்ணெய் வச்சிட்டு மண்கொத்தக் கூடாது....... அக்கை எங்கை மண்வெட்டி..... நான் ஆழமாத் தாட்டு விடுறன்." என்றபடி சுப்பரப்பா எழுந்தார்.

"நீ பாவம்....." என்றாள். அக்கை.

சுப்பரப்பா கிணற்றடிக்கு மண்வெட்டியுடன் போனார். அவர் . முகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியால் மலர்ந்தது. கறுத்தக் கோழி ஒன்றின் செட்டைகள் கிடங்கு ஒன்றைச் சுற்றிக் கிடந்தன. இவரைக் கண்ட நாய் ஒன்று ஓட, காகங்கள் கரைந்தன.

'அக்கை..... அக்கை....... இரு. இரு..... கோழி இறைச்சி தின்னுறதுக்கை மாணிக்கப் பெத்தாச்சியை இங்கை அனுப்பி வைக்கிறன்.....!'

விரைந்து, வேர்த்து விறு விறுக்க மாணிக்கப் பெத்தாச்சியின் வீட்டிற்கு ஓடி வந்தார் சுப்பரப்பா.

"அக்கை கறுப்பியைப் பிடிச்சவையைக் கண்டுபிடிச்சிட்டன்!"

"என்ன விஷர் கதை பேசுறாய்?" என்றாள் பெத்தாச்சி: "மாஸ்ரர் வீட்டு வைக்கல் பட்டறையில் முட்டையிட்டுது என்று மாஸ்ரர் பொடியன் கோழியையும் முட்டையையும் கொண்டுவந்து தந்திட்டுப் போறான் உங்கை பார். உந்தச் சீமைக்கிளுவயிலை கறுப்பியைக் கட்டி வைச்சிருக்கிறன்."

சுப்பரப்பா சீமைக்கிளுவை மரத்தைப் பார்த்தார். கறுப்பி நிலத்தைக் கிளறி எதையோ கொத்தித் தின்றபடி நின்றது.

சுப்பரப்பாவின் கண்கள் இருள ஆயிரம் மின்னல்கள் மின்னின.

"போயிடாதை இரு...... களைச்சுப் போனாய் தேத்தண்ணி கொண்டு வாறன்." என்றாள் பெத்தாச்சி.

அஞ்சலி
நவம்பர் - 1971



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மார்க்கண்டேயர்

அதிகாலையின் இருளகலாப் பனிப்பொழுதின் அமைதியைக் கணப்பொழுதில் கலைக்குமாப் போல எழுந்த சத்தம் என்னைப் பரபரப்படைய வைக்கின்றது. திடுக்கிட்டு விழித்தெழுந்த நான் கட்டிலில் அமர்ந்த நிலையில் யன்னலூடாகப் பார்க்கிறபோது வெளியுலகின் அமைதியை நீண்ட காலத்திற்குப் பிறகு எழுந்த சத்தம் குலைத்துவிட்டமையை பலவற்றிலும் அவதானிக்க முடிகிறது. வேப்பமரத்தில் அமர்ந்திருந்த காகங்கள் அயர்வு நீங்கி விழிப்புறா இருளில் படபடவென மேலெழுவது மங்கிய இருளை இருள் துளாவுவது போல இருக்கிறது. முற்றத்தில் படுத்திருந்த நாய் நீண்டகாலம் பழக்கமில்லாது போன அச்சத்தை ஏற்காத நிலையில் குரையொலி எழுப்பி ஆட்சேபிக்கிறது.

நீண்ட நேரம் அவ்வாறே அமர்ந்திருந்தேன். அடிவயிற்றிலிருந்து திரண்ட பய அலை அடர் புகையாக உச்சியை நோக்கி மின்னாக எழுகிறது. மறந்திருந்த, மறைக்கப் பட்டிருந்த அவல நிகழ்ச்சிகள் இருளைக் கீறும் மின்மினியாக அகப்பரப்பில் எழுந்து வியாபிக்கின்றன. சகதியில் சடுதியாக விழுந்து கல்லிலிருந்த நினைவுச் சேறு உடலெங்கும் தெறித்தது போன்ற உணர்வு.

யன்னலுக்கு வெளியே இருள் மெல்ல நீங்கி விடியலுக்கான மங்கல் ஒளி படரத் தொடங்கியபோது மீண்டும் அச்சத்தம் மிக அருகில் கேட்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மனைவி திடுக்கிட்டு எழுந்து கொள்கிறாள். அவள் உடல் படபடப்பை நான் பரிதாபமாகப் பார்க்கிறேன். பதினெட்டு வருடங்களாக அனுபவித்து வரும் துயரம் தான். அவளுக்குள் துருத்தி இயங்குவது போல பெருமூச்சுக்கள் வெளிவருகின்றன. அவள் பார்வையில் மரணக் களை படர்கிறது.

"கிட்டடியில விழுந்து வெடிச்சிருக்குது போல...."

"தூரந்தான். நாவற் குழிப்பக்கமாகத் தான் இருக்க வேண்டும். பனிக்குளிரில் சத்தம் கிட்டப் போலத் தான் கேக்கும். கோதாரியில போவான்கள். மீண்டும் சண்டையைத் துவக்கி விட்டான்கள். நிம்மதியாக இருக்க விடான்கள்......."

"ஆரைத்திட்டிறியள்?" அவள் தலையை மூடிப் போர்த்திருந்த போர்வையை விலத்தியபடி கேட்டபோது அந்த விழிகளை நேரடியாகச் சந்திக்க நான் விரும்பவில்லை. ஓராயிரம் அர்த்தங்களுடன் செய்திகள் அவள் விழிகளுள், சேற்றுக் குளத்தில் புதையுண்ட கற்களாகக் கிடக்கின்றன.

அவளால் பேச முடியவில்லை. ஏதோ தொடர்ந்து கூற முயன்றும் முடியாதுபோக தலையையும் கால்களையும் ஓட்டிற்குள் இழுத்துக் கொண்ட ஆமையாகத் தன்னைப் பெட்சீட்டால் போர்த்துக் கொண்டாள்.

சற்று நேரக்கழிவில், "அவர்களைத் திட்டாதையுங்கோ..... எங்கட புள்ளையள்..." பொல பொலவென விழிகளிலிருந்து வானத்தாரையாக துளிகள் இறங்கின: "அவன் அங்குள்ளான். நான் பத்துமாதம் சுமந்து பெத்த என் பிள்ளை அங்குள்ளான்".

அவள் விம்மியபடி தன் அடிவயிற்றில் ஓங்கி அறைந்து கொண்டாள்.

விம்மல் பெருங்குரலாக வெடித்தபோது அடுத்த அறையில் படுத்திருந்த பெண்பிள்ளைகள் தாயாரின் முனகலுக்கு ஓடி வந்து ஒட்டிக் கொள்ளும் குட்டிகளாயினர். தாயருகில் கவலையோடு அமர்ந்து கொண்டனர்.

"அழாதை அம்மா......"

அவள் அழுவதற்கான காரணம் அந்த ஒன்று தான் என்பதை அவர்கள் நான்கு வருடங்களாக அறிவார்கள். பிள்ளைகள் என்னை நிமிர்ந்து பார்த்த பார்வையில் நான் சருகாகக் கருகிப் போனேன்.

"அப்பா, உங்களுக்கு எதைக் கதைப்பதென்றில்லை." மீண்டும் ஷெல் குத்தப்பட்டு வீரிட்டுப் பாய்கின்றது. எவர் தலைமீதோ? எந்தக் குடிமனை மீதோ? செத்தவர் எத்தனை பேர்? ஊனமானோர் எத்தனை நூறு? சிதறுண்டவர் எத்தனை பேர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

நெஞ்சம் கனக்கிறது, ஏதோ இறுக்கமாக அழுத்துவது போல உணர்வு.

"பாபு, என் மகனே........"

தாய்க்கும் சகோதரங்களுக்கும் தானா அந்தத் துயரத் தழும்புகள் மறையாதுள்ளன. நான் அவனின் அப்பன். பதினெட்டு வயது வரை கண்ணும் கருத்துமாகச் சீராட்டிப் பேணிப் பாதுகாத்து வளர்த்தவன். அவனுடைய பிரிவு என் நெஞ்சின் அறையுள் ரணமாகி ஓயாது வலியெடுப்பதை எவர் உணர்வர். அவர்களைப் போல என் துயரத்தை விழிநீரால் தீர்த்துவிடமுடியாது. துயரவெப்பத்தில் ஆவியாகத்தான் வெளிவிடமுடியும்.

மெதுவாக நடந்து வெளிக்கதவை நெருங்கும் போது, கொய்யா மரத்தில் சரசரப்பெழுகிறது. அணில் ஒன்று 'அவக் அவக்'கென்று அலறித் துடிக்கிறது. திரும்பிப் பார்த்தபோது வளவிற்குள் சுதந்திரமாகத் தரையில் ஊர்ந்து திரியும் சாரைப் பாம்பு, மெதுவாகக் கொய்யா மரக் கிளையில் ஏறுவதைக் கண்டேன். அதன் உடல் மஞ்சள் நிறமும் கொய்யா மரக் கிளையின் நிறமும் இலகுவில் வேறுபாடு காணமுடியாதிருந்தன. கொய்யா மரத்தில் சாரை மெதுவாக ஊர்ந்தேறுவதைக்காண முதலில் வியப்பும், மரத்தின் உச்சாரக் கொப்பரில் பாதுகாப்பெனக் கருதி அணில் கட்டி வைத்திருந்த தும்புக் கூட்டிற்குள் தலையை நுழைத்து குஞ்சொன்றைக் கவ்வி விழுங்குவதைக் காணக் கவலையும் ஏற்பட்டன. இந்தப் பரிதாப அவலத்தைக் கண்ட தாய் அணில் கூச்சலிட்டு அங்குமிங்குமாக தாவித்திரிந்தது. என்னால் பொறுக்க முடியாது போகவே கொக்கத் தடியால் மரத்தில் தட்டிச் சாரையைக் கலைத்தேன். அது சரசரவெனக் கிளைகளில் சரிந்து பொத்தென நிலத்தில் விழுந்து தரையிலூர்ந்து வேலிக்குள் நுழைந்து ஓடி மறைகிறது.

தாய் அணிலின் துயரம் குறைந்து விடவில்லை.

யாரில் பிழை சொல்வது? இயற்கையின் பிரபஞ்ச இரகசியம். உணவுச் சங்கிலியை இடை நடுவில் அறுக்க நாம் யார்? மரணம் என்பது உயிர் வாழ்தலிற்கான சங்கிலித் தொடர் என்றால் அது தவிர்க்க முடியாத இயற்கை நியதி தான். ஆனால் இந்த மண்ணில் மரணம் என்பது தொடர்ச்சியாகப் பெரும் கொள்ளை நோயாகக் காரண காரியமின்றிக் குருத்திலிருந்து கனிந்தபழம் வரை, ஆயுதம் ஏந்தியவர்களையும் ஏந்தாதவர்களையும் ஒருங்கே காவு கொள்கின்றதே? இது எவ்வகையில் நியதியாகும்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொதி நீர்க் கொப்பளங்களாக உள்ளத்தில் நினைவுக் குமிழ்கள் எழுகின்றன. இந்த நாட்டிற்குப் பிடித்த சாபக் கேடு என்ன? இரு தசாப்தங்களாகத் தொடர்கின்ற யுத்தத்தினால் எத்தனை ஆயிரக்கணக்கான உயிர்கள் அவமாகப் பலியாகிவிட்டன. வீட்டில், வீதியில், சந்தியில், ஒழுங்கையில், ஆஸ்பத்திரியில், காட்டில், நின்றபடி, இருந்தபடி, உறங்கியபடி, ஓடியபடி....... எங்கும் மரணதேவனின் பாசக் கயிறுகள் ஈவிரக்கமின்றி விழுந்துவிட்டன. யுத்த அரக்கனின் இரத்தம் தோய்ந்த கரங்கள் யாழ்ப்பாண மண்ணைத் தழுவிக் கொள்ளத் துடித்து நிற்கின்றன. மீண்டும் ஷெல்கள் விழத் தொடங்கிவிட்டன. நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் ஷெல்களும் துப்பாக்கிகளும் உயிர்த்தெழுந்துவிட்டன.

தொண்ணூற்றைந்துகளுக்கு முன் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இராணுவ ஏவலால் விடுபட்ட ஷெல்களும் விமான வீச்சால் தரையில் சரிந்த குண்டுகளும் பலிகொள்ளும் அரக்கர்களாக இருந்தன. ஒரு நாள் எல்லாவற்றையும் ஒருங்கே இழந்து கொட்டும் மழையில் உயிர்களைக் காப்பாற்றும் ஒரேயொரு நினைவோடு ஆயிரமாயிரமாண்டுகளாக எந்தையும் தாயும் குலாவி மகிழ்ந்த மண்ணைத் துறந்து, வாழ்ந்து செழித்த மனைகளை விட்டு இரவோடிரவாக ஐந்து இலட்சம் மக்களும் அகதிகளாக்கப் பட்டுத் தென்மராட்சிக்கு ஓடிப் போனார்கள். தொண்ணூற்றாறுகளில் யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றியிருந்த வேளையில் எனக்கு எதுவும் வேண்டாம். நமது முன்னோர் வாழ்ந்த வளவும் வீடும் சூழலும் தாம் வேண்டுமென்று, தடுக்கத் தடுக்கத் திரும்பி வந்தார்கள். வீதிகள் தோறும் இராணுவ சென்றிகளும் ஊர்கள் தோறும் இராணுவ முகாம்களும் அவர்களை வரவேற்றன. அடக்கு முறைகளுக்குள் வாழப் பழகிக் கொண்ட வேளையில் இன்று யுத்தம் மீண்டும் தன் கோரக் கரங்களைப் பரப்பி விரித்து விட்டது.

மீண்டும் மக்கள் ஓடத் தொடங்கி விட்டார்கள்.

அவர்களின் ஓட்டம் எப்பொழுது தான் நிற்குமோ?

இப்பொழுது யாழ்ப்பணம் அசோகவனமாகிவிட்டது. இராவணர்கள் இருக்கிறார்கள் என்று தெரிந்தும் சீதைகள் வலிய வந்து சிறைப்பட்டு விட்டார்கள். நாளாந்தம் ஆங்காங்கு தெரிந்தும் தெரியாமலும் இராவணர்கள் சீதைகளைக் காவு கொள்கிறார்கள். ஆயிரக்கணக்கானோர் சென்றவிடம் தெரியவில்லை. புதைகுழிகளைத் தேடித் தேடிச் சொந்தங்கள் களைத்துவிட்டன. இன்று ஷெல் தூதுவர்கள் வரத்தொடங்கிவிட்டனர். இராமர்கள் அசோகவனத்தை மீட்டுவிடும் பிரயாசையுடன் அங்கு சிறையிருக்கும் சீதைகளை மறந்து விட்டார்களோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவப்படும் ஷெல் பாணங்களுக்கு இராவணர்களையும் சீதைகளையும் வேறுபடுத்தி இனங்காணும் திறன் இருக்கப் போவதில்லை.

வெளிப்படலை வரை நடந்து வந்து விடுகிறேன்.

தனங்கிளப்புப் பக்கமாக மீண்டும் ஷெல் விழும் ஒலி. இந்த அதிகாலைப் பனிக் குளிரில் பூநகரிக் கரையிலிருந்து அவன் தான் இதனை ஏவுகிறானோ? மனம் கிலேசப்பட்டு நடுங்குகிறது.

அந்த மாபெரும் இடப் பெயர்வு நிகழ்ந்திருக்காவிட்டால் அவனை நான் இழந்திருக்க நேர்ந்திருக்காது. அப்படிச் சொல்ல முடியுமா? யாழ்ப்பாணச் சாமி சொன்னது போல எப்பவோ முடிந்த காரியமோ? இடம் பெயர்ந்து கடின சீவியத்தை அனுபவித்துவிட்டுத் திரும்பியபோது பாபு எங்களுடன் வரவில்லை. ஒரு கடிதத்தை எழுதி வைத்துவிட்டு காணாமற் போயினான். வன்னியில் கண்டதாகச் சிலர் சொன்னார்கள். கரத்தில் துப்பாக்கியுடன் சென்றதைக் கண்டதாகச் சிலர் சொன்னார்கள். வீடே இடிந்து போனது.

பாபுவின் முடிவிலிருக்கின்ற சரி, பிழை, நியாய, அநியாயங்களை மீறிய அறிவு நிலை சாரா உணர்வு பூர்வமான முடிவு எங்களைக் கலங்க வைத்தது. வீரவணக்கப் போஸ்டர்கள் இன்னமும் யாழ்ப்பாணத் தெருக்களில் மறைந்தும் மறையாத எச்சங்களாகத் தெரிகின்றன. அவர்களில் பாபுவும் ஒருவனாகி விடுவான் என்ற நினைவு சர்வ அங்கத்தையும் நடுநடுங்க வைத்தது. கிணற்றில் தவறி விழுந்து நீர் ஊறிவிட்ட கோழிக் குஞ்சாக என்னுடல் சில்லிடுகின்றது.

''பாபு.....''

அங்கிருந்து வரும் ஒவ்வொரு ஷெல்லிற்கும் பதிலாக இப்பக்கமிருந்து ஒன்றன் பின்னொன்றாக வர்ச்சிக்கப் படுகின்ற ஷெல்லின் இலக்கு பாபுவாக ஏன் நினைவு வருகின்றது? கடவுளே இந்த மனிதர்களுக்கு என்ன பிடித்துவிட்டது?

''அப்பா..... கோப்பி குடிக்க வாங்கோ....'' என்று வித்யா குரல் தருகிறாள். நான் திரும்பி வருகிறேன்.

கோப்பியைத் தரும் போது, ''சொறி அப்பா..... நாங்கள் அப்படிப் பேசியிருக்கக் கூடாது. நாங்க இந்த மண்ணில சந்தோஷமாகவா இருக்கிறம்?''

நான் அவளை நிமிர்ந்து பார்க்கிறேன். என் பார்வையின் அர்த்தங்கள் அவளை வெற்றி கொள்ள முடியாதென்பது எனக்குத் தெரியும். இன்றைய இளம் பிள்ளைகளின் இதயங்கள் கண்முன்னால் நிகழ்ந்தேறிப்போன துயரச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவங்களால் வடுவேறி அழியாது நிலைத்துவிட்டன. அவர்களுக்கு இப்பிரச்சினைகளின் ஆணிவேர் தெரிவதில்லை.

"எங்கள் பெரியம்மாவும் ஐயாவும் அவமாகச் செத்தார்கள்". என்றாள் ஒருநாள் வித்யா.

"ஏன் செத்தார்கள்?"

"விமானக் குண்டு வீச்சினால் செத்தார்கள்."

"ஏன் குண்டு வீசினார்கள்.?"

அவள் என்னை ஆழமாக ஊடுருவினாள். விழிகள் என்னைச் சுட்டெரித்தன. அத்துடன் முகத்தில் தன்னையுமறியாது என் பேச்சினால் ஏற்பட்ட அருவருப்பு உணர்ச்சியையும் காட்டினாள்.

"பொடியள் ஆயுதம் எடுத்ததால் என்கிறியளா?"

அவள் வினாவிற்கு என்னிடம் பதிலில்லை. ஒவ்வொருவரும் தம் பக்கம் நியாயங்களை வைத்திருக்கின்றனர். இந்த மண்ணில் சண்டை எப்படியோ ஏற்பட்டுவிட்டதென்பதே யதார்த்தம். ஏன் யாரால் எதற்காக தொடங்கியதென்பது புதைகுழிகளைத் தோண்டுவதற்குச் சமானம். நிசர்சனம் யாதெனில் இந்த மண்ணிற்குச் சமாதானம் தேவை.

# 3

இரவு படுக்கைக்குச் செல்லும் போது பதினொரு மணிக்கு மேலாகிவிட்டது. அதிகாலை தொடங்கிய ஷெல் சத்தங்கள் இடையிடையே தொடர்ந்த வண்ணம் இருக்கிறது. ஒவ்வொரு ஷெல் சத்தமும் எழும்போது என் மனைவி கலக்கத்துடன் என்னை ஏறிட்டுப் பார்ப்பாள். இங்கிருந்து எதிர் ஷெல் ஏவப்படும் போது அவள் முகத்தில் மரணக் களை அப்படியே படிந்திருக்கின்றது.

"பொடியள் எப்படியும் வந்திடுவான்கள்......"

ஒவ்வொருவரும் தத்தம் மனநிலைப்படி - இதற்குப் பதில் கூறிக் கொண்டார்கள். வாதப் பிரதிவாதங்கள் மலிந்து கிடந்தன.

"மண்ணெண்ணெய் இருநூறு ரூபாவிற்குப் போய்விடும்...."

"மா ஐம்பதாகிவிடும்......."

"பொருட்களுக்குத் தட்டுப்பாடு வந்திடும்......"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியொண்டும் நடக்காது..... அது இலேசான காரியமல்ல....."

ஆஸ்பத்திரியில் ஷெல்பட்டுச் சிலர் சேர்க்கப்பட்டிருந்தார்கள். கரையோர மக்கள் இடம் பெயரத் தொடங்கியிருப்பதாகப் பலர் கூறிக் கொண்டனர். சில பாடசாலைகளில் அகதிகள் நிரம்பி விட்டதாகவும் தகவல். இவையொன்றையும் கிரகிக்கும் நிலையில் என் மனைவியில்லை. அவள் இதயத்தில் பயமும் கவலையும் பூதாகரமாக, மழை இருளாகக் கவிந்து கிடந்தது. அந்த இருளுள் அப்படியே அமிழ்ந்துவிடுவது போல அவள் மௌனித்து அழுதாள்.

"அப்படி எதுவும் நடக்காது...."

பாபு இப்பொழுது வன்னியில் என்ன செய்து கொண்டிருப்பான்? சண்டை நடக்குமிடத்தில் நிற்பானோ? பதினெட்டு வயதில் காணாமற் போனவன் இப்பொழுது இருபத்தி மூன்று வயதாகியிருக்கும். நான்காண்டுகளாக நாம் எவரும் அவனைக் கண்டதில்லை. அவன் கடிதங்களும் எழுதுவதில்லை. அக்கடிதங்கள் மூலம் யாழ்ப்பாணத்தில் இருக்கும் எங்களுக்கு ஏதாவது பிரச்சினை வந்துவிட்டால் என்ன செய்வதென்ற பயம். அவன் எதற்கும் பயப்படுபவனல்லன். முன்னெச்சரிக்கையாக இருக்கும். இராமர்களைக் காட்டிற்கு அனுப்பிவிட்டு இங்கு எத்தனை தாய்மார் தவிக்கின்றனர். அவன் காணாமற் போனபோது முதலில் கவலைப்பட்ட நான், "என்னத்திற்குப் போனவன். அவன் பிள்ளையில்லை. இன்றோடு தலை முழுகி விட்டன்." என்று சத்தமிட்டேன். நாளாக நாளாக அவன் நினைவு சேலை நுனியில் பற்றிய சிறு நெருப்பாகப் பரவி என்னை முழுமையாக எரிக்கத் தொடங்கிவிட்டது. சிலவேளைகளில் எனக்குக் கொள்ளியிடக் கூட அவனில்லாமற் போய்விடுவான் என்ற சுயநலம் எண்ணவைத்தது. அருமையாகப் பிறந்த மகன்: 'பாபு, ஏன் இப்படி நடந்துகொண்டாய்?'

"அப்பா, லைற்றை நூத்துவிட்டுப் படுங்கோ....." பக்கத்து அறையிலிருந்து வித்யா குரல் தருகிறாள். அவளும் இன்னமும் உறங்கவில்லை. அவளையும் எப்படி உறக்கம் தழுவும். எனக்கும் மனைவிக்கும் பாபு என்ற ஒருத்தன் பற்றிய கவலை மட்டும் தான். அவளுக்கு அப்படியல்ல.

"மாதவன்....."

மாதவனுக்கும் வித்தியாவிற்கும் கலியாண எழுத்திற்கு ஆயத்தங்கள் நடந்து கொண்டிருக்கும் போது அந்தப் பேரிடி வந்தது. "இருபத்திநான்கு மணி நேரத்திற்குள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிவிடுங்கள். இராணுவம் கோப்பாயைக் கடந்து விட்டது" என்ற அறிவித்தல் பிடரியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறைய அவர்கள் அனைவரும் உயிர்களைக் காத்துக் கொண்டு நாவற்குழிப் பாலத்தைக் கடந்தார்கள். சன சமுத்திரம் வீதியில் அலைமோதிப் பதற்றத்துடன் இடம் பெயர்ந்தது. ஐந்து இலட்சம் மக்கள். ஒருவர் இருவரல்லர்.

மாதவன் எங்களுக்குத் தூரத்து உறவினன் தான். யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றியபோது, தென்மராட்சியிலிருந்து அணை உடைத்த வெள்ளமாக மக்கள் திரும்பினர். மாதவனின் குடும்பத்தினர் யாழ்ப்பாணம் வர மறுத்துவிட்டனர்.

"நாங்க வரேல்ல..... இராணுவத்துடன் இருக்கேலாது. என்ர குமருகளைப் பாதுகாக்க வேணும்....... நாங்க கிளிநொச்சிக்குப் போறம். நீங்களும் வாருங்கோ."

என்னால் உடன் படமுடியவில்லை. நான் பிறந்து வாழ்ந்த வளவை, என் மூதாதையர் வாழ்ந்த மனையை விட்டு என்னால் எங்கும் செல்ல முடியாது. பிடிவாதமாக மறுத்துவிட்டேன். என் பிடிவாதத்தை எல்லாரும் அறிவர். பின்னால் திரும்பி நடந்து ஊர் வந்தனர். இப்பொழுது நான்கு ஆண்டுகள் கழிந்து விட்டன.

மாதவனின் ஓரிரு கடிதங்கள் வந்திருந்தன. வன்னியின் துயரங்களை வரிவரியாக எழுதியிருந்தான். உணவுப் பொருட் தட்டுப்பாடு.... மருந்தின்மை, மலேரியா, இருப்பிட வசதியின்மை..... 'நாங்களும் உங்களோடை வந்திருக்கலாம்.'

வித்யா இப்பொழுது மாதவனை எண்ணிக் கவல்வாளோ?

உரிய வாறு எல்லாம் நடந்திருந்தால் மூன்று வயதில் அவருக்கு ஒரு பேரனோ பேர்த்தியோ இருந்திருப்பர். வாழ்க்கையென்ற தோட்டத்தில் இணைய வேண்டிய செடிகளை விதி பிரித்துவிட்டது. வன்னியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருவதற்கான கட்டுப் பாடுகள், பயண ஆபத்துக்கள் எல்லாம் உறவின் நெருக்கத்தைப் பிரித்துவிட்டன. பயணம் என்பது இன்று பேரிடர் வாய்ந்ததாகிவிட்டது. பாதைகள் அடைக்கப் பட்டு விட்டன. வன்னியிலிருந்து கொழும்பு சென்று விமானத்தில் வருவதென்பது உண்மையில் சந்திரனுக்குச் செல்வதிலும் சிரமமானது. வன்னியில் பாஸ் எடுத்து கொழும்பு வந்தாலும் யாழ்ப்பாணம் வந்து சேரலாம் என்ற நம்பிக்கையில்லை. ஆயிரக்கணக்கான இளம் பையன்களும் பெண்களும் கொழும்புச் சிறைச் சாலைகளை நிரப்பிக் கொண்டு சித்திரவதைப் பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

"சந்தேகத்தின் பேரில்..... பாதுகாப்பிற்காக........." காரணங்கள் இவை. சட்டம் உண்மையில் குற்றவாளிகளை உருவாக்கி வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைச்சாலைகள் அவர்கள் வெளியேறும் போது விரைவில் மனம் வெம்பி எதற்கும் உதவாதவர்களாகப் பலவீனப்பட்டு விடுகின்றனர். அல்லது, காணாமற் போய்விடுகிறார்கள். பாபுக்கள் போல.

தூரத்தில் ஷெல் வெடிக்கின்றது.

யன்னலிற்கு வெளியே வானத்தில் நிலவு தொத்தி நிற்கின்றது. வளர் பிறைக் காலம். வானப் படுக்கையில் நட்சத்திரங்கள் மிக மங்கிய ஒளிர் கற்களாய் சிதறிக் கிடக்கின்றன. இதே நிலவு தான் அங்கும் இருக்கும். பாபு பார்த்துக் கொண்டிருப்பானோ?

எப்பொழுது தூக்கம் தன்னுடன் என்னைப் பிணைத்துக் கொண்டதென்பது எனக்கு நினைவில்லை. இருந்தால் எங்கள் வீட்டு நாய் திடீரெனக் குரைத்தது. விழித்துக் கொண்டபோது அதன் குரைப்பொலி அடங்கிவிட்டது. கள்ளர்களோ?

தொண்ணூற்றைந்துக்கு முன்னர் இல்லாத கள்ளர்கள் இன்று யாழ்ப்பாணத்தில் ஏராளமாகப் பெருகிவிட்டனர். களவாடுவதற்கு ஏராளம் பொருட்கள் மலிந்துவிட்டன. ஆட்களில்லாத வீடுகளின் கூரை ஓடுகளிலிருந்து படிப்படியாகக் களவாடத் தொடங்கிக் கதவுகள், நிலைகள் என வெறும் கொங்கிறீற் சுவர்கள் மட்டும் எஞ்சி நிற்க முழுவதும் சில நாட்களுள் காணாமல் போய்விடுகின்ற பட்டப்பகல் திருட்டுக்கள். வளவுகளுக்குள் நின்று பயனைத் தந்த மரங்கள் இரவோடிரவாகத் தறித்து எடுக்கப்படுகின்றன. கேட்பார் எவருமில்லை.

"உன்ரை வீடா? இது எங்கட சொந்தக்காரரின்ர.... அவர்கள் வெளிநாட்டில..... நான் தான் பொறுப்பு...... கூரை, ஓடு, கதவு, யன்னல் எல்லாத்தையும் களவு போகாமல் பக்குவமாகக் கழற்றி வைக்கச் சொன்னவை........."

'குரைத்த நாய் குரைக்க வில்லையே? கள்ளர் ஏதாவது மயக்க மருந்தை இறைச்சியுடன் போட்டிட்டான்களோ?'

மெதுவாக எழுந்து யன்னல் அருகில் சென்றேன். எதுவும் தெரியவில்லை. நிலா வெளியில் வெளியுலகு பார்வைக்குத் தெரிந்தது. பக்கத்து அறைக்குச் சென்று அந்த அறை யன்னலூடாகப் பார்க்கிறேன்.

கிணற்றடி வேலியருகில் ஓர் உருவம் நிற்பது தெரிகிறது. உற்றுப் பார்த்தேன். வித்யா மாதிரித் தெரிகிறதே? வேலிக்கு அப்பால் இன்னொரு உருவம் நிற்பதும் அவர்கள் இருவரும் பேசிக் கொள்வதும் தெரிகின்றன? என் நெஞ்சம் பிளந்துவிடும் போல ஆகிவிட்டது. கடவுளே. இதென்ன? வித்யாவா இப்படி? மாதவனுக்கு நான் என்ன பதில் சொல்வேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வீட்டின் மீது குண்டு விழுந்ததுபோன்ற உணர்வு. 'வித்யா' என்று வாய் உன்னியது. அடக்கிக் கொண்டேன். நட்ட நடு நிசியில் இதனைப் பரகசியப்படுத்தக் கூடாது. அது எங்களைக் கேவலப்படுத்திவிடும். மூச்சு முட்டுவது போன்ற உணர்வு. தளர்ந்து போய் என் அறைக்குத் திரும்பும் போது வித்யாவின் அறையைத் திறந்து நோட்டமிட்டேன். அவள் கட்டில் வெறுமையாகவிருந்தது.

சந்தேகமில்லை. வித்யா தான். அவன் யார்? மனமே ஏன் அப்படி நினைக்கிறாய். ஊரடங்குச் சட்டம் இருக்கின்ற இந்த இரவில்....... எவ்வளவு துணிச்சல்?

ஒருவனுக்கு உரிமையாக்கப்பட்ட பெண். சமூகத்தின் உயிர் நாடியே ஒழுக்கந்தான். சமய நம்பிக்கையும் கடவுள் பக்தியும் கொண்ட வித்யா அப்படித் தவறு செய்வாளா?

படுக்கையில் விழுந்தேன். நெஞ்சம் குமுறத் தொடங்கியிட்டது. வித்யா தன் அறைக்குள் வந்து கட்டிலில் சரிவது தெரிகின்றது. மெல்லிய அழுகுரல் எழத்தொடங்கியது. வித்யா அழுகிறாளா? செய்துவிட்ட தவறு இதயத்தைக் குத்துகிறதோ?

# 4

சயிக்கிலை உருட்டிக் கொண்டு அவனைக் கடக்கும் போது அவன் என்னை ஏறயிறங்கப் பார்த்தான். ஐம்தெட்டு வயதுக்காரனிடம் அப்படிப் பார்க்க என்ன தான் இருக்கும். கரியரில் கட்டிக் கொண்டு வந்திருக்கும் அரிசி, மா பார்சல் அவனுக்குச் சந்தேகத்தைக் கிளப்பியிருக்குமோ?

"ஐ.. சி....... எங்க? ஐ. சி. " அவன் வலக்கரம் சயிக்கிலின் காண்டிலில் பற்றியது. அப்பொழுது தான் பார்த்தேன். பலர் மறித்து கான் ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்தார்கள். வயது வித்தியாசமின்றி மக்கள் வெயிலில் நிறுத்தப் பட்டிருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தின் வீதிகளில் நித்தம் சந்திக்கின்ற அவமானங்கள் மனதை வருத்தத்தான் செய்கின்றன. சந்திக்குச் சந்தி இறங்கி ஏறி அவமானப் பட்டுப் பயணம் செய்கின்ற நிலை மாறப் போவதில்லை. இன்று 'செக்கிங்' கூடுதலாகவிருந்தது.

அடையாள அட்டையைக் காட்டுகின்றேன். அடையாள அட்டைதான் இன்று யாழ்ப்பாண மக்களின் பெறுமதிமிக்க பொக்கிஷம். அடையாள அட்டைகளைத் தொலைத்து விட்ட பலர் வீட்டைவிட்டு வெளிவருவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறை பட்டிருக்கின்றார்கள். எனக்குத் தெரியத்தக்கதாக வேலைக்கும் போகாமல், பத்திரிகையில் தொலைந்துபோன அடையாள அட்டைக்கான விளம்பரத்தைக் கொடுத்துவிட்டு அது வருமெனக் காத்திருக்கிறார்கள். அடையாள அட்டை மீளக் கிடைத்தால் தான் வெளியில் வரலாம். தொழில் ஏதாவது பார்க்கலாம். கூலி பெறலாம். அடுப்பில் உலை கொதிக்கலாம்.

"எங்க போறது?......."

"வீட்டிற்கு......."

"உதாலை போக ஏலாது...... செக்கிங் நடக்குது. அப்படி நில்லுங்க. பேந்து தான் விடுகிறது."

நான் வீட்டிலிருந்து வெளியேறியதன் பின்னர் எங்கள் பகுதி இராணுவத்தினால் சுற்றி வளைக்கப்பட்டு விட்டது. பிள்ளைகள் என்ன பாடோ? மனைவி கலங்கிடுவாள். இராணுவத்தினைக் கண்டால் அவள் பதறிப் போவாள். வீடு வீடாகச் சோதனை நடக்கும். அல்லது எல்லாரையும் ஓரிடத்திற்கு வரச் சொல்லிப் பார்ப்பார்கள். அடையாள அட்டை, குடும்ப அட்டை, குடும்பப் படம், ஆமி அடையாள அட்டை, ஜொப் அடையா அட்டை என ஒவ்வொன்றாகப் பரிசோதிப்பார்கள்.

தெருவோரத்தில் நின்றிருந்தபோது பக்கத்தில் நின்றவரிடம், "ஏன் இருந்தாற் போல செக்கிங்?" என்று கேட்கிறேன். அவர் என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டுச் சுற்றும் முற்றும் பார்வையைப் படரவிட்டார். பின்னர் மெதுவாக, 'பொடியள் சிலபேர் உள்ளுக்கு வந்திட்டாங்களாம். அதுக்காகத் தான்", என்றவர் தொடர்ந்து, "அவங்களா புடிபடுகிறது?" என்றார்.

"பொடியள் தனங்கிளப்புப் பக்கம் நிக்கிறான்களாம்..."

"விசர்க் கதை..... அவங்கள் பூநகரிப் பக்கந்தான்..... அடிக்கிற ஷெல் தான் தனங்கிளப்பில..... விழுகுது".

"என்ன மாணிக்கவாசகத்தார், உம்மடைய பொடியன் ஒருவனும் அவங்களோட என்ன?" இடம் காலந் தெரியாமல் அன்னலிங்கம் மெதுவாகக் கேட்டு வைத்தார். எனக்குப் பகீரென ஏதோ ஒன்று அடிவயிற்றிலிருந்து எழுகின்றது.

"உது இப்ப கதைக்கிற கதையே?" என்று எரிந்து விழுகிறேன். இதில் கோபிப்பதற்கு என்ன இருக்கிறது.?

மௌனமாகிவிடுகிறேன். தெருவோரத்தில் நின்றபடி பார்க்கும்போது அரசடிச் சந்தி களையிழந்து கிடப்பதாகப் படுகின்றது. எப்போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரவாரத்துடனும் கும்மாளத்துடனும் காணப்படுகின்ற சந்தி. இழவு விழுந்த இடம் மாதிரியாகி விட்டது. எல்லாரும் கைகளைக் கட்டிக் கொண்டு எல்லா அலுவல்களையும் விட்டு விட்டுக் காத்திருக்க வேண்டி நேர்ந்துவிட்டது. இராணுவத்தினரின் சப்பாத்து ஒலியும் அவர்கள் புரியாத பாஷையில் தமக்குள் பேசிச் சிரிப்பதும் அவ்விடத்தின் சூழலிற்கு எப்பொழுதும் பொருந்துவதாகவில்லை.

வடக்கிலிருந்து சடுதியாக வந்த இளைஞன் ஒருவன் இராணுவத்தினரைக் கண்டதும் சயிக்கிலிருந்து குதித்தான். அவன் குதித்த வேகம் அவர்களுக்குப் பதட்டத்தை ஏற்படுத்திவிட்டது. அவனை முதலில் பயத்துடனும் பின்னர் வெறுப்புடனும் ஏறிட்டனர்.

"நீங்க நிண்டதைக் காணவில்லை......" என்ற பயத்துடன் அவன் சிரித்தான்.

அதற்குள் ஒருவன் தன் கரத்தை உயர்த்திவிட்டான்.

"அடிக்க வேணாம்....." என்று அந்த இளைஞன் உரத்த தொனியில் கத்தினான். எனக்கு வியப்பாகவிருந்தது. ஓங்கிய கரம் அப்படியே இறங்கிவிட்டது. அடையாள அட்டை, ஆமி அடையாள அட்டை என்று அவனைக் குடைந்தெடுத்தனர். அவன் சிறிதும் கலக்கமின்றி நின்றிருந்தான்.

"விசர்ப்பொடியன். தடி விறுமனாக நிற்கிறான். உள்ள போடப்போறான்கள்...." என்றார் அன்னலிங்கம். எனக்கும் அப்படித்தான் பட்டது.

"அப்படிப் போக முடியாது..... அங்க போ, நில்லு....." என்ற இராணுவ வீரனை அவன் ஏறிட்டுப் பார்த்தான்.

"அங்கால போகாட்டி நான் இங்கால திரும்பிப் போறன்......" என்றபடி சயிக்கிலைத் திருப்பி வந்த பாதையில் நடக்கத் தொடங்கினான்.

"ஏய்..... ஏய்..."

"கமக் நா..... எண்ட......"

"துணிச்சலான பொடியன்......"

அவனுடைய துணிச்சல் எனக்குச் சரியாகப் படவில்லை. இவனைப் போல எத்தனை இளைஞர்கள் உள்ளே இருக்கிறார்கள்? எத்தனை பேர் காணாமற் போயிருக்கிறார்கள். பாபுவை மாதிரியல்ல.

மத்தியானத்திற்குப் பிறகு எங்களைப் போகவிட்டார்கள். நான் வேகமாக வீட்டிற்கு ஓடி வந்தேன். வீடு களையிழந்து காணப்படுகின்றது. திண்ணையில் தாயும் பிள்ளைகளும் பேயறைந்த மாதிரிக் கறுத்துக் களையிழந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறார்கள். மதியச் சமையலுக்கான ஆயத்தங்கள் எதுவும் நடந்திருக்கவில்லை.

என்னைக் கண்டதும், "இவ்வளவு நேரமும் எங்கை போயிருந்தியள்?" என்று மனைவி கலக்கத்துடன் வினவுகிறாள்.

"சந்தியில மறிச்சிட்டான்கள்.... அவெங்கள் என்ன செய்தவெங்கள்......?"

"வீடெல்லாம் பார்த்தாங்கள்...... எல்ரீரீ வந்ததா எண்டு கேட்டான்கள். ஐசி பாமிலி கார்ட் எல்லாம் பார்த்தாங்கள். சுவரிலிருந்த தம்பியின் படத்தைப் பார்த்து அவன் எங்க, ஆரது என்டாங்கள்....."

"நீங்க என்ன சொன்னியள்......"

"நாங்க ஒண்டும் சொல்லவில்லை. அம்மாதான் அவன் செத்துப் போனான் எண்டிட்டு பெரிதாக அழுதா......"

நான் விக்கித்துப் போய் மனைவியைப் பார்க்கிறேன். மனமறிந்து அத்தாய் பொய் சொல்லியிருக்கிறாள்.

"ஏன் அப்படிச் சொன்னன் எண்டு எனக்குத் தெரியவில்லை. இப்ப மனம் சஞ்சலப் படுகுது. என்ர கரி நாக்கு..... அம்மாளாச்சி, என் பிள்ளைக்கு எதுவும் வராமல் நீ தான் காப்பாத்த வேணும்......"

# 5

தூக்கம் என்னை விட்டு விட்டது போலப் படுகின்றது. யன்னல் ஊடாகப் பார்க்கிறபோது விண்ணில் ஒளிர்கின்ற நட்சத்திரங்கள் துயரத்தில் சோர்ந்திருப்பதாகப் படுகின்றது. வேப்பமரத்தில் தூக்கம் கலைந்த பறவையொன்று படபடவெனச் சிறகுகளை அடித்துக் கொள்கின்றது. என் மனதில் அமைதியில்லை.

இன்று அந்தச் சத்தங்கள் ஓய்ந்திருக்கின்றன.

யாழ்ப்பாணத்திற்குள் பொடியள் சிலர் வந்துவிட்டார்கள் என்ற செய்தி அடிக்கடி எழுந்து விஸ்வரூபமாகின்றது. அவனைக் கண்டு நான்கு ஆண்டுகள். இப்பொழுது நன்றாக வளர்ந்திருப்பான். இளமையின் முறுக்கும் பயிற்சியால் உடலில் வலிமையையும் ஏற்றியிருப்பான். உடலில் எங்காவது சண்டையில் காயப்பட்டிருப்பானோ? காயப்பட்டபோது நிச்சயமாக தாயை எண்ணியிருப்பான். நான் கண்டிப்பான தகப்பனாக இருந்துவிட்டேன். இளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் மனவுணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளத் தவறி விட்டேன். அவமானங்களையும் அடக்குமுறைகளையும் ஏற்று எங்கள் உள்ளங்களும் உடல்களும் மரத்துவிட்டன. பழக்கப்பட்ட சங்கதிகளாகிவிட்டன.

"இறங்கி வா...."

"ஐ சி எங்க....."

"எங்க போறது...... என்ன கொண்டு போறது....."

"நல்ல வடிவான பொட்டை....."

"காதலிப்பமா?....."

"கொட்டியாவா?......"

"நடந்து போடா........"

"கரதர எப்பா. சூட் பண்ணிடுவன்..."

நாளாந்தம் தெருக்களில் சந்திக்கின்ற வார்த்தைகள். செவிகள் அவற்றினைக் கேட்டுக் கேட்டு இயல்பூக்கம் பெற்றுவிட்டன. மனங்கள் மரத்துப் போய்விட்டன. திறந்த வெளிச் சிறைச் சாலையொன்றில் உலாவுகின்ற உணர்வு. எங்கும் எப்பக்கமும் கரங்களில் துப்பாக்கிகளை ஏந்தியபடி இராவணர்கள் நிற்கின்றார்கள். தப்பித் தவறி அவை உயிர்த்தால் சரிகின்ற உடலிற்குப் புலி என்று பெயரிட்டால் அனைத்தும் சரிப்பட்டுவிடும்.

பாபு இப்பொழுது என்ன செய்வான்?

முற்றத்தில் படுத்திருந்த நாய் ஒருதரம் குரைத்துவிட்டு ஓய்ந்தது. தெரிந்தவர்களை இனங்கண்ட முனகலுடன் அது மீண்டும் படுத்துவிட்டது. நான் திடுக்கிட்டு எழுந்தேன். பாவிப் பெண்ணே. ஏன் இப்படி நடந்து கொள்கிறாய்? ஒருவனுக்குச் சொந்தமான பெண். இந்த அவமானத்தை எப்படியடி என்னால் தாங்கிக் கொள்ள முடியும்? உன் அம்மாவிற்கு இது தெரிந்தால்..... இதை இப்படியே விட்டு விட முடியாது. இன்று ஒரு முடிவு கட்டியே ஆக வேண்டும்.

மெதுவாக எழுந்திருக்கிறேன். உடல் கடுங்குளிரில் நடுங்குவது போல படபடத்தது. இருந்தாற் போல மூச்சிரைக்கிறது. ஆத்திரம் உடலில் விர்ரென ஏறுகிறது.

மனைவியைத் திரும்பிப் பார்த்தேன். அவள் அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்கிறாள். கீழே இறங்கி வந்தேன்.

முற்றத்தில் படுத்திருந்த நாய் என்னைக் கண்டதும் ஆரவாரம் செய்தது. என் மீது பிரியத்துடன் தாவ முயன்றது. அந்தச் சத்தத்தில் வேலியோரம் சலசலப்பு எழுகிறது. என்னை நோக்கி வித்யா விரைந்து வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்த என் வலக்கரம் அவள் கன்னத்தில் சாட்டையாக இறங்குகிறது.

"எளிய நாயே, என்ன காரியம் செய்தாய்?"

"அப்பா......." என்று விம்மினாள் வித்யா: "அப்பா தயவு செய்து சத்தம் போடாதையுங்கோ......."

அவள் மீது என் கோபம் தீயாகக் கவிந்தது. அவள் கரத்திலிருந்த சாப்பாட்டுத் தட்டு எகிறிப் பறந்தது.

ஆத்திரம் தீருமட்டும் அறைந்தேன்.

வேலியோரம் சரசரப்பு.

"ஆரடி அவன்?"

"அப்பா. அது நான்...... நான்..... அக்காவை அடியாதையுங்கோ........"

அந்தக் குரல்......? கடவுளே...... என் நெஞ்சம் பிளந்துவிட்டதா? இவன் ஏன் இங்கு வந்தான். எப்படி வந்தான்? ஏன் வந்தான், வெளியில் இது தெரிந்தால்........? வேலியோரம் என்னை அறியாமல் ஓடிச் செல்கிறேன். எட்டிப் பார்க்கிற போது இருளின் மங்கலான அசைவில் சற்றுத் தூரத்தில் ஓர் உருவம் அவசரம் அவசரமாக விரைந்து நகர்ந்தது.

"பாபு......" உதடுகள் அழைக்கவில்லை. நெஞ்சம் தான் கூக்குரலிட்டது: "என் மகனே...... நான் பெத்த ஆசை மகனே?....."

வித்யா என்னருகில் மௌனமாக நிற்கிறாள். என்ன காரியம் நான் செய்து விட்டேன்? அப்படியே அவளை என்னுடன் அணைத்துக் கொண்டேன்.

"தம்பி வந்தான், அப்பா. என் கரத்தால் சாப்பாடு தரும்படி கேட்டான். கொடுத்தன்......"

என் விழிகள் மாரியாகச் சொரிகின்றன. கட்டுப் படுத்த முடியவில்லை.

"இனி வரமாட்டானாம். நிரந்தரமாகவே போய்விடுவானாம். அதற்கு முதல் எங்கள் எல்லாரையும் ஒரு தடவை பார்த்துவிட விரும்பினான். பிறகு மனதை மாற்றிக் கொண்டான். தன் வருகையால் எங்களுக்குப் பிரச்சினைகள் வந்திடும் என்று கருதினான். அம்மாவை நினைத்து அழுதான். தங்கச்சி மாரை எண்ணிக் கவலைப்பட்டான். இனி வரமாட்டானாம்."

"என்னை அவன் விசாரிக்கவில்லையா?"

"விசாரித்தான். அப்பாவிற்குரிய கொள்ளிக் கடமையை நான் செய்ய முடியாது போச்சுது. மன்னிக்கச் சொல் அக்கா என்றான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியில் ஆறேழு மோட்டார் சயிக்கிள்கள் இரைந்தபடி வருகின்ற ஒலி எழுகிறது. இரவின் அந்தகாரத்தினைக் கீறிக் கிழித்துக் கொண்டு எழுகின்றது. இராவணர்கள் வருகின்றார்கள்.

இராவணர்கள் இருக்கும் வரை சீதைகள் சிறையிருக்கத்தான் வேண்டும். சீதைகள் சிறையிருக்கும் வரை இராமர்கள் வரத்தான் செய்வார்கள்.

சோர்ந்து போய் அறைக்கு வருகிறேன். உடலில் இயக்கமிருப்பதாகத் தெரியவில்லை. என் மனைவி அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்கிறாள். தூங்கட்டும். இன்னும் எவ்வளவு நேரம். எப்படி இந்தச் செய்தியை அவளிடம் சொல்வேன். "உன் மகனுக்குத் தான் மரணிக்கின்ற நாளும் நேரமும் தெரியும்."

"பாபு, என் மகனே....... என் ஆசை மகனே......"

- மல்லிகை

2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கனலும் புனலும்

மாலைக் கருக்கலில் சுந்தரம் அச்சந்தியை வந்தடைந்திருந்தான். சனசந்தடி குறைந்து மயான அமைதியினுள் சந்தி புதையுண்டு கிடந்தது. சந்திக்குச் சற்று அப்பால் அமைந்திருந்த இராணுவ சென்றியும் வீதிக்குக் குறுக்கே இருந்து விடப்பட்டிருந்த முட்கம்பிச் சுருளும் முடங்கிவிட்ட யாழ்ப்பாணத்து மக்களின் அவல வாழ்வின் அம்சமொன்றைச் சுட்டி நின்றன.

மனதில் தயக்கம். ஜீவசக்தி குன்றிய உடலின் இறுதி நேரப் படபடப்பு. உடல் சற்றுப் பதற்றப் பட்டது. கொழும்பிலிருந்து ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு யாழ்ப்பாணம் வருகின்றான். கொட்டிய மழையினுள் - இருளுள் பாதை தடவி நிகழ்ந்த பெரும் இடப் பெயர்வோடு வன்னியினூடாகக் கொழும்புக்கு ஓடிப்போனவன். ஓடிப்போனபோது இருந்த ஊருக்கும், இன்றைய ஊருக்குமிடையில் பெருத்த வேறுபாடு. அனுமன் எரித்த பூமியாக, சிதைந்த கட்டிட இடிபாடுகள் கண்களிற் பட்டன.

வீதிகளின் சந்திகளெங்கும் நிலை கொண்டுள்ள இராணுவக் காப்பரண்களும், குறுக்கு வீதிகளும் ஒழுங்கைகளும், அடைக்கப் பட்ட நிலையில், சிரசைச் சுற்றி நாசியைப் பிடிப்பது போன்ற சுற்று வழிப் பயணநிலைமையை அவன் புரிந்து கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமும் இதயமும் கனத்துக் கவன்றன. அவன் தனது பயணப் பையைச் சுமந்தபடி, சென்றியில் தயங்கி நிற்க, இராணுவ வீரனொருவனி துப்பாக்கியை நீட்டியபடி, அவனை நோக்கி அவதானமாக நடந்து வந்தான். இருவருக்கும் ஒருவரையொருவர் நம்பாத பயநிலை.

"கேபியூ நேரம்..... றோட்டு மூடிவிட்டுது. ஏன் இப்ப வந்தது?"

"கொழும்பால வாறன்...... பஸ் லேற்....."

"ஐ.சியை தா....."

அவன் தனது அடையாள அட்டையை எடுத்து நீட்டினான். அதனைத் திருப்பித் திருப்பி ஆராய்ந்தபடி, "கொழும்பில என்ன செய்யிறது?" என்று வினவினான்.

"ஒரு கொம்மியூனிகேசன் சென்ரரில வேலை செய்யிறன்."

"கொழும்பில எங்க இருக்கிறது?"

"லில்லி அவென்யு'....."

"அது எங்க?"

"வெள்ளவத்தை......"

"லாண்ட் சைட்டா, சீ சைட்டா?"

சுந்தரத்துக்கு இப்பொழுது விளங்கிவிட்டது. அவன் கொழும்பிலிருந்து தான் வருகிறான் என்று உறுதிப்படுத்த அந்த இராணுவ வீரன் விழைகிறான்.

"கொழும்பில பதிஞ்ச இருப்பிட பாஸ் இருக்குது......" அவன் ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினான். கொழும்பில் வசித்தமையை உறுதிப் படுத்தும் பொலீஸ் பதிவு ஊடாடும் சுதந்திரத்திற்கான உரிமை தரும். இராணுவ வீரனின் முகத்தில் திருப்தி பரவியது.

"இப்ப எங்கை போறது?"

"என்ர வீட்டுக்கு...... ஸ்கூலுக்குப் பக்கத்து ஒழுங்கை...... என்று மருமகளுக்குக் கலியாணம். அதுக்காகத் தான் யாழ்ப்பாணம் வந்தன்....."

"சரி கெதியாப் போ........ கேபியூ நேரம்....."

வீதிக்குக் குறுக்கே இழுத்து விடப் பட்டிருந்த முட்கம்பிச் சுருளைச் சற்று விலக்கி, சுந்தரத்தைப் போக அனுமதித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போகோம எஸ்துதி........" (நன்றி)

அவன் வீதியில் நடக்கும் போது, அவனை அனுமதித்த இராணுவ வீரனை, இன்னொரு இராணுவ வீரன் சிங்களத்தில் ஏசுவது கேட்கிறது. "கே.வியூ நேரத்தில வந்திருக்கிறான். கொட்டியாவா இருப்பான். விட்டு விட்டாயே?"

சாட்டையாக அவன் வார்த்தைகள் அவனைத் தாக்க, அவன் வேகமாக நடந்து, பாடசாலை ஒழுங்கையில் திரும்பி, சிறிய ஓட்டத்துடன் தன் வீட்டிற்குள் நுழைந்து கொண்டான். அக்கா சுமதி அவனை வியப்புடன் பார்த்தாள்.

"இந்த நேரம் வந்திருக்கிறாயே, தம்பி" அவன் சிரித்தான். பயம் களைந்த சிரிப்பு.

"அக்கா...... தனுசா எங்கை?"

அக்காவின் முகத்தில் கலவரம்.

"சுன்னாகத்திற்குச் சிநேகிதியின் திருமண வீட்டுக்குப் போனவள். இன்னும் வரவில்லை. சில நேரம் அங்க தங்கிவிட்டாளோ?"

"கலியாணப் பெண்ணை......? என்ன அக்கா?" ஒருகணம் அவனை விட்டு நீங்கிய பயம், அக்காவின் வார்த்தைகளால் மீண்டும் கனத்த இருளாக அவனைச் சூழ்ந்து அப்பிக் கொள்கிறது.

***

அவள் சந்தியை அடைந்த போது, இருட்டிவிட்டது. சைக்கிள் பஞ்சராகிவிட்டதால், ஒரு கிலோ மீற்றர் வரை உருட்டி வரவேண்டியேற்பட்டு விட்டது. எப்பொழுதும் இப்படி நடந்ததில்லை. சிநேகிதியின் கலியாணத்திற்கு எப்படிப் போகாமலிருப்பது? உயிருக்குயிரான நண்பி.

நீரில் நனைந்த கோழிக் குஞ்சாக அவள் தேகம் படபடத்தது. வீதியின் சன சந்தடியற்ற அமைதி அவளைப் பயமுறுத்தியது. வேகமாக நடந்தாள். இதயம் அடித்துக் கொள்வது, தலையணைக்குள் வைத்த அலாரமாக அவளுக்குக் கேட்கிறது. இராணுவக் சோற்றிற்குத் தம்மை இழந்துவிட்டுப் படுத்திருந்த நாய்கள் அவளைப் பார்த்துக் குரைத்தன.

அடுத்த முகட்டில் திரும்பினால் வீட்டிற்குரிய ஒழுங்கையில் இறங்கி விடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாற் போலக் கனத்த சப்பாத்துச் சத்தம் அவள் பின்னால் எழுகிறது. பதறிப் போய் திரும்பிப் பார்க்கின்றாள். நெடிய தடித்த உருவமொன்று அவளை நோக்கி வேகமாக வருவது தெரிகிறது. இராணுவச் சீருடையின் சரசரப்பும், சப்பாத்துக் கால்களின் கனத்த ஒலியும், தலையில் அணிந்திருந்த தலைப்பாகையும் அவனை அடையாளம் காட்டின.

அவனை அவள் சென்றியில் கண்டிருக்கிறாள். ஒரு நாள் அவளுடைய அடையாள அட்டையைப் பரிசோதித்தான். அடையாள அட்டையிலிருந்த சிங்களமும் அவனுக்குப் புரியவில்லை.

"நம்பர்..... நம்பர்....."

அவள் தனது அடையாள அட்டையின் ஒன்பது இலக்கங்களையும் அதிலுள்ள ஆங்கில எழுத்துக் குறியையும் சரியாகச் சொன்னாள்.

".......ம்......." என்றான் அவன்.

அந்த நெடிய உருவம் இப்போது பலி எடுக்க ஏவிய பைசாசக் கணமாக அவளைப் பின் தொடர்கின்றது. மங்கலிருட்டில் தொடரும் அந்த மனிதனின் நோக்கத்தை அவள் புரிந்து கொண்டாள்.

சயிக்கிலை வேகமாக உருட்டிக் கொண்டு விரைந்து நடை நடந்தவள், ஒரு கட்டத்தில் சயிக்கிலை அப்படியே வீதியோரத்தில் எறிந்துவிட்டு ஓடத் தொடங்கினாள்.

அவளை அவன் துரத்த ஆரம்பித்தான்.

மூச்சு நின்று விடும் போல உணர்வு. அடிவயிற்றிலிருந்து உச்சியை நோக்கி ஏதோ எழுந்தது. நெஞ்சுக் குழியை அடைக்கின்றது.

"ஏய்..... ஏய்....." அவன் தொடர்ந்து கூறியவை அவளுக்குப் புரியவில்லை.

இனி அவளால் தப்ப முடியாது.

***

சுந்தரம், தமைக்கையை மெல்லிய சினத்துடன் ஏறிட்டான்.

"என்ன வேலை செய்யிறியள், அக்கா இன்னும் ஆறு நாளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனுசாவுக்குக் கலியாணம். அவளை இப்ப போய், சிநேகிதியின் கலியாணத்துக்கு அனுப்பி வைச்சிருக்கிறியள்?''

''நான் என்னடா தம்பி செய்யிறது? சிறு வயதிலிருந்து தனுவோடு படிச்சவள். நல்ல பிரண்ட்ஸ்.''

''இப்ப ஊரில நடக்கிறது எல்லாம் உங்களுக்குத் தெரியாதே? வயது வந்த பொம்பிளைப் பிள்ளைகளைத் தனிய அனுப்பலாமே? என்னவோ....... ஏதோ?''

சுந்தரம் தலையில் அடித்துக் கொண்டான்.

''அப்படியொன்றும் ஆகாதடா. அவள் நேரம் சென்றதென்றால் சிநேகிதி வீட்டிலேயே தங்கியிருப்பாள்...... அதுகள் நல்ல சனம்.''

இவ்வாறு தம்பிக்குச் சுமதி ஆறுதல் கூறிய போதிலும், அவளது கலக்கம் தீரவில்லை. தனது கலக்கத்தை அவள் வெளிக்காட்டிக் கொள்ள வில்லை. கலவரமடையக் கூடாது.

''நான் போய்ப் பார்த்து வரவே அக்கா?''

சுமதி துடித்துப் போனாள்.

''உனக்கென்ன விசரே? இப்ப வெளியில போகமுடியாது. ஊரடங்குச் சட்டம் இருக்குது. நீ வந்ததே பெரிய காரியம்..''

''அவள் அங்கிருந்து வெளிக்கிட்டிருந்தால்......''

''அவளுக்குக் குறுக்கு வழியள் தெரியும். வந்திடுவாள்...... அவள் அப்படிப் புத்தியில்லாத பொடிச்சியல்ல. அங்கை தான் நிற்பாள்....''

இருள் மெதுவாகக் கவியத் தொடங்கியது.

***

மூச்சிரைக்கின்றது. நெஞ்சு அடைப்பது போன்ற உணர்வு. வாயால் பெரிதாகச் சுவாசித்தாள். இனி ஓடினால் நிலத்தில் விழுந்து விடுவாள்.

அவன் அவளை நெருங்கிவிட்டான்.

எட்டி அவள் கரத்தை வெறியோடு பற்றிக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயோ...... அம்மா....." என்று அவள் பெருங் குரலில் வீரிட்டுக் கத்தினாள். அவன் அவளை வீதியோரப் பற்றைக்குள் இழுத்துப் போக முயன்ற போது-

முடக்கில் திடீரென ஒரு மோட்டார் சயிக்கில் ஒளிபாய்ச்சியபடி ஏறியது. மிக வேகமாக அவர்கள் அருகில் வந்து நின்றது. மோட்டார் சயிக்கிலின் ஹெட்லயிற் ஒளி அவர்களை ஊடுருவியது.

"சரத்சிங் அவளை விடு...."

மோட்டார் சயிக்கிலிலிருந்து வந்த கம்பீரமான குரல் அவனைப் பதற வைத்தது. அவளது கரத்தைப் படக்கென விட்டான். ஓநாயின் கௌவலிலிருந்து விடுபட்ட முயலாக அவள் நடுநடுங்கியபடி நின்றிருந்தாள். சரத்சிங்கின் உடலும் நடுங்கத் தொடங்கியது.

அவனது இராணுவ மேலதிகாரியிடம் கையும் களவுமாகப் பிடிபட்டு விட்டான்.

"பயப்படாதை பெண்ணே.... உனக்கு ஒன்றும் நடக்காது....." என்று தமிழில் கூறியவன், ஹிந்தியில் சரமாரியாக ஏச, சரத்சிங் திரும்பி ஓடத் தொடங்கினான்.

"நன்றி, ஐயா..... என்னைக் காப்பாற்றினீர்கள்....."

"பயப்படாதே..... என் பெயர் கேணல் உமாசங்கர்..... பின்னால் ஏறிக்கொள் பயப்படாதே நான் உன் தந்தை போல...."

அவள் ஏறியமர்ந்தாள். இன்னமும் பயம் குறையவில்லை.

***

இரவு அவர்களால் உணவருந்த முடியவில்லை. தமக்கை தந்த தேநீரைப் பருகிவிட்டு, சாப்பாடு எதுவும் வேண்டாமென்று சுந்தரம் கூறிவிட்டான்.

தனுசாவைக் குழந்தையிலிருந்தே தூக்கி வளர்த்தவன் அவன். அவளது மழலை மொழியை மனதார ரசித்தவன். அவளது வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாக இருந்தவன்.

அவளுக்குத் திருமணம் பேசி முற்றாக்கியவன் சுந்தரம் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனார்த்தன், தனுசாவுக்கு ஏற்ற கணவன். தனுசாவின் மெலிந்த உயர்ந்த சிவந்த அழகிற்கு, அவன் தோற்றம் சோடை போனதன்று.

"கலியாணமாகப் போகிற ஒரு பெண், பிறத்தியார் வீட்டில ஓரிரவு தங்கினாள் என்பது மாப்பிள்ளை வீட்டாருக்குத் தெரிந்தால் என்ன நினைப்பினம் அக்கா...."

சுமதி, கோபத்தோடு தம்பியை ஏறிட்டாள். வார்த்தைகள் சூடாக வெளிவந்தன.

"என்ன நினைக்கிறது?"

"எங்கட ஆக்கள் அப்படி, அக்கா".

"மனதுக்கு வந்ததெல்லாம் சொல்லிவிடலாமோ? நான் மனச்சாட்சிக்குத்தான் பயப்படுவன், தம்பி. நரம்பில்லாத நாக்கால ஆரும் நாக்கு வழிப்பினம்?"

"அதில எங்கட ஆக்களுக்கு ஒரு சுகம், அக்கா."

"அதை விடு, தம்பி!"

"சமூகத்தை விட்டு எப்படி அக்கா,வாழுகிறது?"

சுமதி, சுந்தரத்தை ஆழமாக ஊடுருவிப் பார்த்தாள்.

"என்ர பிள்ளையை எனக்குத் தெரியும். இந்தச் சமூகத்திலும் பார்க்க அவள் நெருப்பு....."

***

கதிரையில் அமர்ந்திருந்தபடியே அவள் உறங்க முயன்றாள். முடியவில்லை. விழிகள் மூடும் போது, அவன் அவளைத் துரத்திக் கரம் பிடித்த பயங்கரக் காட்சி விரிந்தது.

"பயப்படாதே, பெண்ணே. உனக்கு ஒன்றும் ஆகாது......" என்றார் கேணல் உமா சங்கர்: "இராணுவத்தில் மட்டுமா இப்படிக் கயவர்கள் உள்ளனர்? எல்லாவிடமும் தான்....."

"என்னை இப்போது வீட்டில கொண்டு போய் விட்டிடுங்கோ சேர்..." அவள் கரம் கூப்பிக் கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமாசங்கர் வேதனையோடு சிரிக்கிறார்.

"அது சரியில்ல அம்மா...."

"ஏன் ?" அவளைப் பயம் பற்றிக் கொண்டது.

"உன்னைக் கொண்டுபோய், இராணுவத்தினர் உன் வீட்டு வளவில் இப்போது இறக்கி விட்டால், அதைக் காண்பவர்கள் என்ன பேசுவார்கள் தெரியுமா? உன் எதிர்கால வாழ்க்கையே சரியம்மா......."

"நீங்கள் உங்கள் மோட்டார் சயிக்கிலில் கொண்டுபோய் விடுங்கோ....." உமாசங்கர் புன்னகைத்தார்.

"நானும் இராணுவ வீரன் தான்...... இதோ பார் பெண்ணே..... விடிந்ததும் உன் சயிக்கிலையும் எடுத்துக் கொண்டு இயல்பாக வீட்டிற்குப் போ...... சிநேகிதி வீட்டில் இரவு தங்கியதாகக் கூறு...... இங்கு காம்பில் இரவு தங்கியதாக எவருக்கும், உன் அம்மாவிற்கும் கூட மறந்தும் சொல்லிவிடாதே. அது உன் வாழ்க்கையைப் பாதிக்கும். உன் பெயரைக் கூட நான் கேட்கவில்லை. அது கூட எனக்குத் தெரிய வேண்டாம். நடந்தவற்றை நீயே மறந்துவிடு."

கேணல் உமாசங்கரின் வார்த்தைகள் அவள் மனதில் தெளிவாகப் படிந்தன. கதிரையில் பயமின்றி அப்படியே கண்ணயர்ந்தாள். ஒரு பெட்சீற்றால் அவளுக்குக் குளிராதிருக்க உமாசங்கர் போர்த்திவிட்டமை காலை விழித்தபோது தான் தெரிந்தது.

***

அவர்களும் அன்று உறங்கவில்லை. தனுசாவுக்கு என்ன நடந்ததோ? அதிகாலை புலரத்தொடங்கிய வேளையில் சுந்தரம் கூறினான்.

"எனக்கு ஏனோ பயமாகவிருக்கிறது. அக்கா..... தனுஷாவை இன்னமும் காணவில்லை. கேள்விப்பட்டவை கலக்கத்தைக் கொடுக்குது. உவங்கள் நம்பிக்கை ஆனவங்களில்லை."

"மனிதாபிமானம் ஒருபோதும் செத்துப் போனதில்லை, தம்பி....." சுமதி நீண்டதொரு பெருமூச்சு விட்டாள். பின் தொடர்ந்தாள். "இவ்வளவு காலமும் ஒருவருக்கும் சொல்லாத விசயத்தை இப்ப உனக்குச் சொல்லுறன். ஒரு நாள் மாலைக் கருக்கலில்........ அப்ப இந்திய இராணுவம் இங்க இருந்தது. ஐ.பி.கே.எ·.ப்... ஒரு இராணுவ வீரனிடம் அகப்பட்டுக் கொண்டேன். அவன் என்னைத் துரத்தி என் கரத்தை வெறியோடு பற்றிக் கொண்டான்....."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அக்கா......?"

"அப்ப கடவுள் போல கேர்ணல் உமாசங்கர் வந்து என்னைக் காப்பாற்றினார். என்னை தனது காம்பில் வைச்சிருந்து பாதுகாத்து காலையில் அனுப்பி வைத்தார். எனது மானத்தைக் காப்பாற்றிய கடவுள் அவர். ஆனால்....... தம்பி....."

சுமதியின் விழிகள் கலங்கி, நீரை வடியவிட்டன.

"அக்கா.....?"

"அவர் என்ன சொன்னார் தெரியுமா? அந்தச் சம்பவத்தையும், இரவு இராணுவக் காம்பில் தங்க நேர்ந்தமையையும் அம்மாவிற்குக் கூடக் கூறவேண்டாம் என்றார்........"


சுமதி விழிகளைத் துடைத்துக் கொண்டாள்.

சயிக்கிலிலிருந்து இறங்கிய தனுசா படலையைத் தள்ளித் திறந்தபடி உள்ளே வருவதை இருவரும் நிம்மதியாக நோக்கினர்.

**மல்லிகை - 2001**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மறைகாய்

முற்றத்துச் சாக்குக் கட்டிலில் நிமிர்ந்து படுத்தபடி வானத்தை நோக்கிய போது வானம் தெரியவில்லை. சடைத்துக் கிளை பரப்பி வளர்ந்திருந்த செம்பாட்டான் மாமரத்தின் கிளைகள் பார்வையில் குறுக்கிட்டு திரை போட்டுத் தடுக்கின்றது. உச்சியில் ஏறியிருந்த சூரியனின் சில கதிர்கள் எப்படியோ உள் நுழைந்து முற்றத்திற்கும் மாமரத்திற்குமிடையிலான தூசுச் செறிவை அடையாளமிட்டுக் காட்டின.

செம்பாட்டான் வஞ்சகமின்றி காய்களால் சிலிர்த்திருந்தது. முற்றிச் சிவந்து புகைபடர்ந்து பறிப்பதற்குப் பதமாக விளங்கின. மாமரத்தில் குவிகின்ற பட்சிகளையும் அணில்களையும் இரவில் விழுகின்ற வௌவால்களையும் வெருட்டிக் கலைப் பதற்காக தகரமணி யொன்று மாமரக் கிளையொன்றில் கட்டப் பட்டிரு க்கின்றது. இடை யிடையே குசினிக் குள்ளிருந்தபடி என் மருமகள் கயிற்றை இழுத்து அந்தத் தகரமணியை அடித்து ஓசையெழுப்பி அவற்றினைக் கலைப்பாள்.

அவளுக்கு நன்றாகத் தெரியும். எது மாம்பழத்தைக் கொத்தினாலும் கொறித்தாலும் நான் அதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருப்பேனே தவிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றினைத் துரத்திவிட முயற்சிக்க மாட்டேன் என்பது. மாமரத்தில் காய்க்கின்ற கனிகளில் அவற்றிற்கும் பங்குண்டு. மாங்கனிகள் பறிக்கின்ற பருவத்திற்கு வந்து விட்டதென்பதை முதன் முதல் நிலத்தில் விழுகின்ற கொந்தற் பழங்கள் தாம் அறியத் தருகின்றன.

கொந்தற் பழங்களை நான் பொறுக்கி வைத்திருப்பேன். சில வேளைகளில் நன்கு முற்றிய கனிகளும் காற்றில் சிலுப்புற்று நிலத்தில் விழுவதுண்டு. செம்பாட்டான் மாங்கனிகள் அப்படிப்பட்டவை. அவற்றினையும் பொறுக்கி ஓரிடத்தில் எடுத்து வைப்பேன். பாடசாலைவிட்டு வீடு திரும்பும் பிள்ளைகள் சில படலையைத் திறந்து, 'அப்பு' என்று குரல் தரும். கூப்பிடுவதற்கு முதலே படலையைத் தள்ளிக் கொண்டு போட்டியிட்டு ஓடிவந்து கொந்தற் பழங்களை எடுத்துக் கொள்ளும்.

"ஒவ்வொன்றாக எல்லாரும் எடுங்கோ".

அப்படியும் ஓரிரு பிள்ளைகள் ஏமாந்து போகும். அவ்வேளைகளில் தாழ்கிளைகளிலுள்ள காய்களைப் பறித்து ஒவ்வொன்றாகக் கொடுப்பேன்.

"இந்த மனிசன் முத்தவிடாது, தானம் செய்யுது" என குசினிக்குள்ளிருந்து என் மருமகள் முணுமுணுப்பாள். தடுக்க வரமாட்டாள். மரியாதை தான்.

நான் விரும்பி எடுத்த மருமகள். என் தங்கையின் மகள். என் மூத்த மகன் சுதர்சனன் எதுவுமே தெரியாத அப்பாவி. ஆசிரியத் தொழிலால் கிடைக்கும் சம்பளத்தை அப்படியே தாய் இருக்கும் வரை தாயிடம் கொடுத்து விடுவான். நானும் அப்படித்தான். தோட்டத்தில் வருவனவற்றை அவளிடம் கொடுத்து விட்டு அமைதியாகி விடுவேன். அவளே இருக்கும் வரை எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டாள். அவள் போனதும் அவ்விடத்தினை மூத்த மருமகள் வசந்தி எடுத்துக் கொண்டாள். சும்மா சொல்லக் கூடாது. ஆள் வலு இறுக்கம். பணவிஷயத்தில் வலு கவனமாகச் செலவிடுவாள். இல்லாவிட்டால் இரண்டு பெண் பிள்ளைகளை யாழ்ப்பாணத்தில் கரை சேர்த்திருக்க முடியுமா?

மூத்த இரண்டும் பெண் பிள்ளைகள். அடுத்த நான்கும் ஆண்பிள்ளைகள். எனக்குப் பேரப்பிள்ளைகளைப் பெற்றுத் தருவதில் அவன் தயக்கம் காட்டவில்லை.

"எல்லாம் எங்கட கையிலா மாமா, இருக்குது. ஆண்டவன் தாறது" என்று ஒவ்வொரு முறையும் தன்னைச் சமாதானப் படுத்திக் கொள்வாள்.

என் பேரர்கள்? இப்பொழுது நினைத்தாலும் மனம் கலங்குகிறது.

ரவிக்குமார், சதீஸ்குமார், சுரேஷ்குமார், தனேஸ்குமார். எல்லாம் குமார்கள். எண்பத்தி மூன்றில் கொழும்பு இனக் கலவரத்தில் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியையும் சொத்துக்களையும் பறிகொடுத்து விட்டு இரண்டு பிள்ளைகளோடு எனது இரண்டாவது மகன் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பி வந்தான். அவன் சொல்லிய கதைகளைக் கேட்டுக் கொண்டிருந்த ரவிக்குமார் ஒரு நாள் காணாமல் போனான்.

அந்த நாள் நல்ல நினைவு. என் மருமகள் முற்றத்தில் விழுந்து புரண்ட கூச்சலிட்டு ஒப்பாரி வைத்தாள். ஊரே கூடிவிட்டது. நான் மௌனமாக அமர்ந்திருந்தேன். நெஞ்சின் ஒரு பக்கத்தில் இலேசான வலி இருக்கத்தான் செய்தது. அவன் சிறு பையன் அல்லன். பதினெட்டு வயதாகிறது. புரிந்து கொண்டு தான் இயக்கத்தில் இணைந்திருக்கிறான். வன்னியில் நிற்பதாகத் தகவல் வந்தது. இரண்டாண்டுகள் கழித்து ஒட்டிசுட்டான் சமரில் வீரமரணம் அடைந்ததாகத் தகவல் சொன்னார்கள்.

மாமரத்தில் கிளிகளின் ஆரவாரச் சத்தம் எழுகிறது. இரண்டே இரண்டு கிளிகள் தாம். அதிகம் சேதம் வர இடமில்லை. சாப்பிட்டுவிட்டுப் போகட்டும். தகர மணி எந்நேரத்திலும் ஒலிக்கலாம். கெதியாகச் சாப்பிட்டு முடியுங்கோ. பொத்தென ஒரு கொந்தல் முற்றத்தில் வந்து விழுகிறது.

எடுத்து வைக்க எழுந்தேன்.

தன் பிள்ளைகளுக்கு கொந்தல்களைக் கொடுக்க மருமகள் சம்மதிப்பதில்லை.

"அதில் கிருமிகள் தொத்தியிருக்கும்..... வேண்டாம்......"

எனக்கு அதில் நம்பிக்கையில்லை. என் சிறுவயதில் நான் தின்னாத கொந்தல்களா? ஐயரம்மா வீட்டு கொழும்பான் மாமரத்தின் பிரதான கிளை எங்கள் வீட்டின் ஓலைக் கூரைக்கு மேல் நீண்டிருந்தது. அடிக்கடி இரவிலும் பகலிலும் கொந்தல்களும் பழங்களும் கூரையில் விழுந்து சரிந்து முற்றத்தில் இறங்கும். கூரையில் விழும் சத்தம் எழுந்ததும் நான் முற்றத்தில் நிற்பேன். என் ஐயாவோ அம்மாவோ அப்பொழுது அவற்றினைத் தின்ன வேண்டாமெனக் கண்டித்ததில்லை. அவற்றினைத் தின்று எனக்கு ஆரோக்கியம் கெட்டதாகவும் நினைவில்லை. ஒடியலும், பனாட்டும், கூழும், குரக்கனும் எதிர்ப்புச் சக்தியைக் கொடுத்திருக்குமோ? இருக்கும்.

தகரமணி சத்தம் எழுப்புகிறது. கொத்திக் கொண்டிருந்த கிளிகள் திடீரென வெருட்சியுற்று வானில் கிளம்புகின்றன. திடீரென அவை கிளம்பியதால் உந்தப்பட்ட கொந்தல் பிடி கழன்று முற்றத்தில் விழுகிறது.

"நல்லா முற்றிவிட்டது, மாமா. சதாசிவத்தைக் கூப்பிட வேண்டும்...... அவன் தான் காய்களை நிலத்தில் போடாமல் பட்டைகட்டிப் பிடுங்குவான்" என்று குரல் தருகிறாள் மருமகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சதாசிவத்தையா............?" என்று கேட்கக் கிளம்பிய வினா தொண்டைக்குள் அடங்கிவிட்டது. ஒவ்வொரு முறையும் சதாசிவம் மாமரத்தில் ஏறிப் பட்டையால் முற்றியகனிகளைப் பறிப்பான். அவற்றினை முற்றத்தில் நின்றபடி சாக்கு வீசிப் பிடிப்பது நான் தான். ஒரு காய் கூட நிலத்தில் அடியுண்டு விழவிடமாட்டேன். சாக்கை இரண்டாக மடித்து இரு நுனிகளையும் இரு கரத்தால் பற்றி ஆயத்தமாக நிற்க அவன் கிளையிலிருந்தபடி பட்டையில் பிடுங்கிய கனிகளை ஒவ்வொன்றாக எடுத்துப் போடுவான். அது அருகில் வருவதற்கும் நான் சாக்கினை வீசி ஏந்துவதற்கும் சரியாக இருக்கும்.

சதாசிவம் ஈவிரக்கமற்ற பாவி என்பது எனது அபிப்பிராயம். மாங்காய் பறிக்க மரத்தில் ஏறினால் ஒரு கனியாவது மரத்தில் இருக்க விடமாட்டான்.

"நல்லாப் பார்த்துப் பிடுங்கு சதாசிவம். அந்தா மறைஞ்சிருக்குது.......... அந்தா தனிக்காய் ஒன்றிருக்குது" என்பாள் மருமகள். இவ்விடத்தில் எனக்கும் அவளுக்கும் எப்பொழுதும் சண்டைதான்.

"டேய் சதாசிவம்...... இறங்கடா கீழை, மறைகாய்களைப் பிடுங்காதை. அது அதை நம்பி வாழ்கிற சீவராசிகளுக்குத் தேவை. மரம் மறைத்து வைக்கிறது அதுகளுக்குத் தான் என்பார் என்ர அப்பு" என்று நான் கத்தியிருக்கிறேன்.

"அப்புவுக்கு விசர்" என்பான் சதாசிவம்.

"உனக்குக் கனக்கத் தெரியும். நீ வடுவா முதலில இறங்கு."

"தங்கச்சி இறங்கவே......, தேடிப் பிடுங்கினால் இன்னும் ஒரு ஐம்பது பிடுங்கலாம்......."

மருமகள் என்னைப் பார்ப்பாள். நான் கையிலிருக்கும் ஏந்தும் சாக்கினை முற்றத்தில் வீசிவிட்டுத் திண்ணையில் குந்திவிடுவேன். அதற்குப் பிறகு தான் சதாசிவம் மரத்திலிருந்து கீழே இறங்கி வருவான்.

இம்முறையும் சதாசிவம் தான் வரப்போகிறான்.

மறைகாய்கள்..... நெஞ்சில் வலி எடுக்கிறது.

ரவிக்குமாரின் மரணத்தின் பின்னர் வசந்தி தன் மூன்று பிள்ளைகளையும் வெகு பக்குவமாகப் பாதுகாத்து வளர்த்தாள். கனடாவில் மூத்த பேர்த்தி, சதீஸ்குமாரை கனடாவிற்கு எடுக்கும் அலுவல்களில் ஈடுபட்டு வெற்றி கிட்டும் வேளையில் யாழ்ப்பாணக் கோட்டை அடிபாடு தொடங்கிவிட்டது; கொழும்புப் பயணம் தடைப்பட்டு வந்தது. சதீஸ்குமார் அடிக்கடி வெளியில் சென்று வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கயடா போய் வாராய்?" என்று தாய் கேட்டால் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லுவான். பாடசாலைக்கும் அவன் ஒழுங்காகப் போவதில்லைப் போலப் பட்டது. ஒரு நாள் மாலை அந்தச் செய்தி இடியாக வந்து சேர்ந்தது.

கோட்டை அடிபாட்டில் ஈடுபட்டிருந்த போராளிகளுக்கு உணவு விநியோகிக்கும் பணியில் சதீஸ்குமார் ஈடுபட்டிருக்கும் போது கோட்டையிலிருந்து பாய்ந்த ஆமியின் சன்னம் அவனைக் காவு கொண்டதாம்.

நான்காம் நாள் அடையாளம் மாறி முட்டி வீங்கிய அவன் சடலத்தை எடுத்துத் தந்தார்கள். திண்ணையில் அப்படியே நிலை குலைந்து அமர்ந்து விட்டேன். "ஐயோ...... நான் என்ன பாவம் செய்தேன்" என்று என் மருமகள் முற்றத்தில் புரண்டு கதறினாள்: "இரண்டு பிள்ளையளையும் பறி கொடுத்திட்டேனே?"

இந்த மரணத்துடன் எங்கள் வீட்டின் அமைதி குலைந்து விட்டது.

"அப்பு இதுக்குக் கவலைப்படாதையுங்கோ. விடுதலை சும்மா வராது. தியாகங்களுக்கும் இழப்புகளுக்கும் பின்னர் தான் வரும்" என்று மூன்றாவது பேரன் சுரேஸ்குமார் சொன்னபோது நான் திடுக்கிட்டுவிட்டேன். அவன் காணாமல் போனபோது இடிந்து போனேன். ஆனால் வசந்தி அழவில்லை. தன்னைத் தேற்றிக் கொண்டாள்.

மாமரத்தில் மீண்டும் சலசலப்பு. எட... மரங்கொத்தி கூட மாம்பழம் சாப்பிடுமா? இப்பொழுது சாக்குக் கட்டிலில் வெயில் படத்தொடங்கிவிட்டது. குசினிக்குள்ளிருந்து வசந்தி வெளியில் வருகிறாள். கரத்தில் தேசிக்காய்த் தண்ணீர் நிரம்பிய தம்ளர். அதனை வாங்கிக் கொண்டு அவளை நிமிர்ந்து பார்த்தேன். விழிகள் கலங்கியிருந்தன.

அழுதிருக்கிறாள். அழாமல் என்ன செய்வாள்.

மூன்றாவது பேரன் சுரேஸ்குமார் காணாமற் போய் பத்து நாட்களாகி விட்டன. ஒரு நாளிரவு படலையில் ஒரு வாகனம் வந்து நின்றது.

"ஐயோ......மாமா" என்றலறினாள் வசந்தி. இப்படித்தான் முதலிரு மரணங்களும் அவளுக்கு அறிவிக்கப் பட்டன. படலையடிக்கு ஓடிப் போனோம்.

அதற்கிடையில் படலையைத் திறந்து கொண்டு மூவர் உள்ளே வந்து விட்டனர். அவர்களில் சுரேஸ்குமார் ஒருவனாக நின்றிருந்தான். அப்பாடா.... அவனைக் கண்டதும் வசந்தி ஓடிப் போய் கட்டிப் பிடித்து கண்ணீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டாள். அந்தப் பாசப் பிணைப்பின் இறுக்கத்தை உணர்ந்து கொண்டேன். சொல்லி விட்டுப் போக வந்திருக்கிறானோ?

"தம்பிமார்"

"அப்பு... உங்கட பேரனை உங்களிட்ட ஒப்படைக்கிறோம். நீங்கள் போராட்டத்திற்குத் தந்த இருவரே போதும். புத்திமதி சொல்லியிருக்கிறம். படிக்க வையுங்கோ."

அவர்கள் வாகனத்திலேறிப் புறப்பட்டு விட்டார்கள்.

அதற்குப் பிறகு தான் அவனைக் கொழும்புக்கு அனுப்பி வைத்தோம். தகப்பன் தான் கூட்டிச் சென்றான். கனடாவிலிருக்கும் மூத்த பேர்த்திக்கும் தகவல் கொடுக்கப் பட்டது.

"இப்ப இங்க கூப்பிடுவது கஷ்டம்.... எதற்கும் கொழும்பில் சிறிது காலம் நிக்கட்டும். முயற்சிக்கிறம். ஏஜெண்டிட்ட கதைக்கிறம்" என்று தகவல் வந்தது.

ஐந்தாம் நாள் கொழும்பிலிருந்து பேரிடி வந்தது.

சுரேஸ்குமாரை இராணுவம் கைது செய்து அழைத்துச் சென்றுவிட்டதாம்.

பேரிடி மேல் பேரிடி.

இப்பொழுது நான்கு வருடங்கள் கடந்து விட்டன. அவனை இன்னமும் விடுதலை செய்யவில்லை. அலையாத இடமுமில்லை. எடுக்காத முயற்சிகளுமில்லை.

அவன் எப்பொழுது வெளியில் வருவான்?

"அவனை இயக்கத்திலயே இருக்க விட்டிருக்கலாம், மாமா. நான் தான் பிழைவிட்டிட்டன். இந்த மகனையாவது எனக்குத் தாருங்கோ என்று நான் தான் தலைவருக்கு விண்ணப்பம் செய்தன். அதனாலதான் அவனை விட்டினம். நான் தான் அவனை அவசரப் பட்டுக் கொழும்புக்கு அனுப்பி...." வசந்தி விக்கி விக்கி அழுகிறாள்.

"பொத்திப் பொத்தி வளர்த்தன். மறைச்சு மறைச்சு வளர்த்தன்..... கண்ட மிச்சம் என்ன? அனாதையாக நிற்கிறன்...... மூன்று பிள்ளைகளைப் பறிகொடுத்துவிட்டு".

படலையைத் திறந்து கொண்டு சயிக்கிலில் உள்ளே வந்த தினேஸ்குமார் தாயின் வார்த்தைகளைக் கேட்கிறான். சயிக்கிளைச் சார்த்திவிட்டு ஓடிவந்து தாயை அணைத்துக் கொள்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் இருக்கிறன் அம்மா..... உங்களை விட்டு நான் எங்கும் போகமாட்டேன்."

இருவரும் அழுகின்றனர். இழப்புக்கள் கொடுமையானவை தாம். நோக்கம் எவ்வளவு உயர்வாகவிருந்தாலும் மரணம் என்பது தாங்கக் கூடியதன்று.

சோளகம் வறட்சியுடன் வீசுகிறது. சாக்குக் கட்டிலை மடித்துக் கொண்டு எழுந்தபோது சதாசிவம் உள்ளே வந்தான். கரத்தில் மாங்காய் பறிக்கும் பட்டை இருக்கிறது.

"அப்பு, அப்போதையே பருவம் என்று பார்த்தன். வழியில கணபதியார் பிடித்துக் கொண்டார். நல்ல கறுத்தக் கொழும்பான். பார்த்து முத்தியதாகப் பிடுங்கிக் கொடுத்துவிட்டு வாறன். பிந்திவிட்டது. பிடுங்குவமோ அல்லது நாளைக்கு வரட்டோ அப்பு?" என்கிறான் சதாசிவம்.

"உன்னை விட்டால் பிடிக்க முடியாது" என்று மருமகள் குரல் தருகிறாள்.

"சரி பிடுங்குவம்".

சதாசிவம் கொடுக்குக் கட்டுடன் மாமரத்தில் பாய்ந்து தொற்றி ஏறிக் கொண்டான்.

"அந்த வாட்டி நல்லாக் காய்ச்சிருக்குது, அப்பு.... சாவிளைச்சல் மாதிரி".

"டேய் டேய் என்ன சொல்கிறாய்?" என்று நான் கீழே நின்றபடி கத்தினேன். அவனுக்குத் தன் தவறு புரிந்தது.

"நல்லாக் காய்ச்சிருக்குது" என்றான்.

அவன் பட்டையை நீட்டிக் காய்களைப் பறித்தான். அவற்றினை ஒவ்வொன்றாகக் கீழே வீச நான் அவற்றினை சாக்கில் ஏந்தி முற்றத்தில் பரப்புகிறேன். மனம் கலக்கமடைந்திருக்கிறது. அதனால் அவன் பறித்துப் போட்ட சில காய்கள் தரையில் தவறி விழுந்து தெறித்தன.

"என்ன அப்பு...... எண்டைக்குமில்லாமல் இம்முறை தவறிப் போகுது".

"நீ சரியாகப் போட வில்லையடா...... சரியாகப் பார்த்துப் போடு......"

இரண்டு மணிவரை மாங்காய் பறித்தோம்.

சதாசிவம் மரத்திலிருந்தபடி குரல் தந்தான்: "அப்பு, மறை காய்களைத் தேடிப் பிடுங்கவோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருகணம் அப்படியே ஸ்தம்பித்து நின்று விடுகிறேன். இதயத்தில் இனந்தெரியாத குழப்பங்கள். என்னையறியாமல். "எல்லாவற்றையும் பிடுங்கடா சதாசிவம். ஒன்றையும் விடாதை...... அந்தா பார் தெரியுது...... அதையும் பிடுங்கு. பின் கொப்பில ஒன்று கிடக்குது அதையும் பிடுங்கு" என்று கத்துகிறேன்.

அவன் என்னைச் சந்தேகத்தோடு பார்க்கிறான்.

"அப்பு மெய்யாத்தானோ?"

குசினிக்குள்ளிருந்து வசந்தி வெளியில் ஓடிவருகிறாள். என்னை வியப்புடன் ஏறிட்டுக் பார்க்கிறாள். என் உடல் பதறுகிறது. எனக்குக் காரணம் தெரியவில்லை.

"பிடுங்காதை சதாசிவம். பிடுங்கியது இனிக் காணும். இறங்கு". என்று வசந்தி குரல் தந்தபோது அவளை நான் வியப்புடன் பார்த்தபடி நிற்கிறேன.

**தாமரை**

**ஜூன் - 2002**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொய்ப் பிஞ்சு

முற்றத்திலிருந்து விலகி, படலைக்குச் செல்கின்ற வழியில் இடது பக்கமாகச் சடைத்து வளர்ந்திருக்கின்ற பலாமரத்தைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு எரிச்சலாக வரும். என் மூத்த மகள் தேவகிக்கும் அப்பலாவிற்கும் ஒரே வயது. 'நல்ல சாதிப்பலா மச்சான்' என்று சிபார்சு செய்து என் இணுவில் நண்பன் கொண்டு வந்து தந்தான். இருபத்தாறு வருடங்களாகிவிட்டன. இன்னமும் அது காய்த்து ஒரு பழத்தைத் தானும் நாங்கள் உண்ணவில்லை.

பங்குனி மாதத்தில் அப்பலாவைப் பார்க்க வேண்டும். கிளையெல்லாம் பூக்களால் நிரம்பி பிஞ்சுகள் பிடித்திருக்கும். பார்க்கும் போது மகிழ்ச்சியாகவும் வியப்பாகவும் இருக்கும். அடிமரத்தில் கூடப் பிஞ்சுகள் நீண்ட காம்புகளில் தொங்கும்.

"இந்த வரியம் பிழை செய்யாது..... காய்க்கத் தான் போகுது......"

ஒவ்வொரு வருடமும் ஏற்பட்ட நம்பிக்கை பங்குனி பிறக்கும் போது படிப்படியாகத் தேய்ந்து மறைந்துவிடும். அப்பிஞ்சுகள் ஒவ்வொன்றாக அழுகி வெண் பூஞ்சனம் படர்ந்து பொத் பொத்தென நிலத்தில் விழுந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயக் கந்தோரில் பலதடவை முறைப்பாடு செய்தேன். பூ பூத்ததும் மருந்தடிக்கச் சொன்னார்கள். செய்தும் பார்த்தோம். பயன் தான் இல்லை.

"நல்லாச் சடைத்துவிட்டது. சில கிளைகளைத் தட்டி விடுங்கள். இவைப் பாரம் குறைந்தால் காய்க்கும்....." என்று சிலர் சொன்னார்கள். அவ்வாறும் செய்து பார்த்துவிட்டேன். இன்னும் நிறையப் பூத்தது. பொய்ப் பிஞ்சுகளாகச் சொரிந்தது.

என் வீட்டு வளவின் அடிவளவில் கூழன் பலாமரம் ஒன்றிருக்கின்றது. முற்றத்துப் பலா மாதிரிச் செழிப்பும் மதர்ப்பும் அதனிடமில்லை. ஓரிரு கிளைகள் தாம். ஆனால் எல்லாக் கிளைகளிலும் பருவத்தில் காய்கள் நிறைந்து தொங்கும். உறவினர்களுக்கெல்லாம் கொடுத்தும் எஞ்சிக் கிடக்கும்.

"பூத்தால் காய்க்க வேணும். எல்லாப் பலாவிலும் பொய்ப் பிஞ்சுகள் வரத்தான் செய்யும். உதென்ன விசித்திரமான பலாவாக இருக்குது. எல்லாமே பொய்ப் பிஞ்சாக வருகுது. என்ர இருபது வருட அனுபவத்தில நான் இப்படியொரு பலாவை எங்கையும் காணவில்லை" எனத் தாவரவியல் நண்பர் ஒருவர் அடித்துக் கூறினார்.

"உதைப் பார்த்துக் கொண்டிராமல் தறித்து வித்து விடுங்கோ. நல்ல விலை போகும். பயனில்லாத பலா....." என்று ஒரு நாள் என் மனைவி கூறியபோது, பக்கத்து அறையிலிருந்து விம்மல் ஒலி எழுந்தது. கந்தரோடையிலிருந்து மூத்தவள் தேவகி வந்திருக்கிறாள். இம்முறை காலநேரத்தோடு நானே சென்று அழைத்து வந்துவிட்டேன்.

அறைக்குள் சென்றபோது படுக்கையில் அமர்ந்து அழுது கொண்டிருந்தவள் என் கரத்தைப் பற்றி, "அப்பா, இம்முறையாவது...... எனக்குப் பயமாக இருக்குது அப்பா. நான்கும் தங்கவில்லை. எல்லாம் இரண்டு மூன்று மாதங்களில் கலைஞ்சு போச்சுது. இம்முறையாவது கிடைக்குமா?'' என விம்மினாள்.அவளுக்கு ஆறுதல் கூற என்னால் முடியவில்லை.

"அழாதை பிள்ளை.... கடவுள் கைவிடமாட்டார்..... டொக்டர் இந்த முறை சரியாக வரும் என்று கூறியிருக்கிறார். பயப்படாதை......"

அவள் பயத்துடன் தன் அடிவயிற்றினைத் தடவிக் கொள்கிறாள்.

வெளியில் வந்து கதிரையில் அமர்ந்த போது யன்னலூடாகப் பார்வை படும் இடத்தில் அந்தப் பலா சடைத்து வளர்ந்து நிற்கிறது.அதனைத் தறித்து விற்பதாவது? எப்படி முடியும். அதற்கும் தேவகிக்கும் ஒரே வயது. மனம் இடங்கொடுக்கவில்லை. அப்படியே வெகு நேரம் அமர்ந்திருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பலா ஒரு காயாவது காய்க்காதா? ஒரேயொரு கனியாகாதா?

"நான் மலடி என்று இருந்தால் கவலைப் படமாட்டேன். அப்பா. என்னை நானே தேற்றிக் கொள்வேன். நான் அப்படியில்லையே? அவரும் அப்படியில்லையே? தங்கியும் இடை நடுவில........" என்றாள் தேவகி ஒரு நாள். பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. தேவகியின் தங்கை சரோவுக்கு மூன்று பிள்ளைகள். இப்பொழுது வயிற்றிலும் ஒன்று.

எனக்குக் கடவுளையும் புரிந்து கொள்ளமுடியவில்லை. இந்த உலகத்தையும் தெரிந்து கொள்ள முடியவில்லை. குறையில்லாத வாழ்க்கை என்பது எவருக்கும் இல்லை போலப்படுகிறது.

ஒரு நாள் அதிகாலை நான் வெளியில் வந்தபோது அந்தப் பலா மரத்தடியில் தேவகி நின்றிருந்தாள். அம்மரத்தைச் சுற்றி எதையோ தேடுபவள் போலக் காணப்பட்டாள். முகத்தில் திருப்தி படரவில்லை. ஏமாற்றத்துடன் திரும்பி வந்தாள்.

"என்ன தேவகி...."

"சும்மா காலாற நடந்து பாத்தன். அப்பா....." என்றவள், "அப்பா, அந்தப் பலாமரத்தில ஒரு காகக் கூடு இருக்குது. முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கப் போகினம்........ கிழக்குப் பக்கக் கிளையில அணில் ஒன்று கூடு கட்டுது....."

நானும் பல நாட்களாகக் கவனித்துத் தான் இருக்கிறேன். இரு காகங்கள் தம் அலகுகளில் சிறு குச்சிகளைக் காவிச் சென்று பலா மரத்தின் அடர்கிளையினுள் மறைவதை. அவை கூடு தான் கட்டியிருக்க வேண்டும்.

"காகமும் அணிலும் ஒரே மரத்தில் கூடு கட்டாதே, அம்மா?"

"எனக்கு அது தெரியாது. பார்த்தன் அப்பா..... அது அணில் கூடு தான்" இந்தப் பலாமரத்தில் பல வியப்பான சங்கதிகள் இருக்கின்றன.

மரக்காலை தம்பிஐயா ஒருநாள் வந்தார்.

"பலாவொன்று விற்க இருக்குது என்று மாணிக்கத்தார் சொன்னார். இருக்குதே அண்ணை?"

"அப்படியில்லை, தம்பிஐயா....."

"உந்தப் பலாவால பயனில்லை அண்ணை. சும்மா நிக்குது...... நல்ல விலை தாறன்........."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கடைசிவரை ஒப்புக் கொள்ளவில்லை. தம்பிஐயா ஏமாற்றத்துடன் வெளியேறினார். பலாமரத்தை விற்பதாக நான் மாணிக்கத்தாரிடம் சொன்னது கிடையாது. சில வேளை என் மனைவி சொல்லியிருப்பாளோ?

ஆடுகள் வளர்க்கும் சின்னத்தங்கம் பல தடவை வீட்டிற்கு வந்தாள்.

"அந்தப்பலாவில குழை வெட்டட்டே, கனகு? சடைச்சிருக்குது......"

இரண்டொரு தடவை வெட்டிச் செல்ல விட்டேன். இம்முறை வந்தபோது, "வேண்டாம் அப்பா. அதில காகக் கூடிருக்குது........" எனத் தேவகி மறித்துவிட்டாள்.

பலாமரத்திற்கும் தனக்கும் ஏதோ தொடர்பிருப்பது போல அவளுக்குப் பட்டிருக்க வேணும். "நீ பிறந்தபோது நட்ட பலா" என்று அடிக்கடி கூறியதால் வந்த பிணைப்போ தெரியவில்லை.

பங்குனி மாத வெயில் கொளுத்துகிறது. வீட்டிற்குள் இருக்க முடியவில்லை. அந்தப் பலாமரத்தடியில் பாய் ஒன்றினை விரித்துப் படுத்து ஓய்வெடுக்கும் போது பலாமரத்தின் உச்சாரக் கொப்பு ஒன்றில் ஒரு அதிசயம் என் கண்ணிற் பட்டது. அப்படியே எழுந்து உட்கார்ந்து விட்டேன். மாங்காயளவு பருத்த ஒரு பலாப்பிஞ்சு தொங்கிக் கொண்டிருந்தது. ஒருக்காலும் இந்த பருமனில் நான் இந்தப் பலாவில் காய் எதையும் பார்த்ததில்லை. என்னையறியாமல் மனம் பூரித்துக் கொண்டது. அது நிச்சயமாகப் பொய்ப்பிஞ்சு அல்ல. இதை எவருக்கும் கூறக்கூடாது. நன்கு அவதானித்துப் பார்க்க வேண்டும்.

ஒவ்வொரு நாளும் பலாமரத்தடிக்குப் போவதும் அப்பிஞ்சை அவதானிப்பதுமாகவிருந்தேன்.

"என்ன பார்க்கிறியள்... அடிக்கடி......?" என்று மனைவி கேட்டபோது, "காகக் கூட்டைப் பார்த்தனான்..." என்று மழுப்பிவிட்டேன்.

பத்துநாட்கள் சென்றிருக்கும். அன்று அதிகாலை பார்த்தபோது அப்பிஞ்சில் கருமை படர்ந்திருப்பதைக் கவனித்தேன். ஏமாற்றம் என்னைப் பற்றிக் கொண்டது. அப்படியே வந்து கதிரையில் அமர்ந்து கொண்டேன். தேவகி தேநீர் கொண்டு வந்து தந்தபோது அவளைக் கவலையுடன் ஏறிட்டேன். என் பார்வையில் தெரிந்த வித்தியாசத்தை அவள் புரிந்து கொண்டாள்.

"என்னப்பா.....?"

"இன்றைக்குக் கிளினிக் இல்லையா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது நேற்று..... போனனான். கவலைப்படத் தேவையில்லையாம்..."

"அப்ப சரி பிள்ளை."

அடுத்த நாள் பலாமரத்தடியில் அப்பிஞ்சு விழுந்து கிடந்தது. எவருக்கும் தெரியாமல் அதனைத் தூக்கி வேலிக்கு மேலால் வீசிவிட எண்ணினேன். மனம் தடுத்தது. அதனைப் பக்குவமாகத் தூக்கிச் சென்று வேலியோரம் மெதுவாக வைத்தேன். குழந்தையின் சடலத்தைத் தூக்குவது போன்ற உணர்வு ஏற்பட்டதை என்னால் தடுக்க முடியவில்லை.

அன்று முழுவதும் மிக்க கவலையாக இருந்தது. சோர்ந்து சோர்ந்து படுத்துக் கிடந்தேன்.

இந்த வேளையில் தான் வலிகாமத்தின் பெரும் இடப்பெயர்வு நிகழ்ந்தது. 'இருபத்தி நான்கு மணி நேரத்துக்குள் வெளியேறிவிடவேண்டும். இராணுவம் பலாலியிலிருந்து புறப்பட்டு விட்டது. விரைவாக ஓடித் தப்புங்கள்' என்ற செய்தி பரவியது. அகப்பட்டவற்றைத் தூக்கிக் கொண்டு கால்நடையாகத் தென்மராட்சியை அடைந்தோம்.

தேவகி ஆறுமாதக் கர்ப்பிணி. அவளை அங்கு கொண்டு செல்வதில் வெகு சிரமப்பட்டு விட்டோம். தங்கித் தங்கி இளைப்பாறி ஒருவிதமாக இடம் பெயர்ந்து சாவகச்சேரிக்கு வந்து சேர்ந்தோம். மருமகன் மீசாலையைச் சேர்ந்தவர். ஆகவே தங்குமிடம் வசதியாக அமைந்தது.

வீட்டைவிட்டு வெளியேறும் போது முற்றத்துப் பலாமரத்தை ஒரு தடவை ஏறிட்டுப் பார்த்துவிட்டு பெருமூச்சு விட்டேன். நீ ஒருக்காக் காய்க்க வேணும். ஒரேயொரு காய். அப்பத்தான் தேவகியின் பிள்ளையை நான் தூக்கிக் கொஞ்ச முடியும். என்ன பைத்தியக்காரத் தனம். மனிதனையும் மரத்தையும் ஒப்பிடுவதா?

'திரும்பி வரும் போது நல்லாக் காய்ச்சிருக்க வேணும்.'

சாவகச்சேரிக்கு வந்த நான்காம் மாதம் தேவகிக்குக் குழந்தை பிறந்தது. ஒரு பிரச்சினையுமில்லாமல் பெற்றெடுத்தாள். அவளுடைய மகிழ்ச்சியை வார்த்தைகளால் அளவிட முடியாது.

அவளைப் பார்க்க நான் ஆஸ்பத்திரிக்குப் போனேன். பூரிப்போடு என்னை வரவேற்றாள்.

'அப்பா. முற்றத்துப் பலா நல்லாக் காய்ச்சிருக்கும்."

எனக்கு வியப்பாகவிருக்கிறது.

"ஏன் பிள்ளை அப்படிச் சொல்கிறாய்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கு அப்படிப் படுகிறது, அப்பா."

ஆறு மாதங்களுக்குப் பிறகு சாவகச்சேரியிலிருந்து வீட்டிற்குத் திரும்பி வந்தோம். தூரத்தில் வரும் போது எங்கள் வீடு சேதமில்லாமல் காட்சி தந்தது. வழியெல்லாம் சிதிலமடைந்து நொருங்கிக் கற்குவியல்களாகப் பலவீடுகளைக் கண்டு, கடந்து, ஏக்கத்தோடு வந்த எங்களுக்கு எங்கள் இல்லம் கம்பீரமாக நிற்பது மகிழ்வையும் நிம்மதியையும் தந்தது.

ஆனால் வளவில் ஏதோ ஒன்று குறைகிறது. வீதியில் நின்று பார்க்கும் போது, என் வீடு துலக்கமாகத் தெரிவதில்லை. சடைத்து வளர்ந்திருந்த அந்தப் பலா வீட்டினை மறைத்து நிற்கும். இப்பொழுது வீடு துலக்கமாகத் தெரிகிறது.

அப்படியானால்.....

படலையைத் தள்ளித் திறந்து பார்க்கிறேன். இராணுவம் ஏவிய ஷெல் பலாமரத்தைச் சீவிவிட்டிருக்கிறது. அடிமரம் மட்டும் சிதைந்து போய்க் காய்ந்து கிடக்கிறது. சற்றுத் தள்ளி முற்றத்தில் ஷெல்லின் உடைந்து போன விசிறி நிலத்தில் புதைந்து கிடக்கிறது. எனக்குப் புரிகிறது. அந்தப் பலாமரம் இல்லாதிருக்கில் பாய்ந்து வந்த ஷெல்லின் இலக்கு எங்கள் வீடாகத் தான் இருந்திருக்கும்.

கிளைகள் கருகி அப்படியே காய்ந்து கிடக்கின்றன. எங்காவது காய்ந்து பழுத்து இற்றுப்போன அடையாளங்கள் தெரியுதா? என அவதானித்தேன். எதுவும் காணவில்லை.

"நிச்சயமாகக் காய்த்திருக்கும் அப்பா" என்கிறாள் மகள். அவள் நம்பிக்கையைச் சிதறடிக்க நான் விரும்பவில்லை. அவள் கரத்தில் இருந்த பேரன் என்னைப் பார்த்துச் சிரிக்கிறான்.

ஏதோ அர்த்தம் அதில் இருப்பதாகப் படுகின்றது.


பலாமரத்தின் எஞ்சிய அடிமரத்தை வாஞ்சையுடன் தடவிவிட்டேன். மனதிற்கு இதமாக இருக்கிறது.

கலைமகள்

டிசம்பர் - 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீனவெடி

"அன்னாசி என்றால் என்னப்பா?" என்று என் பன்னிரண்டு வயது மகன் என்னைக் கேட்டபோது நான் என்னையறியாமல் உறைந்து போனேன். அவனைப் பரிதாபமாகப் பார்த்தேன். வீட்டையும், ஐயனார் கோவில் ஒழுங்கையையும், பாடசாலையையும் தவிர அவனுக்கு வேறொன்றும் தெரிந்திருக்க நியாயமில்லை. மாம்பழத்தையும் பலாப் பழத்தையும் வாழைப்பழத்தையும் பற்றி அவன் அறிந்திருக்கிறான். பொம்பர்கள், ஏகே..., ஹெலிக்கொப்டர் இன்று எனக்கே தெரியாத நவீன ஆயுதங்கள் பற்றித் தெரிந்திருக்கிறான். கோழிக் குஞ்சுகளைச் செட்டைக்குள் பொத்திப் பொத்தி வளர்த்தது போல அவனை வெளியுலகம் தெரியாமல் வளர்த்து விட்டோம்.

நான் மாத்திரமா? என்னைப் போல யாழ்ப்பாணத்தின் பல பெற்றோர்கள் அப்படித்தான் வளர்த்துள்ளார்கள். எங்கள் பிள்ளைகளுக்குக் கூடிக் குறைந்தால் முற்றவெளியும் அதில் எரியுண்டு கிடக்கும் பொது நூலகமும் தந்தை செல்வநாயகம் தூபியும் தெரிந்திருக்கும். பண்ணைக் கடற்கரையோ கீரிமலைக் கடக்கரையோ அவர்களுக்குப் பரிச்சயமில்லாதவை.

"அப்பா, சாட்டி வெள்ளைக் கடற்கரைக்குப் போகலாமாம்., ஒரு நாளைக்குப் போவமா?" என்று ஒரு நாள் அவன் கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பதறிப் போனேன்.

"ஆமி சென்றிகள் இருக்குது..... செக்கிங் அது இதுவெண்டு பிரச்சினை." ஒவ்வொருமுறையும் தட்டிக் கழித்திருக்கிறேன். அதைவிட வேறு மார்க்கம் இருப்பதாகத் தெரியவில்லை. யாழ்ப்பாணம் முழுவதும் முப்பதாயிரம் இராணுவம், மூவாயிரம் வீதிச் சோதனைச் சாவடிகள். காலையில் வெளியில் சென்றால் பின்னேரம் வீடு திரும்பினால் தான் பாதுகாப்பு. வீதியில் சந்திக்கின்ற அவமானங்களுக்குப் பயந்து அல்லது அவற்றினைத் தவிர்க்க விரும்பி வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்ற பலரை எனக்குத் தெரியும். என் இளமைக் காலத்தில் நான் பார்க்காத ஊர்களா? பொருட்களா?

எம் பிள்ளைகள் இன்னமும் றெயினில் பயணம் செய்தறியவில்லை. யாழ்ப்பாணக் குடா நாட்டிற்குள்ளேயே முடங்கிவிட்டார்கள். வெளியுலகம் அவர்களுக்குத் தெரியாது.

வெளிநாடுகளில் ஓடி வாழ்கின்ற பிள்ளைகளைப் பற்றி நான் கூறவில்லை. எண்பத்திநான்கிலிருந்து இக்குடா நாட்டிற்குள்ளேயே முடங்கிவிட்ட மக்களைத் தான் குறிப்பிடுகின்றேன். தொண்ணூற்றி ஆறிற்கு முதல் பல பிள்ளைகளுக்குக் ஹொர்லிக்ஸ், மைலோ என்றால் என்னவென்றே தெரிந்திருக்கவில்லை. சமாதானம் ஏற்பட்டு யாழ்ப்பாணத்திற்கான தரைப்பாதை நீண்ட பதினேழு வருடங்களுக்குப் பின்னர் திறக்கப் பட்டதன் பின்னர் எம் பிள்ளைகள் காணாத பல பொருட்கள் யாழ்ப்பாணச் சந்தையில் மெதுவாக வரத் தொடங்கின. என் மகனின் கேள்வி அவ்வரவின் எதிரொலி தான்.

"அன்னாசி என்றால் சாப்பிடுகிற ஒரு பழம்."

"அது எனக்குத் தெரியும் அப்பா. படத்தில் பார்த்திருக்கிறேன். நேரில் பார்க்க வேணும்...... சாப்பிட்டுப் பார்க்க வேணும்...."

"அதுகள் இப்ப சரியான விலை. கொழும்பில இருபது ரூபாவென்றால் இங்க நூறு ரூபாவாம்....." என்று முன்னெச்சரிக்கையாக அடுக்களைக்குள்ளிருந்து மனைவி குரல் தந்து எச்சரித்தாள். அவள் சொல்வதும் சரிதான். அன்னாசி யாழ்ப்பாணத்தில் பணக்காரருக்குரிய பண்டமாகி விட்டது. இருநூறு ரூபா உழைக்கிற கூலியால் அன்னாசிக்காக ஐம்பது சதவீதத்தைச் செலவிடுவது சாதாரண காரியமல்ல.

யாழ்ப்பாணத்துக்கான ஏ-9 தரைப்பாதை திறந்தாலும் இன்னமும் முழுப் பரிமாணத்துடன் போக்குவரத்து அனுமதிக்கப் படவில்லை. வன்னிப் பகுதிக்குள் பஸ் போக்குவரத்து யாழ்ப்பாணத்திலிருந்தோ கொழும்பிலிருந்தோ நேரடியாக இன்னமும் நிகழவில்லை. லொறிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களுடன் முழு அளவில் வந்து சேரவில்லை. தனிப்பட்ட சிலர் மினிவான்களில் தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் பார்க்க வருகிறார்கள். அவர்கள் யாழ்ப்பாணத்தில் அரிதான பொருட்களையும் தம்முடன் எடுத்து வருகிறார்கள்.

அவை நான்கு மடங்கு விலையில் யாழ்ப்பாணத்தில் விற்பனையாகின்றன. அவர்கள் திரும்பிப்போகும் போது மலிவாக வாழைப்பழங்கள், கருவாடு, பணம் பொருட்கள் என்பனவற்றோடு அங்கு செல்கிறார்கள்.

"தம்பி, கொஞ்சம் பொறு.... சாமான்கள் இனித்தான் வரத் தொடங்கும். அப்ப மலிவாக வாங்கலாம். வாங்கித்தாறன்...." என்று மகனைச் சமாதானப் படுத்தினேன். மனம் என் பதிலால் எனக்கே வருத்தத்தைத் தந்தது. அவன் என்ன பெரிதாகக் கேட்டுவிட்டான்? பார்க்க வேண்டும். இயலுமாயின் சுவைக்க வேண்டும்.

"வா. ரவுனுக்குப் போவம்....."

அவன் முகம் மலர்ந்தது. அதில் ஆயிரம் பூக்கள் சிந்தின.

"கண்டது கடியதுகளை வாங்கிக் காசைக் கரியாக்கி விடாதையுங்கோ." என்று மனைவி மீண்டும் எச்சரித்தாள்.

யாழ்ப்பாணப் பட்டினம் சும்மா சொல்லக்கூடாது எக்காலத்திலும்- ஒரு சின்னச் சிங்கப்பூர் தான். கொழும்பில் இருக்கிற அத்தனை பொருட்களும், உணவுப் பொருட்கள் அல்ல. இங்கு எப்படியோ வந்துவிடுகின்றன. ரோடியோ, ரெலிவிசன், மிக்சர்கள், கிரைண்டர்கள், சிடிக்கள்..... அப்பப்பா அனைத்தும் இங்குள்ள கடைகளிலுள்ளன. பென்ரோச் பற்றறிகள் கொழும்பிலிருந்து பயணத்தில் கொண்டு வரக்கூடாதாம். உங்களுக்கு எவ்வளவு பென்ரோச் பற்றரிகள் தேவை? விதவிதமான பற்றறிகள் யாழ்ப்பாணக் கடைகளில் விற்பனைக்கிருக்கின்றன. யாழ்ப்பாணக் கடைத் தெருக்களில் நடந்து செல்வது ஒரு காணிவலில் நடந்து செல்வது போன்றது. கடை முட்டிய நவீன மோட்டார் சயிக்கில்களும், இலத்திரனியல் சாதனங்களும்...... கடையின் முன் வெளியில் கூட அடுக்கி வைத்திருக்கின்றார்கள்.

"கொழும்பிலிருந்து கொண்டு வருவதிலும் இங்க வாங்குகிறது உண்மையில் இலாபம்" எனப் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

வியப்போடு தெருவைப் பார்த்தபடி என் மகன் என்னுடன் வந்தான். பஸ் நிலையத்தின் பின் பக்க வீதியோரத்தில் அன்னாசிப் பழங்கள் குவிந்து கிடந்தன. பருமனுக்கு ஏற்ப தரம் பிரித்து அடுக்கி வைத்திருந்தனர். என் மகன் ஆசையோடு அவற்றினைப் பார்த்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதுதான் அன்னாசி..."

"ம்..."

"மலிவு தான் வாங்குங்கோ..."

"எவ்வளவு?"

"நூறு விக்கிறம். தொண்ணூற்றைந்து போடலாம்..."

"ஏன் இப்படி அநியாய விலை விக்கிறியள்?"

வியாபாரி என்னைக் கோபத்துடன் பார்த்தான்.

"ஓமந்தையில் இதுகளுக்கும் ரக்ஸ் கட்டித்தான் கொண்டு வருகினம். உங்களுக்குக் கொழும்பு விலையில தருவினமே?"

எதுவும் பேசாமல் ஒரு பழத்தை வாங்கி மகனிடம் கொடுத்தேன்.

அவ்விடத்தைவிட்டு நகரும் போது மனம் நிதானமாக யோசித்தது. எங்களுக்காகத் தொடங்கிய போராட்டம். இருபதினாயிரம் ஆளணியினரை வைத்துப் பராமரிக்கத் தான் வேண்டும். அதற்கு இதுவும் ஒரு வழிதான். தப்பில்லைப் போலப்படுகின்றது.

பஸ் நிலையத்தின் இன்னொரு பக்கத்தில் றம்புட்டான் பழங்கள் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. நான் கொழும்பில் சாப்பிட்ட மல்வானைப் பழங்களல்ல. சற்றுப் புளிப்புப் பழங்கள். பத்து ரூபாப்படி விற்பனை நடந்து கொண்டிருந்தது. ஐந்து பழங்களை விலை கேட்காமல் வாங்கி மகனிடம் கொடுத்தேன்.

"இதை எப்படிச் சாப்பிடுகிறது?"

றம்புட்டானை வாங்கி உரித்து அவனுக்குக் கொடுத்தேன். மகிழ்வோடு வாயில் அதக்கிக் கொண்டான். யாழ்ப்பாணத்தின் பல கடைகளிலும் புதிதாக இலவசமாக மாட்டிவிடப்பட்ட கொழும்பு பானம் ஒன்றின் விளம்பரப் பலகைகள் கண்ணை உறுத்தின. யாழ்ப்பாணத்தின் அழகையே நாசமாக்கிவிட்டன போலப் பட்டது. ஒன்றிரண்டு என்றால் சகிக்கலாம். அழகாயும் இருக்கும். ஒவ்வொரு கடை வரிசையிலும் முக்கால் பங்கு கடைகளில் பெரியளவிலான அப்பானத்தின் விளம்பரப் பலகைகள். ஓசியில் கிடைத்ததால் எல்லாக் கடைக்காரரும் மாட்ட விட்டு விட்டார்கள். அவர்கள் கடைப் பெயர்கள் அந்த விளம்பரப் பலகையின் ஒரு மூலையில் சின்ன எழுத்துக்களில் துலங்கின. மாநகரசபை இவற்றினைப் பார்த்துக் கொண்டு என்ன செய்கிறது? வரி விதிக்க வேண்டாமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் தென்னிலங்கைப் பொருட்களின் சந்தையாகப் போகின்றது.

யாழ்ப்பாணத்தில் சுரண்டல் சுவீப் விற்பனை ஓரிடத்தில் நடந்து கொண்டிருப்பதைக் கண்டேன்.

மின்சாரநிலைய வீதியில் ஏறியபோது ஒரு இடத்தில் பட்டாசுகள் ஏராளமாகக் குவிக்கப் பட்டிருந்தன. அதிசயமான காட்சி. ஈழ யுத்தம் தொடங்கிய பிறகு யாழ்ப்பாணத்திற்கு பட்டாசுகள் வந்ததே கிடையாது. தடைசெய்யப் பட்ட பொருளாக அது விளங்கியது. எங்கள் பண்டிகைகள் சீனவெடிகளின் சத்தமின்றியே கழிந்தன. தைப்பொங்கல் நாளில் யாழ்ப்பாணத்தின் மூலை முடுக்கெல்லாம் வெடிகள் ஓய்வின்றி வெடித்துக் கொண்டிருக்கும். குண்டுகள் வெடிக்கத் தொடங்கியதும் அவை காணாமல் போய்விட்டன.

இப்பொழுது மீண்டும் வந்திருக்கின்றன.

பலர் குறிப்பாக இளைஞர்கள் அவற்றினை வாங்கிக் கொண்டிருந்தார்கள். ஒரு வெடி இருபத்தைந்து ரூபா வரை விலைபோனது. அவர்கள் மிக மிக ஆவலுடன் வாங்கிக் கொண்டார்கள்.

தூரத்தில் சிலர் பட்டாசுகளைக் கொளுத்தி வெடிக்க வைத்துக் கொண்டிருந்தார்கள். இனி எங்கும் வெடிகளின் சத்தம் கேட்கப் போகின்றது. பட்டாசுகள் எனத் தெரியாதவர்கள் 'மீண்டும் வெடிச்சத்தம் தொடங்கிவிட்டது. யுத்தம் ஆரம்பமாகி விட்டதோ' என்று பயப்பிராந்தி கொள்ளப் போகின்றார்கள்.

இனிக் கொஞ்ச நாட்களுக்குப் பிரச்சினை தான்.

வீடு திரும்பும் போது மாலையாகிவிட்டது.

நாவலர் வீதியில் நடந்து வந்து கொண்டிருந்தோம். சந்தியில் பல இளைஞர்கள் வெடிகளைக் கொளுத்திக் கொண்டிருந்தார்கள். சிலர் வம்புத்தனமாகச் சயிக்கிலில் செல்பவர்கள் முன் வீசி வெடிக்கச் செய்தனர். அச்செய்கை சிறிது நேரத்தில் விபரீதமாக மாறியது. சயிக்கிளில் வந்த பெண்கள் மீது வீசத் தொடங்கினர். சிரிப்பும், கும்மாளமும் அவ்விடத்தில் நடந்தது.

மனதுக்குச் சங்கடமாகவிருக்கிறது. சுதந்திரம் என்பது மற்றவன் மூக்குவரை செல்லக்கூடாது. சயிக்கிலின் முன் வெடிச்சத்தம் கேட்டதும் வெருட்சியடைந்த ஒரு சிறுமி வேலியுடன் மோதி நிலத்தில் சரிந்தாள்.

யாரோ தூக்கிவிட்டார்கள். சந்தியில் கொட்டமடித்த இளைஞர்களைச் சிலர் பேசித் துரத்தியும் விட்டனர். அவர்கள் அவ்விடத்தினை விட்டு மெது மெதுவாக நகர்ந்து சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் என் மகனைக் கை பற்றி அழைத்துக் கொண்டு நடந்தேன்.

''படார்.....''

இருந்தாற் போல எங்கள் காலடியில் ஒரு வெடி வெடித்தது. என் மகன் 'ஐயோ....' என்றலறினான். வெடியை வீசிய பதினைந்து வயது மதிக்கத் தக்க சிறுவன் ஒரு வீட்டின் படலையடியில் நின்று பெரிதாகச் சிரித்தான். எங்கள் திடுக்காட்டம் அவனுக்கு வேடிக்கையாகவிருந்தது.

என் மகனின் கரத்தை விட்டு விட்டு ஓடிப்போய் அச்சிறுவனைப் பற்றி, பளார் என அவன் கன்னத்தில் அறைந்தேன். அவன் பயந்துவிட்டான்.

''எளிய பழக்கம்..... வெடி கொளுத்திறதென்றால் வீட்டிற்குள்ள கொளுத்த வேணும். றோட்டும் ஆக்களுமே உமக்குக் கிடைச்சினம்....'' என்று கத்தியபடி மீண்டும் அறையக் கையை உயர்த்தினேன்.

''ஐயோ..... எனக்குச் சீனவெடி தெரியாது.... அது இப்படி வெடிக்கும் என்றும் தெரியாது. தெரியாமல் செய்து போட்டன்.....'' அவன் விழிகள் நீரைச் சொரிந்தன. பதினைந்து வயதுச் சிறுவனுக்குச் சீனவெடி தெரிந்திருக்கவில்லை.

''அன்னாசியைப் பார்க்க வேணும். ஒருக்காச் சாப்பிட வேணும்'' என்று கோரிக்கை விடுத்த. மகனுக்கும் அச்சிறுவனுக்கும் ஒரு வித்தியாசமுமில்லை.

மனம் பச்சாதாபப் பட்டது.

''இனி இப்படிச் செய்யாதை......''

''செய்யமாட்டன்..... உங்களுக்கு ஏதாவது காயமா?'' என்று அச் சிறுவன் வினவினான்.

''இல்லை..... நீ போ.......''

அன்னாசி வேண்டும் என்று கேட்ட என் மகனையும் நான் அறைந்திருக்க வேண்டும்.

எங்கள் பிள்ளைகள் எவ்வளவை இழந்து விட்டார்கள்.

வீட்டிற்குத் திரும்பி வந்து. வெகு நேரமாக மனம் கனத்துக் கொண்டிருந்தது.

**ஞானம்: ஜுன் - 2002**

**கணையாழி - ஆகஸ்ட் - 2002**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மறுமலர்ச்சிச் சிறுகதைகள், ஈழகேசரிச் சிறுகதைகள், சுதந்திரன் சிறுகதைகள், கடைசியாக மல்லிகைச் சிறுகதைகள் (முதற்பாகம், இரண்டாம் பாகம்) போன்ற தொகுப்பு இலக்கியங்களை வெளிக் கொணர இவர் உழைத்த உழைப்பு இருக்கின்றதே இந்த உழைப்பு அற்புதமானது; அபாரமானது. அடுத்த தலைமுறையினர் நன்றியுடன் வரவேற்கக் கூடியது.

இவரிடம் இயல்பாகவே உள்ள சிறப்புக் குணம் என்னவென்றால் இலக்கியப் புது முயற்சிகளுக்காகத் தன்னை அப்படியே ஒப்புக் கொடுத்து, உழைத்து அதை வெற்றிகரமாக நிறைவேற்றி முடிப்பதுதான்.

இந்த அர்ப்பணித்து உழைக்கும் பண்பைப் பல எழுத்தாளர்களிடம் காண்பதே அரிது.

உண்மையாகச் சொல்லப்போனால், தனிமனிதனாக, இவர் சமீப காலமாகச் செய்துவரும் ஆய்வு வேலைகளைப் பல்கலைக் கழக நிறுவனங்கள்தான் கடந்த காலத்தில் செய்து முடித்திருக்க வேண்டும். தனிமனிதனாக இவைகளைச் சாதித்துள்ளார் செங்கை ஆழியான்.

பதிப்புரையிலிருந்து.....
டொமினிக் ஜீவா.

ISBN 955825019-8
9 789558 250197

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org